உ

குருவே துணை.

# திருவரங்கத்திருவாயிரம்

# திருமகளந்தாதி

இவை

மஹான் வண்ணச்சரபம்

திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள்

எனவழங்கும்

## ஸ்ரீலஸ்ரீ-தண்டபாணி சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளி

ஷை சுவாமிகள் குமாரர்

தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்களால்

இராதாபுரம்

இலக்ஷ்மீ நாராயண ரெட்டியாரவர்கள்

பொருளுதவிகொண்டு

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

சென்னை

பி. ஆர். ராமய்யர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன

காப்பிரைட் ரிஜிஸ்டர்ட்

சித்தார்த்தி௵ விருச்சிகரவி

குருவே துணை.

# முகவுரை.

திருவரங்கத் திருவாயிரம், என்னும் இந் நூற் பெயரானது திரு அரங்கத் தலத்தில் விளங்கும் ஸ்ரீமன் நாராயணனைக் குறித்த ஆயிரங் கவிகளையுடைய நூலென விரிதலால், ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இந் நூலியற்றியவர் திருநெல்வேலியிற் சைவ வேளாண் மரபிற் றிருவவதாரஞ் செய் திளமைப் பருவத்திற் றிருவருட் டொடர்பால், அற்புதமான தமிழ்க் கவிகள் அளவறப் பாடுந் திறமையுற்று, ஸ்ரீ முருகப் பெருமானை முக்கியத் துணையாகக் கொண்டு வழிபட்டு வந்தமையின், முருகதாச சுவாமிகள், திருப்புகழ்ச் சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், என்றுலகத்தவர் காரணப் பெயரிட்டுப் புகழ விளங்கிய புண்ணிய மூர்த்தியாவர்.

இவர் முதலில் ஸ்ரீ முருகப் பெருமானை யுபாசித்துவரும் பருவத்தில், கண்டபாவனை நீங்கிச் சண்மத சமயாதீதா நுபூதி யடைந்து கவிகளும் அவ்வாறே பாடித் துதிக்கத் தொடங்கின ரென்பது "சிவன் மகனெனவே தோழுமெனுட் குகவே ளன்னவன் செய்தவப் பயனு — யவனது குருவாய்ச் சமயமூவிரண்டு முகங்களென் றவிர்போது முதலாய் — நுவறிசை யாறு மவைகளாக் காட்டி விகற்பமென்பன வேலாநூறித் — தவபல மோன்றே சத்தியமென்னுந் தன்மையுந் தேரித்தனனன்றே" என்ற குருபர தத்துவக் காவியம் குமார தெரிசனச் சருக்கக் கவியாலும், "ஆதியிற் கவுமாரத்தி லழுந்துபு கிடந்து பின்னர் வேதியன் விதித்தவாறு விதநெறிப் போதுவனுகி — யேதில் புன் னெறியோரேனு மிரங்கு நெஞ்சினரே லன்னோ — ரோதிடுந் தேவு நந்தேவுருவென வுணர்ந்திட்டேனே" என்ற புலவர் புராணம் இரட்டைக் குரவர் சருக்கக் கவியாலும், "குருவுங் கணபதியுங் கோற்ற மழுவாளனுங் — திரு மடந்தை காவலனுஞ் சேணில் — வருசுடருந் — தேவினத்தின் றுயான சிற்சத்தியு முருகோன் — மூவிரண்டாக் காட்டுமுகம்" என்ற தனிக் கவியாலும், நன்கு விளங்குகின்றது. ஆதலின் இவர் பாதாதிகேசம் வரை திருநீறணிவதுடன் சிலகாலம் இரு தோள்களிலுந் தென்கலை வடகலைத் திருநாமக் குறிகளணிந்து, கண்டத்தில், உருத்திராக்க மாலை யணிவதுடன் துளசிமணி மாலை தாமரைமணி மாலைகளும், ஒருங்கே யணிந்துகொள்ளும் நியமமுடையவ ராயினர். இது விஷயம் "சிறிதுநாள் போதுவேடமிட் டுலவினேனவற்றினுட் டிருநாமக் — குறியிரண்டு மென்றோள்களிற் போலிந்தன" என்று குருபர தத்துவக் காவியம் விட்டுணு தெரிசனச் சருக்கக் கவியாலிவர்

விளக்கி யுள்ளார். தில்லைத் திருவாயிர முதலாகப் பல ஆயிரக் கவித் தொகையுள்ள பநுவல்க ளியற்றியபின், இத் திருவரங்கத் திருவாயிரம், திருமகளந்தாதி யென்னும் நூல்களு மியற்றி வாசித்துப் பார்த்து வருநாள் ஸ்ரீ ரங்கநாதன் றிருவருட் குறிப்பால், ஏட்டினிடையி லொரு துளசிக் கொத் திருக்கக்கண் டதிசயமுற் றெடுத்துக் கண்ணிலொற்றி யுட்கொண்டு அதன் பின் அரங்கேற்றுமாறு சீரங்கத்துக்குச் செல்லும்போது அவிடத்துள்ள ஒரு வயிணவப் பிராமணர் கனவில் ஸ்ரீ ரங்கநாதன் எழுந்தருளி நமது அன்ப னொருவன் அருந் தமிழ்ப் பநுவல் கொண்டு வருவான் அவனுக்கு வேண்டியபடி நடக்கக் கடவை யெனத் திருவாய் மலர்ந்தருளினர். அந் தப்படி ஸ்ரீமத் சுவாமிகள் வரக்கண்டு அவர் பல சற்சனர்களுடன் எதிர் கொண்டழைத் துபசரித் திருத்தினர். பின் பத்திரிகை வாயிலாகப் பிரசுரஞ் செய்து, அடியவர் குழாஞ்சூழச் சந்நிதானத்தை யடைந்து அரங்கநாதன் றிருவடிகளில் ஏடு சாத்தி அருச்சித்து ஆராதித்து அநுக்கிரகம் பெற்றுப் பின் ஆயிரக்கால் மண்டபத்தில் அநேக பிராமணோத்தமர்களும் தவசிகளும் பக்தர்களும் புலவர்களும் செல்வர்களும் சூழவிருந்து வாசித்துப் பொருளுரைத்து வந்தனர். இவ்வாறு நிகழுநாள் ஒருதினம் பிரசங்க சமயத்தில் ஒரு வயிணவப் பிராமணப் பெண் குழந்தையை நல்ல சற்பந் தீண்டி விடந் தலைக்கேறிய தென்று சிலர் கூறினர், அதுகேட்ட சுவாமிகள் வாசிப்பை நிறுத்தி அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த விட பீடை நீங்கினா லன்றி அரங்கேற்றுவ தில்லை யென்று சொல்லி, "அரங்கன் றிருமுன் பமருங் கருடா — விரங்கிரங்கிப் பார்ப்பனப் பெண் ணேங்கச் — சிரங்கொண்ட—பொல்லா விடத்தைப் பொடியாக்கிப் பூவுலகோர் — நல்லானென் றோதவரு ணல்கு" என்னும் வெண்பாவை யோதி விபூதி கொடுத்துச் சபையை நீங்கி வசிப்பிடஞ் செல்லும்போது கெருடாழ்வார், அதியுன்னத வயிணவப் பிராமண வடிவத்துடன் றோன்றிச் சுவாமிகளுக்குப் பின் செல்லுஞ் சிலரிடம் சுவாமிகளைச் சுட்டி அவர் யாவரென்று கேட்க அதற்கவர்கள் சுவாமிகளோடு தொடர்ந்து பின் செல்வதில் தடை செய்கிறாரென்ற சங்கற்பத்தால் பரதேசிதா னென்று சொற்றனர். அவர் பெயர் யாதெனப் பின்னும் கேட்க அதற்கு மவர்கள் பரதேசிதா னென்றே சொல்ல அவர் வலிந்து என் பெயர் கெருடாசாரி யென்று சொல்லினர். அதுகேட்ட சுவாமிகள் அஞ்சலி யஸ்தத்துடன் றிரும்பிப் பார்த்து அந்தப் பிராமணப் பெண்ணின் விட நிவிர்த்தியைப் பற்றித் தங்களிடந் தானே யான் விண்ணப்பித்துக் கொண்டது என்றனர். அதற்கு அவர் "ஆம் எல்லாம் ரங்கநாதன் அநுக்கிரகிப்பா" னென்று சொல்லி மறைந்தனர். அவ் வற்புத நிகழ்ந்தவுடன் அக் கூட்டத்தி லிருந்த வொரு புலவர் "ஓதுங் கருட னொருமனிதன்போ லுருக்கொண் — டேது மறியா னெனத் தோன்றிப் — பேதமிலா — நம்மோ றேவாடி நான் கெருடாசாரி யென்ற — தம்மா மிக வதிசயம்" என்ற புதுவெண்பா வோதிப் புகழ்ந்து வியந்து வணங்கினர். அது அவ்வாறாக, அந்தப் பிராமணப் பெண்ணுக்கு விட

பீடை முற்றும் நீங்கிச் சுகமாயிற்று. அது தெரிந்து மறுதினமுதல் அரங்கேற்றுதலாயினர். அவ்வாறு திருவரங்கத் திருவாயிரமும் திருமகளந்தாதியும் அரங்கேற்றியான மஹா சபையில் சுவாமிகளுடைய அருள் வாக்கின் பெருமையைப் பலரும் புகழ்ந்து கொண்டாடினர். அன்றிரவு மகாலட்சுமி, கனவிற் றோன்றி நீ சொன்ன தோத்திரக் கவிகளுக்கு ரங்கநாதனுனக்கு விலையாயின னென்று சொன்னதாகச் சுவாமிகள் நேரிற் சொல்லத் தெரிந்தது. நிற்க, இவர், சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணுபத்தியம் கௌமாரம், என்னும் சண்மதங்களுக்குந் தனித்தனி பரத்துவங் கற்பித்துப் பல்லாயிரங் கவிகள் பாடியிருப்பது மேற்கண்ட அநுபவத்தாலேயே யன்றி மனோ நிச்சய பத்தியின்றிச் சலன முற்றும் பலருஞ் சந்தோட மடையவேண்டியும், பாடும் பழக்கத்தாற் பாடியதன்று. "என் றெய்வம் பெரிதென்போன் கன்னி யொப்பான் றெய்வ மொன்றே யெனத் தேர்ந்துள்ளோன் — குன்றென்ன முலை பருத்துக் கொண் கனுக்காம் பருவமுறு குமரி போல்வான்" என்ற புலவர் புராணக் கவியால் அநேக தெய்வங்க ளுள்ளன வென்றும் அவற்றுட் டனது தெய்வஞ் சிறந்த முதன்மை யுடைத்தெனவுங்கொண்டு, ஏனையவை தாழ்ந்த கீழ்மை யுடையனவென விழித்துப் பேசுதல் இளம் பருவ மென்றும் ஒரு பரமே யளவிறந்த கோடி வண்ணமுரு வெடுக்கு மெனத் தெரிதல் மேற்பருவ மென்றும் விளங்குகின்றது, "எக் கடவுட் கேவருரிமை பூண்டேற்ருலு மேனக்கது சம்மதமுடிவி லேகந்தானே" "தெய்வ மொன்றே யென்பது சத்தியமே யாகும், தெளிவில்லார் பலவிதமாத் தியானித்தாலும் — ஐவகைப் பூத மூங் கடந்தவது வவ்வாறங் கவிர்ந்தறிவு முதிர்ந்ததற்பி னனைத்துந் தானும்" என்ற தியானுநுபூதிக் கவிகளும் இவருடைய அந்தரங்க சமரச நிச்சயக் கொள்கையை நன்கு வெளிப் படுத்துகின்றன. இக் கருத்து விளங்க ஸ்ரீ சடகோபாழ்வார் "சுரரறிவருநிலை விண்முதன் முழுவதும், வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன் — திரிபுர மூன்றெரித் தமரர்க்கு மறிவியந் — தரனய னெனவுல கழித்த மைத்துளனே" எனத் தமிழ் வேதத்திற் றிருவாய் மலர்ந்தருளி யுள்ளார். விட்டுணு மூர்த்தியைக் கண்டப் பொருளாக் கொண்டு வழிபடுவோர்க்கு அது முரணாகத் தோன்று மென்பதை, "களம்படு நஞ்சினன் முதலாங் கடவுளரைப் பழித்தோது — மிளம் பருவ வயிணவருக் கியற்றமிழ்ச் சீர்க்குரு கூரான் — விளம்பு மொழி யினியாது விண் வேை யோர் கண்டமெனச் — சளம்படுவோர்" எனப் புலவர் புராணம் சடகோபாழ்வார் சருக்கத்திலும், "மடங்கலுருக் கொண்டன்றோர் மதலையினைப் புரந்தாற்கோ — ரிடங்கழறிப் போராடு மிளம்பாகவதர்க் காகேன் — றடங்கலறச் சடகோபன் சாற்றுமறைப் பொருளோர் மெய்த் — திடங்கொள் பெரியோர் மலர்த்தாட் சேர்ந்தாது புனைவேனே" என்று குருபர தத்துவக் காவியம் சமயாதீதச் சருக்கத்திலும் இவர் கூறியுள்ளார். அன்றியும் "இரணியன் சேய் சடகோபனுதியோர்போன் றெட்டெழுத்தினது பெருமை யாவுந் தேர்ந்தோர் — காரண மகில்வேறு தெய்வந் தோற்றிடாது" என்றதுபோ லாங்

காங்கு கூறியுள்ளார். இந்த சுவாமிகள் கலியுகம் சதுசுஙாசக ம் வருஷமாகிய விகாரி௵ கார்த்திகைமீ கசுஉ சனிவாரம் அஸ்த்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீ சுப்பிரமண்ய மூர்த்தியின் கிளியாகிய ஸ்ரீ அருணகிரிநாதருடைய அமிசமாக அவதரித்தவராவர். கலிருத௵ ஆகிய விளம்பி௵ ஆனிமீ உயஙஉ மங்களவாரம் திருவோண நக்ஷத்திரத்தில் விழுப்புரத்துக் கடுத்த திரு ஆமாத்தூ ரென்னுஞ் சிவதலத்தில் முத்தியடைந்து அடியவர்க ளாராதிக்கும்படி ஆலயங் கொண்டு விளங்குகின்றனர். இத்துடன் இந்த சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டுள்ள குருபர தத்துவக் காவியம், விட்டுணு தெரிசனச் சருக்கத்தின் சில கவிகள் பதிக்கப்பட்டுள்ளவற்றை யுற்றறிவோர்க் குண்மைகள் நன்கு விளங்குவனவாம். இத் திருவரங்கத் திருவாயிர நூலே, திருவரங்க வெண்பா மாலை முதல் வகுப்புக ளீறாகிய முப்பத் தெட்டுப் பிரிவாக வியற்றித் திருமக ளந்தாதியதன்பின் னியற்றி யிருக்கிற விவரம் அட்டவணையிற் காண்க. திருமக ளந்தாதி மாத்திரம், முதற் பதிப்பு அச்சிடப்பட்டுள்ளது. இத்தகைய திருவரங்கத் திருவாயிர நூலே அனேகர் அச்சிட விரும்பியும் தாமதித்து வந்தது, இப்போது இரண்டையும் ஸ்ரீ ரங்கநாதன் றிருவருள் தென் ஆற்காடு ஜில்லா விழுப்புரம் தாலுகா - இராதாபுரம் கிராமத்தில், நடுக்கம்பத்தம், முத்துக் குமரப்பரெட்டியார் அவர் மனைவியார் கற்பிற் சிறந்த பிட்சாம்பிகை யம்மை யிவர்களுடைய தவக் குமாரர் இலக்ஷ்மீ நாராயண ரேட்டியார் அவர்களைக் கொண்டு அச்சிட்டு வெளியிடும்படி தூண்டுதல் செய்து, உலகிலுள்ள அன்பர்கள் ஆனந்திக்கும்படி கடாக்ஷித்தது. இந்த மஹா புண்ணிய கைங்கரியத்துக்குத் தகுந்த சகல நன்மைகளையும் ஷை ரெட்டியாரவர்களுக்கு ஸ்ரீ ரங்கநாயகன் அருள் செய்வாரென்பது சத்தியம். அவர்களுடைய நன்றியை நாமென்று மறவோமாக. இலக்குமி நாராயணர்களைக் குறித்த பிரபந்தங்களை வெளியிட்டுத் தனது பெயரின் பயனைப் பெற்றவராயினர். சுபம்.

வெண்பா

வண்ணச் சரபன் வளர்தண்ட பாணியரு
ளெண்ணத் திருப்புகழோ னென்பதுதி — பண்ணத்
திகழ்முருக தாசகுரு சேவடியே நாடிப்
புகழ்வ தெனக் கென்றும் விருப்பு.

இங்ஙனம் ;

சித்தார்த்தி௵ துலாரவி

ஷை சுவாமிகள் மாணாக்கனும் குமாரனுமான,
**தி. மு. செந்திநாயகம் பிள்ளை.**

குரு பாதமே கதி.

உ

குருவே துணை

# சாத்துகவிகள்.

---

இந் நூலாசிரிய சுவாமிகள் குமாரர்

## தி. மு. செந்திநயகம் பிள்ளை யியற்றியன.

### எழுசீர் விருத்தங்கள்.

பார்மகட்கொரு முகமெனக் குலவுதென் பாண்டிநா டதனூடே
சீர்மலிந்தநெல் வேலிவேளாண்குலச் செந்திநயகன் றன்பாற்
கார்மலிந்தபூங் குழல்வடிவாளருள் கனவரமதன் மாண்பா
லேர்மலிந்தசே யெனத்திருவுருக்கொடிங் கினிதுதோற்றியமேலோன். (௧)

பல்விழுந்துபின் வேறுபன்முளைத்திடும் பருவமாஞ் சிறுபோதிற்
கல்வியன்கிரி தொறுநடித்திடுகுகக் கடவுளின்னருளால்வண்
சொல்விளங்குசெந் தமிழ்க்கவியனந்தமாச் சொற்றிடுந் திறலெய்திச்
செல்விகோன்முதற் பலருநங்குருபரன் றிருமுகமெனத்தேர்ந்தான். (௨)

நீறுகண்டிகை கோவணங் கீளொடு நிலவுபாதுகைதண்டு
கூறுகாவியங் கலையணிச் சிகையொடு குறைவின்மெய்த் திருவேடப்
பேறுகொண்டுமெய் யன்பருக் கருண்மொழி பேசியென் னனையார்க்குந்
தேறுமாறுநல் வழிசொலுங் கருணையிற் சிறந்ததேசிகன் மாதோ. (௩)

தண்டபாணியன் முருகதாசன்புகழ் சார்திருப்புகழ்க்காரன்
விண்டவண்ணவான் சரபமென்றுலகினர் விதித்தபல்பெயருள்ளோன்
கொண்டசண்மதா தீதமெய்ச் சமரசக் குன்றின்மேற் றிகழ்சோதி
யண்டர்வாழ்வையு மநித்திய மற்பமென் றருவருத் திடுநெஞ்சான். (௪)

பத்திசெய்தொரு மூர்த்தியை வழிபடும் பண்பினர் பழிக்கொண்ணாச்
சித்தியாவையும் பெற்றுஞானிலத்தினர்த் திருத்தியப்புறஞ் சீர்சான்
முத்திவீட்டிடை சேர்வதே முறையென மொழிந்திடு முழுத்தீரன்
சத்தியந்தனிக் கருணையோர் திருவுருத் தாங்கிவந்திடுசீரோன் (௫)

அந்தநாளரி பாற்கடல் கடைந்தமு தமரருக்களித்தாங்கே
செந்தமிழ்ப்பெருங் கடல்கடைந்தவிர்கவித் தெள்ளமுதெடுத்தன்பர்க்
கிந்தநாளளித் திருகரத் தாழிசங் கிலங்கிரேகைகள்காட்டிச்
சொந்தமாப்பசுக் காப்பினை விழைந்துமால் சொருபமாத் திகழ்தூயன். (௬)

காவிரிக்கிடை யொருபெரும் பாம்பின்மேற் கண்டுயிலரங்கேசன்
றாவில்பேரிசை முழுமையுந் துலங்குறத் தாரணி யுயிர்வாழத்
தீவினைக்குணச் சிதடர்தம் வாழ்வறத் திருமக ளந்தாதி
கோவிலார்திரு வரங்கத்தாயிரமெனக் கூறினன்கவிமாலை. (௭)

அந்த நூலரங் கேற்றிடச் சென்றநா ளரங்கநாயகன்செய்த
சொந்தமாம்விளை யாடல்பற்பலவவை சொல்லிடின் முடியாவே
சிந்தனைக்கணன் புறமொருவயிணவச் சிறுமிநீவிடந்தீரச்
செந்தகைக்கரு டப்பிரான் பலரெதிர் திகழ்ந்துவாய் மொழிபேசி. (அ)

அரங்கநாயகன் காப்பனென் றோதியங் கருவமாக்காந்தானித்
தரங்கவேலைசூழ லகினரறியவத் தையனன்குயப்பெற்று
ளிரங்கலற்றபாழ் மனத்தின ரறிவுறு ரேற்றஞானியரோர்வார்
குரங்கநந்தமுந் தனதடித் தொழும்புறக் கொண்டவ னருண்மாண்பே. (கூ)

அத்தகைத்திரு மகளர்தாதியுந்திரு வரங்கத்தாயிர நூலுஞ்
சித்தமூடெழு மன்பினுற் றனதுகைச் செம்பொரு ளினைக்கொண்டு
சுத்தவச்சினிற் பதித்துல கோரெலாந் துதிக்குமா றினிதீந்தே
பைத்தபாம்பணைப் பச்சைமாமுகிலருட் பயனடைந்தனன் மன்னே. (ய)

அந்தவாழ்வுபெற் றன்னவ னியாரெனி னறைகுதுந் தமிழ்நாட்டில்
வந்ததொண்டைநாட் டினிற்சிவனுறைபுற வார்பனங்காட்டேர்ப்பால்
தந்தமாவுல வியபொழில்சூழிரா தாபுரநகருடே
முந்தவேமன குலத்திடைவருமுத்துக் குமரப்பன்றவப் பாலன். (யக)

செந்தமிழ்ச்சுவை யாந்தரச் சுவையொடு தெரிந்தவன் மயிற்பீலிக்
கொந்தணிந்துவேய்ங் குழல்பயின்றாய்ச்சியர் குழுவிடை யுறுமாயன்
கந்தநாண்மலர்ப் பதம்வழிபடுமொரு கடமையிற்றிறம்பாதான்
சொந்தமாயிலக் குமிநாராயணப்பெயர் தொனித்திடத் திகழ்வோனே. (யஉ)

## சந்தக் கவி.

தந்த தானன தந்தத் தனனு தனனு.

பந்த வேதனை யின்றிக் கதியீகுவதே
பஞ்சபாணன்வ ணங்கத் தகுசீரினதே
யெந்த வாழ்வும்வி ரும்பிற் றருமோர்தருவே
யெண்டி சாமுகர் கண்டுட் களிகூர்நலமே
சொந்த ஞரண னென்றெப் பிடுவா ருறவே
துங்க ஞானியர் சிந்தைக் கநுபூதியதே
தந்த மாவடர் சிங்கத் திகலோர்ககநேர்
தண்ட பாணிய ரங்கத் திருவாயிரமே. (யக)

முற்றிற்று.

சதனபுரி-இராமசந்திர குருசுவாமி தாசரவர்கள் மாணவர்

## குளப்பாக்கம்—அ. கேசவலு நாயுடு அவர்கள்

இயற்றியன.

### நேரிசை வெண்பா.

வண்ணத் திருப்புகழ்ப்போர் வள்ளலரங் கேசன்ற
னெண்ணத் திருப்புகந்த தின்வழியை—நண்ணி
யிரங்கத் திருவாயி னின்பொடுதந் தானல்
லரங்கத் திருவாயி ரம். (௧)

### கட்டளைக் கலித்துறை.

திரங்கத் திருவா யிகந்தமெய்ச் சைவத் திருப்புகழ்க்கோன்
றரங்கத் திருவா யிரங்கரி மேலிகற் சாத்திரமா
யிரங்கத் திருவா யிளைக்சவா தஞ்செய் யிளம்புலவர்க்
கரங்கத் திருவா யிரங்கூறி யைய மகற்றினனே. (௨)

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள்.

முன்னாளின் மலையமலை முகடிருந்த முனிவன்வாய் முளைத்து லாவிப்
பின்னாளின் மெலிந்ததமிழ்ப் பிறங்கிடச்செய் பெருமினைவைப் பெறுநங் கந்தன்
சின்னாளின் முன்றனது செய்யபுயஞ் சேர்கிளியைச் செலுத்த வாங்கோர்
நன்னாளி னிடையொளிரின் னாட்டிலுயர் தலமெதென நன்கு தேர்ந்து. (௩)

அப்பொதியை யதிற்பெருகி யகல்பொருனை யாற்றருகி லவிர்நெல் வேலி
யிற்பொதுளு மியற்செந்தி நாயகனல் விளந்தையென வினிது தோன்றி
மற்பொதிசெந் தமிழறிஞ ரெவர்களும்வந்தடிவணங்கு மாண்பு தோய்ந்து
மெய்ப்பொதுவிற் சமரசநன் ஞானமுனித் திருக்கோல மேவி னானே. (௪)

குன்றேறி வீழ்ந்ததுவுங் குமரனெடுத் தாண்டதுவுங் கூறு மோர்சொல்
லன்றேபெற் றுய்ந்ததுவு மணிவண்ண மேபாடு மார்ப்புந் தன்னுட்
கன்றேதத் தாயிரநற் கவிதைகளைக் கனல்புனலிற் கலந்த தெல்லா
மின்றேற்ற தன்றருண கிரிசெயலின் வாசனையி னியல்பென் றோர. (௫)

பண்டேந்தி யிருந்தவுடற் பழக்கமொடவ் வயில்வேலன் பணிம றுந்து
தொண்டேந்து மிவனருண கிரியென்றக் குகன்பலர்க்குஞ் சொலுநற் சீர்சால்
தண்டேந்தித் திரிதண்ட பாணியெனத் தகுமுருக தாச னென்னக்
கண்டேந்து மினியதிருப் புகழ்ச்சாமி யெனத்திகழ்ந்து களிக்கு நாளில். (௬)

ஆழ்வார்க டந்ததமி ழமுதமுத வியருசியி னார்வ மிஞ்சுஞ்
சூழ்வார முடையரங்கப் பெருந்தகையித் திருநெல்லைச் சூழ லின்கண்
வாழ்வானல் லிலக்கணங்கள் வழுத்தியவிம் முழுத்தவனை வந்தி ரந்தவ்
வேழ்வானும் புகழினிய சுவைமலிந்தின் னிசைதரும்போ ரேற்ற நூலாய். (௭)

சாற்றிடச்செய் தானரங்கத் தாயிரமென் றிதையவர்க்குத் தரவிரும்பி
நீற்றினைக்கண் டுளைபவரு நிகழ்திரும ணிடக்கண்டு நிந்திப் போரு
மேற்றுழல்பொய்ம் மதவெறியை யிகந்தவிரு குறிகளையு மிசைத்த ணிந்து
மாற்றுயர்மெய்ம் மதத்தியல்பை மண்ணினர்கண் டுயவரங்க மருவும் வேலை. (௮)

அன்றுமூவா யிரவரொருப் படக்கம்ப னலைந்திடக்கண் டமைந்த மாய
னின்றுபல்லா யிரவரெதிர் கொளவிவனங் கணுகுமுன மேவி யேற்றான்
றுன்றவன்பல் செயுட்கிரங்கி யொருமகனஞ் சகற்றியருள் துகிர்ப்புள் ளேந்தல்
கன்றிவன்சொ லோர்கவிக்கு விரைந்துவிடங் கடிந்தானோர் காரி கைக்கே. (௯

திருப்புகழின் னணமடைந்தோ ரெவர்நமக்கெய் துவரவர்வாய்த் தெளிவை யோரா
திருப்புகழிற் றடவியடைந் துயர்தவஞ்செய் வதிற்பயனின் றெனக்கொண் டுலகைத
திருப்புகழை நுதற்றிருவின் மணவாள னணியரங்கத் தேவன் மீது
திருப்புகழ்மா தவனுவன்ற திருவரங்கத் தாயிரமுந் தேர்ந்துய் வோமே. (௰

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்கள்.

மூந்த மாதவஞ்செய் தவசவை முன்னர் மொழிந்தவிந் நூலினை முன்னாள்
சொந்தமாய்ப் பெறுமச் சுதனோடு திருவுந் தொடருவ கையிற்குளித் திவனாற்
றந்தமாங்கியீ தனின்விலைப் பட்டோந் தாமெனத் தனித்தனி சொலக்கேட்
டிந்தமாண் பெவர்க்குண் டெனக்களித் தெவரு மேத்துமத் திருப்புக ழரசன். (௧௧

என்னகப் பணியை யேற்றமெய்ப் பெரிய ரெவரினு முயர்ந்தென தன்பைத்
தன்னகத் தமையத் தந்தநல் லருளுந் தமிழ்க்கர சாய்த்திகழ்ந் ததுவு
முன்னகத் தொன்றை யொளித்திடா துரைக்கு முண்மையோ டாண்மையும் பிறவுட
பின்னகத் தெவரும் பேசுதற் குரிய பெரும்புக ழுடையவிப் பெரியோன். (௧௨

தரைமுழு தாளுந் தராபதி யெனினுந் தாழ்ந்தொரு கவிசொலாத் தகையுங்
கரையிகந் தோடுங் கவிப்பெருக் குதவுங் கல்வியுங் கடவுளைப் பிரிக்கும்
புரைபடு வோர்மேற் புகைந்திடு சினமும் புலைத்தொழி லறச்செயு நோன்பும்
விரைமலி வானா டவன்புகுந் தொளித்தும் விளக்கிடு மவனரு ணூலே. (௧௩

## வண்ண விருத்தம்.


### குறிப்பு.

தந்ததாந் தனதனன தானனாநத் தனதனன—தனன தனனா.

இண்டைசேர்ந் திலகுசடை யீசனொடச் சுதனுமய
னென்றவான் சுரர்களெவ ரேனுமொரு ப்படும்வடிவ
மென்றுதேர்ந் திளைஞரக மாசொழியச் சொலுநலரு ளுடனுலவிருன்
அண்டர்வேண் டிடுமவன தாசறுநற் றரிசனையை
யன்பினாய்ந் திலனெளிய னாயினுமற் புதமிதென
வஞ்சலீந் தருளுமென தாரியனைப் பொருவுமிவ னிரவுபகலாய்
கொண்டபாங் கரெனவக லாதெனுளத் தினைமருவி
நின்றதோர்ந் தவசமுறு மேழையடக் கருநசையில்
கொஞ்சமாந் தமிழுடைய னேனும்வழுத் துவனெனது பழவினையினேர்
தண்டமோய்ந் தினியநல மீகுவதத் தவன்மனன
மென்றுபூண் டனனென்முடி மீதினிலக் குமரகுரு
தண்டமேந் தியமுருக தாசதிருப் புகழ்முனிவ னிணையடிகளே. (௧௪

முற்றிற்று.

குருபாதமே கதி.



ஸ்ரீ ஸ்ரீ-கம்பளி சுவாமிகள்

உ

குருவே துணை.

## குருபாதத்துவம்.

# விட்டுணு தெரிசனச் சருக்கம்.

### காப்பு.

### கலி விருத்தம்.

பரிதி யீசன் பராசத்தி மாயவன்
கரிமுகன்குக னென்னக் கவின்றரும்
பெரிய சற்குரு பொற்பதம் பேணுவா
ரரியதாண் மகரந்த மணிந் தாய்வோம்.

### நூல்.

### எழுசீர் விருத்தங்கள்.

விண்டுநாடணைக் கொடியரிலொருவனு விளங்கியவேளையன்றேன்
பண்டுசெய்தவப் பயன்கொடோவல்லது பழுதிறண்ணருளாலோ
தொண்டுசெய்பவ ரடியவர்க்காளெனுந் துணிவுடைக்குருகூரான்
கண்டுகூறிய தமிழ்மறைப்பொருள்கொடு களிப்புறப்புரிந்தானே. (௧)

அண்டமாயிரங் கோடியுந்தன்னதோ ரகட்டினுட்கொடுநீடுங்
கொண்டல்வண்ணனல் லாற்சிலதேவருங் குவலயத்துளாரென்ன
விண்டவாதுடைச் சிறுவயிணவர்களென் மெய்ந்நிலையறிவாரோ
பண்டசோனகதேச யாயவன்றனுமோர் பத்தனென்றறையாரே. (௨)

சேயவார்சடைச் சிவனெனவயனெனத் தேவர்கோனெனமற்று
மாயபல்பொரு ளெனத்திருமாலுறு மதிரகசியந்தன்னைத்
தூயசீர்ச்சட கோபன்முன்வெளிப்படச் சொல்லியுந்துயரெய்தித்
தீயர்பாலிது பரமதுபாமெனச் செயுஞ்சமர்க்கிசையேனே. (௩)

கலகநூல்வழி போய்ப்பாந்தேரினுங் கடலொடுமலைசூழு
மலகசிட்டியி லயன்பரமழியுநா ளுமாபதிபரமிவ்வா
றிலகுநாளரி யேபரமாதலா லியங்குபன்மதத்தோர்தம்
மலகிலாவழி பாடுமன்னவனையே யணுகுமென்றறிந்தேனே. (௪)

என்னசொல்லினு முலைத்துணையரும்புறு விளமகளொழினீடுங்
கன்னல்வில்லிதன் விழவினுக்கிசைவுறுக் கதையெனக்களிறென்று
முன்னமுய்ந்தமை யாதியவாயிர மொழியினுந்தவமில்லார்
பண்ணகாதிபன் மிசையறிதுயில்கொணம் பகவன்மாண்பறியாரே. (௫)

விண்டுவேபர மெனச்சொலுமவரெலா மெய்யடியவரென்னக்
கொண்டுதொண்டுசெ யுண்மையற்றவருளுங் கூறுபட்டிகல்கின்றோர்க்
கண்டுமாலையு மிகழ்ந்துவாணாள்சில கழித்திருந்தேனோர்நாண்
மண்டுசாக்கிரக் கனவினாரணன்சிலை வடிவமாவரப்பார்த்தேன். (௬

எதுநாம்விரும் பாநெடுமாயன்வந் திலங்கினனெனவெண்ணிப்
போதுநாளையி லடிக்கடியவனடி போற்றடியவராவந்
நீதுங்காக்குது மெனவெனக்குவப்புற மின்னுரைபலபேசித்
நீதுறுத்தமிழ்க் கவிகொடுதுதிக்கவுஞ் செய்துகொண்டனன்மன்னே. (௭

வியாசமாமுனி சங்கரமாமுனி யாதியமேமேலோருந்
தயாநிதித்திரு மால்பதம்போற்றிய சத்தியந்தெரிந்தப்பாற்
கயானனற்றொரு மௌவைசொல்லியவிதி கண்டுநாரணற்கன்பு
செயார்கள்வீடுபெற் றுய்ந்திடாரெனமிகச் செப்பிடத்துணிந்தேனே. (௮

அன்னபக்குவத் தென்னொருகனவிலேந் தாறுவேதியர்மாயன்
றன்னடித்தொழும் புடையவர்வந்தனர் தக்கவாறுபசாரஞ்
சொன்னவென்றனக் குண்பனவளித்தவர் தாங்களுந்துய்த்தார்க
ளென்னகாரண மீதுநுங்குலமுறைக் கேற்குமோவெனக்கேட்டேன். (௯

யாங்களாரென வினவினர்நீவிர்மற் றியாவராயினுமென்னு
ளோங்கருட்டிரு நாரணனேயென வுன்னுகின்றேனென்றே
னேங்கறைந்திடல் வயிணவநூன்முறைக் கடுக்குமோவவளோபாழி
தாங்கடற்கரத் தானலனோவவ னென்றெனைத்தடுத்தாரே. (௰

உங்களூன்முறை யெங்ஙனமாயினு மாகுகவுலகெங்குந்
தங்கலெய்தியுந் தனைமறைத்திருக்குமத் தனித்திருடனைக்காண்டற்
கெங்கணிச்சய மீதுநீர்மறுத்தசொற் பயன்படாதெனச்சொன்னே
னங்கண்விண்டன வீதவன்றிருவுளக் குறிப்பெனுமறிவுற்றேன். (௧

எட்டெழுத்துரைத் தூர்த்துவமாகமண் ணிடுமவரெவரேனும்
வட்டநேமியங் கரப்பிரானெனக்கொளும் வழக்கம்வந்ததுவஞ்சத்
துட்டர்வேர்களைந் துயிர்த்திரட்கிடர்செயாத் தூயமாதவந்தோய்ந்த
சிட்டர்வாழ்வுறப் புரிவதுவேண்டுறுந் தியக்கமிக்கடைந்தேனே. (௧

மூலமென்றமால் களிற்றினைத் தாணினு முகுந்தன்வாழ்வுறுமென்ற
பாலனைத்தமிழ்ப் பதின்மரையென்றனைப் பற்பலபதிகத்திற்
சீலமாருமெட் டாங்கவியாதியாத் திகழ்தரப்பகர்ந்திட்டேன்
மாலந்தாதிபஞ் சாயுதத்திருப்புகழ் வகுப்புறழ்பலசொன்னேன். (௧

ஒருகனவின்மற் றோர்தவனோடுநா னுத்தரம்பார்த்துற்றேன்
றிருமணிட்டவ னொருவன்வந்தானவன் செங்கையிற்கொடுவந்த
மருமலர்த்திரு வாசியுஞ்செய்பவன் மானமேலெறிந்திட்டா
னருகுவந்தவன் சிறிதுபின்வாங்கியோ ரணிக்குறுநகைசெய்தான். (௧

நீலமேனியுந் தாமரைக்கண்களு நிலவுசெந்துவர்வாயும்
பாலதேநிகர் சங்கமுஞ்சக்கரப் படையுமொண்பணியாதிக்
கோலம்யாவுநன் கமைதரக்காட்டினன் கொடியனேன்மனத்தெண்ணுஞ்
சீலமானதில் வயினதேயனுமலர்த் திருவுமுண்டவர்க்காணேன். (௧௫)

தனித்துநின்றன னருகுபோயன்னவன் றடங்கரங்களைப்பார்த்தேன்
றெனித்தவால்வளை வலத்தணிந்திருந்தனன் றெண்டனேன்கரத்தந்நாள்
பனித்தமாமல ரோன்வரைந்திட்டவா *பரித்துளாய்முறையன்று
மனித்தரும்பசுக் குலங்களுநலம்பெற மாற்றுதியெனச்சொன்னேன். (௧௬)

அக்கணத்தினிற் சற்குருபரன்வடி வாயினன்றயில்போய
திக்கணுவிநாள் காண்பதற்கெத்தவ மெப்பவத்திழைத்தேமோ
தக்கபத்தியிப் பவத்திலேமென்றெணித் தணிக்கருங்களிகூர்ந்தேன்
பொக்கமன்றிது சத்தியஞ்சத்தியம் புணரிசூழ்புவியீரே. (௧௭)

கண்டநெஞ்சமுங் காட்டியமாயனுங் கமலநான்முகனுநி
யண்டர்யாவரு மாதவமுனிவரு மறிவர்மெய்யருள்வேண்டா
வண்டர்நான்குபா யத்திலுண்மூன்றினும் வலியதாகியவீற்றுத்
தண்டமொன்றையே யறிவரென்றறிந்துநான் சாற்றலென்றகவோர்க்கே. (௧௮)

சிறிதுநாள்பொது வேடமிட்டுலவினே னவற்றினுட்டிருநாமக்
குறியிரண்டுமென் றோள்களிற்பொலிந்தன குவலயச்சுமைதாங்கும்
பொறியராமுனம் பூசைசெயயிந்திர புரத்தின்மூவருந்தானென்
றறிதரச்செயு மாயனைச்சேவைசெய் தருள்பெறும்படிசென்றேன். (௧௯)

சென்றுமன்னனை யார்சிலர்சூழ்தரத் தீதில்சந்நிதிதோறு
நின்றுசேவைசெய் தேனெனைக்கண்டவூர் நிகமவேதியர்பல்லோர்
கன்றுதன்மைய ராயவர்தங்களுட் கலந்துபேசினர்யானங்
கன்றுவைகுவ தாகநிச்சயித்தொர்வீட் டமுதயின்றளிகூர்ந்து. (௨௰)

மூகப்பின்மேவினே னன்னவர்பலரொரு முகமெனத்திரண்டுற்று
ருகப்பொடிங்ஙனஞ் சேவைதந்தீரென துயர்தவப்பயனென்று
ககப்பிரான்பிட ருருருநினைத்திரு கரங்குவித்தேனன்னோர்
தகப்பகர்ந்திடங் கையெடுத்தோரிடந் திருந்திடச்செய்தார். (௨௧)

இருந்தவென்னிடத் தொருவன்சிலமொழி யியம்பல்வேட்டிவண்வந்தேம்
வருந்துறச்சினங் கொள்ளலென்றான்விதி வழிமொழிபயில்வோர்பாற்
பொருந்தும்வெஞ்சினத் தேனலேனிர்தாம் பொறுப்பதுகடனென்றேன்
றிருந்துசீர்கொளெம் வடகலையிடப்புயஞ் சேர்த்தவாறென்னென்றான். (௨௨)

சிறிதுநக்குநும் மகத்தில்வெண்ணீற்றினூற் சேர்சினத்ததிகோபஞ்
செறியுந்தென்கலைத் திருமண்மேலுள்ளமை திகழ்ந்ததிங்கதனோடிக்
குறியணிந்ததென் முகத்திடாதாயமென் கூறுதியெனக்கேளா
வறியுமுன்னிது வினவலாலெனச்சொனே னவற்றையும்பகரென்றான். (௨௩)

* சுவாமிகளுக்கு வலக்கரத்திற் சங்கரேகையும், இடக்கரத்திற் சக்கரரேகையும் இருந்ததை விளக்கியது.

உமக்குப்பத்தவ தாரமூர்த்திகளிடத் தொருமைதோற்றுதல்போலிங்
கெமக்குமூவிரு சமயவானவர்களா விடுபவெல்லாமிட்டேன்
சமத்துவத்திரு கலையிலொன்றனைனந் தன்னிலிட்டரையாகேன்
றமக்குணத்ததொன் றுமெனிற்கெடுமநா டரிப்பதற்குளமொல்கேன். (௨௪)

கிழக்குநோக்கிடிற் றென்புறத்துறுங்கையிற் றென்கலைகிளர்கின்ற
வழக்குநோக்கிலி ரிடக்கையில்வடகலை வலக்கையாலிடலோரீ
ருழக்கினுட்டிசை பிரிப்பதொத்துழன் றனீ ருலகமுண்டுமிழ்மாயன்
சழக்கர்வாதனைக் கடங்குவனோபசுந் தமிழ்க்கலையபிமானம். (௨௫)

உடையநானுமர் வடகலையிடப்புயத் துறப்புனைந்ததுபோலத்
தடையிலாதுதென் கலையினைப்புனைதரு தகுதியுண்டோவென்ன
விடையனேகமின் னமும்பலபகர்ந்துறும் வேளையென்விருப்புள்ளான்
கடைபுகத்துறுங் கற்கிதாடொழும்ரா மாநுசன்கவின்றனே. (௨௬)

அவனுமவ்வட கலைவயிணவர்குழாத் தவதரித்தவனேனும்
புவனிபோற்றுதந் தேசிகன்றென்கலைப் பனுவலும்புகல்சீலத்
துவளைபூத்தவ் விருவகைப்புலமைபு முடையவன்சிலமாற்றம்
பவளவாய்கொடு பகர்ந்தனனவரெலாம் பரிந்தெனையுவந்தாரே. (௨௭)

இன்றமிழ்க்கவி யயிந்திரபுரத்துமா லேயெனுமகுடச்சீர்
துன்றவோதினன் பதிகமுற்றுதலுந் துளவமாதியகொண்டு
மன்றல்வார்குழற் கவுரிதன்குலத்திடை வருமிரங்கையனீந்தான்
கன்றதாற்கனி யெறிந்தவன்றிருவுளக் களிப்புணர்ந்தளிகூர்ந்தேன். (௨௮)

அந்தப்பாட்டரங் கேற்றிடும்போதலூர்க் கடுத்தவாற்றினுக்குப்பேர்
முந்தப்பாடினர் முறைப்படிகெடிலமா மெனமொழிதலைக்கேட்டுன்
வெந்தப்போதொரு வேதியன்கெருடமே யெனவிளம்பினன்யாவ
ரெந்தப்பாடலி னுவன்றளாரெனமறுத் தியன்றவாறிசைத்திட்டேன். (௨௯)

விருதுபோன்றசெங் காட்டிரட்டியர்குல வேங்கடசுப்பன்ற
னிருகலைத்திரு நாமமிட்டிலங்குமோர் விசிறியீந்தனன்கொண்டு
பொருவில்சீர்ப்புது வையிற்புகுந்தங்குவாழ் புனிதமாதவன்றன்மே
லொருதமிழ்ப்பதி கஞ்சொலியப்பக லுறங்கினேன்சிறிதம்மா. (௩௰)

பன்னிரண்டினுட் படும்வயதுறும்வயி னவப்பனவச்சேயா
யென்னிடத்திலே தோவிழைந்தாலென வென்னில்வெண்பொடிபூசித்
தன்னிரண்டுநா மமுமிருதோளினிற் சார்தரவரியந்தா
னுன்னிடுந்தொற முளமுருக்கிடுமழ கொழுகுமன்னவற்பார்த்து. (௩௧)

இன்னவேடமே னிட்டனைகாணினின் னினைத்தினர்சகிப்பாரோ
வுன்னதாருயிர்ச் செகுப்பினுஞ்செகுப்பரே யுரியநின்னொருகோலந்
துன்னவர்திடில் வெறுத்திடுந் தூர்த்தனே நாவெனனச்சொலியன்னோன
தன்னமானதைக் கிள்ளிமுத்தினன்மிகக் கட்டிமுத்திலனந்தோ. (௩௨)

அவனொர்வார்த்தையும் பதிற்சொலாதென்னரு கவிர்விசிறியைத்தன்னோர்
பவளநேர்கரத் தாலெடுத்திதனிலிப் படியிடும்பண்பாண்மிக்
குவளைபூத்துளே னெனச்சொனான்விழிப்புவர் தோவரும்வியப்பெய்திக்
கவலுமிவ்விரு கலையினர்பிணக்கறக் காண்பதில்விழைவுற்றேன். (௫௫)

பின்னர்நாட்சில போய்நெடியோனொடுட் பிறங்கியிப்பிரிவுண்டா
முன்னமுள்ளவா நெற்றியிற்றரியென மொழிந்தனனருடந்தா
லன்னகோலமுஞ் சேர்த்தணிந்தாடுகின் றேனெனவுறைந்திட்டே
னின்னநல்கிலன் பண்டைநாட்கோலமொன் றேகொடுதிகழ்கின்றேன். (௫௬)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத் திருவாயிரம் அரங்கேற்றிய

# பிரசித்தப் பத்திரிகை.

நேரிசை வெண்பா.

வேத வியாசன்முதன் மிக்கபோதுத் தேசிகர்வா
யோதன்முழு தேர்ந்து முணர்வுள்ளீர் - சீதத்
திருவரங்க நாதனுக்கியான் செப்பு துதியீண்
டொருவரங்க மென்றுகொள்ளீ ரோ.

வாசகம்.

*பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்க ஸ்தலத்தில் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரா யெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீரங்கநாதரது திவ்விய சந்நிதானத்தில் திருவரங்கத் திருவாயிர மென்றும் திருமக ளந்தாதி யென்றும் பெயர் பெற்ற தமிழ்ப் பிரபந்தங்களை நாளது சருவதாரிளூ ஆனிமீ ௰சஉ மங்களவாரமுந் திருவோண நட்சத்திரமுங் கூடிய சுபதினத்திற் றுவக்கி யவை முற்றுப்பெறுகிற பரியந்த மரங் கேற்றுகிறபடியால் விஷ்ணு பத்தியுந் தமிழ் விற்பத்தியும் பொருந்திய புண்ணிய வான்க ளியாவரும் வந்திருந்து சிரவணஞ் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.*

*தன்படை வேற்றுப்படை யறியாது சொற்ப பேதங்களைக் காரணமாகக் கொண்டு போராடு மிளம்பத்தர்களையுஞ் சொற்சுவை பொருட்சார முதலான நயங்க ளறியாது பொறாமை மேற்கொண் டொழுகு மிளம் புலவர்களையுங்கூட விகழாது தழுவும் பெருந்தன்மைக்குத் திருவருளே சாட்சியா யிருக்கும்.*

*ஊமை கண்ட கனவுபோன் மனச்சாட்சியான வநுபவமுள்ள மகான்களு மிவ் வுலகத்தி லிருப்பார்க ளென்றே நம்புகிறேன்.*

*எல்லாச் சமயங்களுக்கு மவ்வச் சமயத்துள்ள மெய்யடியார்களே வித்தாவார்க ளென்றுந் தெய்வம் பொதுப் பொருளே யென்று முள்ளபடி யுணர்ந்த ஞானவான்க ளது பாததூளிக் கேதாவது மகத்துவ முண்டென்ற பட்சத்தி லுண்மை வெளிப்படு மென்றே நினைக்கிறேன்.*

*பாத்திரமும் விஷயமுமறிந் துதவி செய்யத்தக்க செல்வவான்களையும் விரும்பு கிறேன்.*

வஞ்சித்கலி விருத்தம்.

*குறிப்பு - தானந்தனதனனா.*

நீலங்கொண் மால்வரைபோ னீவந்தெ னூடொருநா
ளோலஞ்சே யாழனமே யோதுஞ்சொல் பாழ்படுமோ
ஞாலம்பல் சீர்பெறவே நாடன்பே னணைவமோ
சீலங்கே டார்பலர்வாழ் சீரங்க நாயகனே.

*ஆழ்வார் திருவடிகளே சரணம்.*

இங்ஙனம்,

*முருகதாசனென்றும் திருப்புகழ்க்காரனென்றும் விளங்குகின்ற,*

*தண்டபாணிப் பரதேசி.*

தெய்வமே துணை.

குருவே துணை.

# அட்டவணை.


| பக்கம் | விவரம் | செய்யுள் |
|---|---|---|
| ௧ | பாயிரம் ... ... ... ... | ௫ |
| ௩ | திருவரங்க வெண்பா மாலை ... ... ... | ௨௫ |
| ௬ | சீரங்கநாயக மாலை ... ... ... | ௫௧ |
| ௰௨ | பசுக்காப்பு மாலை ... ... ... ... | ௨௫ |
| ௰௫ | வெண்பா வந்தாதி ... ... ... | ௱ |
| ௨௬ | கட்டளைக் கலித்துறை யந்தாதி ... ... | ௱ |
| ௩௭ | பதிற்றுப்பத் தந்தாதி ... ... ... | ௱ |
| ௫௧ | சீரங்க நாராயண சதகம் ... ... ... | ௱ |
| ௭௩ | ஒருபா வொருபஃது ... ... ... | ௰ |
| ௭௮ | இரட்டைமணிமாலை ... ... ... | ௨௰ |
| ௮௧ | மும்மணிக் கோவை ... ... ... | ௩௰ |
| ௮௯ | நான்மணி மாலை ... ... ... ... | ௪௰ |
| ௯௭ | ஆயுத பஞ்சகம் ... ... ... ... | ௫ |
| ௯௮ | சமயசட்கம் ... ... ... ... | ௬ |
| ௯௯ | சுத்தசத்தகம் ... ... ... ... | ௭ |
| ௱ | மந்திராட்டகம் ... ... ... ... | ௮ |
| ௱௧ | நவமணி மாலை ... ... ... ... | ௮௧ |
| ௱௨௧ | காட்சிப்பத்து ... ... ... ... | ௰ |
| ௱௨௨ | புகழ்ப்பத்து ... ... ... ... | ௰ |
| ௱௨௪ | பொன்னூசைப் பத்து ... ... ... | ௰ |
| ௱௨௫ | பெண்ணூசைப் பத்து ... ... ... | ௰ |
| ௱௨௭ | புலியாசைப் பத்து ... ... ... | ௰ |
| ௱௨௯ | வயினதேயப் பத்து ... ... ... | ௰ |
| ௱௩௰ | அன்னப் பத்து ... ... ... ... | ௰ |
| ௱௩௬ | கிளிப் பத்து ... ... ... ... | ௰ |
| ௱௩௩ | மாங்குயிற் பத்து ... ... ... ... | ௰ |
| ௱௩௪ | மணிவண்டுப் பத்து ... ... ... | ௰ |
| ௱௩௫ | திரிவுமஞ்சரி ... ... ... ... | ௩௨ |
| ௱௩௯ | யமகமஞ்சரி ... ... ... ... | ௩௨ |
| ௱௪௩ | ஏகபாதம் ... ... ... ... | ௧ |
| ௱௪௪ | மும்மண்டில வெண்பா ... ... ... | ௧ |
| ௸ | மாலைமாற்று ... ... ... ... | ௧ |
| ௱௪௫ | எழுகூற்றிருக்கை ... ... ... ... | ௧ |
| ௱௪௬ | ஒருவருக்கப்பா ... ... ... ... | ௧ |
| ௱௪௭ | சதுரங்க பந்தம் ... ... ... ... | ௧ |
| ௸ | மடக்குத் தாழிசை ... ... ... | ௧ |
| ௱௪௮ | கலவி மகிழ்தல் வண்ணம் .. ... ... | ௧ |
| ௱௫௩ | திருப்புகழ் ... ... ... ... | ௱ |
| ௨௱௬ | வகுப்பு ... ... ... ... | ௨௧ |
| ௨௩௭ | வண்ணவிருத்தம் ... ... ... ... | ௧ |
| ௨௩௮ | திருமகளந்தாதி ... ... ... ... | ௱௨ |
| ௨௪௯ | வாழி விருத்தம் ... ... ... ... | ௧ |



ஸ்ரீ ரங்கநாதன்.

உ

ஸ்ரீமன்நாராயணாயநம:.

# திருவரங்கத்திருவாயிரம்.

## பாயிரம்.

வண்ணக் கலிவிருத்தம்.

உலகுகண் முழுமையு முதவுந னெவனுவ
லலகறு முயிர்களு மருள்பவ னெவனிருண்
மலமுறு மனைவகெட மலைபவ னெவனவ
னலமலி திருவரு ளாமைமிக விழைவதே. (க)

நேரிசை வெண்பா.

திருவரங்கத் தாயிரம்பாச் செப்பும்வண்ண மென்பா
லருவுருவா மாயவன்செ யாட, லொருவருக்கும்
தோற்று தெனினுமவன் றூயதிரு வுள்ளமுமென்
காற்றுடி நெஞ்சுமறி கை. (உ)

கட்டளைக் கலித்துறை.

பெருவரங் கத்திருக் காதிய நூல்சொல் பிரமன்முதற்
குருவரங் கத்திருஞ் சாகரம் போலுங் குழாங்தொழுவே
னிருவரங் கத்திருக் கப்பணித் தாண்டரு ளெங்தைவளர்
திருவரங் கத்திரு வாயிரம் பாடுங் திறம்பெறவே. (ங)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அண்டபிண்ட சராசரங்க ளத்தனையு நாரணனென் றறிவாற் றேறிக்,
கொண்டவரெல்லாநமது குருவாவாரேனையர்நங் குமாரர் போல்வார்,
சண்டனைக்கொன் றனுமலர்ப் பிரமனுநேர் பாகவதர் சரணப்போதின்,
வண்டனையே னென்றலைமீ தவையுகுக்குந் தாதுமுற்றும் வாய்ந்த
துண்டே., (ச)

# திருவரங்கத்திருவாயிரம்.

கலிவிருத்தம்.

சங்கஞ் சக்கரஞ் சார்ங்கமொள் வாள்கதை
செங்க ரங்கொ டிருவரங் கப்பிரான்
றங்க மோதத் துணைச்செயுந் தொங்கிவாய்ப்
பங்க யத்தய னாவின்மென் பாவையே. (௫)

பாயிர முற்றிற்று.

தெய்வமேதுணை.

ஸ்ரீமந்நாராயணாயநம:

# திருவரங்கத்திருவாயிரம்.

## நூல்.

### திருவரங்கவெண்பா மாலை.

திருவருள்வி லாசமறைச் சென்னிசிவன் போலும்
பெருமையினர் பெற்றுவக்கும் பேறு—பொருவிலதாம்
பீடார்ந்த பச்சைப் பெருமாள் பிறங்குமுண்மை
வீடாந் திருவரங்கமே. (௧)

கைந்நாகங் காத்துக் கராமடியச் செற்றமைசொல்
செந்நாவார்க் கின்பநல்குஞ் சீர்க்கோயி—லெந்நாளுங்
காவும் புலவோர் கணமும் புரந்தருண்மான்
மேவுந் திருவரங்க மே. (௨)

கங்கை யுதிக்குங் கழற்காற் கரியபிரான்
சங்கையில்பே ராடல்செய்யுந் தானமே—மங்கையொரு
கூறுளா நாதன் குறித்துமிகக் கொண்டாடும்
வீறூர் திருவரங்கமே. (௩)

ஆமை யெனப்பொறிக ளைந்துமடக் குந்தவத்தோர்
தாமையந் தீர்ந்துணரத் தக்கதே—தீமையினைத்
தூண்டுங் கொடுங்கோற் சுயோதனற்குத் தோல்வியிட்டோன்
வேண்டுந் திருவரங்கமே. (௪)

அல்லும் பகலு மவைகடந்த மாவெளியு
மொல்லும் பெருமா னுறையுளே—பல்லுயிர்கட்
கொல்லுஞ் சமன்றூதர் கும்பிட் டிரிதரப்போர்
வெல்லுந் திருவரங்கமே. (௫)

கோடோதை காட்டிக் குருகுலத்தோர் தங்கொடும்போ
ரூடோர் பெருந்தே ருகைத்தானூர்—நாடோறுங்
கண்பாய யார்சுமக்குங் கட்செவிக்கோ மானுமோர்
வெண்பாய்த் திருவரங்கமே. (௬)

அஞ்சனை சேயு மடல்வயினை தேயனுநேர்
வெஞ்சமர வீரர்மிக மெச்சுவது—வஞ்சகத்தாற்
காகத் துருவிற் கரந்தானை யும்புரந்த
மேகத் திருவரங்கமே. (எ)

காலங் கடந்த கடவுளர்க்கோர் தாயாகி
ஞாலம் புரப்பா னயக்குமூ—ராலந்
தளிருந் திருப்பாற் சலதியுங்கண் டொல்க
மிளிருந் திருவரங்க மே. (அ)

அன்ன முனைப்பா ளவில்லை யின்றருளு
முன்னவன்றன் கீர்த்தி முழங்குமிடங்—கன்னனைநேர்
வள்ளற் றகையோர் மனம்போலுங் காவிரிநீர்
வெள்ளத் திருவரங்க மே. (கூ)

புரவியென மேகமுய்ப்பான் புத்திரனைக் காப்பா
னிரவிமகன் பாலிரந்தா னெய்தூர்—கரவின்
மனத்தாற் றவமுயன்று வாக்காற் றுதிக்கு
மினத்தார் திருவரங்க மே. (க0)

பாதத் துணையாற் படியினொடு வானளந்த
நாதற் குரிமைமிகு நல்லுதலம்—வேதத்
தயனு தியர்பலரு மன்புகொடு போற்றும்
வியனூர் திருவரங்க மே. (கக)

பொய்துன்றி மெய்ம்மைப் பொலிவுபெறும் புண்ணியர்சேர்
வைகுந்தம் போலும் வளத்ததே—யெய்குன்ற
வில்வாய்ந்த கையனையும் வெந்தகுவர் கோன்வெருள
வெல்வான் றிருவரங்க மே. (கஉ)

அந்தரத்துத் தேவர்களு மம்புவியின் மாதவருஞ்
சொந்தம தென்றுதினஞ் சூழ்வதே—செந்தமிழ்த்தீம்
பாட்டோசை யன்றிப் பகட்டோ சையுமினிது
வேட்டோன் றிருவரங்க மே. (கங)

கற்பமொரு கோடி கணமாகக் கண்டுயிலுந்
தற்பரன்வாழ் கோயிற் றலைக்கண்டீர்—பற்பலவா
நூலாய்ந்த வல்லோர் நுவல்பதங்க ளியாவினுக்கு
மேலாந் திருவரங்க மே. (கச)

வில்லாற் கணைபொழிந்து வேலையினிற் சேதுசெய்த
சொல்லான்முன் னோர்தவத்தின் றோற்றமாஞ்—செல்லாப்
பரவுறு நால்வரும் பத்தர்களு மொன்று
விரவுந் திருவரங்க மே. (கரு)

கல்லாதா ரன்பின்றிக் கண்டுகரங் கூப்பிடினு
நல்லா றளிக்கு நகர்கண்டீர்—பொல்லாக்
கலகத் தருவர்குலக் கட்டறுக்கு மால்சீ
ரிலகுந் திருவரங்க மே. (௧௬)

பூவலய மாயன் பொருளென் றுணர்ந்த வுண்மை
நாவலவ ரெல்லா நயப்பதே—யாவருக்கு
மூத்துக் கிடந்த முகுந்தனிசை முற்றும்விண்ணோ
ரேத்துந் திருவரங்க மே. (௧௭)

விண்பூத்த பூநேர் விழிநெடுமால் வேலைதரு
பெண்பூத்த நெஞ்சமகிழ் பீடுளதே—தண்பூம்
பொழிலா லெழுமதிளாற் பொற்கோ புரத்தா
லெழிலார் திருவரங்க மே. (௧௮)

கந்த மலிதுளவுங் காமர்க் கவுத்துவமுஞ்
சந்தமணி மார்பிலிட்டோன் றங்குமூர்—செந்தமிழாற்
பாடாது தொண்டுசெய்யும் பத்தருக்கும் பேறுதவு
மீடார் திருவரங்க மே. (௧௯)

அவ்வுமுவ்வு மவ்வுமொன்று மக்கரமே யாதியெட்டும்
வௌவுமன்பர் சிந்தையினை மாலுமே—யெவ்வுயிர்க்குந்
தாயுமற்றை மூவுறவுந் தானாந் தனிநெடுமா
லேயுந் திருவரங்க மே. (௨௦)

ஆப்போற்சிந் தாமணிபோ லாலிமுகில் போலைந்து
காப்போற் கொடைகொடுப்போர் காணியே—தீப்போல்
வசைவிண் டவர்க்குமுத்தி வாழ்வருளு மால்வாழ்
விசையுந் திருவரங்க மே. (௨௧)

முகிற்றிரளுங் கார்க்கடலு மொய்த்தனைய மாயோ
னகிக்கிறைமேற் கண்டுயில்வீ டாகுஞ்—சகிப்பரிதாக்
காந்துந் தழனேர் கலிக்கஞ்சிச் சார்ந்தோரை
யேந்துந் திருவரங்க மே. (௨௨)

சுற்றுசுடர்ச் சக்கரமுந் தூயசங்குஞ் சோர்வறக்கைப்
பற்றுமவற் பேற்ற பதியெண்ணிற்—கற்றுணர்ந்து
விண்ணுமண்ணுங் கொண்ட வியனருள் விரும்புமன்ப
ரெண்ணுந் திருவரங்க மே. (௨௩)

வானவர்க்குத் தாய்வீடாய் வன்மனவஞ் சத்தினராந்
தானவர்க் கச்சந் தருவதே—சானகிக்காய்
பொய்ம்மான்பிற் போன புகழுரைப்பார் புத்தியுள்வா
ரெம்மான் றிருவரங்க மே. (௨௪)

இரணியன்சேய் தென்குருகூ ரேந்த லனையார்
காலனிலை யோர்ந்து கழறின்—மரணபய
மில்லா தருண்மா லெழில்வாயா லுன்மெமிழ்ந்த
வெல்லாந் திருவரங்கமே.  (உ௫)

முற்றிற்று.

தெய்வமே துணை.

# சீரங்கநாயகமாலை.

கட்டளைக் கலித்துறைகள்.

காராருமேனிக் கவின்றோன்றவன்றென் கருவில்வந்த
நீரானதின்றுன் னுளத்தில்லையோசங்க நேமிதண்டங்
கூராரும் வாள்பெருஞ் சார்ங்கம்வைத் தண்டர் குழாம்புரக்கு
நாராயணப்பெரு மாளேதென்சீரங்க நாயகனே.  (க)

ஐந்தாருவென்ன விரப்போர்விருப்ப மளிக்கும்வண்ணஞ்
சிந்தாகுலந்தவிர்த் தாண்டானின் சீர்த்தித் திறங்குன்றுமோ
பந்தாயகொங்கையர் தாயாயமுதம் பகிர்ந்ததென்னி
நந்தாவின்ணோர்குலங் கொண்டாடுஞ்சீரங்க நாயகனே.  (உ)

வேந்தரைப்புன்கொது காமென்னநாடிய மெய்த்தவத்தோர்
தாந்தமரென்னநின் சந்நிதிப்பாலெனைச் சாற்றல்பொய்யோ
காந்தழற்சிந்தைக் கருந்தானவர்தங் கருவறுக்கு
நாந்தகத்தின்கையர் நம்பியசீரங்க நாயகனே.  (ங)

ஈன்றானுந்தந்தையுஞ் சற்குருநாதனு மியாவையுநின்
ஞான்றாளென்றெண்ணித் தமியேன்செய்மாதவ நோன்பலமோ
போன்றாரில்லாத புருடோத்தமாவருட் போதமின்றி
நான்றானென்பார்க ளறியாதசீரங்க நாயகனே.  (ச)

பிச்சாடனச்சிவன் போன்றிரந்துண்டுனைப் பேணுமெனக்
கிச்சாடராக்கினி வாதனைதீர்பத மீதலென்றோ
பச்சாடகச்சிமிழ் நேர்முலையாய்ச்சியர் பார்த்துவக்க
நச்சாடராமிசை நின்றாடுஞ்சீரங்க நாயகனே.  (௫)

ஏகம்பரத்துவ மெட்டெழுத்தின்பய னென்றுணரார்
போகம்பொலிதல்கண் டேங்குகின்றேனைப் புரந்தருள்வா
யாகம்பெருத்து மணிச்சூட்டொராயிர மார்ந்தமுத
னாகம்பரிப்பத் துயில்கூருஞ்சீரங்க நாயகனே.  (சா)

வானத்தினர்க்கு நிலத்தோர்க்குமின்பம் வரக்கருதியா
னீனப்புலைமதத் தோர்குறும்பான்மிக் கிளைத்தனன்றோ
கூனற்சிலைக்கைக் கிரீடியைப்போலன்பு கொண்டவர்க்கு
ஞானக்கடலி னமுதீயுஞ்சீரங்க நாயகனே. (௭)

போகாந்தகாரத்தின் மூழ்காமனின்பதப் பூநினையும்
யோகாங்கமெய்தப் புரிந்தருள்வாய்பண் டொருதினந்தன்
றேகாபிமானத் தொருபாதிபெற்ற சிவைவினவ
நாகாபரணன் புகழ்ந்தோதுஞ்சீரங்க நாயகனே. (௮)

அந்தூதுநெல்லொத் தடியேன்றளர்வ தறிந்துமுன்றன்
செந்தூதுவன்சொன்ன பேறேனுமெய்திடச் செய்திலையே
வந்தூதும்வண்டமர் தார்வேந்தர்பற்பலர் மாயவன்று
நந்தூதும்வாய்முகில் போல்வாய்நற்சீரங்க நாயகனே. (௯)

காமனம்பாற்கண் கலங்குகின்றேனைக் கடைக்கணித்துத்
தாமரைப்பூப்புரை சேவடிசூட்டத் தகியிதன்றோ
பாமரர்தாமுமொவ் வோர்கான்மறந்து பகர்ந்துமுய்ய
நாமமொராயிரந் தாங்கியசீரங்க நாயகனே. (௧௦)

கொஞ்சமுநின்னருட் சீரெய்திடாரிற் குலையுமென்பால்
வஞ்சகஞ்செய்யலந் நாள்வலிதீந்த வரம்புரப்பாய்
தஞ்சமென்றேத்து மமரர்குழாமுய்யத் தானவக்கார்
நஞ்சழிக்குந்தகை தோய்தருசீரங்க நாயகனே. (௧௧)

மனந்தனிற்றோன்றிச்சை யெல்லாமிரக்குமென் மாட்டொருக்கா
லனந்தையிற்செய்த வநியாயமின்னஞ்செய் தஞ்சவிடேன்
மினந்தமொக்குஞ்சடைப் பிஞ்ஞகற்குஞ்சதுர் வேதனுக்கு
நனந்தலைநின்றவம் மானேயொண்சீரங்க நாயகனே. (௧௨)

மீனுருக்கொண்டு கடலூடுலாவியும் விண்ணவர்தங்
கோனுயக்காத்தபண் பிங்ஙாளெங்கேதுதி கூறுமன்பர்க்
கேனுபகாரஞ்செய் கில்லாய்நின்னுடை லெனச்சிறிது
நானுணர்மெய்யும்பொய் யாமோசொல்சீரங்க நாயகனே. (௧௩)

கடலைக்குடித்த முனிவாய்த்தமிழ்ச்சொற் கவியொன்றிற்கா
விடமிக்கபாயற் சுருட்டிபநீர்முற்றும் விட்டனையோ
திடமுற்றுவேள்விக் கொலையும்பொல்லாதெனத் தேறிச்சொல்லா
நடலைக்கொடியர்க் கிரங்காதசீரங்க நாயகனே. (௧௪)

என்றமிழாசைநின் சிந்தையிற்றோய்ந்தமெய் யானறிவே
னுன்றனதுள்ளமுந் தேறுமவ்வாறுல கோர்வதென்றோ
குன்றதைத்தாங்கியு மானினங்காத்தமை கூறுநர்க்கு
நன்றனைத்துந்தரு நீர்வாய்ந்தசீரங்க நாயகனே. (௧௫)

ஆரம்போலுங்கண்ணியர் மோகாந்தகாரத் தழுந்தியதா
லிரங்காதவன்னெஞ்சர் பாலேற்றுநோந்துய ரென்றொழிப்பாய்
குரங்காடுங்கேதனைத் தாலிறுமாப்புறுங் கொற்றவிற்கை
நரன்றேர்நடாத்தவு நாணாதசீரங்க நாயகனே. (௧௬)

பாரதம்போலுஞ் சமர்விளைந்தேனும் பசுக்களின்ன
றீரவிச்சிக்கு மனந்தந்ததார்மற்றொர் தேவுளதோ
வாரணமூலமுஞ் சென்னியுந்தோயுமொ ரக்கரத்தா
னாரதனாதியர் நன்கோருஞ்சீரங்க நாயகனே. (௧௭)

அகிலமுண்டன்றுமிழ்ந் திட்டநின்றாண்மலர்க் காசைகொள்வேன்
றிகிலடைந்தாலத னால்வசையாதுநிற் சேர்வதின்றோ
முகிலமர்பைந்தலைச் சோலைகடோறும்வெண் முத்தமணி
நகிலமின்னார்குலம் பந்தாடுஞ்சீரங்க நாயகனே. (௧௮)

பிறைவாய்த்தசென்னியி னானிரவாதுயப் பேணியநின்
னிறைசீர்த்திசொல்லுமெற் கேனருளீய நினைகின்றிலாய்
மறையார்த்தவோசையும் வீணையிசையு மகளிர்சொல்லு
நறையாய்ச்சொரிந்த பொழில்சூழ்ந்தசீரங்க நாயகனே. (௧௯)

தமரெனவாருயி ரியாவையுநாடித் தயங்குமெனக்
கெமபயந்தீர்பத மென்றருள்வாய்முல்லை யிற்பொதுவ
ரமரர்தம்பேர்பெற வாலாலங்காலு மரவின்மிசை
ஞமலியின்றோகை முடித்தாடுஞ்சீரங்க நாயகனே. (௨௦)

புலிபோலச்சீறும்வெங் காமவன்பேய்முற் புலருமென்னை
மெலியாமற்காக்கவெந் நாளிசைவாய்புவி மேற்படருங்
கலியாயகாலத்தி னுக்கஞ்சிநாடொறுங் கண்கலங்கி
நலியாதமாதவத் தோர்போற்றுஞ்சீரங்க நாயகனே. (௨௧)

அன்னையுந்தந்தையு மாசானுந்தெய்வமு மாய்நிகழு
நின்னைநம்புந்தமி யேற்கிந்தவெந்துயர் நேர்வதென்னோ
மின்னையொப்பாமிடை திண்டாடப்பற்பல மேடைதொறு
நன்னயமாதர் நடமாடுஞ்சீரங்க நாயகனே. (௨௨)

பால்வாரியன்ன மனத்தடியார்பொற் பதத்துகளென்
மேல்வாய்ந்துமிங்ஙன நான்வாடக்காண்பதுன் மெய்யருளோ
போல்வாரிலாத புருடோத்தமாமதம் பொங்குதிண்கை
நால்வாய்த்திரளி னொலிநீடுஞ்சீரங்க நாயகனே. (௨௩)

குவையாயபொன்னுடை யார்மனைதோறுங் குறுகியெனக்
கிவைவேண்டுநல்குமி னென்றிரவாநல மென்றெருள்வாய்
சவைதோறுநாரண னேபரமாமெனச் சாற்றவல்லார்
நவைதீர்க்குந்தாமரைக் கண்வாய்ந்தசீரங்க நாயகனே. (௨௪)

களிமிஞ்சியான்கன்றுங் கொன்றுண்ணுந்தியர் கருங்குடைக்கீ
ழெளியன்படுந்துய ரென்றொழிப்பாயெண்ணி லேந்திழைமா
ரளியுண்டபூங்கணைக் காற்றாதுநாளு மவாவமிளிர்
நளிர்பைந்துளவத் திருமாலைச்சீரங்க நாயகனே. (உ௫)

கற்றார்பலருங் களிகூர்ந்துபோற்றுமெய்க் கல்விநலம்
பெற்றாரொடென்னைவைத் தாளாய்கொலோமிகப் பேதலித்துன்
பொற்றாளினைந்து மிரங்காதிருந்தனை புண்ணியமோ
நற்றாரணிமுழு துண்டுமிழ்சீரங்க நாயகனே. (உ௬)

மீன்செயுங்கேதனத் தான்பகற்போதுமென் மீதுநித்தங்
கான்செயும்பூங்கணை யெய்யாதவாறு கடைக்கணிப்பாய்
தேன்செயுந்தாமரைக் கண்முகுந்தாநின் செயலலது
நான்செயுமாறொன் றுளதோசொல்சீரங்க நாயகனே. (உ௭)

கனியுண்டநாக்கொண்டு காயுண்டஞாயமுங் காட்டுங்கன்மத்
துனியுண்டுளேற்கினிக் குன்றாதவின்பஞ் சுரப்பதென்றோ
பனியுண்டவான்மதி நேர்முகத்தாய்ச்சியர் பாறயிர்நெய்
நனியுண்டவாய்த்தண் முகில்போலுஞ்சீரங்க நாயகனே. (உ௮)

தடக்குண்டுநீரிற் கராப்பற்றலான்மிகத் தட்டழிந்த
கடக்குஞ்சரத்தொனி யேற்றாயென்பாடல்கள் கைக்கின்றவோ
விடக்குந்துசிந்தைச் சுயோதனன்பாற்றொண்ட ரேவவுட
னடக்குஞ்சரணத் துணைகாட்டுஞ்சீரங்க நாயகனே. (உ௯)

செம்பாகப்பாடல்க ளாலுனைப்போற்றுமென் றீவினைபோய்த்
தெம்பாரவாழச் செயாததென்னோவொரு சேயிழைப்பொற்
கொம்பாந்துரோபதிக் கெண்ணில்பல்சேலை கொடுத்தவுண்மை
நம்பாமனத்தரை நாடாதசீரங்க நாயகனே. (௩0)

அடிக்கும்பல்பேரித் தொனிசால்களத்தி லருச்சுனற்குப்
படிக்குஞ்சதுமறைச் சென்னிசொன்னுங்கெனைப் பற்றிக்கொள்வா
யிடிக்குஞ்சொற்றானவர் கூற்றெனப்போற்றுந ரெண்ணத்தென்று
நடிக்குங்கருணை நழுவாதசீரங்க நாயகனே. (௩௧)

ஆய்போன்றுயிர்க ளனைத்தையுங்காக்குநின் னுடல்சொல்வேற்
சேய்போன்றுவக்கத் தடுத்தாளின்மெய்யருட் சீர்குன்றுமோ
பேய்போன்றுறுக்குங் குணமாதரின்பம் பெறவுநச்சி
நாய்போன்றுழல விடாதேயொண்சீரங்க நாயகனே. (௩௨)

கங்கைமுற்றோற்றுநின் னுள்வேட்டுளேன்றொடுங் கற்கிணற்றி
லிங்கயலாரிக ழாதாற்றுண்டாக்க லெவர்கடனோ
பங்கயவாவி யருகோர்குருந்தைப் பருமரத்தி
னங்கையர்தானை கவர்ந்தேறுஞ்சீரங்க நாயகனே. (௩௩)

இகமும்பரமுநின் றூண்மணந்தோய்ந்த வியல்பறியார்
புகனிந்தைசற்றுஞ் சகிக்கின்றிலேனைப் புறம்பிற்றள்ளே
லகலம்புவியிற் ககனத்தின்மற்றைய வண்டத்துள்ள
நகரங்கட்கோர்பெருங் கோவாயசீரங்க நாயகனே. (௩௪)

அறிவருஞ்சாக்கிர சொற்பனத்தேயன் றறைந்தமொழி
குறியெனநம்புந் தமியேனையின்னங் குலையவிடேல்
வெறிமலர்த்தண்பொழிற் பாலளிக்கூட்டுண்டு மிஞ்சிவிழு
நறியசெந்தேன்றிரண் டாறுகுஞ்சீரங்க நாயகனே. (௩௫)

செந்தமிழாலுனைப் போற்றத்துணிந்த சிறியனெஞ்சில்
வஞ்சனவேயிசைக் கின்றேனென்றன்றி வரச்செய்திடே
லந்தரத்தேவர்தம் மூர்முதலியாவு மழிவுறினு
நந்தலில்சீர்த்தி நனியோங்குஞ்சீரங்க நாயகனே. (௩௬)

பல்குறிநல்லன கண்டுமுலகிற் பருவரற்பட்
டொல்குறக்கண்டனே யானினென்செய்வேனரு ளோய்ந்ததுவோ
மல்குபல்கோடி வளத்தாற்சிறந்து வடவையஞ்சு
நல்குரவொன்று நணுகாதசீரங்க நாயகனே. (௩௭)

பாலளக்கர்க்கட் டுயினீத்தெழுந்து பதிதாஞ்சச்
சீலமுனிவர் களிகூருமாடல் சிறிதுசெய்வாய்
வாலறிவாளர் மதிக்குஞ்செங்கோற்றிண்கை மாவலிபான்
ஞாலமும்வானு மளந்தாய்நஞ்சீரங்க நாயகனே. (௩௮)

அரவுறழல்குன் மடவார்கபடத் தழுந்துமனக்
கரவொழித்தென்னைப் புரவாதுமாய்வுறக் கைவிட்டிடேல்
பரவியதேவர் களிகூரப்பாய்ந்தொரு பைங்கயலாய்
நரலையுட்சோமுகற் கொன்றருள்சீரங்க நாயகனே. (௩௯)

கயம்புரைநெஞ்சங் குரங்காய்க்குதிப்பக் கலங்குறுநான்
செயம்பெறச்செய்யவல் லாயல்லையேலது செப்புவையோ
வயம்பொருசிந்தைச் சுயோதனன்பாற்றெண்ட ரைவரொற்றாய்
நயம்படப்பேசவு நாணுதசீரங்க நாயகனே. (௪0)

உனையலதோர்தெய்வ மின்றெனத்தேறுமென் னெஞ்சிரத்திற்
கனைகழற்றுளென்று சூட்டுவையோகருங் கட்செவியும்
புனைகதைபொய்ப்படு மோவதிற்றீமைப் பொலிவுற்றிலே
னனைமலர்ச்சூழற் றிருக்கோயிற்சீரங்க நாயகனே. (௪௧)

பக்கங்கொடன்பர் பயமோட்டுஞ்செம்புட் பரியின்மிசை
யிக்கணமேவந்தெ னிச்சையெல்லாந்தரி லியார்தடுப்பார்
செக்கரஞ்செஞ்சடை மேற்கங்கைதாங்கித் திருநடஞ்செய்
நக்கன்கையோடு களைந்தாண்டசீரங்க நாயகனே. (௪௨)

பகைமேலிடக்கண்டு திண்டாடுமென்னுட் பரிந்தொருக்கால்
மிகையாயமாற்ற முரைத்தாயுவகை விளைப்பதென்றோ
புகைவாய்ந்ததீக்கண் ணிரணியற்கின்றிடப் போந்தினத்தி
னகைவாயொராயிரங் காட்டியசீரங்க நாயகனே. (௪௩)

கட்டாரிக்கண்ணியர் மோகவிகாரக் கடலிற்பட்டுக்
கெட்டாலுமுன்னை மறவேன்சற்றின்று கிருபைசெய்வாய்
வட்டாயகொங்கைத் துரோபதிதோள்புணர் மன்னரென
நட்டார்குற்றேவலுஞ் செய்வாய்நஞ்சீரங்க நாயகனே. (௪௪)

ஆளத்துணிந்தவன் போற்பலவாடல்செய் தப்புறஞ்சில்
கோளச்சநல்கவும் பார்த்துறுநீர்மை கொடியதன்றோ
நீளத்தொர்பாம்பின் றலைமேல்வசிக்கு நிலமகளு
நாளத்தொண்பூமக ளும்புணர்சீரங்க நாயகனே. (௪௫)

ஆழியுலகி லுயர்ந்தோர்பலரு மருவருப்பக்
கீழினத்தோர்களைக் கெஞ்சாதென்பாடல்கட் கேட்டருள்வாய்
பாழியங்கைக்கரி யாதியவாழப் படியளக்கு
நாழிதலையணை யாக்கொண்டசீரங்க நாயகனே. (௪௬)

ஆற்றற்றகுவர் குலவேர்களையுநின் னுண்மையென்றுந்
தோற்றத்தகுமென் மனத்தேயித்துன்புறச் சோதிப்பதேன்
மாற்றற்றபொற்கலை தொட்டுக்கவுத்துவ மார்பிலிட்டு
நாற்றத்துழாய்முடித் தாயெங்கள்சீரங்க நாயகனே. (௪௭)

கண்டார்வினையுங் கலியுந்துயருங் களையுமுன்னைக்
கொண்டாடப்பெற்று மினிமேலுமெற்கொர் குறைவருமோ
வண்டார்ச்செகுக்கப் பணிவார்தம்வானத் தவிருமொரு
நண்டாண்டுளானெஞ் சாற்றந்தசீரங்க நாயகனே. (௪௮)

பொல்லாவினைப்பிணி யாற்பலவாறு புழுங்குமென்னை
யெல்லாருநின்னன்ப னென்றோதுநாளொன் றினிவருமோ
கல்லானதைக்கொண்டு காதிதன்சேய்விழி காணவன்றோர்
நல்லாட்சமைத்த மலர்த்தாள்கொள்சீரங்க நாயகனே. (௪௯)

எட்டுணைமெய்யன்பு மில்லாதவென்னை யெழிற்கரத்தாற்
றொட்டுரைத்திட்டசொற் பொய்த்தாலுய்யேன்கனற் சுட்டுச்செய்த
வுட்டுளைவேய்ங்குழ லொன்றாதிப்பாந்தளி னெண்சிரத்தி
னட்டுவனின்றி நடமாடுஞ்சீரங்க நாயகனே. (௫௦)

ஆணாகிப்பெண்ணொ டலியாகுநின்னருட் காசையுற்றும்
வீணாள்கழிக்கு மவர்தாமுநிந்திக்க வெம்புவனோ
நீணாகச்சென்னிப் புலியோடுவாணுய்ய நெஞ்சிற்சற்று
நாணாதுபற்ப லுருக்காட்டுஞ்சீரங்க நாயகனே. (௫௧)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௭௬.

தெய்வமே துணை.

# பசுக்காப்புமாலை.

## கொச்சகக்கலிப்பாக்கள்.

ஆதவனுந் திங்களுநே ராழிவளை கரத்தேந்திச்
சீதமலர்ப் பொழிலரங்கத் திருக்கோயிற் றுயில்வானே
சாதமுதற் பலவுணவு சமைந்திருந்துந் தாமுண்பான்
பாதகர்கொன் றிடச்சாம்பல் பசுக்காத்தற் கெழுவாயே. (௧)

செங்கணெடு முகிலேபோற் றிருவரங்கப் பெருநகரு
டங்கதப்பா யலிற்றுயில்கூர்ந் தருள்பொழிநம் பெருமானே
மங்களங்க ளத்தனைக்கு மாதாவென் றுணர்வேன்பாற்
பங்கயத்தாள் சொன்னபடி பசுக்காத்தற் கெழுவாயே. (௨)

வராங்கனைமார் நடமாடு மதிளரங்க மாளிகையிற்
கராங்குலிச்சக் கரநழுவாக் கண்டுயில்கொள் கரியோனே
நிராஞ்சனனீ யென்றுணரா நெஞ்சேன்பா னிசிக்கனவிற்
பராங்குசன்சொல் லியவாறுன் பசுக்காத்தற் கெழுவாயே. (௩)

சீர்மருவு தென்னரங்கத் திருக்கோயி லிடைதுயிலுங்
கார்மலைநேர் நெடுமேனிக் காகுத்தப் பெருமானே
நார்மலிபல் லுயிர்த்திரளு நல்கியரு ளனையாய
பார்மகண்மிக் கலறுமற் பசுக்காத்தற் கெழுவாயே. (௪)

இலகுமதி ளேழுடுத்த வெழிலரங்கத் திடைநாளும்
புலவர்களு மாதவரும் போற்றிடப்பொய்த் துயில்கூர்வாய்
மலரவனுஞ் சிவன்முதலா மற்றையரும் வகுத்துள்ள
பலபலநூல் களும்வாழப் பசுக்காத்தற் கெழுவாயே. (௫)

நாவலந்தீ வினுக்குரிய நன்முகமே யாகுமெனத்
தேவர்முதற் பலர்போற்றுந் திருவரங்கத் தமர்தேவே
காவல்செயல் பொய்யாமற் காசினியிற் பலவாய
பாவமுந்தீர்த் திக்கணமே பசுக்காத்தற் கெழுவாயே. (௬)

தன்மமொடு சத்தியமுந் தவறாத மெய்யடியார்
நன்மனசேர் திருவரங்க நடுத்துயிலு நாரணனே
மென்மலர்ப்புங் கவன்முதலாம் வித்தகர்வாய் விரித்தோதும்
பன்மறைக்கு முயிராய பசுக்காத்தற் கெழுவாயே. (௭)

சத்தமதி ளுடுத்திலகுந் தனியரங்கப் பெருநகரிற்
பைத்தகப்பரும் பாம்பணைமேற் பங்கயக்கண் டுயில்வானே
நெய்த்தபசுந் துளவேந்தி நின்றுமை நெடிதோதும்
பத்தர்மன நடுங்காமற் பசுக்காத்தற் கெழுவாயே. (௮)

கலகவினைத் தானவர்தங் கட்டற்றுனை யறமோதி
யிலகுதிரு வரங்கத்தே யென்றும்விழி துயிலெந்தாய்
மலரவனா தியர்கூறு மறைமுதனூற் றிரள்வாய்ந்த
பலதருமங் களுமாய பசுக்காத்தற் கெழுவாயே. (௯)

வாலிக்கோர் கணையேவும் வண்புகழேத் தெடுக்கின்றோர்
மேலிக்கிற் கருணைபொழி விழியரங்கப் பெருமானே
யாலிக்கார் முகில்சோர வசலமெடுத் தந்நாணீ
பாலித்தா யெனிலின்னே பசுக்காத்தற் கெழுவாயே. (௧௦)

தாழாத பெருவீரந் தலைக்கொண்ட பரகாலன்
சூழார்வத் திருவரங்கத் தொன்னகரிற் றுயில்வானே
யாழாழி யுடைப்பாரி லரசர்பலர் முடிசாய்ந்து
பாழாகப் பொருதேனும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௧)

மஞ்சமர்தண் பொழிலரங்க மாநகர்ப்பாம் பணைமீது
கஞ்சமலர்க் கண்டுயிலுங் கருணைமுகி லனையானே
யஞ்சலிரென் றெமைத்தேற்றி யாழிமுத லாக்குலவு
பஞ்சவிதப் படைப்போராற் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௨)

மால்சொன்மட வியர்போலு மனத்தார்சூ ழரங்கத்தில்
வேல்சொலிக்குங் கைப்புலவன் மிகச்செய்பணி யுகப்போனே
கோல்சொருகு மரைப்பொதுவர் குடங்கடைகால் கொளநாளும்
பால்சொரிபன் முகில்போலும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௩)

கதையனந்தம் விளைத்தோங்குங் கவினரங்கத் திடைநாளும்
விதையனைய பொருளாகி விழிதுயில்விட் டெனுமூர்த்தீ
சுதைபுரைவெண் மனத்தர்பெருந் தோடமெனச் சொலக்கேட்டும்
பதைபதையார் கொலைமாயும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௪)

நம்புமன்பர் பலர்போற்ற நல்லரங்க நகரூடே
தெம்புவிண்ணோர் பெறத்தகுவர் சீரழியத் திகழ்வானே
யம்புவியுந் திருமகளு மளிகூரத் துயினீங்கிப்
பைம்புனுனி கறித்துண்ணும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௫)

அழகியசெந் திருமகளு மம்புவியு மருகெய்திக்
கழல்வருட வரங்கத்தீதார் கட்செவியிற் றுயில்வானே
விழவளந்தந் தலந்தோறு மேலிடமேல் விழைகின்றேன்
பழமறைச்சீர் குன்றுமற் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௬)

புத்தமுத மும்பருணப் புகட்டியதோ ரலுப்பாறச்
சுத்தமலி காவிரிநீர் சூழிடையிற் றுயில்வானே
சத்துசுரச் சதுர்வேதச் சடசமயத் தினராய
பத்தர்நனி களிகூரப் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௭)

பொற்றிரளு முத்தமிழும் பொலிந்ததிரு வரங்கத்தே
சற்றிரக்க மில்லான்போற் றனிதுயிலுந் தாடாளா
கொற்றிங்க ராய்ச்சியர்தங் கொங்கைமணங் கமழ்பூங்கை
பற்றியவேய்ங் குழல்வேட்கும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௮)

நீர்ப்பரவை வயிறுழக்கு நெடுந்தகைக்கா விரியிடையி
லேர்ப்பணிப்பா யலின்முழுது மெளிதறிபொய்த் துயில்கூர்வாய்
சீர்ப்பதும மலர்வேதன் றிருமுகத்திற் செனித்தோராம்
பார்ப்பனமாக் களும்போற்றும் பசுக்காத்தற் கெழுவாயே. (௧௯)

இந்துவழி படுபொய்கை யெழிலரங்கத் திடைநாளு
மைந்துபடை களுஞ்சோரா வறிதுயில்கொ ளெம்மானே
நொந்துமுனி வரரெல்லா நடுங்கும்வித முணராயோ
பைந்துணர்த்தண் பொழின்முல்லைப் பசுக்காத்தற் கெழுவாயே. (௨0)

இகபரமுண் டுமிழ்ந்தாயென் றேத்துநர்சொல் லிசைவேட்டுப்
புகழ்மலிதென் னரங்கத்தே பொய்த்துயில்கூர் புயல்வண்ணா
சகளமுநிட் களப்பொருளுந் தானான தகையோர்ந்து
பகடழைத்த பெயரானே பசுக்காத்தற் கெழுவாயே. (௨௧)

காலமொடு கருமபலங் கடந்துயர்மா தவர்போற்ற
வாலமணி யாயிரவா யணைத்துயிலு மரங்கேசா
சீலமிலா டகற்சாடச் சீயமாந் தினத்தவன்றன்
பாலனுவன் மொழியானே பசுக்காத்தற் கெழுவாயே. (௨௨)

கதிர்மறைத்துந் தனஞ்செயனைக் காத்தவனு தியராயு
மதிர்தொனிப்பல் லியத்தரங்கத் தநுதினங்கண் டுயில்வானே
விதிமறைநூற் றமிழ்செய்த விடலைமுதல் வினரான
பதின்மர்துதித் தொடையானே பசுக்காத்தற் கெழுவாயே. (௨௩)

காதளவும் விழிமாதர் கலவிவிழைந் திரப்பார்க்கு
மாதரஞ்செய் பெருங்கருணை யணிந்தரங்கத் தமர்வானே
பூதலமும் வானகமும் பொருக்கெனமுன் னளந்த
பாதமலர்த் துணையானே பசுக்காத்தற் கெழுவாயே. (௨௪)

நாகர்முதற் பலர்போற்று நல்லரங்கத்திடைதுயிலு
மேகவண்ணப் பெருமாணின் வியனருட்சீர் குன்றுவதோ
நீகனவிற் சொன்னமொழி நிசமாகும் படியின்னே
பாகவதர் குழுவானே பசுக்காத்தற் கெழுவாயே. (௨௫)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௧0௧

தெய்வமே துணை.

# வெண்பாவந்தாதி

திருவரங்கக் கோயிலில்வாழ் செங்கண்ணா திங்கட்
பருவமுகத் தாரிருவர் பாகா—வருவருக்கும்
வஞ்சகத்தே னல்லேன் வளையாழி யேந்திவந்தெ
னெஞ்சகத்தி னீங்காது நில். (க)

நிலமளந்து வானளந்து நீடு துணைத்தாண்
மலர்களையென் சென்னிமிசை வைப்பா—யலமிளிருங்
கையான் பிறகுறித்த கண்ணனுமாங் காரரங்கா
நெய்யார் துழாயணிந்தோ னே. (உ)

நேயமென்பா லோர்சிறிது நீவைத் திலையாயின்
மாயவனே முத்திதரும் வள்ளலெனத்—தூய
தமிழரங்கம் போற்றுவனோ சாகரத்திற் றோற்று
மமிழ்தமும்பர்க் கீந்தருள்கை யா. (ங)

கையானை யொன்றழைப்பக் கானகத்திற் காத்தகதை
மெய்யாகி லென்னை வெறுப்பாயோ—பையார்
பணியணைச்சீ ரங்கமதிற் பள்ளிகொண்ட மாலே
யணியுமென்சொ லேற்றின் றருள். (ச)

அருள்வா ரிதிசுவறு வம்புயக்கண் மாலே
யிருடீர்க்குஞ் சீரரங்கத் தெந்தாய்—பொருள்வாஞ்சைக்
காற்றினிடை சுற்றுங் கறங்கானே னென் கன்மமுற்று
மாற்றிநின்மெய்த் தொண்டரிடை வை. (ரு)

வையாரொண் சக்கரமும் வால்வளையு மேந்தியென்று
பொய்யாரென் னெஞ்சிற் புகுந்ததே—நெய்யா
மெலியவிடத் தானே வியனரங்கத் துற்றோர்
நலிவகற்று நாராய ணா. (சு)

நாராய ணாமுகுந்தா நான்முகன்சொ னூல்வேதப்
பாரா யணத்தோரைப் பாலிப்பாய்—சீரா
ரரங்கத்தை நாடி யருந்தமிழ்ப்பாச் சொல்வேற்
கிரங்கத் துணியா திரேல். (எ)

இரங்காத வன்னெஞ்சத் தீனருக்கோர் கூற்றும்
வரங்கா தலித்தேன் வழங்கா—யரங்கா
துளவணிதிண் டோளிற் சுரிசங்கோ டாழி
யுளவரனீ துன்றனையன் றோ. (அ)

அன்றோர் கணைவி லடியே னுடனுவல்சொ
லொன்றோர்ந் துளாயோ வுரைத்தநினை—வின்றே
வரங்கத் திடைதுயிலு மம்மானீ யவ்வா
றிரங்கற்கிசையாத தேன். (௯)

ஏனவுருக் கொண்டு மெழிற்புவனங் காத்தாய்க்கிங்
கியானறைதல் செய்தா லிளப்பமோ—வானவரு
மாதவரும் போற்று மதிளரங்கத் துற்றுமகிழ்
சீதரனே நன்குணர்ந்து செப்பு. (௧0)

செப்பரிய வாயவளஞ் சேரரங்க மாளிகையி
லொப்பரிய பொய்த்துயில்கொ ளுத்தமா—விப்பரிவெய்
தென்னைச்சோ திப்ப தியல்போ விரங்கியழு
மின்னைச்சோ தித்தனையோ வில். (௧௧)

வில்லுநின்சொ லத்தனையு மெய்யென்றே நம்புமென்னைக்
கள்ளுண்பார் தம்மிற் கடையாக்கே—லள்ளுததி
சூழும் புவிமுகநேர் தொல்லரங்கக் கோயிலிடை
வாழும் புருடோத்த மா. (௧௨)

மாயமான் பின்னோர் வனிதை யுரைத்தவண்ணம்
போயமன்னன் வென்றிப் புகழ்வேட்டே—னீயவனோ
வேறோ விரண்டும் விளம்புகின்றார் மிக்கபொன்னி
யாறோங் கரங்கா வறை. (௧௩)

அறைகழற்று ளாற்சகட மன்றடர்த்த நீயென்
குறையொழிக்க வல்லையன்றோ கூறாய்—பிறைமுடித்தோன்
கையோ டொழித்துக் கயிலாய வெற்பில்வைக்கை
பொய்யோ வரங்கா புகல். (௧௪)

புகழ்வேட்டு நாடோறும் போதவுழைக் கின்றேற்
கிகழ்வோங்கச் செய்த லியல்போ—வகழ்கடற்பார்
வானமொடு போற்று மதிளரங்க மாளிகையிற்
பானல்வனம் போன்றொளிரப் பா. (௧௫)

பாவொன்றிற் காகப் பணிப்பாய் சுருட்டியமெய்த்
தேவென்ற கீர்த்தியினைச் சிந்ாதே—காவொன்றுந்
தென்னரங்கக் கோயிற் றிருமாலே யான்பலவாச்
சொன்னகவி யும்பழுதோ சொல். (௧௬)

சொல்லும் பொருளுமொன்றாய்த் தோய்ந்துளதா நின்சொருப
மல்லும் பகலுநினைத் தாதரித்தும்—வில்லுமம்புங்
கொண்டுநின்சேய் போர்பொருநீர் குன்றிடக்கா ணேனரங்கங்
கண்டுதொழு வாருணர்வா கா. (௧௭)

காகா வெனவே கதறுந் தமியேனுக்
கேகாந்தத் தன்றறைந்த தென்றருள்வா—யாகார
மாகப் புவன மருந்தரங்கா வின்னமென்னாற்
சோகப் படமுடியா து. (கஅ)

ஆதுலர்தாம் வேண்டுவென வத்தனையு நல்கநினைத்
தீதுபடு கின்றேற் கிரங்காயோ—மாதுலனைக்
கொன்ற வயவா குளிரரங்கக் கோயிலிடை
நின்ற முகுந்தா நிகழ்த்து. (கக)

நிகளமிட்ட தாட்டாதை நெஞ்ச மகிழ
மகவுருவா வந்த வகையின்—மிகவலிதோ
வென்றனையாட் கொள்ள லெழிலரங்கத் திற்றுயில்கார்க்
குன்றனைய மாயவனே கூறு. (உ0)

கூறுமறைச் சென்னியினிற் கூத்தாடு முன்னையன்றி
வேறுதெய்வ முள்ளதெனும் வீணர்பெறும்—பேறுமின்றி
மாயச்செய் யாதே மதிளரங்க மாளிகையி
லேயத் துயில்கொளெந்தை யே. (உக)

எந்தைமுக்கண் ணீசனைமுன் னீன்றானை யீன்றபெருந்
தந்தை யரங்கந் தனைநாடி—நிந்தை
பகர்ந்தாலு மன்னவர்தம் பாதாம் புயமென்
னகந்தாங்கத் தக்கபொரு ளாம். (உஉ)

பொருளாசைப் பேய்வழிபோய்ப் புண்படும்பாழ் நெஞ்சே
யருளாசை கொண்டரங்கத் தண்ணற்—றெருளார்ந்த
செந்தமிழாற் போற்றிச் சிறியா ரிணக்கமின்றிச்
சந்ததமெட் டக்கரமே சாற்று. (உங)

சாற்றுந் துதியுந் தமியேன் செயல்கடந்து
தோற்றுமுண்மை யாரறிவார் சொல்லுவாய்—நூற்றுவர்க்கோர்
கூற்றா மரங்கா குளிர்தாட் கணிந்தமலர்
நீற்றான் முடியில் வைத்தோ னே. (உச)

நேரத்திற் கொவ்வோர் நினைவுறுமென் னெஞ்சுனருள்
வாரத்திற் றோய வரநல்கா—யாரக்
குடமுலைவேட் டாய்ச்சியர்தங் கொட்டிலெறும் புக்குற்
றிடர்களைந்த சீரங்க னே. (உரு)

அரங்கத் திருக்கோயி லாண்ட பெருமாள்
வரங்களெலாந் தந்தருள வல்லா—னிரங்குமன
மில்லான்போன் றென்னைமிக வேன்வருத்து கின்றானோ
சொல்லாய்வெண் பாவாய் தொகுத்து. (உசு)

தொகுகளபக் கொங்கைமின்னார் தூநகைவாய் வேட்டு
மிகுதுயர மெய்தி மெலிந்தே—னகுமவர்க்கா
ளாகச்செய் யாதே யரங்கா வுனதடியார்
பாகத்தே சேரவைத்துப் பார். (௨௭)

பாரின் மிடியாற் பலவாறு வாடுமென்னைச்
சீரியைந்த வாழ்வுறவுஞ் செய்வாயோ—நாரியர்க
ளாடு மரங்கத் தறிதுயில்கூ ரம்மானே
வீடுதொறு மேற்க விடேல். (௨௮)

விடங்கலுழ்வாய்ப் பாம்பின்மிசை மேனா ளியற்று
நடங்கவின்ற தாட்டுணையா நாட்பூ—வடங்கருதிப்
பொல்லார் வசைபெறுநான் பூண்டுகொள்ளப் போகாதோ
மல்லா ரரங்கமன்ன வா. (௨௯)

மன்னவர்கோ வானார் மனநடுங்க வச்சுறுத்தும்
பொன்னரங்கத் தப்பா புகலக்கே—ளின்னமென்னைப்
புண்படுத்த வேண்டாம் பொறியரவிற் பொய்யாகக்
கண்படுத னீத்தொழிந்து கா. (௩0)

காக்குந் தகைநின் கடனென் றுணர்ந்துமிகத்
தேக்குமன்பா னின்னருள்சிந் திக்கிலே—னீக்குவதற்
கெண்ணாதே யென்று மிமையாதா ரேத்தரங்கத்
தண்ணாபஞ் சாயுதக்கை யா. (௩௧)

ஆவாவென் றேங்கி யழைக்குந் தமியேன்முன்
னீவாரா தென்ன நிகழ்த்துவாய்—கோவாதி
கொல்வார் பிடித்த கொடுங்கோற் கொதுங்குதியோ
நெல்வார் வயலரங்க னே. (௩௨)

அரங்கன் றிருமுழுதா ளம்புயத்தா னீங்கா
வுரங்கண்ட கோலத் தொருவன்—புரங்க
ளெரித்தாற்குப் பாதியுட னீந்த புகழ்ச்சீர்
விரித்தார்க்கே வைகுந்த வீடு. (௩௩)

வீடு பெறும்பேற்றின் மேலாய சீருளது
நாடுமவர் சிற்சிலரே நானிலத்திற்—பீடுமலி
தென்னரங்கம் போற்றித் திருமாற் கடிமைசெய்யா
மன்னரஞ்சச் சீறு வது. (௩௪)

சீறு மராவணைமேற் றென்னரங்கத் திற்றுயில்வா
னாறுமலர்ச் சேவடியே நாடாமற்—பேறுமற்றொன்
றுண்டென்று நாணும லுன்னும் புலவர்கவி
கண்டென் றுரைத்திடினுங் கைப்பு. (௩௫)

கைப்பரிதி யேவிக் கதிர்மறைத்த காரரங்கன்
மெய்ப்பதமே நாளும் விரும்புவா—ரெப்பதமும்
வேண்டா ரவனடியார் மென்மலர்த்தாட் கேள்சுமப்பார்
தாண்டார் கருணைத் தவம். (௩௬)

தவமியாதென் றெண்ணித் தயங்குவீர் கேண்மி
னுவமானந் தீரரங்கத் துற்றோன்—சிவனுதித்
தேவர்களுந் தானுந் திருடனெனத் தேர்ந்தவன்பா
லாவன்முற்றும் வேண்டு மது. (௩௭)

அதுலன் றிருவரங்கத் தம்மா னளவில்
பொதுவமின்னூர் தானைகவர் பொல்லான்—மதுர
மொழியா ளொருத்தியழு மூடச் சவையி
னுழியா தரிக்கைமெய்யன் றோ. (௩௮)

மெய்யர்புகழ் சீரரங்க மேய விழுப்பெருமான்
பொய்யருக்கு மூனுதவும் புண்ணியமால்—பையரவிற்
கண்டுயிலுந் தென்னரங்கங் காதலித்துச் செந்தமிழால்
விண்டுருகும் பேறென்றே மேல். (௩௯)

மேலோர் பரவும் வியனரங்கத் தம்மானின்
பாலோர முண்டோ பகருவாய்—கோலோர்முன்
வைதார்க்கும் வீடு வழங்குமீ வாழ்த்தெனைச் * சே
யெய்தார்க்கச் செய்யும்வித மென். (௪0)

என்னந் தரங்க மெவரறியா விட்டாலு
முன்னந் தரங்க முணராதோ—பொன்னரங்கக்
கோயிற் றுயில்வாய் கொடையறியாக் குண்டகர்தம்
வாயிற் கலையாது வை. (௪௧)

வையு மவரு மகிழ்கூர மால்கருணை
செய்யும் பதியெதன்னிற் செம்மணிக்கட்—பையுரகப்
பாயல் விரித்த பசும்பொன் னரங்கமென்றே
தூயமுத்தர் சொல்வார் துணிந்து. (௪௨)

துணிந்தெந்தத் தேவருக்குந் தொண்டுசெய்ய மாட்டே
னணிந்தரங்க நாதனையே யன்பாற்—பணிகெழுதேவ
னென்பா ரெவரெனினு மிந்திரர்க ளொண்ணிலராள்
பொன்பார்வாழ் வன்னவர்க்குப் பொய். (௪௩)

பொய்யாவென் னுண்ணி புயல்போற் புகுந்தகளு
மெய்யோ வரங்கா விருதாவா—வையோநா
னெத்தனைநாட் டுன்புறும்வ லீரமுனக் கில்லையென்றாற்
சுத்தமறைக் கீனமன்றோ சொல். (௪௪)

* சேய் - விட்டுணுபுத்திரனான மன்மதன்.

சொல்லிக் கொடுத்துச் சுயோதனனை வீமனன்று
மல்லிற் செகுத்துவக்க வாழ்வித்தா—யல்லிமலர்
வாவித் திருவரங்க மாதவனே வாடுறுமென்
னாவிக் குறுதி யறை. (சரு)

அறைகின்ற பல்லியமு மண்டர் துதியு
மறைமுழக்குஞ் செந்தமிழ்ப்பா வாணர்—குறையிரக்கு
மோதையுஞ்சால் சீரரங்கத் தூற்று யுறங்கண்மெய்யோ
வாதையொழித் தாளவென்னுள் வா. (சசா)

உள்வார்க் கருளரங்கா வுன்றற் குறக்கமுண்டென்
றெள்வார் பலர்துயில்போன் றேமாற்றுங்—கள்வாவென்
றேவிடுவார் சில்லோ ருனக்கெவரோ நல்லாரென்
மேலீரங்கி யின்னே விளம்பு. (சஎ)

விளங்கனிக்காக் கன்றெறிந்த வென்றியொரு சற்று
முளம்புகுதாப் பாவலரை யொன்றேன்—களங்கறுத்தான்
போற்றரங்கக் கோயிற் புருடோத் தமாவெனைநீ
தேற்றல்கடன் சொன்னேனன் றினம். (சஅ)

தினங்கருணை யாமெருழுக்குஞ் செங்கணரங் காவென்
மனங்கவர்ந்தா யென்கைமுழு வம்போ—வனங்கனைநின்
மைந்தனெனச் சற்று மருவினே னென்னையவன்
சந்ததமுஞ் சீரழிக்கின் றான். (சகூ)

றின்னம் பெருத்துக் கெடுவா ரொடுகூடி
யின்ன மனந்தளர வென்னைவிடே—லன்னந்
துயில்வாவிப் பொன்னரங்கத் தொன்னகர்க்கோ மானே
யயில்வேலார் போற்றிசைதந் தாள். (௫0)

தந்தா வளஞ்செகுத்துத் தன்மாமன் சென்னிகொய்து
நந்தாத வென்றிதுன்று நல்லரங்கா—வைந்தாரு
வன்ன கொடைச்சீ ரடியேன் பெறக்கொடுத்தா
லென்ன குறைவா மியம்பு. (௫க)

இயம்பு ஞ் சதுர்வேதத் தேற்ற முணரார்
வயம்பெறக்கண் டேங்குகின்றே னவ் வந்தாள்—கயம்புரந்த
கைக்கயத்தைக் காத்த கருணையரங் காவுனைதிர்
மிக்கவரெல் லாந்தொழுந்தே வே. (௫உ)

தேவை முழுதுஞ் சிறியேன் பெறக்கொடுத்தா
லாவையளித் துன்று ளடையேனோ—பூவைநிறக்
குன்றனையாய் தென்னரங்கக் கோயிலுடை யாய்குலவு
மென்றனைய சக்கரத்தா னே. (௫ஈ)

தானே தனக்கிணையாந் தாமோ தராசலச
மானேய்ந் தகன்ற மணிமார்பா—வானேயுஞ்
சோலை யரங்கந் துதிக்கின்றோர் பாலுநம
னோலைவிடுங் கொல்லோ வுரை. (௧௪)

உரையிறந்த மெய்ஞ்ஞானத் தூக முணர்த்திக்
கரைகடந்த பேரின்பங் காட்டாய்—திரைமூலக்கைச்
செந்திருமின் கேள்வா திருவரங்கத் தம்மானே
தந்துய்யக் காத்தவர தா. (௧௫)

வரத மபயம் வளையாழி தோய்ந்த
கரதலநான் குள்ளானைக் காரே—புரதகனன்
போற்றரங்கத் தென்சொற் புனைந்து பொருவிலரு
ளாற்றல்சற் றின் றின்னே யருள். (௧௬)

அருளால வெய்தி யலமருநா னம்பொற்
பொருளாளர் பாலிரக்கப் போமோ—மருளாளர்
நாடாத சீரரங்க நாதா நரர்தமக்கோர்
தாடாள னாக்கியென்னைத் தாங்கு. (௧௭)

தாங்கரிய துன்பச் சலதிவறந் துன்னருளே
யாங்கருதி யின்புறுநா ளெந்நாளோ—பூங்கமலக்
கண்ணா வரங்கநகர்க் காவலா கார்போலும்
வண்ணா புருடோத்த மா. (௧௮)

மாமாயக் கூத்தாடும் வள்ளான் மதிளரங்கக்
கோமானின் னன்பே குறித்துள்ளே—னேமாற்றிப்
பொல்லா ரிடையிற் புகவுய்த் திடேல்பொருவி
னல்லாருள் வைத்தருளா னடு. (௧௯)

நாடு கவர்ந்த நரபதிக்கோர் கூற்றாகிக்
காடுறைந்த பாண்டவரைக் காத்தோனே—யாடு
மரவணைமேற் றுஞ்சு மரங்கனெனத் தேறுங்
குரவருணர் வார்மறைநூற் கோள். (௨௦)

கோளரவிற் றென்னரங்கக் கோயிலிடை கண்டுயிலு
நீளமலை போல்வானை நேடியே—தாள
முலையார் தமைவெறுக்கு முத்தருக்கே யென்றும்
விலையாய்ப் பணிபுரிகு வேன். (௨௧)

வேனன் பகர்ந்த விலக்கை விதியெனக்கொ
ளீன மதியோரை யான்மதியேன்—றேனவிழ்பூஞ்
சோலை யரங்கந் துயில்வாமெயன் சொற்றுளவ
மாலையொடு சேர்த்தணிகு வாய். (௨௨)

வாய்மை முதிர்ச்சி வழங்கரங்க மாதவனைச்
சேய்மையுட னண்மையுமாஞ் சீதரனைத்—தூய்மைப்
பொலிவுடையார் நன்கறிவார் பூரியர்க டேறார்
கலியுகத்து மூண்டிக் கணக்கு. (௬௩)

கணங்களீ ரொன்பதையுங் காத்தருள்வான் றன்னை
மணங்கமழும் பைந்துளவ மாலை—நிணங்கலும்கூர்ச்
சக்கரத்தான் றன்னைத் தனியரங்கக் கோயிலிலெட்
டக்கரத்தாற் போற்றலுயர் வாம். (௬௪)

ஆமேய்த்துங் குன்றெடுத்து மாயர்களை யாண்டபிரான்
மாமேக வண்ண வடிவெண்ணிப்—பூமேவு
வைகுந்த மாமரங்கம் வாழ்த்துநர்க்கு வாவியின்முன்
னுய்குஞ் சரமாகு மொப்பு. (௬௫)

ஒப்புரைத்தற் கெட்டா வொருவ னுலகமுண்ட
மைப்புயலன் றாலு மகிழுமான்—முப்புவனம்
போற்று மரங்கநகர்ப் பொற்கோயிற் பள்ளிகொள்வான்
சாற்றுமொழி யுண்டென் றனக்கு. (௬௬)

தனக்காத லெய்தித் தயங்குறுமென் றன்பாற்
கனக்கார் நிறத்தரங்கக் கள்வன்—மனக்காதல்
காட்டாது காட்டிக் கவிகவரும் காதைசொல்லக்
கேட்டா லெவர்க்கும் கிறி. (௬௭)

கிறிபுரிய வேண்டாம்வெண் கேழலுருக் கொண்டு
மறிவருங்கூத் தாடரங்கத் தப்பா—மறியணிவான்
சொல்லும் புகழ்மதித்துத் தோத்திரஞ்செய் வாரையொத்தே
னெல்லும் பகலுமொழித் தாள். (௬௮)

ஆளாவார்க் கீயு மணித்தா ளளவினிங்கை
கேளா வழங்குங் கிருபையான்—றோளா
லிரணியனைக் கீன்றா னெழிலரங்கம் போற்றின்
மரணமற்ற பேறும் வரும். (௬௯)

வருமமுற்ற தானவர்க்கோர் வன்கூற் றனையா
னருமறைகக்கா மானையரு ளப்பன்—றிருமருவு
மன்னரங்கத் தம்மான் சரித்தோர் மெய் யுமையாருக்கா
மெல்லனகத்துஞ் சொல்லியதுண் டே. (௭௦)

உண்டுறங்கி மானு டுரகபடம் தாவன்மிகக்
கொண்டுழலு மென்றனைக்கைக் கொள்ளாயோ—திண்டிமிண்டிக்
காரனொருவன்வசை காதலித்தும் வீடளித்த
சீரரங்கக் கோயிலர சே. (௭௧)

அரசனிழற் போற்றுமவ ராதியரை வென்று
விரசைகடக் கும்பதமே வேட்டேன்—கரசயிலங்
காத்த வரங்கா கடையேனைக் கைவிட்டான்
மூத்தவரெள் ளாரோ மொழி. (௭௨)

மொழியு மொழிப்பயனு மூவா வரங்கத்
துழியுறையு மாலேயென் றோர்ந்தேன்—வழிபடுமெய்ப்
பாகவதர் தந்தாட் பதுமத் துகடலைப்பூ
ணாக வளித்தா னவன். (௭௩)

அவலமதி தீர்ந்துன் னருட்கடலின் மூழ்கிச்
சிவனயன்போல் வாழவருள் செய்வாய்—தவளநிறச்
சங்கமுட னாழி தரித்தசெங்கைத் தாரரங்கா
விங்கடியேற் சோதனைசெய் யேல். (௭௪)

ஏலக் குழன்மடவா ரெண்ணிலவர்க் கின்பநல்கு
மாலற் புதங்கருதி வாழ்த்துவீர்—சீலத்
திருவரங்கக் கோயிலிச்சை சிந்தையிற்கொள் ளீரே
லொருவரமு மெய்தா துமக்கு. (௭௫)

உமக்கொருதே வெந்தமர்க்கிங் கோர்தேவென் கின்றார்
தமக்குமருள் செய்வானைச் சாற்றி—னமக்கலகந்
தீர்ந்தார் வழுத்துந் திருவரங்கத் தம்மானை
யோர்ந்தா தரிப்பா ருளார். (௭௬)

உளங்கொண்ட மட்டு முரைபிதற்றி யோவாச்
சளங்கொண் டலையச் சலியீர்—களங்கொண்ட
நஞ்சத்தா னைப்பயந்த நான்முகனை நாபியெனுங்
கஞ்சத்தாற் றந்தநரங் கன். (௭௭)

அரங்க னொருவனகண் டாகார னென்று
கரங்கள் குவிப்பாரைக் கண்டா—லிரங்கலற்ற
புன்னெஞ்சத் தீனர் புறங்கூறிப் போர்புரிவார்
வன்னெஞ்ச மின்மை மதித்து. (௭௮)

மதித்துக் கடலமுதம் வானவருக் கீந்தாற்
றுதித்து நெடுநா டொழுதார்—விதித்தலைவர்
பல்லோரு நாளும் பழிச்சரங்கத் துள்ளாரும்
வல்லோ னெனும்புகழ்கொள் வார். (௭௯)

வார்க்கு மமுதனைய வண்டமிழ்ப்பாப் பாடுமவர்
சீர்க்கு மிழிவுரைக்குந் தீவினையீர்—நீர்க்குமிழி
யன்ன துடலென் றறிந்தகிலங் காக்குமண்ணல்
பொன்னரங்கக் கோயிறொழப் போம். (௮௰)

போம்போமென் றெள்வார் புறங்கடைக்கும் போயலைந்து
நோம்போ தெனைச்சிறிது நோக்குகிலாய்—பாம்போங்கு
பாய லரங்கநகர்ப் பள்ளிகொண்ட பண்ணவனே
நீயகத்திற் சற்றே நினை. (அக)

நினைப்புமறப் பற்ற நிலைவேண்டு மென்னை
வினைப்பயனுற் றன்புறுத்த வேண்டாங்—கனைப்புறுகார்
மேதிப் பரியான் விழையா வியனரங்கத்
தாதிப் பிரானே யருள். (அஉ)

அருணநிறப் புட்பரியொன் றூண்ட பெருமாள்
வருணனழத் தாக்கும்விற்கை மாயன்—கருணைத்
திருவரங்கம் போல்பதியுஞ் செப்புதற்குண் டென்பா
ரொருவருக்கு நாமுறவல் லோம். (அங)

ஓம்புந் தொழிற்றடக்கை யுத்தமனை யும்பர்குலந்
தேம்புந் துயரொழிக்குஞ் சீதரனைப்—பாம்பு
மிசையரங்கந் தன்னில் விழியாரக் கண்டார்க்
கிசையுந் தவமுமெய்து மே. (அச)

எய்துகடற் றீயெரித்தா னீர்ங்கவுண்மா வியானைதுயர்
கொய்துதொண்ட ருள்ளக் குறைதீர்த்தான்—பெய்துளவ
மாலை யரங்கன் மலர்த்தாள் கருதுமதே
வேலைநமக் கெப்பொழுது மே. (அரு)

பொழுதுபிற மூப்புரிந்தும் பொல்லார் மனைமா
ரழுதுருளச் செய்த வரங்க—னெழுதா
மறைத்தலைவற் பெற்றபின்னே வாரிதியேழ் சூழுந்
தறைத்தலமுண் டாயதுமெய் தான். (அசா)

தானாகி நானுய்ச்சராசரமு மாகியும்பர்க்
கானு வமுத மளித்தாண்டான்—மேனா
ளரங்கத் * தொருவனையுண் டாடியவா றன்னா
மரங்கற் கிணையாகு வார். (அஎ)

வாரணத்தைக் காத்த வரதன் மதிளரங்க
நாரணன்றன் கீர்த்தி நவின்றக்காற்—பாரணங்குஞ்
சீரணங்கு நல்குஞ் சிறப்புமுழு தெய்துமென்கை
யாரணநூல் சொல்லுமொழி யாம். (அஅ)

ஆமையுரு வஞ்சமைந்து மண்டரைமுன் றாண்டருளித்
தீமையறத் தீர்த்தநெடுஞ் சீதரனே—மாமையற்
போக்குந் திருவரங்கப் புங்கவனே யென்னைமுற்றுங்
காக்குந் தகைநின் கடன். (அகூ)

* ஒருவன் - திருப்பாணாழ்வார்.

கடன்ஞால முண்டுமிழ்ந்த காரரங்கன் வந்தென்
னுடனாடு முண்மை யுணர்ந்தும்—படநாக
மேய்க்குமல்கு லார்முதலா மேடணைமூன் றாலுநெஞ்சைத்
தீய்க்கும் வினைதீர்ந் திலேன். (௯0)

திலமளவு மெய்யருளி றீயவரைப் போற்றி
மலநுகர்ந்தாங் கேற்றலைய மாட்டே—னலகில்புகழ்க்
கண்ணா திருவரங்கக் காவலா கைகுவித்து
விண்ணாடர் போற்றுமெய்த்தே வே. (௯௧)

வேலா வலயநெடு வெற்பான் மிகக்கடைந்து
மாலா யிரஞ்சுடிகை மாசுணத்தின்—மேலாய்
விழிதுயிலுங் கோயில்களுண் மிக்க தரங்கத்
தழிதிகழ்வ தொன்றேயன் றோ. (௯௨)

அன்று கனக னகன்மார்பங் கீன்றவன்சேய்
நன்றுபெறச் செய்தருளு நாரணனே—யென்று
மரங்கத் துறைவாய்நின் னன்பர்களை நம்பெற்
கிரங்கச்சோம் பாதே யினி. (௯௩)

இனியெனைநீ கைவிட்டா லிம்பருமுன் றன்னை
நனியிகழ்வா ரன்றோ நவில்வாய்—பனிமதிய
மன்னசங்கொன் றாதி யடங்கா வரசர்களுக்
கின்னலருள் பொன்னரங்க னே. (௯௪)

பொன்னரங்கக் கோயிற் புருடோத் தமன்புவியின்
மன்னர்மன்னர் போற்று மணவாளன்—கன்னற்
சிலையானைப் பெற்றான் றிருவடிக்கே நாளும்
விலையாவார்க் கின்றே வினை. (௯௫)

வினைகடந்த மேலவர்க்கு வீடருள்வான் வென்றி
தனைவிழைவார்க் காண்மை தருவா—னனைமலர்த்தார்க்
கூந்தன்மின்னார்க் கார்வங் கொடுப்பான் குளிரரங்கத்
தேந்தல்விண்ணோர்க் கெல்லா மிறை. (௯௬)

இறையளவு மெய்யுணர்வில் லீனனெனை வென்னைத்
தறையிகழு நிந்தை சகியேல்—குறைதவிர்த்தாள்
காவிரிநீர் சூழுங் கவினார் திருவரங்கக்
கோவிலிடை வாழெண் குணா. (௯௭)

குணாலயமே போலுமன்பர் கூட்டத்திற் சேர்ந்து
பணாமுடியோ ராயிரந்தோய் பாம்பிற்—கணாதிபரும்
வானவரும் போற்ற மலர்க்கண் டுயிலரங்கன்
றானருட்கோ னென்னை தவம். (௯௮)

தவம்புரிய மாட்டேன் றமிழாற் றுதித்திட்
டவம்பலவுஞ் செய்தே னகற்றேல்—சிவன்பிரம
னாதியவர் போற்று மணியரங்கத் தம்மானே
தீதிலருட் பேறருளிச் செய். (௯௯)

செய்ய பவளத் திருக்கனிவாய்ச் சீரரங்கத்
தையனையே நாடு மடியார்க்கு—வையகமும்
வானகமும் பேணு மகிழ்ச்சி யளிப்பாளே
தேனவிழ்பூங் கோயிற் றிரு. (க00)

முற்றிற்று.

ஆக செய்யுள் உ0க.

தெய்வமே துணை.

## கட்டளைக்கலித்துறையந்தாதி.

சீர்கொண்டதாமரைப் பூவாவிநீடுந் திருவரங்கக்
கார்கொண்டமேனிப் பெருமாளெல்லோரையுங் காக்குந்தொல்லை
நீர்கொண்டவனென் றறிந்தேத்துமென்னெதிர் நேருங்கொலோ
போர்கொண்டதீவினைக் காளாக்குமோசொல்பொற் பூமகளே. (க)

பூமகள்வாழு முரத்தானையுந்தியிற் போதனொடு
காமனைப்பெற்ற பெருமானைக்காவிரிக் கட்டியிலுந்
தாமரைச்செங்கண் ணரங்கனைநாடித் தமிழ்மதுரப்
பாமழைபெய்திடப் பெற்றார்க்கதேபெரும் பாக்கியமே. (உ)

பாக்கியம்வேண்டிப் பலவாறுவாடிப் பரதவிப்பார்
தேக்கியசெந்தமிழ்ப் பாடல்கொண்டானின் செவிக்கிழிவோ
வாக்கியநான்முக னின்புறக்காப்பதற் கண்டமுற்று
நோக்கியகண்ணரங் காகடற்பாலன்று நோற்றவனே. (௩)

நோற்றுளம்வாடுமென் பாற்றணவாவரு ளேக்கம்வைத்துப்
பாற்றுணவுண்பவர் கூற்றுகுமாறு பணிப்பதென்றோ
காற்றுடன்போர்பொருங் கட்செவிப்பாயற் கவினரங்க
மேற்றுயில்வாயண்ட பிண்டமெல்லாமுண்ட விட்டுணுவே. (௪)

விட்டுணுமூர்த்தி விடப்பாந்தட்பாயல் வியனரங்க
நட்டுறங்கச்சலி யான்போன்றெல்லாமு நடத்தும்பிரா
னெட்டுணையாயினு மென்மேலிரங்கி லிகதலமு
மட்டுறுந்தார்முடி வானேருலகு மகிழ்வெய்துமே. (௫)

மகிழமலர்த்தொடை மாறன்சொன்னடி மனமுருகி
யகிலமெல்லாமுண் டுமிழ்ந்தானரங்கத் தணுகிமுன்னாட்
பகிரதன்போற்கங்கை நீர்வேட்டொருகரும் பாறைகெல்லித்
திகிலடைவேற்கிரங் காளோசெந்தாமரைச் செந்திருவே. (௬)

செந்திருநாயகன் றென்னரங்கத்தண்ண றேவகிபால்
வந்திகங்காத்த கதைகேட்டிருந்து மனங்கலங்கி
நொந்திரங்கார்மனை வாயிற்குமேகி நுடங்குறுநா
னந்திவண்ணச்சிவன் போல்வாழவேண்ட லதிசயமே. (௭)

அதிர்தொனிப்பல்லிய மார்க்கும்பொற்கோயி லரங்கத்தம்மான்
முதிர்தமிழ்ப்பாவலன் பிற்சென்றுமீண்ட முகுந்தப்பிரான்
கதிமுதலென்றுபல் வேதாகமங்கள் கழறற்கண்டும்
புதியவின்பம்பெறு மாறவன்சேவடி போற்றிலனே. (௮)

போற்றிப்பணிந்து புயங்கப்பிரான்மிசை பொன்னரங்கத்
தாற்றிற்றுயின்ற பெருமானைநாடி யகங்கரைந்து
கூற்றிற்கொடியகண் ணார்மையல்வாரி குளிக்கைவிட்டான்
மாற்றிப்பிறக்கும் வினைதீர்ந்தஞான வழிகிட்டுமே. (௯)

வழியாயிரங்கரு திப்பெரிதேங்கு மதியிலிகா
ளழியாதவண்மைத் திருவரங்கேசனுக் கன்புசெய்து
மொழியாலிமாமுகில் போற்கவிபாடிப் பொதுநிலைநின்
றொழியாதபேரின்ப வாரியின்மூழ்ந்துதம் குன்னுமினே. (௧௦)

உன்னுங்கருத்துள்ளு நீவாழுமுண்மை யுணர்ந்திலர்போற்
பொன்னும்புவியு மடவாரும்வேண்டிப் புலர்தனன்றோ
மின்னும்பல்பூணணி மேகமொப்பாயுயர் வீடெனவே
மன்னுந்திருவரங் கப்பெருங்கோயிலில் வாழ்தெய்வமே. (௧௧)

வாழரங்கத்தின் மதுசூதனனை மதிக்கெழுந்து
வீழணிக்கோட்டுக் களிறொன்றுகாத்தருள் விட்டுணுவைத்
தாழவல்லாரெவ ராலுமன்னவர் தஞ்சரண
மூழதனால்வருந் தீமையெல்லாமு மொழித்திடுமே. (௧௨)

ஒழியாதவன்பிணி யொப்பாமிடியி லுழலுமென்னை
விழியாசப்பார்க்கவுஞ் சோம்பல்கொல்லோ வொரு மெல்லியற்குக்
கழிபாடைநல்கிய தாதிச்சரிதங்கள் கற்பனையோ
வழியாதசீரங்கத் தப்பாசங்காழி யவிர்கையனே. (௧௩)

கையனந்தலை கோடாநுகோடி கவின்றரவோர்
வெய்யன்சவைநடு நின்றநின்சீர்த்தி விளம்பிடுநான்
பொய்யன்பர்பேறும் பொருந்தாதுலகிற் புலர்தனன்றோ
மையன்றுமையெனத் தென்னரங்கத்தில் வளர்கண்ணனே. (௧௪)

கண்ணரவுன்னைக் கருடப்பரிமிசை கண்டலது
விண்ணணைச்சொற்பயில் பொய்ஞ்ஞானத்தான்மகிழ் வீணனல்லே
னெண்ணன்கறமும் வளர்த்தானைப்பித்தனுக் கீந்தரங்க
நண்ணுவிழிதுயில் வாய்தொண்டர்கூட்ட நடுவைத்திடே. (க௫)

நடுநின்றநாதனைத் தென்னரங்கத்தொரு நாகமிசை
வடுவுண்கணுருல கெல்லாமளந்த மலர்வருடத்
தொடுசங்கச்சக்கரஞ் சோராதவாறு துயில்பவனைக்
கொடுநிந்தைசெய்தும் பிறவாத சீர்சிலர் கொண்டதுண்டே. (கசு)

உண்டேயுலக முமிழ்ந்தானைக்கானத் தொருதுரும்பு
கொண்டேவன்காகத்தின் கண்கெடுத்தாண்ட குணாலயனைத்
தண்டேன்மலர்ப்பொழிற் சீரரங்கத்திற் றனிதுதித்து
யண்டேசெய்தீவினைப் போராட்டந்தீர்தரப் பார்த்திலனே. (கஎ)

பார்த்தனிரதப் பரிதூண்டுஞ்செங்கைப் பகவபல
மூர்த்தமுமாமொர் முகுந்தாவரங்கத்தின் முண்டகத்துஞ்
சீர்த்தவிழிதுயில் வாயடியேனிந்தை செப்பிடினு
மார்த்தமதுரத் துதியாமென்றேற்றினி தாண்டருளே. (கஅ)

ஆண்டதுன்சிந்தை யறியுமென்னெஞ்சு மறியுமன்றி
யீண்டறிவாரில ரென்செய்குவேனனி யேங்குகின்றேன்
காண்டவந்தீய்த்தவற் கீந்தகருணைக் கடலருள்வாய்
நீண்டவனேயரங் கப்பெருங்கோயிலி னின்றவனே. (க௯)

நின்றனையோரணு மாத்திரமேனுமென் னெஞ்சிலின்றேற்
கொன்றருந்துங்கொடி யோர்க்கெமனுகுங் குணம்வருமோ
மன்றலம்பைந்துள வுந்திருமாது மணியரசு
மொன்றுமன்மார்பத் தரங்காவின்றுயி லுரைத்தருளே. (உ0)

உரைக்கருஞ்செம்பொன் வரைமேற்றுருவ னுறைப்புரிந்தாய்
வரைக்குடைதாங்கியு மானினங்காத்தனை வாழ்த்துமென்னைத்
தரைக்கணின்றுண்டரிற் கூட்டுகிலாயிதென் றண்ணரங்கத்
திரைக்கும்வம்பார்ந்த ளணைமேற்றுயிலு மிறையவனே. (உக)

இறையளவேனுமின் சொற்சாரந்தேர்வரு மீனர்முன்னுங்
குறையிரக்குங்கொடி யேன்புகல்பாட்டிச்சை கொள்ளலென்றே
மறையவன்றன்னை மலருந்தியாற்றந்தொர் வாளரவி
லறைபடும்பள்ளியச் சீராரரங்கத் தமர்ந்தவனே. (உஉ)

அமரருக்கின்னமு தூட்டியதன்றி யடலவுணர்
தமரொடுமாயச் சமருஞ்செய்தாயெனைத் தாங்குகிலாய்
நமரவன்றானென் றெனையுன்றனன்பர் நவிலல்பொய்யோ
பமரமுலாம்பொழிற் றென்னரங்கத்துறை பண்ணவனே. (உ௩)

பண்காட்டுஞ்சொல்லியர் மோகவிகாரப் பரவையில்வீழ்ந்
தெண்காட்டுநெஞ்சுடைப் பொல்லேனையாளி லிளப்பங்கொலோ
பெண்காட்டுமார்புடை யானேயரங்கப் பெருநகரிற்
கண்காட்டும்பொய்த்துயில் கொள்வாயெல்லோரையுங் காப்பவனே.

காப்பதுன்றண்ணருட் கேகடனுமெனக் காசிறமிழ்ப்
பாப்பகர்தொண்டரொடென்னேயுங்கூட்டிப் பரித்தருள்வாய்
சேப்பதுமாதனைப் புங்கவன்போற்றுந் திருவரங்கக்
கோப்பணிப்பாயலிற் பள்ளிகொண்டாயண்டர் கூட்டத்தனே. (உ௫)

கூட்டம்பெருக்குநின் மெய்யடியாரொடு கூடுமிச்சை
நாட்டந்தனிற்கொள்ள னீயறியாய்கொலெங் நாளருள்வாய்
பாட்டன்பருக்கும் பணித்தொண்டருக்கும் பரிந்தருளி
யாட்டங்கதத்தனே மேற்றுயில்கூரு மரங்கத்தனே. (உ௬)

அரங்கத்தரவணை யிற்கிடந்தாலு மமாருய்கைக்
கிரங்கத்தகுதிரு வுள்ளத்தம்மானேமிக் கெண்ணலுற்றுங்
குரங்கத்தனேபெருஞ் சேட்டைகுன்றுக்கொடுங் கோரநெஞ்சாற்
றரங்கத்தபத்திற் கடையாகச்செய்தனன் றன்வினையே. (உ௭)

வினையாயிரமெனேச் சூழ்ந்துகொண்டாலுநின் மெய்யருளா
லுனையான்றுதிசெயப் பெற்றுளனுலினி யுய்ந்துகொள்வே
னனையாகித்தந்தையுஞ் சற்குருநாதனு மாயரங்கந்
தனையாடரவணை மேலவிர்ந்தானுந் தனித்தெய்வமே. (உ௮)

தெய்வமனேக முளவென்னநாடித் தியங்குறுபாழ்ம்
பொய்வருசிந்தைப் புலேயாட்டுளீர்பல புண்ணியமுந்
தைவளர்பேரருட் டாமோதரனேத் தமிழரங்கத்
தைவகையாயுதந் தொட்டமர்ந்தானே யடைந்துய்ம்மினே. (உ௯)

உய்யவிரும்பு மனமேயரங்கத் துறையுமெழின்
மையனேயானே மறவாமலேத்தி வணங்கியொரு
பையரவப்பெரும் பாயலொடுன்னிமெய்ப் பாகவதர்
செய்யபொற்றாட்டுக ளாத்தினந்தோறுஞ் சிரத்தணியே. (௩0)

சிரத்தையொரெள்ளள வேனுமில்லாக்கொடுஞ் சிந்தைவஞ்சப்
பரத்தையர்கொங்கைக்கு மாசைகொண்டேங்கும் படிற்றுநெஞ்சேன்
வரத்தைநின்பாற்பெற வேண்டுகின்றேனென்று வாழ்விப்பையோ
வரத்தையொப்பாம்விழிப் பாவையராடரங் காதிபனே. (௩௧)

ஆதிக்குமூல மெனக்கூவுமானேக் கருள்புரிந்த
நீதிக்குமாறல்ல வோதமியேனிவ ணெஞ்சழுங்கச்
சோதிக்குந்தன்மையென் பாடெல்லாமுந் துவர்க்கின்றவோ
மாதிக்குமுற்றும் வழுத்தரங்காசெங்கண் மாயவனே. ([illegible])

மாயவுலகில் வறுமைப்பொல்லாப்பிணி வாட்டநொந்துந்
தூயதமிழ்க்கவி யாலுன்னைநாளுந் துதிக்கிலனே
வேயபயனென் றெனக்கருள்வாயெண்ணி லிந்திரர்க்கோர்
தாயனையாயரங் கப்பெருங்கோயிற் சயனத்தனே. (௩௩)

சயமகள்கேள்வனைத் தண்டாமரைக்கட் டனிமுகிலை
யியலிசைநாடகந் தேறவல்லார்க்கொ ரெளியவனை
யயன்வருமுந்திப் பெருமானைக்கோயி லரங்கத்திற்கண்
டுயர்பதந்தோய்ந்தனர் பல்கோடிதொண்ட ருகந்தொறுமே. (௩௪)

உகந்தோறுமொவ்வொ ருருக்கொண்டுதோன்று முவகையினு
னகந்தோறும்பாவனை போன்மிளிர்வான்றென் னரங்கப்பிரான்
சகந்தோற்றற்காரண னும்பிரமாதியர் தம்பதமு
மிகந்தோர்களன்றிமற் றியாவருங்காண்டற் கெளியனன்றே. (௩௫)

அன்றோர்குறுஞ்சிறிப் பெண்ணிமித்தஞ்செய்த வற்புதச்சீ
ரின்றோர்சற்றேனு மிலகாததேனென் றிரங்குவையோ
குன்றோர்குடையெனக் கொண்டாடல்செய்திறற் கோவலவ
னென்றோர்வடிவுஞ் சமைந்தாயரங்கத் திருப்பவனே. (௩௬)

இருப்புலக்கைக்கைச் சமன்றூதர்வந்தென் னிடமணுகா
தொருப்படுஞ்சிந்தையொ டின்னுமமோத வுணர்ந்திலையோ
கருப்புவிற்காமனை நான்முகன்றன்னைமுன் கான்முளையா
விருப்புடன்றந்தரங் கப்பெருங்கோயிலின் மேயவனே. (௩௭)

மேயும்பசுக்களைக் கன்றுடன்கொன்றுண்ணும் வெய்யர்முடி
சாயும்படியொறுக் கும்பெருங்கீர்த்தி தரத்தக்கதே
நீயுன்கருத்தி னினையாததேனண்டர் நெஞ்சுவப்ப
வாயும்புகழ்த்தென் னரங்கத்தின்மேவு மருட்கொண்டலே. (௩௮)

அருட்கொண்டலாமுனைச் சந்ததம்போற்றியு மாடகப்பொய்ப்
பொருட்டின்பஞ்சூழ்தரப் புண்பட்டுளேன்றினம் போற்றிசைக்குந்
தெருட்டொண்டரோடெனைச் சேர்த்தருள்வாய்மலர்த் தேன்சொரியு
மிருட்டண்டலைமலி சீரங்கக்கோயி லிடத்தண்ணலே. (௩௯)

இடங்கர்வெவ்வாய்ப்படுங் காரானைகாத்ததுன் டென்னின்மிடி
யடங்கத்தணைந்தென்னை யாண்டருள்வாய்பின்னு மம்புவியுந்
தடங்கழற்றாமரை யாலளந்தாய்செந் தமிழரங்கா
விடங்கக்கும்வாய்ப்பணிப் பாயலின்மேற்றுயில் வித்தகனே. (௪0)

வித்தையொரெட்டும் வினைதீர்ந்தவீடும் விரும்பெனக்குத்
தத்தைமென்சொல்லிய ராற்றுயரீத றருமங்கொலோ
சத்தையுஞ்சித்தையு மானந்தப்பேற்றையுந் தந்தருள்வாய்
மத்தையங்கைம்முகில் போன்றரங்கத்துறைநாரணனே. (௪௧)

நாரணன்றென்னரங் கத்திருக்கோயிலி னுகமிசை
காரணகாரிய மாத்திகழ்மூர்த்தி கரைகடந்த
பூரணனென்பதற் கோர்பெருஞ்சாட்சியெம் பொன்னன்மனை
யேரணவுங்கம்ப மொன்றேயென்றோது நரெம்மவரே. (௪௨)

எம்மவராரெனிற் பொன்னரங்கத்தி லிளந்துயில்கொண்
மைம்மணிவண்ணன் பதமேகருதி மதம்பொழியுங்
கைம்மலையன்னபொல் லாரிறுமாப்பறக் காய்தனத்தி
மெய்ம்மறைநான்குஞ்சொ லெட்டெழுத்தென்றும் விளம்புநரே. (௪௩)

விளங்கனிக்கொங்கைநல் லார்தருமோகவெவ் வேலையிற்றாழ்ந்
துளங்கனவாதனைப் பட்டிளைத்தாலு மொருசிறிதுங்
களங்கமின்மாதவத் தோர்சூழரங்கன் கழற்கமலஞ்
சளங்களெல்லாந்தணந் தாள்வதென்றோரிற் றவத்தினரே. (௪௪)

தவத்தினுமிக்க பணியொன்றுண்டேயதைச் சாற்றுகின்றே
னவக்கிரகங்களுக் கஞ்சாதரங்கத்தி னாரணனே
பவப்பிணிதீர்த்திட வல்லானென்றோர்ந்து பசுந்தமிழாற்
சிவப்புநன்னாவுறச் சந்ததந்தோத்திரஞ் செய்கின்றதே. (௪௫)

செய்யதண்டாமரைப் பூமிசைவாழுந் திருமணந்த
வையனைப்பொன்னரங் கப்பெருங்கோயிலி லாண்டகையைப்
பையரவிற்றுயில் கின்றானைவன்சிசு பாலனென
வையவல்லார்க்குந் தமியேனடிமையிம் மாநிலத்தே. (௪௬)

மாநிலமுண்டுமிழ்ந் தாய்பலதானவர் வாழ்வொழித்தா
யானினங்காக்க மலையெடுத்தாயன்ப னாகமுய்ய
மேனிகழ்சோதி மறைத்தாயென்றன்னைக்கை விட்டுவிடே
றேணிரைசோலைத் திருவரங்காமலர்ச் செங்கண்ணனே. (௪௭)

செங்கட்கடாக்களி றொன்றட்டுமாமன் சிரந்தடிந்தாய்
வெங்கட்டகுவர் சமர்தீர்ந்தரங்கத்தின் மேவுமெந்தா
யெங்கட்டுயர்செயும் பாழ்மிடிப்பேயடற் கெண்ணினன்றித்
திங்கட்சடையன் முதலோரையாண்ட திறம்பொய்க்குமே. (௪௮)

பொய்க்கும்பரசம யம்புகுந்தீயர்வெம் போர்மலிவுற்
றெய்க்குந்தமியனை யாளாதிகழ்ந்திடி லெங்ஙனுய்வேன்
மொய்க்கும்புலவர் பலர்போற்றரங்க முதுநகரிற்
பைக்கும்பணியணை மேற்பள்ளிகொண்ட பராஞ்சுடரே. (௪௯)

சுடரிரண்டேயன்ன சக்கரஞ்சங்கஞ் சுமந்ததிட்டோட்
கடவுளைக்கார்மணி வண்ணப்பிரானைக் கவினரங்கத்
திடமிறைஞ்சுந்தகை யானெய்திலேனவ னேயளித்தான்
குடமுலைப்பாரதி சாட்சிகண்டாய்தன் குவலயமே. (௫௰)

குவலயங்காப்பவர் பல்லோர்மடியுங் கொடுங்களத்திற்
றவமுடிவோதி யொருபேடிதேர்விடச் சற்றுமொல்கா
ணவனுறைகோயிற் றலையாமரங்கத் தருந்தமிழா
ணவரசப்பாட ணவில்வாரையாட்கொள்ள நாணுங்கொலே. (௫௧)

நாணுதநெஞ்சுடைப் பாவையர்தம்மையு நாடிநொந்து
வீணுட்கழிக்குந் தமியேனையாளவும் வேண்டுங்கொலோ
வாணுகிப்பெண்ணு டலியாகிச்சீரங்கத் தாலயத்தோர்
நீணுகணையிற் றினந்துயில்கூரு நெடுந்தகையே. (௫௨)

நெடியோனைத்தென்னரங் கப்பெருங்கோயிலி னீடுசெம்புட்
கொடியோனைநான்முகன் றந்தையையீடில் குணக்கடலைப்
படியோடுவானு மளந்தானையைந்து படையினனை
யடியோடுமாணவந் தீர்ந்தார்மனக்கண் ணறியுமன்றே. (௫௩)

அறிவாயறிபொரு ளாயறிவார்களு மாகுமுன்னைக்
குறியாமென்றெண்ணியுஞ் சீரறியாதெனைக் கொண்டருள்வாய்
சிறியோர்கள்புன்சிந்தை வேண்டாதமாண்புடைச் சீரங்கத்திற்
பொறிவாளரவணை மேற்றுயில்கூர்முதற் புங்கவனே. (௫௪)

புங்கவர்கூட்டந் தகுவருக்கஞ்சிப் புறந்தந்திடா
தங்கமுதீந்த புகழேகருது மடிமைமனச்
சங்கடந்தீர்க்கத் துணியாததேன்பெருந் தண்ணரங்க
மங்களமியாவுங் கொடுநீடவாழ்பெரு மாதவனே. (௫௫)

மாதவஞ்செய்யும் வலியாதுந்தோய்வரும் வஞ்சநெஞ்சே
னேதமுற்றுந்தவிர்ந் துய்கைநட்டேனினி யென்செய்வையோ
போதனைப்பெற்றவ னுலெண்ணில்கோடி புவனநல்கி
யாதரஞ்செய்யு மரங்காசங்காழி யணிந்தவனே. (௫௬)

அணிந்தவர்பாடல்கள் வேண்டுதியோவுன தன்பினிடை
துணிந்தவர்சொற்றொடை சூடுதியோவுண்மை சொற்றருள்வாய்
பணிந்தவர்க்கான பணிசெய்குவாய்சினைப் பைங்கொண்டல்போற்
றணிந்தணிசென்னியன் போற்றரங்கத்திற் றழைத்தவனே. (௫௭)

தழைக்கும்பெருமை தவிராவரங்கந் தனிற்கிடக்கு
மழைக்கொண்டல்போலும் வடிவப்பிரானை வழுத்துகில்லீ
ருழைக்கண்கொண்மாதர்க் குருகுகின்றீர்நம னுற்றார்முன்வந்
தழைக்கின்றபோதும்மை யார்புரப்பாரவ ரச்சுறவே. (௫௮)

அர்ச்சாவதாரத் தருமைசற்றேனு மறிகின்றிலா
ரிச்சாநுபோகம் பெறவுங்கண்டியான்மிக் கிளைத்துளன்காண்
பிச்சாடனற்குக் கயிலாயவாழ்வருள் பேரரங்கா
கச்சூர்முலைச்சியர்க் கேங்காதவாறு கடாட்சித்திடே. (௫௯)

கடங்கலுழ்மால்கரிக் கோடிறுத்தாய்புலைக் கன்றெறிந்தாய்
தடங்கடலுணுறச் சீரங்கக்கோயி றனிற்றுயின்றா
யிடங்கரிற்றீய மிடியானொந்தேற்கின்ப மென்றருள்வாய்
மடங்கமழ்சிந்தைச் சிசுபாலன்றன்னிலும் வம்பனன்றே. (௯0)

வம்பவிழ்பூந்துண ரெல்லாமுநாணும் வனத்துளவுன்
செம்பவளப்பதத் திட்டெழுத்தெட்டுந் தினஞ்சொல்லுவார்
கும்பலொடென்னையுங் கூட்டிக்கொண்டாயுட் கொதிக்கவிடே
னம்பரியார்க்கு மெளியாயரங்க நகரத்தனே. (௯௧)

நகமகள்கேள்வன் முதலோரைவென்றன்று நான்றபல்கைச்
சிகரியையேங்கர் வாணனைச்செற்ற திருவரங்கா
மகரினத்திற்கன்ன னன்னார்க்குமஞ்சுமென் வன்மிடிப்பே
யிகலினுக்கஞ்சி யொதுங்கேலுவகைமிக் கீந்தருளே. (௯௨)

ஈந்தார்க்குமேற்பவர்க் குந்துணையாகு மிறைவனிசைப்
பூந்தாருவைந்துடைப் பொன்னுலகோர்க்கன்னை போலும்பிரா
னாய்ந்தார்க்கருளு மருளாளன்வாழு மரங்கமன்றி
யேய்ந்தார்க்குச்சித்தியு முத்தியுங்காட்டு மிடமில்லையே. (௯௩)

இடகலைக்காற்றினை யீர்த்தீர்த்துநோய்ப்படு மேழைமையீர்
விடவரவக்குல பூபதியாமொரு மெல்லணைமேற்
றடமதிளேழுடைப் பொன்னரங்கத்திற் சயனித்துளான்
கடகரியுய்வுறச் சென்றாண்டவாற்றைக் கருதுமினே. (௯௪)

கருங்கொண்டலன்ன திருமேனியானைக் கனகமுடை
னருங்குங்குமம்புரை மானார்தங்கேள்வனை யண்டர்தொண்டர்
நெருங்குந்திருவரங் கப்பெருங்கோயி னிமலனைவேட்
டொருங்குந்தமையிழப் பார்க்கெந்தநாளு முறுகணின்றே. (௯௫)

உறுகணும்பர்க்குந் தவத்தோர்க்குநாளு முதவுகொடுந்
தறுகண்வன்றானவர்ச் செற்றேயரங்கந் தனிற்றுயின்றாய்
சிறுகண்வல்வேழமொப் பாமொன்னலார்களைச் சீயமெனத்
தெறுகணத்தாரொ டெனைச்சேர்க்குநாளெது செப்புதியே. (௯௬)

செப்பாறறியநின் றாதன்வந்தென்னது செந்தமிழ்ப்பாட்
டொப்பாவியந்தமெய் ஞானிலத்தோரு முணர்வதென்றோ
முப்பாற்றமிழ்ப்புல வோரெண்ணிலார்புகழ் மூதரங்கத்
தப்பாபடியளந் தெல்லாவுலகு மளிப்பவனே. (௯௭)

அளிமுரல்பைந்துள வேங்கர்பாட லறையுமென்னுட்
களிவருவிக்கவல் லாயல்லையோபெருங் காட்டிபவாய்
பிளிறொலிகேட்டு முடன்போய்ப்புரந்தருள் பெற்றிபொய்யோ
குளிர்பொழிற்சீரங்கக் கோயிலின்வாய்ப்பள்ளி கொண்டவனே. (௯௮)

கொண்டலுந்தண்கட லுங்காவிநாண்மலர்க் கூட்டமும்போ
லண்டர்தஞ்சேனை நடுவேவிளங்கு மரங்கப்பிரான்
வண்டமிழ்வேட்டுத் தமியேனிடஞ்செய்த மாயமெல்லா
மண்டலத்துள்ள மனிதர்தம்பாற்சொல்ல வல்லதன்றே. (௬௯)

வல்லார்வழுத்துந் திருவரங்கேசனை வாரிதியுட்
பொல்லானொருவற் செறுமாறுமீனிற் புகுந்தவனைக்
கல்லாலநீழ லிருந்தானனையர் கருத்தறியு
மல்லான்மற்றோர்மனந் தேர்வரிதாமெய்ச்சொல் லாகுமிதே. (௭௰)

ஆகுலமீறிட லாற்பெரிதோலிடு மாயருய்யக்
கோகுலமின்புறக் குன்றெடுத்தானண்ட கோடிகண்முற்
றேகுசெம்புட்பரி யூர்வானரங்கத் தினைக்குறித்துப்
பாகுறழ்பாடல்சொல் வார்முன்செய்மாதவம் பற்பலவே. (௭௧)

பற்பமண்சிந்துரஞ் சந்தனமாதி பழகுறுதம்
பொற்பமைந்தோரெவ ரானாலுமென்னது புந்திமுற்றுங்
கற்பனைதீர்ந்த கருணைப்பெருங்கடற் காரரங்க
னற்புதத்தொண்டரென் றேயன்பினொடோது நாடுமன்றே. (௭௨)

நாடுங்குறிஞ்சியும் பாலையுநெய்தலு நாறுமலர்க்
காடும்புரக்கு நெடுமாலரங்கங் கருதுநர்க்கே
யீடும்புகழு மிறுமாப்புமெய்தும் பிறர்க்கிரக்கு
மோடும்புன்கந்தை யுடையுந்துயரு முறுவனவே. (௭௩)

வனமாலைத்தோட்டிரு மாலரங்கேசன் மலர்க்கணைக்கைச்
சினமாரனைத்துங்க நான்முகனோடருள் சீதரன்பொய்த்
தனமாலளித்துந் துயர்செய்கின்றானண்டர் தாமுமெச்சுங்
கனமாரச்செய்பவல் லானல்லனென்றுங் கழறரிதே. (௭௪)

அரிநாரணன்புரு டோத்தமன்கேசவ னண்டர்கட்கோர்
பெரியானரங்கப் பிரானென்னநாளும் பிதற்றுமென்கைச்
சரியோடுவெள்வளை யாழியுஞ்சிந்துந் தனத்துணைப்பொற்
கிரிதாங்கிப்பைந்துள வேவிழைந்தேங்குங் கிளிமொழியே. (௭௫)

கிளியுஞ்சதுமறைச் சீர்பாடரங்கத்திற் கேசவனை
யளியுந்துசிந்தைப் பெருமானென்றோரு மறிவினர்க்கே
தெளியுந்தமிழுங் கலங்காதசிந்தையுஞ் சித்தர்மெச்சுங்
களியுமெண்சீருடைச் செந்திருமாது கருணையுமே. (௭௬)

கருங்கோலமாகிப் புவியிடந்தானைக் கவினரங்கப்
பெருங்கோரப்பாம்பணைப் பள்ளிகொண்டானைப் பெரிதுநம்பி
யருங்கோரணிக்கொடுந் தீமிடிதீர்த்தற் கவாவடைந்தே
னொருங்கோரஞ்செய்குவ னேலுய்வுறுதில் வுலகமுமே. (௭௭)

உலகமெல்லாமுண் டுமிழ்ந்தானைச்சோர்வி லுரத்தவுணர்
கலகம்வென்றானைக் கருதாமற்காலங் கழிக்குமவ
ரலகில்பல்கோடி பிறப்படைவாரென் றறிந்தரங்கத்
திலகுசொற்பாடல் பொழிவாருக்கில்லை யிருவினையே. (௭௮)

இருளறுத்துண்மை வெளியாகச்செய்யுமொ ரெண்சித்தியோ
டருளளித்தானந்த வாரியிற்றாழ்த்து மமரரெல்லாம்
பொருளெனக்கொள்ளு மரங்கேசன்சேவடிப் போதுநத்தி
மருளுடைத்தீயரைச் சேராதுங்கு மனிதருக்கே. (௭௯)

மனிதக்குலத்திற் பிறந்தாலுமீன மறையனையார்
தொனிதரும்பூதலத் துண்டுகண்டரவர்ச் சொல்லினல்ல
புனிதர்கொண்டாடு மரயகேசன்றாடொழும் போதமின்றிப்
பனிதருஞ்சொல்லியர் மோகக்குழியிற் படுமவரே. (௮௰)

படும்பாடனந்த முரைக்கரிதாகுநின் பாதமலர்
தொடும்பேறும்வீட்டுத் துடிதுளன்காமனற்கை சோரவிடே
னெடும்பாம்பணையிற் றுயிலரங்காவுண்மை நீதயிலார்
கெடும்போர்விளக்கவல் லாய்தொண்டர்வாய்மொழி கேட்பவனே.

கேட்டுக்குள்ளஞ்சிக் கெடாதுயர்பேறு கிடைக்கநின்பொற்
றாட்டுணைநாடித் தவஞ்செய்துளேனெனைத் தள்ளிவிடே
னாட்டுத்தலைமைத் திருவரங்கத்தி னடுத்துயில்வாய்
பாட்டுச்சொல்வேலை பயனேனுமின்று பரிந்தருளே. (௮௨)

பரிந்தண்டர்வாழ்கைக் கணையாகினான்றண் பசுந்துளவஞ்
சொரிந்தண்டமென்பர்க் கெளியானரங்கந் துயிலன்மெய்யேல்
விரிந்தண்டகோடிக ளெவ்வாறுகாக்கும் விளம்புமினோ
தெரிந்தண்டகூடத்தும் போய்மீண்டுவக்குமெய்ச் சித்தர்களே. (௮௩)

சித்தாயிரஞ்செயுங் கோவலன்றன்னைத் திருவரங்கத்
தெத்தாரணியும் புரந்தேதுயிலு மிறையவனைக்
கொத்தாயபைந்துள வன்றியொவ்வாத குளிர்தமிழாற்
பத்தாயதொண்டர் துதித்தடைந்தார்மெய்ப் பரகதியே. (௮௪)

பரத்துவமியாவர தோவென்றுவாடுறு பாவலர்கா
ளரத்துணைக்கண்ணியர் தானைகொண்டான்றென் னரங்கப்பிரான்
கரத்துவலன்சங்கொடு சக்கரந்தாங்குங் கருணையண்ணன்
மரத்துருப்பெற்றலர்த் தாளாற்றடிந்த மதலையதே. (௮௫)

மதகரிக்கோடிறுத் துப்பகைநீர்மலி மாமன்சென்னி
பதமலராற்களைந் தானரங்கத்திற் பணியணைமே
னிதம்வளர்தாமரைக் கட்பெருமான்றனை நேரினன்றிச்
சதுமுகனாதியர் வாழ்வொருக்காலுந் தழைப்பவன்றே. (௮௬)

பவனன்றன்னோடு பொரும்பெரும்பாம்பணைப் பள்ளிகொண்டான்
சிவனன்றுபார்வதிக் கோதுந்தனிப்புகழ்ச் சீரங்கத்தா
னவனன்றிமற்றொரு தெய்வமின்றேயுண்டென் றாலுமது
புவனங்களுய்ய வவன்கொள்ளுமூர்த்தப் பொலிவுள்ளான்றே. (அஎ)

ஒன்றேபெருந்தெய்வம் வேறில்லையுண்டென் றுழலன்மினோ
குன்றேயனைய நிலைத்தொண்டர்காள்கருங் கொண்டலொக்கு
நன்றேவிளக்கு மரங்கத்தில்வாழு நயனமவன்றான்
றன்றேகத்திபசரி பாதிகவருந் தகையினதே. (அஅ)

தகையினுமீறி மடவார்தமல்குற் றடத்தினுட்போய்
மகைபமெமாகங் கொளுமொருசெம்மையாந மேலையினுங்
திகைதொழுஞ்சீர்தது முழங்கரங்கேசனைத் தண்டனிட்டு
வகைபவசந்தமிழ்ப பாமாலைபாடி வழுத்துதியே. (அகூ)

வழுத்தின்னொட்டுப் பொருளைக்கரையிலார் வண்புளிக்கீ
ழெழுந்தருஞ்சர்த்துச் சடகோபன்வாய்மொழி யின்பயனை
முழுதுமபக்கது விதத்தாமரங்கன்றன் முண்டகத்தா
டொழுதினைஞ்சுந்தவத் தோர்கென்றுமாயைத் துயரில்லையே. (கூ0)

துயரமெல்லாமறத் தீர்த்தருள்வானைத் தொழுமடியார்
செயமுறவேண்டிய வாறுசெய்வானைத் திருவரங்கப
புயகமொன்றிற்கிடக் கின்றானைக்கண்டு புகழுவுட
னயமுறமஞ்சு மனல்காணுமென்மெழு காயவிடுமே. (கூக)

ஆய்ப்பாடியூரி லசோதைதைகைச்சேயென் றயோத்தியினின்
வேய்ப்பான்மைததோளுடைக் கோசலைபாலனின் மெயபுகழ்
வாய்ப்பான்மணக்கும் புலவோருக்கின்பம் வழங்கும்பிரான்
பாய்ப்பாம்பிற்றென்னரங் கக்கோயின்மேய பழையவனே. (கூஉ)

பழவடியாரொ டெனைக்கூட்டியாளுமுன் பதமலர்த்தண்
ணிழலிடையேவைத்துக் காத்தருள்வாய்மிக நிந்தைசெய்த
தழனமொழிமேயார்சிலர்க் குங்கதியீநத சாதம்பாயயோ
வழகியசீரங்கக் கோயிலின்மேய வருட்கொண்டலே. (கூ௩)

கொண்டலும்பூந்துண ரும்பலபுள்ளுங் குலவுபசுந்
தண்டலைச்சீரங்க நாயகமேயருட் டன்மையில்லா
வண்டர்கள்சேர்கொங் கூற்றுக்கா மடிமையினை
மண்டலத்தோரு மதியாமைக்கமைக்குற வைத்தனையே. (கூச)

வைத்தபல்வேலு மணிமுடியாதிய வன்பணியும்
பைத்தலைபாம்புமழ் வீரமுமொன்மும பச்சைமுகி
லொத்தரங்கத்திற் பயல்வானைகபாடி யுளமுருகிக்
கைத்தலங்கூப்பர்க் கேயுளவாமிது கட்டுரையே. (கூரு)

கட்டுப்பட்டன்றுரா லோடுதவழ்ந்த கதைசொலினு
நட்டுப்பல்பேறுந் தரவல்லனீயென்று நாற்கவியு
மிட்டுப்பசுந்துள வாலருச்சித்தெழுத் தெட்டுஞ்சொல்வேற்
றொட்டுக்கைக்கொண்டதும் பொய்யோவரங்கத் துயிற்கண்ணனே.

கண்ணனைப்பொன்னரங் கத்திருக்கோயிற் கடவுளைப்பல்
விண்ணவர்க்கும்பெருந் தாரகமான விகிர்தனையோர்
பெண்ணரசுற்ற மருமத்தினனைப் பெரிதடியே
னண்ணலன்றேன்வலி தாயிரமாட னடாத்தவினே. (கூஎ)

நடலைக்கவுரவர் கூற்றுயினனை நளிர்திருப்பாற்
கடலைக்கடைந்த பலமேகொடிதிண்கைக் கரியவனை
விடலைக்கிடர்செயு மாடகற்கின்றவல் வீரனைவெள்
ளடலைச்சிவன்புகழ் சீரங்கத்தேத்தியுய்ந் தார்பலரே. (கூஅ)

பலபலவாய விளையாடல்செய்து படிபுரக்கு
நலமுடைத்தெய்வமொன் றேயன்றிவேறில்லை நான்மறையும்
புலவர்தொன்னூல்க ளனேகமும்பாடுமெய் பொய்யன்றண்டர்
குலமிறைஞ்சுமபுகழ்ச் சீரங்கத்தென்றுங் குடிகொண்டதே. (கூகூ)

குடிலாருமுல்லையி லாய்ச்சியர்மேனியுங் கோளரவு
முடிநேர்செலாடகன் றன்மனைதூணுமென் னேழைநெஞ்சு
மடியார்குழாமலி சீரரங்கேச னருட்டுளியாற்
செடிநாறறந்தீர்ந்து துழாயமணங்காலுமெய்ச் சீர்பெற்றவே. (க00)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௱0க.

தெய்வமே துணை.

## பதிற்றுப்பத்தந்தாதி.

மணிவண்ணக் குன்றுறழு மாலரங்கா நீயந்நாள்
கணிவண்ணன் மொழிச்செவ்வாறு கவிமுதுவுக்கின் னருள்செய்தாய்
திணிவண்ணப் பெராண்மை செயமுதலைக்கின் றுருதியே
மலணிவண்ணப் பாடல்களு மிணைபுகச்சொற் றுயமேவனே. (க)

இடும்பவன்மை வேட்டவெனை யேற்றுலகி லேமாற
வைக்கின்று யீதுனது மெய்யருட்பண் பெனலாமோ
தொடுமுங்காக் கடலாடைத் தூமகைக்கும் பூமகட்கு
நடுவின்று களிக்கூரு மலரங்க நாயகமே. (உ)

நாயனைய புன்னெஞ்சா னலிவடையும் வினைமாற்றித்
தூயவுண வினரோடென் றொண்டுசெயும் பேறருள்வாய்
சேயபுட்கே தனங்காட்டுந் திருவரங்கப் பெருங்கோயில்
வாயரவப் பாயன்மிசை மலர்ச்செழுங்கண் வளர்வானே. (௩)

வானகமும் வையகமு மலர்த்தாளா லன்றளந்தோர்
தானவர்கோன் கழற்றுளிற் றளைபூட்டுந் தாடாளா
நாரைங்கம் போற்றிசைக்கு நறுந்தமிழ்ப்பா டலையேற்று
வேனன்மொழி மதிப்பாரை வெல்லும்வலி யருள்வாயே. (௪)

அருளாசைப் பெருங்கடலி லழுந்தியல மருமென்னைப்
பொருளாசைப் பிணிநல்கிப் புலர்த்திடலும் புண்ணியமோ
தெருளாளர் பலர்போற்றுந் திருவரங்கத் திடைநாளுஞ்
சுருளாகப் பணியணையிற் றுயில்கூர்பொய்த் தொழிலானே. (௫)

தொழிலிழந்த மெஞ்ஞானச் சுகம்விரும்பிச் சுழல்கின்றேன்
பழியடையா வாறுனருள் பாலிக்க நினையாயோ
கொழிதமிழ்ச்சீ ரரங்கத்திற் கோடாது கோடியன்பர்
வழிபடக்கண் டுயில்வாய்நின் மலர்த்துணைத்தாண் மறவேனே. (௬)

மறமிகச்செய் பரகாலன் வனைதமிழ்ப்பா மாலைக்கும்
பெறலரிய கதியீந்த பெருந்தகையின் றிழந்தாயோ
பிறவுயிர்நோய் சகியாநான் பிழைப்படவேன் காண்கின்று
யறமலிதென் னரங்கத்தே யறிதுயில்கூ ரம்மானே. (௭)

அம்மையினுக் கஞ்சாரா யரங்கநகர்ப் பெருமானு
மும்மைவினைத் தேவர்களி லொருவனென மொழிவீர்காள்
செம்மைநிறச் சிவனுமலர்த் திருமகளு நான்முகனு
மெம்மையுமவ் வகைப்பொருளு மிசைந்தவ னியாக்கையினே. (௮)

யாக்கையுயிர்க் கயலன்றே யெனத்தருக்கு மீனமதத்
தீக்கையினர்க் கஞ்சுமெனைத் திருவருள்வா ரிதியாட்டிக்
காக்கையுனக் கரிதாமோ கவினரங்க மாளிகையி
னுக்கைவளைத் திரைபாய னடுத்துயிலு நாரணனே. (௯)

நாரணனைச் சங்காழி நாந்தகம்விற் கதையேந்து
மேரணவு மீரிருந்தா ளெம்மானை யரங்கத்திற்
பாரணங்கி னைம்வேண்டிப பழிச்சுவோ ரவரேனு
மாரணரிற் சீரியரன் றறிந்தவர்க்கியா னடியேனே. (௧௦)

வேறு.

அடிய வர்க்கெளி யன்சுட ராழியான்
கடிம திற்றென் னரங்கப் பிரான்கன
கொடிய ரைச்செறுங் கூற்றனை யான்மிக
நெடிய னென்ன நிகழ்த்துசொற் றேர்மினே. (௧௧)

தேரில் வைகுஞ் சிலைத்திறற் பேடிபா
லாரி யத்தி னரும்பொருள் கூறினு
ணூரி பாக னவிலரங் கத்தினீர்
வாரி வண்ணத் தமர்ந்தருண் மாயனே (௧௨)

மாயன் கள்வன் மயக்கினன் வஞ்சக
னுய னென்னினு மன்பரை யாள்பிரான்
றூய பாந்தளிற் றொல்லரங் கத்திடைச்
சேய கண்வள ரோர்பெருஞ் சித்தனே. (௧௩)

சித்த னேகந் தினஞ்செய நாடுமெய்ப்
பத்த ரேயுண ரத்தகு பண்பினன்
புத்த ரும்பணி பொன்னரங் கத்தில்வாழ்
கத்த னேயறி வாள்கலை மங்கையே (௧௪)

மங்கை மன்னனு மற்றைய தொண்டருஞ்
சங்கை யின்றிப் புகழ்ந்தது தண்குலாங்
கொங்கை யாய்ச்சியர் கூறையங் நாள்கவ
ரங்கை நாத னமரு மரங்கமே. (௧௫)

அரங்க நாத னமரர்வந் தாவெனு
விரங்கல் காணி லெழுந்தரு ளீடுளான்
குரங்க னேகங் குழுமவுங் கொண்டுபோய்த்
தரங்க ராக்கத னைத்தடிந் தானரோ. (௧௬)

தான வக்கொடி யோன்றனைச் சாடவோர்
மீன மாகிமுன் வேலையுட் புக்கவன்
றேன ருப்பொழிற் றென்னரங் கத்தமர்
வான வன்றமி யேனுணர் வள்ளலே (௧௭)

வள்ள னீர்மை மலிதரு மங்கர்கோ
னுள்ள மின்புற வோருருக் காட்டினு
னெள்ள நீரரங் கத்திறை யிதெணிற்
கள்ள னென்பது கட்டுரை யன்றரோ. (௧௮)

அன்று வந்தென் னகமறியும்படி
யொன்று கூறிய துண்டுகொ லின்றுகொல்
கொன்று தின்னு மரக்கரைக் கோல்களால்
வென்று தென்னரங் கத்தமர் மெய்யனே. (௧௯)

மெய்யர் போற்றும் வியனரங் கப்பிரான்
பொய்யர் நிந்தை புணர்புரு டோத்தமன்
செய்ய் தாளென் சிரத்துறிற் றிண்மைசால்
[illegible] மங்கை மனத்துயர் மா[illegible] (௨௰)

7644a

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MAD

## வேறு.

மாறு நீர்திரு வரங்கமா ளிகைப்பொன்மா சுணத்தி
லீறு மாதியு மின்றிய துயில்கொளெம் பெருமா
னூறு நூறுருக் கொடுவினை யாடுசீர் நுவல்கைக்
காறு சூடியும் பிரமனு மன்றியார் வலரே. (௨௧)

ஆர்வ மென்றனக் கருளிடி லுன்னையார் தடுப்பா
ரோர்வ ரங்கொடுத் துள்ளவா றியற்றிலை முறையோ
நீர்வ றந்திடாக் காவிரி யாற்றிடை நிதமுஞ்
சீர்வ ரோதயக் கண்டுயி றிருநெடு மாலே. (௨௨)

மாலை வானவர்க் கெளியனை வன்குலைத் தருவ
வேலை வற்றிடக் கறுவுதீச் சினம்விளைப் பவனைச்
சோலை சூழ்திரு வரங்கமா ளிகையினிற் றொழுது
பாலை யன்னநெஞ் சகத்தருள் படைத்தவர் பலரே. (௨௩)

பலபல் லாயிரங் கோடியண் டங்களும் படைத்த
மலர வன்றனை யுந்தியிற் றருமொரு வரத
னிலவு தென்னரங் கத்தினை நெடிதுபோற் றிசைப்பார்க்
கிலவு மின்சுவைக் கனிதருங் கருதிடி லிகத்தே. (௨௪)

இகப ரங்களுக் காந்துணை யாதென வெண்ணி
யகமி ளைத்துளீ ரறைகுது மையுற வேண்டாம்
புகழ்குன் றுத்திரு வரங்கநன் னகர்ப்பொறி யரவிற்
சகளமூர்த்தமாத் திகழ்பர தத்துவன் சரணே. (௨௫)

சரண டைந்தவென் றனைப்புரந் தருள்செயச் சலித்துக்
கரண வாதனைக் கடலிடை விட்டனை காலன்
மரண நல்கவும் பார்த்திரே லரங்கமா நகரத்
தரண மேழினுள் ளநுதினங் கிடக்குமூ தரசே. (௨௬)

அரவப் பாயலி லரங்கநன் னகரிடை யண்டர்
பரவப் பள்ளிகொண் டருளிய பசுந்துழாய் முகிலே
கரவிற் சீர்த்தவென் கவியைநீ விழைந்தவா கருணை
விரவப் பெற்றநின் னடியர்வேண் டவுமருள் விரைந்தே. (௨௭)

விரைகு லாந்துணர்த் துளவமோ வேலையே முடித்த
தரையின் மெய்யடி யவர்பகர் தமிழ்கோலோ தரளந்
திரைகள் வீசெழிற் காவிரி யாற்றிடை திகழ்பே
ரரைய னெஞ்சினு கதிவிருப் பென்றறி கிலனே. (௨௮)

அறிவி லாருநின் னடிமையென் றென்னைநன் கறியச்
செறியு மெய்யருட் கடலினோர் துளியருள் செய்வாய்
பொறிநி லாவுபை யாயிர முடைப்பெரும் புயங்கத்
தெறியும் வெண்டிரைக் காவிரி யிடைகிடப் பவனே. (௨௯)

இடக்கு நீரொழிந் தெழுந்தெனக் கெண்ணில்கீ ழவரை
யடக்கு மாண்மையு மார்வமு மருளவென் றிசைவாய்
கடற்கொ ராதர மாம்பெருங் காவிரியிடையே
முடக்கு மாசுணப் பாயலிற் றுயின்றமுன் னவனே. (௯௦)

வேறு.

முன்னமோர்க ளுவில்வந்த முதன்மையாய கோலமீண்
டின்னமோர்க ளுவிலென்மு னிலகுபேற ளிப்பையோ
பன்னகக்கு லம்பராவு பாயலிற்ப சும்பொன்வாய்
தென்னரங்க மானதிற்றி னங்கிடந்த செல்வனே. (௯௧)

செல்வர்வாயி லிற்றினந்தி ரிந்தலைந்த தீமைபோய்க்
கொல்வதில்ல வர்க்குவேண பேறெலாங்கொ டுப்பனோ
வில்வவேணி நான்முகத்தன் விண்ணின்மன்ன ளுதியோர்
நல்வரங்கள் கொள்ளநாளு நல்கரங்க நாதனே. (௯௨)

நாததத்து வங்கடந்த நாண்மலர்ப்ப தங்களைத்
தீதணைந்தி ரங்குமென்சி ரத்தமைக்க வல்லையோ
போதனைப்ப யப்பவுந்தி பூத்தபுங்க வாவினோ
ரோதரங்க மாளிகைக்கு ளுற்றுறங்கு மொருவனே. (௯௩)

ஒருவனண்ட கோடிமுற்று முண்டுமிழ்ந்த வுத்தமன்
றிருவருட்க டற்றருஞ்சி வந்ததாம ரைக்கணன்
மருவரங்க மேவழுத்தும் வாழ்வடைந்த மாதவர்க்
கருவருப்ப வாகுமும்ப ராதியோர்க ளாக்கமே. (௯௪)

ஆக்கனுய்வு றும்பொருட்டொ ரசலமன்றெ டுத்தவன்
காக்கவல்ல நாரணன்க திக்கடற்ற ரும்பிரான்
பாக்களஞ்சி யத்தினோர்ப யிச்சரங்க மாளிகை
நீக்கமின்றி யென்றுமென்ற னெஞ்சகத்தி னிலவுமே. (௯௫)

நிலமளந்து வானளந்து நீடுநீல மேனியா
னலகில்சீர்பொ றுத்துறங்க ரங்கமொன்றை யாசியார்
புலவரேனு மாதவஞ்செய் புனிதரேனும் புந்தியற்
றிலவுகாத்த கிள்ளையேயெ னத்தவிப்ப ரென்றுமே. (௯௬)

என்றுமுன்னை நம்பினேனி ரங்கிடாத நெஞ்சர்போன்
றின்றுகாறு மருள்செயாம லேனிருந்து ளாயையோ
வன்றுமின்று மென்றுநல்ல ரங்கமாந கர்க்கணோர்
குன்றுபோற்கி டப்பவாகு றித்தபேற ளித்தியே. (௯௭)

அளிமுரன்ற சோலைசூழ ரங்கநன்ன கர்க்கணோர்
களிறுகண்ட தெய்வமொன்று கண்டுயின்று வாழுமஃ
தெளியவர்க்கும் வலியவர்க்கு மேனையாரு யிர்க்குநண்
ணெளியருட்டெ றித்தளித்தி டுந்தொழிற்சு மந்ததே. (௯௮)

மந்தவன்ப கட்டிலேறி வலையெடுத்து வீசுவா
னெந்தநாளி னுங்கருத்தி லெண்ணிடாமை வேண்டுமே
லந்தணாளர் மெச்சுதென்ன ரங்கவாண னம்புயச்
செந்தகைப்ப தத்திலன்பு செய்திறைஞ்ச வேண்டுமே. (௩௯)

வேண்டுவார்கள் வேண்டும்வண்ணம் விரைவினல்கும் விகிர்தமால்
கூண்டுதொண்டு செய்யுமன்பர் குறைவகற்று கொள்கையான்
மூண்டுதென்ன ரங்கம்விட்டு முன்னெழுந்து மொய்ம்புடைப்
பாண்டுமன்றன் மைந்தரைப்ப ரித்ததோர்வர் பத்தரே. (௪0)

வேறு.

பத்தமோர் சிறிதுந்தோயாப் பதிதர்தம் மனைப்பாலுற்று
மத்தம்வேட் டுழலுந்தீமை யகற்றிட வல்லாயன்றோ
வித்தகச் சடகோபன்போன் மேலவர் விரும்பிப்போற்று
முத்தமி ழரங்கக்கோயின் முதல்வனே முகுந்தமாலே. (௪௧)

முகுந்தனை மடவார்தானை முழுமையுங் கவர்ந்துகொண்டோர்
நிகுஞ்சமீ தேறினானை நிலாமதித் தடத்தான் மேன்மை
தொகுந்திரு வரங்கத்தானைத் தொழுமவர் தமக்கேமுத்தி
தகுந்தகுந் தகுமென்றன்றோ சதுமறை சாற்றுமாறே. (௪௨)

சாற்றரு மதுரச்செஞ்சொற் றமிழ்கொடு துதிக்கும்பாட
லேற்றநீ யருள்செய்யாம லிருப்பது முறைதான்கொல்லோ
கூற்றனைத் தடிந்தான்போற்றுங் குளிர்திரு வரங்கக்கோயி
லாற்றன்மா தவனேபைம்பொன் னுயிலு மளித்தாள்வாயே. (௪௩)

அளிக்குழா மனையகூந்த லவிழ்தர வகத்தானெஞ்சங்
களிக்குமா மூடர்முன்பிற் கதறிய கன்னிவாயால்
விளிக்குமுன் றானையீந்த வியனரு ளிங்காளின்றோ
கிளிக்குலம் பயிலுஞ்சோலை கிளர்திரு வரங்கத்தானே. (௪௪)

அரங்கநா யகன்றன்னன்ப னமர்க்களத் துயரவேண்டிக்
குரங்கவிர் கொடித்தேர்ச்சூதக் கோலமுங் கொண்டான்கண்டீ
ரிரங்கலின் மனத்தார்ப்போற்றி யினைத்துள மேங்கவேண்டாந்
தரங்கவா ரிதிமூன்றன்ன தமிழுணர் தவத்தினோரே. (௪௫)

தவமுறு தவமேயென்னச் சாற்றுநர் சிலருமுள்ளார்
குவலயத் தின்னமன்னோர் குழவியாச் செனிப்பர்கொன்றைச்
சிவனுவ லரங்கத்தானைச் சிந்தனை செயலேயென்பார்
பவமறக் களைந்துநாலாம் பதவியிற் பதிவாரன்றே. (௪௬)

பதிதரைப் பொருளென்றெண்ணிப் பைம்பொன்வேட் டுழல்கின் [றேற்கு
மதிசய மலியுந்தொல்சீ ரரங்கமா ளிகையம்மானைத்
துதிசெயும் பெருமைதானோ தோய்தர வரைந்தவாற்றால்
விதிகள மலர்களொட்டு மேதக வாழிமாதோ. (௪௭)

வாழிய வரங்கமூதூர் மாயனை மணிக்குன்றன்ன
பாழிய வயினதேயப் பரியுடைப் பகவன்றன்னை
யாழியுஞ் சங்குமேந்த வகத்திணுள் ளடியேன்கண்டேன்
கேழிண ரனையபாடல் கிளத்திடத் துணிந்துள்ளேனே. (௮௮)

உள்ளமொத் தொருக்காலேனு முவணமீ துன்னையென்றன்
கள்ளநெஞ் செண்ணியன்பிற் கரைந்துரு கியவாறில்லை
புள்ளவிர் கொடிச்சீர்நாடிப் போற்றெனப் புகுந்தாட்கொண்டாய்
வள்ளனீர் விளக்காயோரேழ் மதிளணி யரங்கமாலே. (௮௯)

மால்குலா மரங்கக்கோயில் வளநெடுத் தியம்பவாய்த்த
பால்குலா மதுரத்தண்சொற் பாவல ரெவராணலுஞ்
சேல்குலாம் விழியாராசைத் திரைக்கடற் கடந்துசேர்த்த
நூல்குலாம் பயன்முற்றூர்ந்து நுவலருங் கதிகொள்வாரே. (௯௰)

வேறு.

கதிக்குமாமதி ளேழணி யரங்கக்
காவலன்பெருங் கவின்செய் பாற்கடலை,
மதிக்குந்திண்புயம் பலபல வுடையான்
வயினதேயனில் வானகத் தவிர்வான்,
விதிக்குநான்முகற் பயந்தவுந் தியினன்
விருப்பமென் மிசை மேவியபின்னே,
துதிக்குஞ்சம்மத மென்மன மடைந்த
சூக்குமந்தனைச் சுரரறி வாரே. (௯௧)

அறிவினோடறி யாமையுங் கடந்த
வகண்டபூரண னமரங் கேசன்,
வெறிகுலாமலர்த் தாணனி கருதி
மேலைநாட்டையும் வெறுத்தமே லவர்க்குக்,
குறியுமங்கிலை கடந்தவ தீதக்
கொள்கையுஞ்சம மேகொடுங் குணத்தாற்,
பொறியின்றிப்பல வாதமிட் டுழலும்
புல்லருக்கிது புகலல்வம் பாமே. (௯௨)

வம்பருப்பசுந் துளவமாலிகைத் தோண்
மணிக்குன்றேயன வயங் கரங்கேசர,
தம்பமூடின் றுதித்தொரு கொடியோன்
றனதுமார்பகந் தனைப்பிளந் துவந்தா,
யும்பர்நாளுறத் தரும்பல பயன்வேட்
டுன்னையேமிக வுன்னுவின் றேற்குன்,
செம்பதாம்புயஞ் சூட்டிவன் மிடியாற்
சோர்கிந்திடுங் தகைப்பொழித் தருளே. (௯௩)

ஒழிவில்பொய்த்துயில் காட்டிமூ தரங்கத்
துற்றநாரண னேயுல கெல்லாம்,
பழிசொலத்தளர் வேன்புகல் பாடற்
பனுவல்வேட்டனை பயனொர்சற் றளித்தாய்,
கழிவிரும்புபே றனைத்துநல் கில்லாய்
காதல்வாரியுட் கண்கலுழ் கின்றேன்,
விழியொன்றாற்கடைக் கணிப்பினும் போதும்
வெப்பமுற்றற மிகக்களிப் பேனே. (௧௪)

களியறுமனத் தொருசிசு பாலன்
கடுவினுங்கொடி தாப்பகர் வசைக்கு,
மொளிகுன்றாப்பர பதங்கொடுத் தாண்டா
யுன்னையே நனி யுன்னியொண் டமிழாற்,
றெளியுந் தேனிகர் கவிபல பாடித்
திகைக்கின் றேனையோர் சிறிதுமெண் ணாயோ,
குளிருங் காவிரி யாற்றிடைப் பணிமேற்
குலவு மெய்யருட் கொண்டலன் னானே. (௧௫)

அன்னையாதிய நால்வகைத் துணையு
மாவிகட்கெலா மாந்திரு வரங்கன்,
றன்னை யெண்ணில் பல் றேவரி லொருவன்
றானெனச்சொலுஞ் சழக்கரை மதியேன்,
பொன்னை வேண்டிந ரோடுபன் னாளாய்ப்
புவியி னெஞ்சகம் புண்படு கின்றே,
னென்னை யோவறி யேனவ னுள்ள
மிதுகண் டெள்ளள விரங்கிடா ததுவே. (௧௬)

அதுல மாதவர்க் கொருபெருந் துணையா
யரங்கந்தன்னிடை யறிதுயில் வானை,
மிதிலை மாநகர்ச் சனகன்மின் னிமித்தம்
வேணியான் றெடும் வில்லொடித் தானைப்,
பொதுவனென் றுண ரார்களும் புகல்வான்
பொதுவர் தம்மனைப் புக்குயர்ந் தானைப்,
பதுமை கேள்வனென் றுணர்ந்துமென் மிடிநோய்
பாறிடாதுமென்கொல் பாவமென் பேனே. (௧௭)

என்பணிந்துளான் றெண்டரிற் சிலரு
மேமம் பெற்றவா றிசைஞ்சொலக் கேட்டு,
னின்ப தாம்புயங் கருதிய நானிந்
நிப்பவ ரொப்படி மிடன் முறையோ,
வன்பர் சூழ்திரு வரங்கநா யகனை
யருக்கனைச்சுடராழியான் மறைத்து,

மன்பதைக்கிடை யொருவனைப் புரந்த
மனத்திற் கித்தனை வன்மையா காதே. (௫௮)

ஆகமும்பொரு ளாவியு முனக்கே
யளித்த மெய்யடி யவர்பதத் துகளைச்,
சேகரத்தணி தருநலம் பெற்றுஞ்
சிதட ரெள்ளலிற் சீரழி வேனோ,
காக மாய்த்திரு மங்கைமென் கொங்கை
கறித்து ளானையுங் காத்தருள் கருணை,
யேகநாயக னமரங் கேசா
வெள்ளின் மூக்கள வேனுமின் பருளே. (௫௯)

இன்ப சாகரத் துதித்தவா ரமுத
மெனமெய் யன்பருக் கினிப்பவ னிமையோர்,
துன்ப நோய்க்கரு மருந்துவெங் கொடுங்கோ
ளுருட்ட வேந்தரைத் தொலைக்கும்வன் கூற்று,
மின்ப டுஞ்சடைச் சிவன்முதற் றேவர்
விருப்ப மோவரும் விறலரங் கேச,
னென்ப தோர்ந்துகொண் டேனினி மயங்கே
னெவ்வி தத்தினு மிசைபெறு வேனே. (௬0)

வேறு.

பெறுவனமுற் றருளவல்லா யென்றுனது பதம்போற்றும் பெற்றியென்பா
லுறும்வகைசெய் தாரெவரோ வுனையன்றி மற்றொர்தெய்வ முளது சொல்லோ
வறுமையறி யார்மருவு திருவரங்க நகர்க்கோயில் வயினோர் பாம்பின்
முறுவன்மின்னு ரிருவர்பத மலர்வருடத் துயில்வாய்மெய் மொழிதி யின்னே. (௬௧)

இன்னிசைநா ரதன்முதலாம் பாகவத ரினத்தொடெனை யிகழுங் கூற
நின்னிருதாட் கமலமல ரென்சிரத்திற் சூட்டவென்று நினைவாய் கொல்லோ
பன்னிருநா மமும் பகர்வார்க் கெளிதருளும் பரந்தாமா பணிலஞ் சிந்தும்
பொன்னியிடை யொருபெரிய புயங்கமிசைத் துயில்கூரும் புனிதமாலே. (௬௨)

புனிற்றிளங்கன் றையும்வதைக்கும்பொல்லார்புன் குடைநிழலிற்புழுங்குமென்பாற்
றனித்துரைத்த நின்மொழியுந் தவறுமெனிற் சதுமறைச்சொல் சரத மாமோ
பனித்தமலர்த் திருவுந்தி பூத்தொருநான் முகனைமுதம் பயந்தாய் பாகொத்
தனந்தயிற்ற திருவரங்கத் தெம்பெருமானே வடிய மெய்ம்மணி லானே. (௬௩)

எண்பொழியு மணிமைசபித்திட் டியலிசைநா டகத்தானின் னிசைமிக்கேத்தி
வண்மொழியாழ் மருமச்சமா வையமீத யணிதுவளு மடியனாமிப்
புன்மொழிநா மனமுமனமொழிதுறைமைய மைந்தருள்சூட்டா
யொண்மொழியாம் பலையமைந்து திருவரங்கக் கோயில்வாழ் யுறங்குவானே.

உறங்காத புனிதிமுற்பா லுறங்குரவன் றிருக்கணியா யுரையேபாடி
மறங்காஸ்பெயம் மதத்துமாப் பதத்துவையு கணைத்தமவன்னோ வாழ்வி யாரோ
முறங்காலுந் செங்கணிய பளிமருவிக்கு மருளபுரிந்த முகுந்தா மூவாத
திறங்காடம் பணியணைதென் னரங்கேசா சுற்றுவது வுருக்கணபாரே. (௬௫)

பாரளந்து வானளந்த பதமலர்வேட் டிறைஞ்சுமெனைப் பலவாறுநின்
சோரகுணத் தாற்பெரிது சோதனைசெய் திடவேண்டாந் தணிற் றேன்றி
வீரமலியாடகனைக் கீன்றமைசொற் றிடும்பயனும் வீணாய்ப் போமோ
நாரவளங்குறைவுபடா நல்லரங்க மாளிகையி னடுவுற் றேனே. (௬௬)

நடுநிலைமை குன்றாத மன்னர்குலம் பாழாகி ஞாயந்தேறக்
கெடுமதிக்கா வலருலக முழுதாளுநாளெனையேன் கீழ்விட்டாயோ
வுடுபதிமண் டலத்தினுக்கு மேலடியேன் வாழ்த்தவித முரைத்திலாயோ
தொடுகடற்பே ரகடுழக்குங் காவிரியாற் றிடைமலர்க்கண் டுயில்கின்றேனே. (௬௭)

துயிலரங்கப் பெருங்கோயிற் றுதிப்பவரெல்லாமுடிக்குந் துணைத்தாண் மாயன்
மயிலிறகு வாய்ந்தசிகைக் கோவலவ னுனவுண்மை மதியா மன்னர்
வெயின்மறைத்த சக்கரத்தாற் சாகலுமெய்தாது வில்லோர் சில்லோ
ரயிலுறுகோன் மாரியிற்பஃ றுணியாய்நாய் நரியருந்த வழிந்தா ரன்றே. (௬௮)

அழியாத கீர்த்தியெய்து மறமுதலாம் பயன்மூன்று மமையு மப்பா
லொழியாத பேரகண்ட மயமான தனிவீடு மொன்றுங்கண்டீர்
பொழியாலிக் கருமுகில்போற் றிருவரங்கத் திடைதுயில்கொள் புனிதமாலை
விழியாரக் கண்டுசெழுந் தமிழ்க்கவியா லவன்சீர்த்தி விளம்புவோர்க்கே. (௬௯)

ஓரகமில் லாவிடினும் பாதகமின் றரங்கநக ருடையான் றன்னைத்
தாரகமாதிய வெழுத்தோ ரெட்டாலுந் துதிக்கினதே தவமெல் லாமாம்
பாரகத்தில் வானகத்திற் பாதலத்தி லுள்ளனவாம் பலபல் கோடி
யூரகத்தி லனைவோரும் போற்றிசைக்கத் தகும்பெரும்பே றுதவு மன்றே. (௭௦)

## வேறு.

தந்த தந்தனத் தனதன தானனு.

அன்று வெஞ்சமக் களனிடை மூழ்கெனை யன்பர் தம்பதப் பணிசெய நாடினர்
வொன்று றும்படிக் கருளியநீ பொரு ளுந்திங்ஞ் செருக் குதவிலையே யிதெ
னென்றுமண் டருக் கொருதுணை வாமயி லலன்றகுந்திமக் களினுயிர் வாழல்செய்
குன்று றழ்ந்தமற் புயமுது காவிரி கொண்ட ரங்கமுற் றொளிர்தரு கோலனே.

தான தானனத் தந்தன தந்தனு.

கோலமாவுருக் கொண்டுபெரும்புகழ் கோடிகோடிபெற் றண்டமு மண்டரு
ஞாலமோடதிற் றுன்றுயி ரென்பவு நாளும்வாழ்வுறக் கண்ட வரங்கனை
யாலமூணெனக் கொண்டமு யுஞ்சிவ னுதிவேதமுறைக் குஞ்சிலர் நம்பினர்
மாலறுமனத் தென்கவி யின்றவன் வாகுமீதிடக் கெஞ்சமெல னென்பதே. (௭௨)

தந்த தந்தனத் தனதன தத்தனு.

என்பணிந்தமற் புயன்மலர் விப்பிர னிந்திரன் கணக் கறுமம ரத்திர
டுன்பமின றுமிக் குவகையு றப்புரி துங்கமொன்று மெய்க் கடவுளினைச் சொலி
லன்பர் சிந்தனைத் திருவுரு வத்தரி யஞ்ச லென்றுரைத் தருள்புரி யச்சுதன்
மின்படும் படைத் தகுவர் செருக்கற வென்றரங்கமுற் றரசுசெய் கத்தனே. (௭௩)

தத்த தத்தனத் தனதன தானனு.

கத்தபத்தினுங் கடைபடு நானருள் கைக்கு மற்பர்புன் குடைநிழ லானதி
னித்தமெய்யுறு தழுக துயர்கெடு மாசெயி னிறுமை னப்பமமன் றெணி யிசழாதகொ
ளுந்த மக்குணக தவர் பலசீவர்க ளுக்கு மூட்கொளுநல் டிகளருணீர் பொய்கொள்
மறுக்கயர் தரவரு காவிரி மத்தியிற்றுயின் றிருநு காதனே. (௭௪

தான தத்தனத் தனதன தந்தன.

காத தத்துவக் கழலணி யும்பத நான்ம லர்த்தனைப் பெரியனை யுந்தியில்
வேத னைப்பயப் பவனைவ யம்பொலி வீரதத்தவர்க் கினியவ ரங்கனை
யோதநத்திடப் பணியணி தஞ்செயு மூழ்வினைப்பெருக் கதனிடை வஞ்சக
மாதரைத்தொடுத் தவரிர தம்பெற மாழ்கு துர்க்குணக் கொடுவினை நின்றதே.

தந்த தந்ததன தந்தன தானன.

நின்றனம் புயப தங்களை நாடிய நெஞ்சகந் தனிலி ரங்குந னீர்மிகை
யொன்றல் கண்டனைய டம்புரி தானவ ரொஞ்ச வென்றசெய மும்புக வீகுநி
தென்றலக்கிரிய ருந்தவ மாமுனி சிந்தை யன்பொடுசெ யுந்துதி சூடிய
மின் றயக்குமரு மந்திகழ் மாயவ விண்டலம் புகழ ரங்கனி லாசனே. (௭௬)

தான தத்தன தாத்தன தானன.

ஆசறப்புலவர் போற்றிய மாயவ னுகுலத் தொகுதி நீத்தருள் சீதரன்
வாசவற்கருவு தார்த்தர்கள் காலனென் மாதவப்பயனல் காத்தகை நீதிகொல்
காசனைத்துமற வோட்டுந னீர்வரு காவிரிக்கிடையொர் பாப்பணை மீதனி
ரீசன்முத்தமிழ்வ லார்க்கெளி யானென வேழ்சகத்துமுரல் பாட்டுணர் வோர்களே.

தான தந்ததன தாந்தன தானன.

ஓரமின்றியப ராங்குச மாமுனி யோது மின்சொலுரை யோர்ந்துகொ ளார்சிலர்
பூரமென்றபரி பூர்ந்தவ ணோர்புகழ் பூணவும்புரிபொ லாங்குடை யானெவ
னோரவிர்ந்தவர்தம் வீம்பற வாதிடு நீர்மை தந்தருள வேண்டும நாளதி
வீரமொன்றியெனை யாண்டுள மோவற வாழரங்கசய னுங்கசு பாவனே. (௭௮)

தனன தந்ததன தந்தன தன்னன.

வனை தருங்கவிபொ ழிந்தவர் புண்ணிய வலிமை கண்டுனைவ ணங்கிடு மென்மன
நினை தரும் பெருமை தந்திலை யென்னினு னிலைபிறழ்ந்ததென வும்பரு முன்னுவர்
பனைநெடுங் கையுறு குஞ்சர நண்ணிய படியிரைந்தருள்பெ ருந்தகை பன்னிடி
லனையினும்பெரிதி ரங்கிடு முன்னவ வணியரங்கசய னஞ்செயு மண்ணலே. (௭௯)

தன்ன தானன தந்தன தந்தன.

அண்ணலாகிய ரங்கமளிப்பவ னம்மகோததி குன்றவடித்தவ
னெண்ணலார்குல மஞ்ச வொறுப்பவ னென்னையோர்பொரு ளென்று குறித்திடில்
விண்ணவாதியர் சிந்தை வெருட்சியும் வெம்முகாசுர ரின்பமு மற்றிடும்
வண்ணவாயர மங்கையர் நட்புற மன்னர் வாயுல கம்புகு கிற்பரே. (௮0)

வேறு.

புகுந்தெ னெஞ்சினுட் பலவிளையாடல்கள் புரிந்தவன் புகழ்கேட்டு
நகுஞ்செவ் வாய்முகி ளிகரரங் கேசனென் னலிவகற்றில னெந்தேன்
முகுந்தன் கேசவ னாரண னெனச்சில்பேர் மொழிந்தவர் கதிசேரத்
தகுந்த பேறளித் தானெனு மெய்ப்புகழ் தலைமிசைக் கொளலேனே.

ஏனமாகிமுன் னெழுபுவி யிடந்துபுக் கிரணியாக் கனையாதித்
தானவர்ச்செறுந் தடம்புய நான்குடைத் தனியரங்கேசன்று
ளானவாவியித் தனைகினமாகியு நல்லருள்செயக் காணேன்
யானலன்னகட் பொதுவியர் செய்தவம் பழுதெனக் கூடாதே. (௮௨)

கூடல் வாயொரு வழுதிமுற் கிழியறக் கொய்தவன் முதற்றொண்டர்
பாடலேற்றருள் புரிந்தநீ யென்னது பனுவலேன் விழைகின்றாய்
நாடனைத்துமெச் சிடத்தகு மெய்ப்புகழ் நல்கிட வேண்டாமோ
வாடல் வாளர வணைமிசைக் கண்டுயி லரங்கமாளிகை யானே. (௮௩)

மாளவும்பிறந் திடவுமிக்கஞ்சுமென் மனத்திடை வளரண்ட [தாய்
கோளமுண்டுமிழ்ந் திட்டநின் செயற்பெருங் குறிப்புமேனுறச்செய்
காளகண்டனுன் முகன்முதற் சிற்சில கடவுளர் கருத்தன்றி
நீளமாசுணத் திருநதிக் கிடையினு நெடிதுகண்டுயில் வானே. (௮௪)

கண்டுநேர்மொழிப் பாவையர்மயற்பெருங் கடற்சுழிப்படும்பொல்லேன்
வண்டுழாய்புரை தமிழ்ப்பெரும்பனுவல்கள் வனைந்திடிற் புனையாயோ
வண்டுவார்துயர் களைந்தவ ரிகலவ ரழியவேண்டுவ செய்யும்
விண்டுநாயக னேயரங்கத்திடை விழிதுயில் பழையோனே. (௮௫)

பழங்கணாயிரம் படுமெனக்குன்றிருப் பாததாமரை சூட்டி
வழங்க வேண்டுவ யாவையு நல்கினின் வண்புகழ் குறைவாமோ
கழங்கொடம்மனை பயின்றுளா ராடுநீர்க் காவிரி யிடைதேவர்
முழங்கு மோதைமுற் றுணர்ந்தபொய்த் துயில்கொளு முண்டகவழியானே.

முண்டகாதனப் பிரமனைப் பயந்ததான் முழுதுல களித்தாயான்
கண்டதோர்கனு வதனிடை யவிர்ந்தநின் கருணை பொய்த்திடலாமோ,
வண்டறுப் பொழிற் றிருவரங்கத்தினை வழுத்துமென் றமிழ்க்கூலி
யண்டராதிய ரனைவரும் வியப்புற வளித்தெனை யருள்வாயே. (௮௭)

வாயசப்பரிக் கொடியகோ டியர்செய மாழ்குறுந் தமியேனை
நீயநாள்வலி தாண்டுகொண் டருளிய நிச்சயந் தவறாமே
சேயவன்சிறைப் புட்பரிப் புறத்தினிற் சேவைதந்திடச் சோம்பே
லேயசீர்த்திரு வரங்க மத்தியிற்றுயின் றியாவையும் புரப்போனே.

போனகம்பல வுயிர்க்குமிட் டருளுநீ புனிற்றிளங் கன்றோடா
னைவிந்தையு மாய்ச்சியர்க் குவகைமிக் களித்ததும் வியந்தோது
நானருந்துயர்ப் படுவது முறைகொலோ நலஞ்சிறி தளித்தாள்வாய்
மானவந்தணர் பரவரங்கத்தொரு மாசுணத் தமர்வானே. (௮௯)

அமரர்கின்னர ராதியர் பரவுதென் னரங்கமா நகர்க்கோவைக்
கமலநான்முகற் பயந்தருள் பெருந்தகைக் கடவுளை யல்லாதீண்
டெமதுநெஞ்சமும் வாக்கொடுகாயமு மெட்டுணை யியங்காவே
தமதுவல்லபத் தாற்சில புரிவதாச் சாற்றிட நாணுரே. (௯0)

வேறு.

நாணாத மங்கையர்மென் கொங்கைநாடி
நலங்குலைந்து தடுமாறு நாயினேனும்,
வீணாளொன் றேனுமின்றித் தவஞ்செய் மேலோர்
விரைமலர்த் தாட்டுகள்சூட விதித்த தாரோ;

வானாகிப் பெண்ணாகி யலியுமாகி
யரங்கநகர்ப் பெருங்கோயி லகத்திலென்று
நீணாகத் திருவணைமேற் கமலம் பூத்த
நீலமலை போற்கிடப்பாய் நிசஞ்சொல்வாயே. (௬௧)

சொல்லிறந்த மோனமென்று மகண்டமென்றுந்
துரியமென்றுஞ் சூட்சாதி சூட்ச மென்று
மல்லியிதழ்க் கமலமலர்ப் பிரமன்வேத
மறைவதெண்ணிச் சிந்தைநொந்தீண் டயரமாட்டேன்
வில்லில்வல்லான்றே ரூர்ந்த சூதனென்றும்
விடநாகத் தரங்கநகர் மேயானென்றும்
வல்லியன்னா னாயக்கலைமிக் களித்தா னென்றும்
வனமாலைத் தோள னென்றும் வழுத்துவேனே. (௬௨)

வழுவறுசெங் தமிழ்க்கவியாற் சதுர்வேதத்துள்
வாய்ந்தபொரு ளத்தனையும் வகுத்துச்சொன்னாற்
றொழுதவன்றோ ளணிவகுள மாலைநோக்கிச்
சுதரன்னா னெனத்தேறித் தூயகையின்
முழுதறியு மெஞ்ஞானக் குறிகண் டப்பான்
முகுந்தனிவ னேயெனவு முன்னுநாளிற்
பழுதிறெண்ணீர்க் காவிரியாற் றரங்கம் போற்றும்
பக்குவம்பெற் றேனுணர்வார் பலரன்றன்றே. (௬௩)

அன்று தன்பாய்க் கொடியுடையான் றன்னைச்செற்று
மடியவர்க்காத் தருளரங்கா வறையக்கேண்மோ
வொன்றுமுனக் கந்நியமின் றென்னத்தேறு
முணர்வுடையார் மதிப்பதனா லுவப்புற்றில்லை
னின்றுணைத்தாள் கருதுமன்ப ரினுஞ்சில் லோரை
நெடிதிகழ்ந்து தந்நெறியே நேரென் றோதி
மென்றுளவின் மகிமைசற்று முணரா துன்மேல்
விருப்புடையார் போல்வாரை வெல்லல் வேட்டே.

வேட்கையள விறந்தவிதம் வளர்க்கு மென்னை
வீணர்கைப்பொன்விழைந்திடவும் விட்டாயென்சொல்
கேட்கைமட்டி லுனதுசெவி செவிடா யிற்றோ
கிளருடற்காப் புறப்பொதுப்பேர் கிளத்திக்கூவும்
பூட்கையினுக் கிரங்கியது புலவோர் செய்த
பொய்க்கதையோ வரங்கநகர்ப் புயங்கமீது
வாட்கைவய வீரர்களுந் தவரும்போற்ற
வளர்மலர்க்கண் ணெடுமாலே வழக்கோர்வாயே. (௬௫)

ஓர்குழந்தை தான்வாழக் குறித்துச் சொல்கா
லுயர்பெருந்தூ ணிடைதோன்றி யொன்றுற்கொன்றாய்
பார்குளிர்ந்து விண்குளிர்ந்து மறைக்கோர் தாய்நேர்
பசுக்காப்பும் விளங்கமுயல் பான்மையேனைப்
போர்குறிக்கு மிகலவர்க்கு மொல்கக் காண்டல்
புண்ணியமோ மூடர்வசை பொறுக்கின்றில்லே
னோர்குருவாத் தோன்றினன்றி மகிழமாட்டே
னிதமரங்கக் கோயிலிடை நிலவுமாலே. (௬௬)

நிலவுமிழ்வெண் சங்கொடுசெங் கதிர்காலாழி
நெடுங்கரத்திற் றேயவொரு நேரத்தென்னுட்
குலவுமுண்மை விண்ணவர்க ளுணர்ந்தவாறிக்
குவலயத்தோர் களுமறியக் குறிக்கின்றேன்காண்
புலவுணும்பாதகர் குடைக்கீழ் வருந்தச் செய்தாய்
புண்ணியந் தேய்ந்தேனைமிகப் புரியலாமோ
பலவுருக்கொண்டிலவலுற்று மரங்கக்கோயிற்
பள்ளிகொள்ளலீங்காத பான்மையானே. (௬௭)

பான்மணநீங்கருங்கனிவாய் மகவாம்போதும்
பலபலமாதரைப்புணரும் பச்சைமாயன்
கோன்மகிபர் பலர்மாயச் சங்கொன்றூதிக்
குரங்கவிர்கே தனத்தேர்மேற் குலவுங்கள்ளவ
ஞன்மகிலேபாசநிலே யிரண்டுந்தானென்
றருச்சுனனுக்குரைத்ததெய்வ மரங்கக்கோயின்
மான்மலர்க்கண்ணேக்கமொரு சிறிதென்றன்மேல்
வருவதென்றென் றெண்ணியெண்ணி மாழ்கினேனே.

மாழைநெடுங்குன்றமொடு கனற்காடன்ன
வயினதே யனிலொருக்கால் வந்தென்னெஞ்சக்
கோழையறத் தணந்தவுணர் குடிக்கோர்பொல்லாக்
கூற்றனைய பேராண்மை கொடுத்தாட் கொள்வாய்
தாழைமலர்ப் பொழிலலவிக் கேணியூரிற்
றந்துளசிட் டேனுமெய்யாந் ததிவேட் டெய்த்தே
னேழைமதி யோர்பரவற் கரியசீர்சா
லெழிலரங்கப் பெருங்கோயி லிடையுள்ளானே. (௬௯)

உள்ளம்லர் மீதிலுனைக் கருதுமாற்ற
லுரககே தனனனையார்க் குறுகணல்கித்
தள்ளரியபொதுநீதி வேந்தர்க்கான
சகாயமிகச் செயல்வேட்டேன் றளரலாமோ

வள்ளன் முன்னீர்ப் புதுவையிலன் றுரைத்தமாற்ற
மயர்த்தனையோ திருவரங்கத் தப்பாமுப்பால்
வள்ளல்கட்கும் கடைக்கணருட் டெளிசற்றீந்து
மறவியில்பொய்த் துயில்கொண்மணி வண்ணமாலே.

முற்றிற்று.

ஆக செய்யுள் ௪0௧.

தெய்வமே துணை.

# சீரங்க நாராயண சதகம்.

இரட்டையாசிரிய விருத்தங்கள்.

உலகுபற்பலவுமுண்டுமிழ்கின்றதன்மையினுமோங்கியசராசரங்கட்
குணவிடச்சலியாதவேலையினுமெந்நாளு மும்பரூர்நடுநடுங்கக்
கலகமிடுமவுணரைக்கறுவுபோர்மிகையினுங்கடலைக்கடைந்ததினும்வெங்
கட்செவிக்கொடியனரன்மனையிலொருதூதனக்காலானடந்ததினுமியான்
பலகலிப்பிணியிடைவருந்தாதுன்மார்பிலுறைபாவையருள்செய்யவண்டிப்
பதுமமலரனையவிருகண்களாலொருசிறிதுபார்ப்பதும்பெரும்பாரமோ
திலகநெற்றிக்களிறுசெய்தகாவிரிதழுவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதனொடுமுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தவளமங்களவாணியாதியபெரும்புலவர்தாமுமெச்சிடுகல்வியுந்
தபனனருளாற்குந்திபெற்றமைந்தனிலுமுயர்தாராளமுறுசிந்தையும்
பவனனைத்தழுவியஞ்சனைபெற்றசேயனையர்பார்த்துமகிழ்வுறுவீரமும்
பாண்டிநன்னாட்டிலவிர்குருகைமாமுனிவனிகர்பத்திபெறுமெஞ்ஞானமுங்
குவலயத்திற்பெற்றுனடியவர்க்கடிமைபுரிகொள்கைவிழைகின்றவென்னைக்
கோரமிடியாதியபெருந்துயர்க்கடலினிடைகுலையவிட்டிடனீதியோ
சிவன்முதற்பலகோடிதேவருமிகப்பரவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதனொடுமுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

எந்தவிதமாயினுமுனடியவர்க்கடிமைசெயுமேற்றமுற்றிடுதல்வேண்டு
மிகபரமிரண்டினுளபொருள்பலவுநம்புநர்க்களிதருளும்வலிமைவேண்டுஞ்
சந்தமிருநாலுங்கலந்தகவிமாலைபலசாற்றிநிற்கணியவேண்டுஞ்
சகளநிட்களசமரசானந்தமெய்த்தித்தவம்புரியுநிலைமைவேண்டு
மிந்தவகையாதொன்றுநல்கவல்லாயல்லையென்றுனைப்பகரலாமோ
வென்கனவிலன்றுரைத்திட்டபயனின்றுவரையேனருள்கிலாய்கொலடியேன்
செந்தமிழ்முதற்சொல்பலகலைவலவரும்பரவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதனொடுமுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கோவிலெங்கணுமுயிர்க்கொலையற்றபூசையேகுலவயத்திடைநடக்கக்
கொன்றுதின்னாதபெருவிரதமோனன்றெனக்குலவுமதமுழுதுமோதத்
தாவிறென்கலையும்வடகலையுமோயாமலிசெண்டையற்றொன்றுகூடச்
சைவம்வயிணவமதற்கைக்கியமெனிளமைந்தர்சடகோபன்மொழிகளுணரப்
பாவின்பலபாடிநின்பதத்தணியுமொருபட்சநானுற்றதலமோ
பவளவாயாலொருசிரிப்பெனக்காச்செய்தல்படிறென்னுமறிஞருளரோ
சேவினின்மாவினின் முடனுடுசோலைமலி சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சங்கமத்தளமுரசுபேரிகாகளம்வீணைசல்லரியுடுக்கைகொம்பு
தம்பட்டமாதியபலியமுழங்கப்புலவர்சங்கீதமொடுதுதிக்கப்
பங்கமறுமுண்டிபலபலவாறுநிகழ்ப்பருந்தூபதீபமேற்றிப்
பத்தர்கண்டாடமுதிர்சித்தர்கொண்டாடமிகுபதிதர்திண்டாடநின்மேற்
கொங்கவிழ்மலர்த்தொகுதிபைந்துளவுடன்சிந்துகோலாகலங்குறித்துக்
குலவுறமெனக்கருள்செயாதொழியினபெற்றகொற்றமூற்றும்பொயாவோ
செங்கரும்புஞ்சேம்புமஞ்சளுநெருங்கிவளர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வெங்கட்செவிக்கொடிக்கொடியனதுசவையினிடைவெட்காதுசென்றதனிலும்
விலவேந்தர்பலரறியவாழிவிட்டுப்பரிதிமெய்யின்மறைத்திட்டதனிலுஞ்
செங்கட்கருங்கன்மலைநிகரேனமாய்த்தகுவர்சிலரைத்தடிந்ததனிலுஞ்
சேலுருவமாயக்கடற்புக்கவுணனொருவன்சிரங்கூறுகண்டதனிலு
மெங்கட்குவேணபயனத்தனையுநல்கியெமதிதயதாமரையின்மேவி
யிகபரம்வெறுத்தவர்கள்பெறும்வீடுநல்கிடிலிளப்பமென்றொலிகுதுகொலோ
திங்கட்குலப்பேடிதேர்ச்சூதனென்றுமிளிர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கற்றவர்பராவுமறைநூற்கொலையும்வம்பெனக்கழறத்துணிந்ததாலுங்
கருணையொருசற்றுமில்லார்சிலரடைந்துள்ளகதியைமதியாததாலும்
பொற்றடங்கிரியனையமுலைமகளிராசையொடுபுரிதவப்பண்பினாலும்
பொன்னாசைமேலிட்டுமதுதீர்ந்துளாரெனப்பொய்வேடமிட்டதாலுஞ்
சற்றறிவுமின்றியுழல்வுற்றுமறநீதியறிதலைவரிற்றிரிவதாலுந்
தமியனேனுக்கினியவாழ்வொன்றுநல்காதுதண்ணருட்டிருவுளத்திற்
செற்றமிக்குப்பெரிதுசீரழியவிட்டனைகொல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஒருவருக்கொருவரிகலொழியாதமதவாதருண்ணவுணவுங்கொடுத்தா
யுவணகேதனமகிமையுணராதசிறுதொண்டருள்ளமலர்களுமுவந்தா
யருவருத்துப்பெரிதிகழ்ந்தகண்டாசுரனையனையசிலரையும்விழைந்தா
யாயருடனாய்ச்சியருமார்வமெய்தப்பலபலாக்களொடுகன்றுமானாய்
மருமலர்ப்பிரமாளவின்றியவர்தருமண்டவகையெலாமுண்டுமிழ்ந்தாய்
வந்தனைசெயுந்தமியனித்தனைக்கடலினிடைமறுகவிட்டிடனீதியோ

திருவருட்சினைமேகமென்றோராடரவின்மிளிர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

இந்தாயவாண்முகமடந்தையர்மயற்கடலிடத்தறவிளைத்தாலுநின்
னெட்டெழுத்தும்பகர்வதொழிலேயெனக்குனருளெட்டுணையளிப்பாயெனிற்
பைந்தாருவைந்துமனநாணுறத்தக்கொடைபற்பலர்தமக்குநல்கிப்
பாவமொடுபுண்ணியமுமருவரியதாயபரபதமடைந்துய்வனன்றோ
தந்தாவளத்தரசினுக்குமகவான்முதற்றகுபுலவருக்குமசுரத்
தனையனொருவற்குமற்றுருபதன்பெறவந்ததையலுக்கும்பிறர்க்குஞ்
சிந்தாகுலக்கடலசுவற்றுக்களிப்புதவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சாகரத்துட்புக்கசோமுகன்முதற்றகுவர்தமைவெல்லல்சாற்றிலேனோ
சற்றுமருளின்றியுயிர்கொன்றுணுமபாதகர்தமைப்பெரிதிகன்றிலேனோ
போகமொடுமுத்தியும்பெறுவமீதகடனெனப்போதவுமுயன்றிலேனோ
புத்தராதியருக்குநின்னருளையன்றியொருபுகலின்மையுணர்த்திலேனோ
நீகளவில்லவுதன்றுசாலவெய்யபடிகக்கும்பநிலமீதியற்றுடாம
னெட்டுயிர்த்துழலவிட்டாயிதுன்றிருவருணிலைக்கிசையுமெனலாகுமோ
சீகரப்புனலுதவுதிருவடித்துணையுடையசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பன்னிரண்டன்பர்பகர்பைந்தமிழ்க்கவிகொண்டுபரமபதமீந்தபுகழும்
பலகோடியவுணர்குலவேரறக்கறுவியுயர்பண்ணவரையாண்டதிறலுங்
கன்னிலத்துள்ளுறுள்ளதேரைக்குமறலுதவுகருணைப்பெருந்தன்மையுங்
கைகுவித்துக்கதறுமகளுய்வுறப்பலபலகலையருள்கொடைப்பான்மையு
நின்னிதயசாட்சியாகியசரதமேயாகினீடுகவியூடுதமியே
னெட்டுயிர்த்துப்பெரிதுதளராமதனைமூசிடைநினைத்தபயன்முழுதுமருள்வாய்
தென்னிலத்துக்குரியனனுகரியபுகழ்துன்றுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கற்சுனையிடத்தன்றுமூலமென்றோலிட்டகளிறுய்வுறப்புரந்த
கருணைகமழும்படிதொடுத்தணியுமென்றமிழ்க்கவிகள்முழுதுங்கசப்போ
சொற்சுவையுணர்ந்திலாமையனிலன்றோபாவலன்சொன்னபடிபின்செல்வையோ
திருவனுக்கருள்செய்தபெருமையுலகிற்பலோர்சொல்வதுவிருவிலேனோ
நற்சுவணசித்திமுதலாகியமகாபேறுநல்கினுந்தகுமல்லவோ
நாணிகத்திற்சுழலவிடிலுனைத்தேவர்குலநகுமெனலறிந்தருள்செய்வாய்
சிற்சுகவிலாசப்பெருங்கடலுநல்கவலசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

முத்துப்புரைத்தநகைமங்கையர்கண்மோகத்தின்மூழ்கித்தவித்திடினுநின்
மூண்டகமலர்த்துணைபதம்விரும்பாப்பதர்முனைசென்றிரந்திடினுமெய்ச்
சித்துப்பெருகணுவும்விழையாதபாயத்தவாசனைகம்வந்தூடாடினுஞ்
செகதலத்தாணரைப்புரந்துளடியாரிடைதிகழ்ந்திடவிரும்பலாழியே

னெய்த்துத்தவிக்கும்விழுமுணராய்கொலோதகுவரினமுடனெனைச்சேர்த்துநீ
யெண்ணிடத்தகுமோவிரங்காததிருவுள்ளமேன்கொண்டுளாய்கொலறியேன்
செத்துப்பிறக்கும்வினைதீர்ந்தவர்களேபரவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சூதேதனக்கினியதுணையெனக்கொடுமுயல்சுயோதனன்குடிகெடுத்தாய்
சூகரவுருக்கொண்டுபாதலத்திற்புக்கோர்தோலாதபகைதடிந்தாய்
தீதேமிகப்புரியுமிரணியாசுரனுடற்செந்நீர்குடித்துவந்தாய்
சிவன்முதற்பலராயதேவரும்பரவத்திருப்பாற்கடற்றுயின்றாய்
மீதேறுசெஞ்சிறைப்புள்ளரசினிற்றினமென்விழிகளெதிர்சேவைநல்கி
வினைவலையறுத்தனதுமெய்யன்பர்கூட்டத்தின்மேவவைத்திடலருமையோ
சீதேவியும்பொருவில்பூதேவியுந்தழுவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தந்தைக்குமுன்விலங்கிட்டமாதுலனைத்தடிந்துவடமதுரைகாத்துச்
சலதியினுமொருநகர்சமைத்திந்திராதியர்தமக்குவகைநல்கியப்பா
ணிந்தைக்கொடுந்தகுவருக்களவிலின்னலுநிரப்புங்கொடுத்தவுன்னை
நிதநாடுமென்றனைதிர்வயினமேதயப்பரியனோதிருக்கைமுறையோ
சந்தைக்குணாயெனத்தடுமாறிடக்கண்டுதயையிலார்போலிருந்தாய்
தரணியிற்பலதொண்டருக்கருள்புரிந்ததாச்சாற்றுமொழிசரதமன்றோ
சிந்தைக்கிசைந்தபடிதிருவுருக்கொளவல்லசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கல்வரையினுங்கொடியநெஞ்சுடைப்பாதகர்கணத்தினுக்குந்தமிழ்ச்சொற்
கனிமேவாரணுத்துணையுமுணராதமூடமுறுகயவருக்குந்தமதுவாய்
சொல்வசனமேயுயிர்த்துணையெனக்காவாதுசோரவிடுநீருக்குந்
தூயமாதவரையுமிகழ்ந்திடற்கஞ்சாததுட்டருக்கும்பயந்து
பல்வகைத்துயரமேமேநாணமுறுதுயருழுமமனைவாழ்மனைதருமொடாருககாற்
பச்சைமுகமேலனையவந்துவிரநாணமறுருவருளபழுதநிடாவிதமமனமேகாமலா
செல்வமுங்கல்வியுந்தவமுமலியக்குலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மகபதிமுதற்றேவர்பெற்றபெருவாழ்வினிடைவாஞ்சையணுவேனுமில்லா
மனமளித்தாயொப்பாதியமால்வரையனமுதணையமனைடமிழ்சுவையளித்தாய்
நிகரறும்பெருங்கருணைவாரியதனிடைமூழ்கநிமராதநிலையளித்தாய்
நிகமவழிமகமதற்செய்கொலையுமீனமெனுநெஞ்சகத்துணிவளித்தா
யகரமுதன்முப்பொருளுமொன்றாகியன்பொருமயிருணைமெனகுலாவு
மதனையிகழாருனடியாமேரமெனத்தெளியுமறிவளித்தாயிவுலகின்
சிகரமெனநிலவுதிறலளியாததென்கொலோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மட்டேர்மலர்ப்பொழிற்றிருவனந்தாபுரியில்வஞ்சனைமிகப்புரிந்தாய்
வளமலியுமல்லியக்கேணிநகரத்திடைவரைந்தசிட்டும்பிறழ்ந்தாய்

கட்டுமேக்கையர்வலைப்படச்செயுமாறுனைத்தனன்றனையேவினைய்
களினமகளொருசிறிதுநாடவொட்டாதுபெருநல்குரவுசூழவிட்டாய்
கிட்டேமிப்படியனந்தஞ்செய்தாலுமுன்னினைவொழித்திலையாதலா
னேயமிக்கொருவேளையருளளிப்பாயென்னநெடிதுநம்பித்துதித்தேன்
றிட்டேரினுஞ்சென்றுதிண்டாடிடாமலருள்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஏயமும்மதமீறியிகலுறவெணுதுசோலையென்றுஞ்செய்குஞ்சரத்து
மெள்ளளவுமருளின்றியுயிர்வதைத்தூனுண்ணுமிகலவுணமதலைதனிலுந்
தூயநின்னுமவொலிசெவியிடைபுகாதுமணிதூக்கித்திரிந்தவனிலுந்
தொல்வேந்தரவையினிடையலவாறுகிர்நைபுரிதுட்டனொருவன்றன்னிலுங்
காயகமலிந்துனதுதொண்டரெனவேடமிடுகள்வரையுமீசமதித்துக்
கனியுமதுரத்தமிழ்கொடேன்றமட்டுனதுபுகழ்கூறித்தவிக்குமெளியேன்
றீயனல்லேனெனக்கருள்சிறிதுநல்காய்கொல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாரத்தனைக்குமொருதுணையாமெனக்குலவுபான்மையருளாதொழியினும்
பரவுமுத்தமிழ்கொண்டுபலருமறியும்படியொர்பரிசுநல்காமலுறினு
மாரப்பெயர்ப்புதல்வன்மலர்வாளிபொழிசொடிதைமாற்றுதநீடவிடினும்
வனசபுங்கவனெனக்கின்னமும்பலவுடல்வகுத்துநல்கச்செய்யினுங்
கோரக்குணச்சிதடருனதுபெருமாயையிற்குலவுபல்கோடிதெய்வக்
கோவில்களனேகத்திலாடேனமாதியனகொல்பலிப்பூசைசெய்து
நீரப்புரிந்திடிலதேபோதுநன்குணர்திசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கற்றுத்தெளிந்தபுலவர்க்கவர்தம்வேட்கைவழிகனபவிசுநல்குகில்லாய்
காசினிபுரக்கும்பெருந்தகையினாளிற்சடைகுலத்தோர்க்களித்தாய்
முற்றுப்பெறுதனவுமுளவெனப்பெரிதுலையமுனிவரைத்துயர்செய்கின்றாய்
முன்னாள்வரைக்குடைபிடித்தும்புரந்தபசுமுழுதுமழுமாறுகாண்டா
யெற்றுப்படித்தவர்களிறுமாப்புறச்சபடமில்லார்நடுங்கவிட்டா
யிவைபலவும்வியனன்றிரக்கமின்றித்தசையினிச்சையாலுயிரனேகஞ்
செற்றுத்தினுங்கொடியருக்குமுணவிடலென்னேசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஐந்துவகையாயபடைநீகொண்டுநீசருக்கரசாட்சிசெல்லலாமோ
வகிலமுண்டுமிழும்வாய்மொழிபெற்றநானிவணருந்துயர்ப்படலாகுமோ
பைந்துளவமேயனையபாடல்பலகொண்டுமொருபரிசுநல்காதன்முறையோ
பசுவனந்தந்தினமும்வதைபடக்கண்டுநீபள்ளிகொள்வதுஞாயமோ
சந்துசென்றுங்குந்திமைந்தரைவரையாண்டதன்மையிந்நாள்கெட்டதோ
தருமங்கெடப்பாவமேலிடச்செய்யுமொருதலைவனுனையன்றியுளனோ
செந்துமுழுதுய்யவுணவுதவுபேரிசைதுன்றுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே,

பானலங்கண்மகளிர்மோகப்பெருங்கடற்படிகின்றபாவநோயும்
பைம்பொற்பணைத்தாவலாலீனர்மனைதொறும்பரதவிக்கின்றதுயரும்
போனகம்வெறுத்துள்ளகாயக்கிலேசப்புழுக்கமும்புவியாசையும்
பொய்யர்மொழிமெய்யென்னநம்பித்தவிக்கின்றபொல்லாங்குமனையபிறவுந்
தேனவிழுமுண்டகமலர்க்கண்கொடிக்கணந்தீர்த்தருளவல்லையன்றோ
சிந்தையென்னளவினுமிரங்காதிருப்பதுன்சீர்த்திக்கிசைந்தபண்போ
தீனரட்சகனென்னுநாமமுனதன்றோசொல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கஞ்சமலரிற்குடிகொணின்மனைவிகண்ணருளோர்கடுகளவுமெய்துகிலேன்
கருணைமலிமாதவத்தினர்களுநடுங்கவளர்கலியனுக்காளாயினேன்
வஞ்சகமனக்கயவராரெனினும்வென்றுமகிழ்வலிமைபெறமிகமுயன்றேன்
வலியவந்தென்கனவினீசொன்னசொற்பயனுமாநிலத்தொளிரவில்லை
நெஞ்சகமுலைந்துதடுமாறுகின்றேனீயுநிசவுறக்கங்கொடுள்ளார்
நேரக்கிடந்தனையொர்சற்றருள்சுரந்தென்னைநின்னடியர்தம்முள்வைப்பாய்
செஞ்சரணயுகளக்கருங்கொண்டலேயனையசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

முந்திநின்றுதிபாடிமுத்தியிற்புக்குள்ளமுத்தமிழ்ப்புலவர்போல
முப்பத்திரண்டுத்தியுங்கலந்தருணீதிமுறைமைவழிகவிபாடிடேன்
வந்தபடியெழுதிப்படிப்பேனென்வாய்த்தமிழைவம்பெனவிகழ்ந்துதள்ளேல்
வலியவந்தன்றுண்டுகொண்டநிசமறைவுறிலெவாறுய்குவேனையகோ
நிந்தனைசெய்தார்சிலருமுய்ந்தமைகுறித்துமிகநெஞ்சங்களித்தவென்னை
நின்னருட்சோதனைக்காளாக்கலாகுமோநிகமாந்தபோதமருள்வாய்
சிந்தனெனவேகிமாவலியைவென்றறவும்வளர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கோலாகலத்தமிழ்க்கவியனந்தஞ்சினைக்கொண்டல்களெனப்பொழிகுவேன்
கொன்றானருந்துமவர்குலமொடுசிக்கக்கொடுஞ்சமர்விளைத்துமகிழ்வே
னாலாலமுண்டவனுநான்முகனுமெச்சிடவருட்கடலிடங்குளிப்பே
னண்டபிண்டங்தொறும்விளையாடிநின்றிருவடித்தணிழலிடையிருப்பேன்
வாலாயுதத்தின்கைமகவான்றனூர்முழுதும்வாய்விடப்பொருதுவென்ற
வயினதேயன்பிடரின்மலர்மகளொடொருபோதுவந்துனதுசேவையருள்வாய்
சேலாவுருக்கொடு திரைக்கடற்சென்றும்வருசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அறிவணுவிலணுவளவுமில்லாதமூடர்மிசையபிமானமிஞ்சிடாம
லநுபூதிஞானம்படைத்தபெரியோர்களையுமவமதித்துக்கெடாமற்
பிறிதிணையிலானந்தவாரிகுளியாமுனம்பெற்றதிலுவப்புறுமற்
பேய்களைவணங்கிப்பலுயிர்வதைகளுஞ்செய்பவர்பின்சென்றுகெஞ்சிடாமல்
வறிஞரிலிவன்றலைவனெனப்பலரேசமாழ்கித்தவிக்குமெனைநின்
மார்பிலுறுமங்கைகண்ணருள்சிறிதுறச்செயநின்மனமிசைவதெந்தநாளோ
செறியுமணிமுடியாயிரங்கொளரவிற்றுயில்கொள்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கம்பமதவேழமனகானுறும்படிநீகேளிமருவகங்காரமுங்
கடனீர்மிகாதபடிகாய்தருமழற்றிரள்கடுக்கும்பெருங்கோபமுங்
கும்பமுலைமங்கையர்கள்படைநடுவினிற்குலவுகொற்றமதனிகர்காமமுங்
கோரமொடுமூடமுமழுக்காறுமாதியகுணக்கேடெலாமுமெய்தும்
வம்பர்களிலொருவனெனமாநிலத்திற்சுழலென்மனவெளியினூடொருக்கால்
வயினவப்பனவன்மனையின்சிறுவனுவந்துமறையாதசாதமறியச்
செம்பவளவாய்விண்டொருரைசொன்னதார்கொலோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மண்டலத்துக்கானவிதமிகச்செயநாடும்வாஞ்சையிலழுங்கவிட்டாய்
மலர்சிங்கிநீரிறைத்துத்தூபதீபமிடும்வண்கிரியையுங்கொடுத்தாய்
தண்டமிழ்க்கடலைக்கடைந்தமுதமனையகவிசந்ததம்பாடவைத்தாய்
சகுணமொடுநிட்குணமுநீயேயெனத்தேறுசமரசவுணர்ச்சிதந்தாய்
தொண்டர்தம்பதமலர்த்துகள்சிரத்தணியருட்டொங்கமுறவுங்கண்டிலாய்
துட்டநிக்கிரகமொடுசிட்டபரிபாலனத்தொழில்சிறிதளிக்கொணுதோ
தெண்டனிட்டவர்விருப்பியாவமுதவுந்தகைச்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சகரர்தொடுமொழியைத்தாண்டியொருநொடியினிற்றசமுகன்பதியிலெய்திச்
சானகிதனைக்கண்டுநின்செங்கைமோதிரந்தன்னொடுயிரிட்டபின்னர்
தகரமணமணவுசூடாமணியொடெதிர்வந்ததனிவீரனைச்சொ[illegible]ன்னைட்
சார்றுமொழிதவறின்மற்றெங்கேனுமொருபெருஞ்சத்தியமிருக்குங்கொலோ
மகரகுண்டலமுலவுநின்செவியிலென்னதசொன்மட்டும்பசாதுசொல்லோ
வாரணத்தோதையினுமிழிவென்றிகழ்ந்திடினின்மாமசணசைப்பளன்றோ
சிகரமலிசையமருள்காவிரியினிடையுற்றசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

என்கனவினின்மனைவிவந்துதிபாடுபொன்னீவேனெனச்சொன்னக
மெழுகூற்றிருக்கைக்கவிக்காகநீகையெழுத்திட்டசீட்டிந்ததும்
வன்கணர்க்கெமனனையமாருதிபல்கால்வந்துவந்துவசனித்தமொழியும்
வயினதேயன்பலபல்வடிவோடுவெகுதடைவானசத்தொளிரண்மையு
மின்கருணைவெள்ளமுறுகடவளார்பலரும்வலிகிட்டிளசுதந்தாங்க
ளியாவும்பலிப்பின்றியின்னற்பெருங்கடலிடத்திலிழித்தெனாங்தேன்
றென்கவிச்சடகோபன்மொழியுமலைபோலுமோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அத்தன்வெள்விடையின்மிசையுமையவளொடொருகளவிலைவிர்தரபொற்சாடிய
மானைமுகமுடையொருவன்வந்துவந்தமருமகத்தினைத்தேற்றியதுவுஞ்
சுத்தவயவீரமுடையார்பரவும்வேல்விடலைதொந்தங்கள்பலவாய்த்ததுஞ்
சூரியன்சந்திரன்முதற்பலர்மனத்தினுந்தோற்றிவிளையாடியதலம்
புத்தமுதமண்டருக்கருளியநின்மாயையின்பொர்பொனவணர்க்குசொன்னேடன்
பூதலத்திடைப்புகன்றிடினுமுணரவலபுண்ணியர்க்காண்கிலேனென்

சித்தமொடுநீடுமலதொருசாட்சியுள்ளதோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஏதமொருகோடியெய்திப்பலர்மனைக்கடையிலேற்றுத்திரிந்திடாம
லிகபரமிரண்டுங்கடந்தபெரியோர்வேடமிட்டபுகழ்குன்றிடாமற்
பாதகமிகப்புரிபடிற்றுமன்னவர்களைப்பார்த்தும்பயந்திடாமற்
பலவாயசமயப்பிணக்கினிற்பட்டுளம்பாழாமெலிந்திடாம
னீதயவொராணுவளவுசெய்யத்துணிந்திலாய்நெட்டுயிர்த்துத்தளர்ந்தே
னிகமாகமம்பரவுமெட்டெழுத்தையுமிகநிகழ்த்தலிற்பயனில்லையோ
சீதளமலர்க்கமலைநோக்கிடச்சிறிதுபுகல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மக்கட்குலத்திற்பிறந்துள்ளமறையனையர்வாய்கொண்டமட்டுநிந்தை
வசைபேசுகின்றாரினருள்கொண்டுவெவ்வறுவகைவெறியிடைமூழ்கல்வேட்டேன்
பொய்க்கற்புடைப்புல்லமாதருமதியாதழியாப்பொருட்டிடச்செயலாகுமோ
பூருவத்தொருவிசிமித்தமணைமேற்றம்போனதுண்மையன்றோ
மைக்கற்பெரும்பாறையொன்றினைமிதித்தன்றுமகள்வடிவுசெய்ததாலு
மாசுணக்கொடியவனிடந்தூதுசெல்லவிடவனத்திடைநடந்ததாலுஞ்
செக்கச்சிவந்ததிருவடிகூட்டியாண்டருள்செய்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாரதிமணாளன்றனெண்கரத்தாலுமுடல்பலசமைத்துக்கொடாமற்
பச்சைக்கிளிப்பரிப்புத்தேள்சினந்தென்மேற்பஞ்சபாணந்தொடாமற்
கோரகடனேவலில்வருந்தூதர்கூடவேகொண்டுபோராடிடாமற்
குவலயமும்வானமுமளந்தபதயுகளங்குறித்தபயன்வீணாகுமோ
வாரணம்பரிபோனநாளின்மீனுருவெய்தியமர்பொருதுமீட்டதாதி
யானபுகழத்தனையிலவரவாறிந்தளவிபாரிபந்தமிழிலோதித்
தீரகுணமாதவச்சித்தர்முனிவோர்பரவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கற்பனையலங்காரபாதியனதேடிக்கவிப்பனுவல்பாடமாட்டேன்
காதலுற்றனவேயடிக்கடிபுகன்றுமெய்க்கருணைபுரியென்றிரப்பேன்
பற்பமன்சிந்துரமணிதவிரவேலொருநின்பத்தரெனவேயெண்ணுவேன்
பலதெய்வமுனையன்றியுளவெனப்பாருமவர்பாலுறவுகொண்டுமகிழேன்
சொற்பனத்தன்றுநீயொன்னிமித்தங்கொண்டதூயகோலம்பிறர்க்குச்
சொல்லிடத்தக்கதோசத்தியம்பொய்த்ததாற்சுருதிபிறழாமலருள்வாய்
சிற்பநூல்வெட்கமுறுதிருவாலயங்குலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கொம்பூதுமீனக்குலத்தினருமச்சுறக்கோவதைத்துண்ணுநீசர்
குடைநீழலிற்புனிதர்பலருற்றுநெஞ்சகங்குலைகுலைவதறியாய்கொலோ

வெம்பூதசேனைப்பெருந்தலைவரேயனையவீரரொருவனையேனுமிம்
மேதினியிடஞ்செய்பிலவரையெல்லாமென்றுவேதநிலைநிறுவிடானே
வைம்பூதமுந்தலைகளானபகுதிப்பாம்பிலறிதுயில்கொளும்பெருமைகாத்
தருளவுஞ்சோம்புகின்றனையாகிலென்செய்வேனையகோவாயிரங்காற்
செம்பூரவாகனத்தினன்கணவனைத்தந்தசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வெஞ்சொற்கொடுங்காலபடர்வீசும்வலையினிடைமெலியவெனைவிட்டிடாதே
மின்னனையசிற்றிடைப்பாவையர்கண்மோகத்தின்மிகநொந்தழச்செயாதே
தஞ்சொற்புகழ்ந்தனையவர்சொற்பழிக்குந்தகை-புலயர்கூட்டத்தினுட்
சாரச்செயாதேயிறப்பும்பிறப்புந்தலைக்கொளப்பார்த்திடாதே
யஞ்சொற்கநரகமுமலாதபரபதமதிலமைந்திருக்கப்பணித்திட்
டகளபரமானந்தவைபவமனோலயவகண்டாநுபூதியருள்வாய்
செஞ்சொற்றமிழ்ப்புலவர்சேகரரெலாம்பரவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வேயிற்குழற்சமைத்தூதியானிரைமேய்த்தவேட்கையுமழைக்குலங்கள்
வெட்குறச்சதமகனைவருகவொருகோளக்குன்றமொன்றைமலைப்பிடித்திட்டவிறலுந்
தாயிற்பலகன்றுகளினூருவஞ்சமைந்திட்டதயையுமவைகாப்பதற்காந்
தன்மைப்பெரும்பெயர்சுமந்துள்ளகீர்த்தியுந்தகுதியல்லாதவல்லல
நாவிற்பலாவுண்டவுறனையும்வதைசெய்யுநார்தமக்கரசுநல்கி
காகணையினைமற்கிடந்ததுயில்கொள்ளாக்கநந்தாகைவியப்பாருமாஞ்
சேயிற்கிடந்தொதாரிலைமேலழவுநாணுதசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அங்கட்பெரும்புவனியிற்பலபல்புலவர்க்குமாவனைகொடுத்துவந்தா
யதுநிற்கநின்பெருமையோடுநின்றலமங்கைமையத்தனையுமந்நாளிற்
பைங்கட்செவிப்பணைத்தல்குலுறுமயிலனையபார்வதிதனக்குமற்றைப்
பலதேவருக்கும்புகன்றுமரன்பெறப்பரிசியாதுநல்கினைசொலாய்
தங்கட்டமூர்த்திவடிவாம்பரமஞானமோசாகாதிருக்கும்வரமோ
தலையோமண்டழுந்துகயிலைத்தலையிலரசுபுரிதன்மையோசடையிலணியுந்
திங்கட்கொழுந்தோதிரைக்கைமலிகங்கையோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வழிபடுநினடியவர்பதத்துகளையென்றுமறவாதுதலையிலணிவேன்
மலையமலைதருமமுதமனையதமிழாற்கவிதைமாலைநின்மிசைசெய்குவே
னழிவில்பரமானந்தவாரிதிக்கணையாகுமட்டாக்கரஞ்செபிப்பே
னமரேசன்முதலோர்கள்பெறமுறம்பெற்றுசையாதுனுவளவுமிலைகண்டாய்
கழிமலர்முடித்துகமலகாமதத்தருள்பிராட்டியைக்காணமுண்ணமயனைப்பெற்றவன்
கவிகொண்டுபொறங்கிழியறுத்தலைக்கையுநெய்தற்கணைவேளியறுகாட்டிமற
செழியன்முன்பெற்றபுகழாதியவிழைந்துளேன்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மங்களமனந்தம்பொருந்துறக்கவிபொழியுமாரியனையேன்கனவில்
வந்துவந்தாயிரம்வினைதம்புரிந்தாயென்வாஞ்சைமுற்றச்செய்திலா
யிங்களவில்புல்லர்மனைவாயிலிற்போய்ப்போ யிரந்துரந்தங்குகின்றே
னெண்வகைத்திருமகளிர்தாமுன்னமனைவியர்களென்னுமொழியுண்மையன்றோ
சங்கரனுமயனுமப்பெயரனுந்தமிழ்கொண்டுதனைத்துதித்தவர்க்குத்
தவளவாரணத்திலச்சிவிகைகவிகைபொற்றுளமாதியவழங்கிச்
செங்கலிற்பொன்செய்துமீந்ததைப்பாய்கொலோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஆதவன்சந்திரனமுதற்றேவரனைவருநினருள்வசத்தினரென்னவோர்ந்
துலகடங்கவுமுழுதுண்டுமிழ்ந்தாயென்னுமதிரகசியமுழுதுணர்ந்துன்
பாதமலராடியடாக்கரமொழிந்தழுபைந்தமிழ்கொண்டேறமுடிம்
பாடிப்பரவுமடியவர்களைக்கூடியெப்பாவங்கெடப்பார்த்திலாய்
தீதுளவறத்துயருதுமெனைக்கின்னமுந்திருவுளமிரங்காதிரல்
செங்கடபணிப்பாயலிற்கரியமுகிலெனத்துனமும்விழிதுயிலுமாலே
சீதராமாதவாதாமோதராவெங்கள்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சரகதியின்மிக்கபரியேழுடைத்தேரில்வருதபனன்மதியங்காரகன்
றருபுந்திகுருவெள்ளிசனிராகுசிகியெனச்சாற்றக்கிளர்ந்தவான்பான்
கிரகபலவாதனையிடைப்பட்டுமாழ்கக்கிலேசக்கடற்குண்மூழ்கிக்
கெடவென்னபழவினைக்கயிறுகொண்டாட்டிப்பல்பிறவியினுஞ்சேர்த்துடல்
வரகருணைவாரிதியெனத்தக்கசெந்தாமரைக்கட்கடைக்கிலக்கா
வைத்துப்புரந்துபின்சனனமரணங்களறும்வைகுந்தமெய்தவருள்வாய்
சிரகரமனந்தமுறும்விசுவரூபங்கொடவிர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

நோயிற்பிணிப்புண்டுகெண்டவரெலாமிகழநொந்துதடுமாறிடாம
லுவலரியபாழ்மிடிக்கவலையினிடைப்பட்டுநோன்பின்வலிகுன்றிடாமற்
றுயர்ச்சிறந்தகருணைநதியெனச்சொன்னமறைசாற்றமனைவலும்வன்னனூ
சடங்காரமுதலினைக்கருளியபெருஞ்செல்வந்தனையனைகளைமருளவையோ
பாயிற்றலைக்கிசைவுபெறுபெரும்பாம்பணைதுபகையென்றுமூழ்ந்திடாமற்
பரவுபன்னவாகுலமுங்குறம்போசெய்தபண்டமணிமயளிடாமற்
தீயிற்சிவந்தசிறையுறுகருடன்மீதுலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வஞ்சகமடந்தையர்கடம்மையேநம்பியவர்வாய்மொழிகளைக்குறித்து
மனமிகவருந்தியுமெனக்கருளனுதினமுவழங்கடவுமலைசெயாயேகொலோ
சஞ்சலமனைத்துந்தவிர்க்கவல்லாயெனச்சாற்றுமறைசாற்றமன்றோ
துயையியலாயெனினுமுறுதித்தொழுமெல்லாறுகைத்திரைத்தலைநடந்துகின்று
பஞ்சமெல்லாங்கோத்துதைமொழியுமயமயாந்துன்முதுதடாமதா
வாகீர்பாடிகளியவஞ்சுரந்தம்காபனமலையங்கைமனமேனிந்துவமபொற்

செஞ்சதங்கைத்தாள்கொடொருசகடொடித்தவாசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

நாததத்துவமுடிவினின்றுடுநின்சரணநாண்மலர்விழைந்திலேனோ
நாரதாதியராயபாகவதர்தாள்கமழ்நறுந்துகள்சுமந்திலேனோ
வேதவித்தகனைவிதிவிதித்துளவற்றுண்மிக்கவையுணர்ந்திலேனோ
விரதமுற்றுப்பலபல்சரதர்மெச்சத்தகுவியன்றுதிவிளம்பிலேனோ
நீதம்விட்டுப்பிழைசெய்கிட்டோர்குடையினிடைநெட்டுயிர்த்தயரவைத்து
நிலமகளழுந்துயர்தவிர்ந்திடக்காண்பதேநினையுமனமேன்கொடுத்தாய்
சேதனத்துடனசேதனமும்புரந்தருள்செய்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மெத்தப்பயந்துளவென்மனவெளியினீவந்துவிளையாடன்மெய்ம்மையன்றோ
வேதங்களும்பலபலாகமங்களுமுன்னைமெச்சுவதனைத்தும்வீணோ
வெத்தப்பிதஞ்செயினுமவைமுழுமையுங்களைந்தேற்றருளவல்லையென்றே
யெண்ணுமென்னையீனர்மனைவாயிலினுமகவிட்டிடுதலினிளப்பமின்றோ
சத்தப்பெருங்கடல்கடைந்துமகளுருவஞ்சமைந்தும்விண்ணவருந்தத்
தண்ணமுதளித்தநீமண்ணவர்வருத்துந்தவிர்த்திடச்சோம்பறகுமோ
சித்தர்க்குமுத்தர்க்குமொருதஞ்சமாநிலவுசீரங்கநாராயணா
திகழ்வலமபுரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஆக்குவதனுக்கொருமுதற்கருவியாநிலவுமருமறைப்பிரமனுக்கு
மவன்மைந்தனுவந்தனைத்துலகொடாருயிரழித்திடுமரன்றனக்குங்
காக்குமொருகாவலவனுன்னையன்றியின்மறனக்கருதித்துதிக்குமன்னைக்
காசினியின்மானிடருருக்கவிழ்த்தாயிதுன்கருணைக்கிசைந்தபண்போ
கோக்குலம்வருந்துமக்கொன்றுண்மெளாமொகாங்கைகாலும்பொறுத்துளாயே
குணம்வேறுபட்டதாதுயின்மூடிவிட்டதாகூறுமோழ்வினைவுளலையா
தேக்குபரமானந்தயோகமப்போதுமுயல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களினமன்னுதிகிரியம்படையண்ணலே.

அறிவினுக்கறிவாயகண்டபரிபூரணவதீதமயமாவையென்ன
வவுணேசன்மைந்தனுஞ்சடகோபனுந்துயருமறையக்கிடைந்தவுன்னைப்
பொறியினுக்கமையாதபொருளெனவெண்ணப்புழுங்கித்தவிக்கமாட்டேன்
புருடோத்தமன்கருடவாகனத்தம்பிரான்புதமீதளிர்குலசகாய
னுறுமணகுங்கரவுமேனுதமனனமறப்போதும்மாயாதுரைத்துமகிழ்வே
னுனணியபெருமபமறூராயிரதம்தானமமுனுமுதவிடத்துணியாயகாமோ
சிறியவரிகழ்ந்திடினுமரியபயனையுதவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தத்திரமிகுத்துத்தவித்துழலுமன்பரைத்தவிடளவுமெண்ணுகில்லாய்
சரவுயிருமவதைமெய்யத்துருந்துமபந்தரைததனதமனனவாழுவைத்தா
யித்துறமுனைக்குரியதனைமையன்றுந்தநாளென்வகத்தணைந்துமகாமேலா
விலைவுணர்மேலருள்கூர்ந்தமரர்தங்கனையெழுந்தனமயனைக்கூயமோ

பத்திரமுடன்சின்மலர்சிந்தித்தொழுங்கிரியைபற்றிநிற்கின்றதமியேன்
பழவினைப்பயனநுபவித்துமடியாதருட்பரிசுதவுதருணம்வருமோ
சித்திரமணிக்கூடமலிவீதியணிநீடுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாவகருமங்களுக்கஞ்சியவைதொடர்வதாற்பலவாறுதளருமடியேன்
பாடல்பலபாடநீயாடல்செயுமுண்மையிப்பாருலகுமறியொணாதோ
தேவர்மாதவர்முனிவர்சித்தர்முதலோர்பெருந்திரளெலாமறியுமன்றோ
சிறியனேனெஞ்சுநின்றிருவுள்ளமும்பெரிதுதெரிதலுந்தவறுகுமோ
மூவர்களுநீயெனத்தெளியாமலவருளொருமுதல்வனென்றேத்திஞரு
முத்திபெற்றனரெனும்பத்திநூல்கல்லாதுமுராணுறுசமண்குலத்துச்
சீவகன்முதற்சிலரைமெச்சுமவரிச்சியாச்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாம்பிற்கொடுங்குணமுமுளன்பெரும்பேயினும்பதறுமதியாசையுடையேன்
பசுவினைக்கன்மருங்வதைத்துதித்திலும் ஒதிதாபாழ்ங்குடைக்கீழ்ப்பட்டுளேன்
சாம்பித்தவிப்பவாகளிற்றலைமையெய்துமனைசுதத்தொருசற்றுமிலேன்
மருண்டுமெய்துனருட்பேறுபெற்றோரையுந்துணைவோடுநிந்தைசெய்வேன்
வேம்பிற்சமைந்ததொடைமாறன்றனாட்டில்வளர்வியன்வகுளமாறனன்ன
வீறுபெற்றுன்னுபயபாதாம்புயத்திடைவிராவிடவும்வேட்கையெய்தித்
தேம்பிக்கிடந்துமெளனையாளநினைவையோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கும்பியேமுதலாமெனச்செறியுமெழுநான்குகோடிநரகிற்படாமற்
கோளரவகேதனத்தானிலுங்கொடுமைபுரிகொற்றவர்க்கஞ்சிடாம
னம்பிநின்றிருநாமமாயிரமுமொழிகின்றநல்லவரையெள்ளிடாம
னவநாதசித்தர்களுடன்கூடிவிளையாடநானிச்சைகொள்ளன்முறையோ
வம்பியிற்றனைநம்பியேறியவர்தமையயலாமாற்றிடைகவிழ்த்தவற்கு
மரியதிருவடிநீழலருளுநீயெனையாளிலார்தடுப்பார்களையாய்
செம்பியன்கோனிலவுதிருநாட்டின்முகமனையசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அல்லற்பெரும்பிணியிடைப்பட்டுவாடுமெனருந்தமிழ்விரும்புமுண்மை
யமரர்களறிந்தபடிமானிடருமறியவேயாசையுற்றுத்தளர்ந்தே
னில்லத்துழன்றவருமாதவத்தோருந்தமினமெனப்பொதுவில்வைத்தா
யிதனிமித்தத்தவாசொனிந்தையுஞ்சிலவேளையெய்திமிகநாணுகின்றேன்
சொல்லற்புதந்தருதியதுகொண்டும்வண்டுவதொகுதப்பிறர்க்குமருள்வேன்
றேறுகைநிகர்கோசலையசோதைதேவகிமுதற்சுரிகுழன்மினார்பலர்க்காஞ்
செல்லக்குழந்தைகளுருக்கொளவுநாணுதசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சொல்லுமச்சொற்பொருளுமாகின்றவுன்னைத்துதித்துத்தவம்புரிந்துந்
தொண்டர்தாண்மலரின்மகரந்தமுஞ்சூடித்தொடுங்கடலுடுத்தயாவை

யல்லுடன்பகலுமழும்வெந்துயர்தவிர்ப்பதற்காசைகொண்டேங்குமென்னை
யறியாய்கொலோவின்னமேனுதவிசெய்திலாயார்க்கருள்செயக்கிடந்தாய்
வில்லுமிழ்படைக்கலமொரைந்துகொண்டவுணர்களைவென்றதிறமின்றில்லையோ
விண்ணுலகவாணரைவெறுத்தனைகொலோவுனதுவேடமொடெனக்குள்வந்து
தில்லுமல்லும்பேசுவானொருவனுளனோசொல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஆறருளுநின்பதசரோருகங்கருதாதவசடனேயானெனினுநின்
னருமைப்பெரும்புகழிலொருசிறிதுசெந்தமிழ்கொடறைவதுண்டுண்டாதலாற்
கோறலிற்கொடியவசைசொன்னசிசுபாலனும்வைகுந்தமுறவன்றளித்த
குணமதையதிட்டித்துமெஞ்ஞானவான்களிற்குருகைமாமுனிவனென்ன
வீறனந்தஞ்செய்துகீர்த்திபெறுவார்குழுவில்விறல்விண்டுசித்தனென்ன
வெய்யரைச்செறும்வீரர்தங்களிற்பரகாலவேலனெனவிபுதர்தம்மிற்
சீறரவகங்கணச்சிவனென்னவாழவருஞ்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கறையோடுதவழ்போதும்வஞ்சகநினைந்துற்றகருமருதிரண்டடர்த்த
கருணைப்பெருக்கினைக்கருதாதமூடரிற்கண்கலங்கித்தளர்ந்தே
னிறைநீர்மையில்லாதமணிதரைத்துணையெனநினைத்துத்தொழும்புசெய்த
நிலையாளரும்பெரிதுநிந்தனைசெய்கின்றார்நினெஞ்சமெனினைத்துள்ளசோ
பிறைவாழ்சடைப்பரமனன்முகன்முதற்சிலர்பெறும்பயனல்காதொழியினும்
பேடியுந்துருவனுமுதற்பலரடைந்துள்ளபேற்றுளொன்றேனுமருள்வாய்
சிறைநீர்வயற்சோழவளநாட்டின்மகுடநிகர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அருள்வலியொராணுவளவுமறியாதமூடரெனவாசமேதானெனக்கொண்
டாகாரநித்திரைமைதுனமென்னுமூன்றினுமழுந்தித்திரிந்துமடியேன்
பொருள்வினைச்சிதடரிப்பூதலமுழக்கப்புயத்திற்சுமந்துவக்கும்
புரவலர்களென்னினுநடுங்குறத்தகுமாறுபுரிவதேகனிவிழைந்தே
னிருண்மலிநிசாசரருளிவனொருவனென்றுனுளமெண்ணுகின்றதுகொலோதிய
னெட்டெழுத்தோதுமவரெவரெனினுமவர்பதமிறைஞ்சுவனிதுண்மைகண்டாய்
திருவருட்கடலெனச்சேடன்மிசையென்றும்வளர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தன்மமோர்சிறிதேனும்விழையாதுபாவமுயல்சண்டாளர்பசையளித்தாய்
தமிழருமையறியாதமுழுமூடலோபியர்தலைக்கடையினுழையவிட்டாய்
புன்மனத்திற்பலபொருப்பனையபேராசைபுக்குவளரப்புரிந்தாய்
புகழொன்றுநல்காமலிகழ்வாயிரந்தந்துபுண்படக்கண்டிருந்தாய்
பன்மறைத்திரளும்பழிக்கரியமகிமையுறுபரமார்த்தசாரமாகிப்
பரிமுகன்சதுமுகன்சடகோபனாதியவர்பாணியிற்பழகுகுறியாஞ்
சின்மயசுபாவநிலையருளவிசைவாய்கொலோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வகையாயநாண்மலரனந்தம்பறித்தனதுவாரிசபதத்திலிட்டு
மதுரமூவிருபேதமாகியநிவேதனம்வளம்படநிறைத்துவைத்துப்
புகையோடுதீபமுமெடுத்துச்சுழற்றிப்புதுக்கருப்பூரமேற்றிப்
போதத்துதித்துப்பணிந்தெழும்பூசனைப்பொற்புநினைவொத்தருள்கிலாய்
திசைதோறுமேகிப்பொன்மிகவுடையர்மனைதொறுஞ்சேரழிந்தேங்குகின்றேன்
றிருவுளத்தருளியாதுமென்னளவுமின்றெனிற்றிதியெனக்கியார்செய்கின்றார்
சிகைமீதுபீலியணிகோவலவனைவாசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

வரையிடைகிடந்தபொற்குவடெனப்பைந்துளவமார்பிற்கிடந்ததிருமின்
வையக்கிடந்தநிசிசராதியோர்மனையில்வாழத்துணிந்துகொண்டா
டரையிடைகிடந்தவெம்பாவங்களழியத்தவங்கிடந்துள்ளபெரியோர்
தழலிற்கிடந்தமென்புழுவெனத்தீர்வரியசஞ்சலத்திடைகிடந்தார்
கரையிடைகிடந்ததண்கடலெனநினடியவர்கணங்கூடுமாறுபுரிவாய்
காவிரியிடைப்பிறந்ததனிடைகிடந்தபலகானகப்பொருள்கொழிக்குந்
திரையிடைகிடந்தபாம்பொன்றிற்கிடந்துதுயில்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கைக்குத்தினொலொருபதானனமுளானுரங்கன்றிடமதாணியென்னக்
கவினுமதமாமருப்பியாவுமுதிரச்செய்தகனவீரனனையதொண்டர்
மிக்குற்றிடும்பெரியசந்நிதிகொணின்னருள்விரும்பலின்வருந்துதமியேன்
மிடலவுணர்குலகாலனெனவிளங்கிடிலுனதுவென்றிக்கிளப்பம்வருமோ
முக்குற்றமுந்தணந்தானந்தமயமாகுமோனமுமளிக்கவலநீ
மூதுலகறிந்தசிலபேறுநல்காதிவண்முரண்செய்தன்முறைமையாமோ
திக்குத்திகாந்தம்வரைபடருமெய்ப்புகழ்கொண்டசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

காவியங்கண்ணியரனேகர்மனைதோறுமொவொர்காலையிலுருச்சமைந்து
காமக்களிக்கடல்விளைத்தநீயிந்நாள்பல்காலியொடுகன்றுங்கொளும்
பாவிகளகோரபயமெய்தச்செயற்கானபடிவமொன்றெய்தொணாதோ
பத்தனொருவற்கருளனுத்துணையளிப்பினும்பாதுகாத்திடுவனன்றோ
சேவிலிவர்சிவனுதியர்க்குமிதுகடனெனச்செப்பிக்கடத்தநினையேல்
செங்கையிற்குன்றமுங்குழலும்வைத்துக்காத்தொர்திருநாமமேன்சுமந்தாய்
தேவினங்கட்கரசெனச்சக்கரப்படைகொள்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

அங்காரகன்பொருகுரூரகுணமாந்தர்க்குமஞ்சிப்பதுங்கமாட்டே
னகிலமுழுதுன்றனடியானென்னவாருயிரனைத்திற்குநன்மைசெய்வேன்
பைங்காரமொடுமணிக்குவைகொண்டுவாழ்செல்வர்பலரையுமதிக்கமாட்டேன்
பாகவதர்தாண்மலர்ப்பதுமமகரந்தம்பரிக்கின்றபண்புமறவேன்
சங்காரகிர்த்தியச்சிவன்முதற்பலதேவர்தங்கட்குமினியதாநின்
றண்ணருட்டுளியொன்றெனக்களித்தன்றெனுட்கார்றுமொழிசரதமாக்காய்

சிங்காரமாவனவனைத்தும்புகுந்துவளர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பழிபாவமென்றவற்றிற்குளஞ்சாதசிலபாமரசனங்களுக்கும்
பைம்பொனிதியாடையாபரணநவதானியம்பாலிக்குமனைகாமினியா
ளழியாதவான்மகோடிகண்மருவகோவில்வடிவாயுடனைத்தமன்றின்
டவைபோலுமொன்றினைவளர்ப்பவர்பவர்க்குமொருமைத்திறங்கிளைமக்களைக்
கழிவாதனைப்படக்கவிபுரிபடைனையிற்கட்டுண்ணவிடலின்றியா
கருணைமலிகமலமலரனையநின்கண்கள்பொழுதொருதாயிலின்றையோ
செழியரவாருந்தெண்ணீர்க்காவிரியினிடையுற்றசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கற்றெறுந்தோவநமனைகிபல்வானரர்களைக்கொண்டுகடலடைத்துக்
காமமல்லாதுபயனின்றெனமுயன்றராக்கதனைக்கடிந்தபுகரம்
விற்றெழிக்கும்பலகைவாணனுசியர்மாயவெல்லன்முதலியபல்வீர
மேன்மேலுமெச்சித்தமிழ்க்கவிகளான்மிகவிளம்பிக்களிக்குமென்னை
நற்றெருவினுந்தீயதெருவினும்பலபலநகர்க்கிடையிரக்கவிட்டாய்
ஞாயமன்றன்றிதெனநவில்வார்களின்றெனினுஞானமயமாகினுள்ளஞ்
சிற்றெறும்புக்கணளவேனுமொல்காததோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சொல்லனந்தங்கொண்டுபொருளனந்தந்தரத்துதிசெயும்புலவரோடுந்
துட்டரைச்சிட்டர்களிகூரத்துணிக்கின்றதோள்கொண்டவீரரோடுங்
கல்லனந்தங்கொண்டகுகையனந்தத்தில்வளர்களிதுன்றுசித்தரோடுங்
கண்ணுதற்சிவன்மலர்ப்பிரமனுதியரானகடவுளரினத்தினோடு
மில்லனந்தத்தினருமெனையனந்தந்தரமிசைத்திடும்புகழ்விழைந்தே
னெட்டனையருட்டெறித்தெய்தச்செய்தாலுன்னையார்தடுப்பவர்களுளராய்
செல்லனந்தம்புரையவியமனந்தந்தொனிசெய்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாரணங்குக்கிடரனந்தந்தினஞ்செயும்பதிதர்குடைகீழலாலும்
பத்திநெறியேயுயர்வெனக்கொண்டுதெளியாதபாவலவர்பகைமையாலு
மாரணமுமாகமமும்வேறுவேறென்றிகலுமசடர்புரிவாதினாலு
மகளசின்மயஞானபரிபூரணத்துவமடைந்திடார்சேர்க்கையாலுங்
காரணமுடன்பலபல்காரியமுமாயநின்கரியசீர்கருதாதுவீண்
காலங்கழித்துநமபடர்வந்துறுக்கிக்கனற்சினமலிந்தொறுக்கச்
சீரணமெய்தாதபடியெனையாளவல்லையோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மதனவேள்செங்கரும்புச்சிலையில்வைத்தெய்யுமலர்வாளியைந்தினுக்கும்
வனசபீடத்திலுறைநான்முகப்பிரமாவகுக்கும்பல்பிறவிகட்கும்

க்தமலிந்தெருமைக்கடாவின்மிசையேறிவருகாலன்பொருஞ்சமர்க்குங்
கடையனேன்றன்னையொரிலக்காக்கிவிட்டுநீகண்மூடிநித்திரைசெயே
லதலசேடப்பெரும்பாயல்விட்டரிவையரொடாரவாரித்தெழுந்து
ணடியார்பெருங்குழுவினடுவைகுதற்காகுமறுபூதிநிலையமருள்வாய்
சிதனோதுநெறிசென்றதீயர்க்கொர்கூற்றனையசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மாயத்துணிந்தவைராக்கியத்தப்புறம்வருந்தித்தவம்புரிந்து
மந்திரச்சித்தொன்றுநல்குகில்லாயருள்வழக்கீதெனத்தக்கதோ
தேயத்திலெங்கேனுமொருசித்தனாயினுந்திகழவுஞ்செய்கின்றிலாய்
சேதாவுடன்கன்றும்வதைபடுங்கொடுமையிற்றிருவுளமுவப்பதுண்டோ
நீயற்றைநாளங்கொர்மலையாயகுடைகொண்டுநின்றகதையுண்மையானா
னின்னாணையென்னாணையின்னேயென்முன்வருதிநிசிசரச்சிசுநிமித்தஞ்
சீயப்பெருந்தலையொராயிரமொடங்குற்றசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கருடவாகனமீதுகமலமங்கலையொடொருகணவிலாயினுமெனக்குக்
காட்சிதந்தருளினலதனுவிலனுவாயினுங்களியுற்றுவாழமாட்டே
னருடரித்துள்ளதிருவுளமுன்னதேயென்னுமருமறையனைத்தும்பொயோ
வானைக்குமப்பேறளித்தநீயென்றனக்கருளாதனீதியாமோ
வருடமாயிரமுன்றனட்டாக்கரச்செபம்வழங்கும்வாயினர்பெற்றதாம்
வாழ்வுங்கொடுப்பதாச்சொன்னசொன்மறந்தானின்வாய்ப்புகழ்மழுங்கிடாதோ
திருடர்தங்குருவெனச்சுருதியும்பகரவளர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

காங்கிற்சிறந்ததிருமேனியும்பதுமநிகர்கண்களுங்குண்டலங்கள்
கவினைப்புனைந்தவிருசெவியுமதிரகசியங்கழறியருள்பவளவாயுங்
கோங்கிற்சிறந்தமுலைமலர்மகளுமரதனக்கோவுந்துழாயுமறுவுங்
குலவுமகன்மார்பமும்பீதகத்தானைபுனைகோலமும்பணிகள்பலவும்
பாங்கிற்சிறந்தவடியவர்சிரமெலாங்கமழ்பதாம்புயத்துணையுநெஞ்சம்
பார்த்தபடிகண்களும்பார்த்திடச்சேவைநீபாலிப்பதெந்நேரமோ
தீங்கிற்சிறந்தவர்களொருபோதுமருவாதசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

உதகமுடனன்னமுமெவுலகினர்களுக்குமினிதுதவுநீயென்றன்மட்டி
லோரஞ்செய்கின்றாயிதுன்னெஞ்சமறியுமற்றும்பர்முனிவோருமறிவார்
நிதநிதமகத்தழலினிசபத்தியறுகருமநிட்டேரிட்ட வூனு
னேயமுற்றுத்தின்றுதானவர்நெருக்கடியினெட்டுயிர்த்துத்தவிக்குஞ்
சதமகன்முதற்பலரும்வாழவைக்கும்பெரியதயையிந்நாளில்லையோ
சரமசரமுழுதுநின்வடிவென்னநாடித்தவஞ்செய்தறவறுதானோ
சிதலெறும்பனையனவும்வழிபடும்படிநிலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மணிகொண்டபணமாயிரந்தன்றுபேரரவின்மத்தியிற்றுயில்செய்கின்றாய்
வரமனந்தம்பெற்றதானவரையுங்கொன்றுவானவர்தமைப்புரந்தாய்
கணிகொண்டசாரற்கருங்குன்றெடுத்துப்பல்காலியின்புறுதல்கண்டாய்
கல்லினுட்டேரைவரைசால்லுயிரனைத்தையுங்காத்தலிற்சார்கின்றனாய்
பிணிகொண்டநெஞ்சப்பிணக்கமுறுமெனையனைப்பேணுவதுனக்கருமையோ
பிழையற்றநெறியையம்மந்தமெனப்பார்செய்துபித்துப்பிடித்துழைக்குந்
திணிகொண்டபன்மதத்தர்க்குமவர்பொருளானசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ஐவர்க்குமொருதூதனெனநடந்துபோயரவகேதனனியற்று
மாபத்தனிற்றப்பிவிதுரன்மனையிற்புகுந்தமுதுண்டுயங்கியதிலுந்
தொய்வற்றபூண்முலைத்தோகைநிகராய்ச்சியர்கள்சூழநின்றேசவுறலிற்
சோரனிற்கட்டுண்டுதாம்படிமிகுத்தலிற்சோர்வுற்றுரங்கயதிலும்
பொய்வர்த்தனைக்கயவர்மனைதோறுமேகிப்பொருட்பயன்வரும்புமென்னைப்
போகமொடுமுத்தியும்பெறுமாறுனடியவர்கள்புடைசேர்ப்பதிழிவாகுமோ
தெய்வத்தலங்கள்பலகோடியினுமேலானசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பங்கயமலர்த்திருமினஞ்ஞாயமீறலாற்பார்மகண்மிகத்தளர்ந்தாள்
பார்த்துமோரணுத்துணையுமபிமானமின்மைபோற்பள்ளிகொளாநாணுங்கல்லா
யுங்கயன்முதற்றேவரென்செய்கின்றார்களோவறிகிலேனென்றனெஞ்ச
மனைநாடிநாடித்தவிக்கச்செயுங்கடவுளார்கொலுனில்வேறுளாரோ
வெங்கயமுலாவுமலையிற்குடிகொள்சித்தர்களுள்வீரமொருவனுமில்லையோ
வேதநிச்சயமுணருமாமுனிவரனைவோருமவனனுலகமெய்தினார்களா
செங்கயலுடன்சங்கம்விளையாடுகாவிரிச்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பாவகன்மப்பதிதருஞ்சாகமேற்கொண்டுபலவாறுவைக்கும்வம்பும்
பவமரணமறுமாறுமுயலுமெய்ப்பாகவதர்பதைபதைக்குங்கொடுமையுந்
தேவர்குலமவுணருக்கஞ்சிவடமேருவிற்சென்றொளிக்குந்தன்மையுந்
திருபுதலவர்சொற்காதுயுலகங்களைக்கனுஞ்சென்றுசெயமுறுதிறமும்
போவதுகுறித்தெழுதெட்டுஞ்செயகன்றுபுண்ணியமளிதருளளங்
புண்படுத்திப்பதறுசாதனைசெய்கின்றதுன்பூவலயமேவுநாவற்
றீவதன்சென்னியிற்புனைமகுடமேயனையசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பட்சிப்பெருந்தலைவனதுபிடரிமேலறியொண்பதுமமகளோடுவந்து
பாருலகினிற்றொண்டுசெய்வாருளொருவனைவிழைபார்த்துடச்சேவைநல்கக்
கட்சிப்பிரதிகட்சியென்னுமதவாதமறுகளியடியார்கள்கூடக்
கண்டுமெய்த்தொண்டுபுரியாதுசிலவற்பநூல்கற்றுப்பிதற்றிநாளுங்
குட்சிக்குவேண்டுமிரையேதேடுமிண்டர்தங்கோலாகலங்கெடுத்துக்
கோவிலுங்கோவினமும்வாழப்புரிந்திடிற்கூடாதிதென்றுநின்னைக்,

சிட்சிக்குமொருதீயகடவுளுமுளான்கொலோசீரங்கநாராயணு
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மொய்குழன்மடக்கையரிலிளமையெழிலுடையவரைமுற்றும்விழைகின்றபொல்லே
முப்பத்திரண்டறத்தொன்றுமுயலாக்கயவர்முன்னருமிரக்குமிடியே[ன்
னெய்குலவுதண்டத்தொலித்தவலமாயெழுநெருப்புறழ்நெடுஞ்சினத்தே
னிகமநிச்சயமுணர்விலாச்சிதடர்தங்களைநிர்நிதம்வாதமிடகாணிலேன்
மெய்குறித்துத்தவமுயன்றுள்ளமேலவரைவிருதாவினிந்தைசெய்வேன்
மேதிப்பரிச்சமன்கலைப்பட்டமோய்ந்தின்னும்வேறுடல்கொளாத்தளாமற்
செய்குறையனைத்தும்பொறுத்தாளநினைவையோசீரங்கநாராயணு
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

இவ்வேளைநல்வேளையென்றென்றுகுறியாமலெவ்வேளையினுமுன்னையே
யெண்ணிநின்னுயிராகுமெட்டெழுத்துஞ்செபித்திடுமென்னையுனதமகனும்
வெவ்வேண்மலர்க்கணைசொரிந்துதவமுலைவித்துமெல்லிநல்லார்கொங்கைமேல்
விரகமுறுமாறுபுரிகின்றனிதாலுமொருமேம்பாடவற்கெய்துமோ
கைவேல்வலார்பலர்முடித்தலையறுத்துக்களத்திடையுருட்டியேனுங்
காலியொடுகன்றினங்களிகூருமதுசெயக்கருதுநினைவேன்கொடுத்தாய்
செய்வேல்விழிச்சியர்களாடுமெணிமாடமலிசீரங்கநாராயணு
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தறுகட்கொடுஞ்சமன்றூதுவருமொல்குறத்தன்னிகர்பலுயிர்வதைத்துச்
சுடமுண்டுவப்பவர்களனைவரையும்வென்றுகற்றயையினர்களாக்கவேண்டி
யுறுகட்படிந்தமியனுள்ளமறியாய்கொலோவுதவியேன்செய்கின்றிலா
யுயிர்புரக்கின்றதயுன்றொழிலெனுஞ்சுருதியொன்றுநிசமன்றுகொல்லோ
தறுகட்டாயிரம்விளைத்துத்தவத்துணர்வுசோர்வுறச்செய்யலாமோ
தமிழ்ச்செபுமெக்கருள்செயச்சோம்பிடிற்றெல்லைநாளோலமிட்ட
சிறுகட்கருங்களிறுகாத்ததுமெய்யாகுமோசீரங்கநாராயணு
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

ருமிலவிட்டுப்பொருதராவணுதிபரினுங்கொடியரைப்பகைசெய்திலேன்
குந்திதன்புதல்வரிற்றூதுபோய்வருகெனக்கூறவுந்தணிகின்றிலே
னமிர்தப்பகர்ந்திடப்பென்னுருக்கொள்ளுமாறமரரில்விரும்புகில்லே
னற்றைநாட்புலவன்னவரவப்பெரும்பாயலதுசுருட்டச்சொற்றிலேன்
றமிழ்கொண்டுதிர்த்துன்றனுருவங்குறித்துத்தவஞ்செய்துமறுகின்றேன்
றாழ்வொருவுமிடியறச்சற்றருள்செயற்குமித்தாமதஞ்செயலாகுமோ
திமிரத்தக்கயவர்விழிகாணவிழையாதசீரங்கநாராயணு
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கன்றுக்குடித்துளதூரங்கெனப்பலசேட்டைகற்றுச்செய்கின்றமனதாற்
காசினித்தலையண்ணிலாசையின்முயன்றுநனிகன்றித்தவிக்குமென்மே
லென்றுப்புரந்தவருளேனும்பெயாதிவணமேமாற்றனீதிதானே
விசையுமியல்மேடிவர்பெறததருதெய்வம்யாதேனும்வேறுள்ளதோ

சுள்ளுக்கதிக்குமவர்குடையினிடையின்னமுழ்ந்துயருறக்கண்டிராதே
தூயவுணவேயலதுதீயவுணவாயவுன்றுய்க்கலாரோவைகலாற்
செள்ளுப்பெருத்தசிறைவன்கழுகினிழல்படாச்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சோகுபலதலைவிரித்துடனுடனாடொறுஞ்சுடலையினடித்துளானுந்
துய்க்கத்தகாதனபடைக்குமொருவன்பின்னர்சோறட்டலைந்துளானு
மாகுமிசையேறிப்பலூர்தொறும்போயுணவளிப்பார்க்கிதஞ்செய்வானு
மயிலவேலெடுத்துக்கலாபமயின்மிசையேறியசலக்தொறுவானும்
பாகுநிகர்முத்தமிழ்ப்பனுவல்பலகொண்டுமொருபரிசுநல்கிலராதலாற்
பாலிக்குமுன்னைப்பராவுகின்றேனவர்செய்பாசாங்குநீயுஞ்செயேல்
சேகுபடுமிருமருதடர்த்தகருணாலயாசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மோகாந்தகாரப்பெருங்கடலினுடோறுமூழ்கித்தவித்திடாமன்
முண்டகாதனன்மதலையாகுமுனியரசுதவுமுத்தமிழ்வெறுத்திடாமற்
சீகாழியூரில்வருபரகாலனையசிலர்செயல்களையிகழ்ந்திடாமற்
செம்மலர்ப்புளியினிடைமருவுசடகோபனுவல்சித்தாந்தநழுவிடாமற்
காகாசுரன்றனைத்தடியாமலருள்செய்தகருணையைமறந்திடாமற்
காசினிக்கிதநாடுமடியேனையாளாதுகைவிடத்துணிவாய்கொலோ
தேகாபிமானமுடையார்க்குமில்லார்க்குமருள்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

முட்டுப்படக்கண்டுமுதவிசெய்யாதவர்கண்முன்சென்றிரந்துநொந்தேன்
மூவிருமதங்கட்குமொருபொதுவனுநின்றமூடர்வசைமொழிபுனைந்தே
னெட்டுப்பொறிக்குளில்லாதபொருளின்றுறையுமியற்கையறியாரிலெய்தநே
னிகபரமளந்ததிருவடிமகிமையறியாதவீனரொடும்வாதமிட்டேன்
கட்டுப்படாதமனமொடுசென்றலைந்துவெகுகாலங்கழித்துவிட்டேன்
கருணைப்பெருங்கடற்றிவலையொன்றெய்தக்கடைக்கணித்தருளாய்கோலோ
செட்டுப்படித்தமுழுலோபர்க்கிரங்காதசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

இட்டப்படிக்கெண்ணிலாதபலசித்தாடியிகலோகம்வாழவைத்திட்
டிமையவர்தமுலகத்துமிந்தவுடலொடுபழகுமிச்சையெற்கேனளித்தாய்
கட்டப்படுத்தத்துவக்கும்வினையாவுங்கலங்கக்குழப்பிவிமலை
காலங்கழிந்திடப்பத்துசோதனைசெய்யாருகடவுளுனில்வேறுளாரோ
வட்டப்பெருமபுவனிபுகழுவிசையனுடனென்றுவாயவிண்மரைததமாற்றம
வம்புபடுமோவரசர்சவையுறியமுதறுபதமருவுசிசுபாலனென்னத்
திட்டத்தெரிந்தவருமுய்வரனலபொய்கொலோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சூதைப்பழிக்குமுலைமகளிர்தருகலவிச்சுகத்திடையமுழ்ந்தினுலுங்
துத்தமுமைதற்காளவுண்டிகளிலொன்றுமறுசுவையிடைமயங்கினாலும்

வாதைப்படுத்துமிடியாதியனைவநோயின்மாழ்கியுள்வருந்தினுலு
மனிதவடிவம்பெற்றுகாயுணவுமுண்பவர்சொல்வசைமொழியினுலினும்
கீதைக்குளன்றெருகரீடிக்குநின்வாய்கிளத்தும்பொருட்குறித்துக்
கிருதயுகதருமமேமகவிபுருடனுணவம்மெகடனினைப்பதுகீழ்மையோ
நீதைத்தவிர்த்துலகமுழுதுமவளரும்படிசெய்சீரங்கநாராயண
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கூறாகமொன்றுமுணராதசிலபுலவருங்கொக்கரித்தாடுகின்றார்
பேசாவதைத்துன்னுமவக்குணமுமனைவருமெகாம்பிகாம்லைசெலுத்துகின்றார்
பாறாளைரகமெகாடுபடைக்கின்றபூசனைப்பதிதர்சிலருங்களித்தார்
பாதகர்பெருஞ்சுமைசுமக்கமாட்டாமலகலப்பார்மகளழத்தொடுத்தார்
மீளார்சிவன்பரமனுதயபல்வானவருமிவைகொஞ்சமுங்கருதிலா
மெரளமுற்கிவம்முல்லவருதமிக்குமலமைதகிட்டுமெயன்செய்கின்றாய்
சீறாரணந்தமபறுத்துவருகாவிரிசசரங்கநாராயண
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பல்வம்புசெய்யுங்குரூரருக்கஞ்சியுட்பதைபதைக்கின்றதமியேன்
பாமாலைமீவட்டுங்செயதவிளையாடமெல்லப்பாழ்மனமறுந்தபடியே
வில்வம்புனைந்தசடைவித்தகனுநானமுகனுமயவிலைவாகள்பலருமறுவார்
மேதினியினமானிடருமறியுமபடிக்கருளவாமறுசமருளாதுமைமுறைமெயா
சொல்வந்தபடியெழுதுகின்றதல்லாமெபானமுமதாமறிமைவடமெமறமேறார்
சொற்றேறுகின்றமேலனுதவிற்பழமெதனைச்சூடாதிகழ்ந்திடாதே
செல்வண்டிரைந்துளகருஞ்சோலைவளமிலவுசீரங்கநாராயண
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

காவிப்புதுப்பூங்கிகர்த்தவிழிமடமகளிர்கபடமறியாமலவர்தங்
கனிவாய்ச்சொணிசமமனமுகமபியவரின்புறகைபபொருளெலாமிறைத்துப்
பூவிற்கொர்பாரமென்றறிஞர்பலரிகழும்வசைபூண்டுவளர்புல்லர்தம்மைப்
புலவர்பெருமான்மதனன்வாயுமகனவனிளவல்மேபால்வாரெனபபுகழ்ந்து
பாவிற்பகர்ந்திடவுநாணுதபுன்கவிஞர்பலரினுந்தாழ்ச்சியெய்தும்
படியென்னைநீவிடுதன்றியென்றன்றுபால்த்தவருள்விளக்காய்
சேவிக்குமன்பர்பழவினைமுழுதுமறவொருவுசீரங்கநாராயண
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

பையரவகங்கணச்சிவன்முதற்பலபுலவர்பரவுபாமாலையின்பொற்
பாததாமரைகளிற்பைந்துளவுடன்கமழ்தல்பலர்சொலக்கேட்டுமடியேன்
செய்யதமிழாற்சிறிதுதுதிசெயகின்றேனிதைச்சீயெனவிகழ்ந்திடாதே
சிசுபாலன்மொழியினுந்தாழ்வெனவெறுத்திடிற்செய்யுமாறென்றறிகிலேன்
வையமுழுதுண்டுமிழும்வாய்மொழிகிடைததுமிவண்மறுகமிடிவலையலாமோ
வினதேயன்மிடரில்வரநினைத்தாலுனைமறுப்பவர்களுள்ளார்களோ
தெய்யவெனிடைச்சொற்கொடும்புலவர்பாடாதசீரங்கநாராயண
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

சாதேவனன்றுதன்மனத்திறுற்கட்டிடத்தட்டழிந்திட்டதுண்டேற்
றமியேன்றியானத்திலமையாதிவாறுபலசஞ்சலந்தருகின்றதே
னீசேவர்தலைவனேயென்னுநிசநின்கையினிலாவுபடைதெரிவியாதோ
நெற்றிக்கணனைநிகர்பேறருளினல்லாதெனெஞ்சமகிழாதுகண்டாய்
வாதேவிளைத்துவடகலைதென்கலைச்சண்டைவம்பைப்பெருக்குவாரும்
வயிணவசிகாமணியெனக்குலவுநாளனைமடித்திடநினைத்திடாதே
சீதேவியும்புவியுமயல்கொளநடுக்குலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

கைம்மணித்துணையனையமுலையுடைப்பொதுவியர்கள்கடைவாயிறொறுநுழைந்து
கட்டுண்டுதட்டுண்டுதடுமாறுமாடலைக்கவிகொடுமிகத்துதித்தேன்
மும்மணிக்கோவைநான்மணிமாலையாதியமொழிந்திடநினைந்துமுள்ளேன்
முதிர்கலிப்பிணியிடைவருந்துறவிடுத்துளாய்முத்தமிழ்வெறுத்தனைகொலோ
மைம்மணிநிறக்குலவுதிருமேனியுடனென்னுள்வந்தசரதம்பொய்க்குமோ
மகவான்மயற்கமர்க்களநடுவுரைத்திட்டலத்துதந்திரம்வழங்காய்
செம்மணிக்குன்றனையசிகரிபலசூழமிளிர்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

தனதனுக்குறவானசிவன்முதலனேகரைத்தமிழ்கொடுதுதித்தணிந்து
சந்ததஞ்செஞ்சியுமென்மிடிபாயபேயுதவுசஞ்சலந்தவிராததா
லனகமங்களமுழுதுமுடையதிருமங்கைதனையகலத்தணிந்தநின்பே
ராதரங்கருதிப்பட்டாக்கரமிகச்செபித்தளவாவணங்குகின்றேன்
றினகரனைமறைவித்துமிந்திரன்புதல்வனுயிர்சிந்திடாதன்றளித்த
திருவருளிநாளுநின்சிந்தைக்கணுண்டெனத்தெளியுமாறுதவிசெய்வாய்
சினமிகப்பெறுதீயரொருபோதுமுணராதசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

இல்லையென்றேற்பவர்க்கெட்டுணையுநாணமைவில்லையென்றோதவுஞ்செ
யினக்கலிப்பிணியைவேருடனொழித்தெனக்கேற்றபேறீகிலாயேற்
றொல்லைநாளமரருக்கமுதம்பகிர்ந்திடச்சோதரையுருவெய்தன்முதலாந்
தூயபுகழத்தனையுமாயுமென்றெண்ணியுந்துயரமுற்றேற்கிரங்காய்
நெல்லைதிருவைகுந்தர்வில்லிபுத்தூர்குருகைநீர்மலையளந்தைபேரை
நிகழ்குறுங்குடிகச்சியிந்தளூர்கண்ணபுரநீடுசீகாழிதஞ்சை
தில்லைவடவேங்கடமுதற்றலந்தொறுமுலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

புனலுதிக்குஞ்சரணபங்கயமறந்தவர்கள்போன்மிகுதளர்ச்சியுற்றேன்
பூதபௌதிகமுழுதுநீயெனவுணர்ந்துஞ்சில்புல்லர்வசையிற்புலர்ந்தே
னனகதத்துவஞானமங்காள்வில்விசையற்கமர்க்களத்திற்சொன்னநீ
யுமலசற்குருவடிவமாகியடியேன்பெறவளித்திடிலிளப்பங்கொலோ

கனகவிரசிததாம்பிராதிகளினிகொண்டகவிஞருருச்சமைத்துக்
கருவிகளொரைந்துந்தொனித்திடப்பலமலர்கருந்துளவுடன்கலந்து
தினமருச்சிக்குமவர்சிந்தைவெளியிற்குலவுசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

என்றுமுனையன்றியொருதஞ்சமின்றேயெனவிரங்கித்துதித்துள்ளகா
ணியாதொருபெரும்பேறுமெய்தாதிவுலகரொடிறந்திடச்செய்யவினையே
லன்றுதமியேன்மனச்சாட்சியறியும்படியவிர்ந்தவிசமும்பொய்க்குமோ
வடியவருளொருவன்விளையாடிடக்காட்டிடினுமதுபோதுயருள்செய்குவாய்
பொன்றுதலினுங்கொடியதுயரனந்தஞ்செய்தபொல்லாததந்தைகண்முற்
புத்திரனுரைத்ததொருதூணினிடைவிரசைப்புறத்துவைகுந்தம்விட்டே
சென்றுதித்தனையோவிருந்துதித்தனையோசொல்சீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

மருவார்பலர்க்குமொருநமனேயெனக்குலவுமகிபாலர்குலமதிக்கும்
வரிவிற்சுமந்துபுயவலிமிகுகிரீடியொடுமொழிலம்புகழ்வென்றியுந்
தருவாணர்வாழ்வையொருசிறிதுமதியார்பரவுசடகோபமுனிஞானமுந்
தமியேனுறக்கொடுத்திடினலதுமகிழ்வுறேன்சத்தியமெனக்குனுள்ளம்
வருவார்களைப்போகவொட்டாததாமந்தவைகுந்தவீடுதவுமோ
மணலிற்றிருக்கோயில்செய்துபூசித்தகவிவாணனைவயக்குசெம்பொற்
றிருவாய்மலர்ந்தமுதுசெய்தகதிநல்குமோசீரங்கநாராயணா
திகழ்வலம்புரிதன்னொடுயர்கரங்களின்மன்னுதிகிரியம்படையண்ணலே.

முற்றிற்று.

ஆ செய்யுள் ௫0௧.

தெய்வமே துணை.

# ஒருபா வொருபஃது.

## ஆசிரியப்பாக்கள்.

மதியொடுமுகிறவழ் மாமதிளரங்கத்
தெதிபதிவிதிவழி யெம்பெருமானென்
றாயிரம்பகுவா யரவப்பாயன்
மீயிலங்கொருகரு மேகவண்ணற்
போற்றல்வாய்ந்தோர் பொற்றாட்பூந்துக
ணாற்றம்வாய்ந்த நந்தலைமேலோ
கொற்றவர்பல்லோர் கும்பிட்டிறைஞ்சு
முற்றமார்தரு மூதரண்மனைக்கட்
செங்கோல்வேலொடு திரள்புயத்தேந்தித்
தங்கோர்வேந்தின் றபனனின்மணிபல
குயிலியமுடியொடு கோதறுவாகை
பயிறலைமேலோ பார்முதற்படைத்துப்
பல்வகையுயிர்க்கும் பரிந்துடலமைத்து
நல்வினைதீவினை நாடியவற்றின்
சென்னிதோறெழுதுமெண் டிருக்கைத்
தொன்னிலைப்பனவன் சொலத்தகும்பாற்றே. (க)

பாற்றுணவருந்தும் படுகொலையினர்க்கோர்
கூற்றுறழ்வயவற் குவலயத்தமைத்தி
யன்றெனினின்பே ரருளுருக்கருதி
நின்றெழுத்தெட்டு நிகழ்த்துநர்தம்மு
ளொருவனுக்கிந்நா ளொள்வேற்றிண்கைத்
திருமங்கையாழ்வான் சிந்தைத்திறமை
வழங்குதியின்றேல் வண்புகழயோத்தித்
தழங்குபொற்கழற் றயரதன்மனைக்கு
மாயர்பாடி யமரசோதைக்குஞ்
சேயராமாறோர் சீருருக்கோடி
நின்மகன்மகளா நெறிமறந்தனக்கே
யின்மனையான வெழுகடற்றானைப்
பெண்ணாநின் னுரிமைப் பெற்றநிரையு
மண்ணுபஃறுயரு மளவிடற்பால
வல்லவல்ல வறியுநின்னுளமும்
வல்லவர்பல்லோர் மனத்திடையவற்றைக்
கருதாராகிக் காலங்கழித்து
மொருதானாகி யுலகொருங்கிகழ
விண்ணணெடுநா ளெண்ணியிசைத்திட்

டின்னல்வாரி யிடைகுளித்துள்ளேன்
மூன்றுகண்ணுடை மும்மதக்கைம்மா
வான்றனிபுரப்பான் வழிபாட்டின்பொருட்
டலைகடல்குடித்தோ னங்கைக்குண்டிகை
நிலைபெயர்த்தோச்சு நெட்டாற்றிடையே
நான்முகற்பயந்த நளினமாதிய
மேன்மலர்நீல வெற்பெனக்கிடந்து
சிற்றெறும்பகட்டுச் சிறுநுண்புழுவுஞ்
செற்றெறும்பகட்டுச் சிலபேரியாக்கை
காற்கொடுபறக்குங் ககமும்பிறவுஞ்
சூற்கொடுபெருகத் தொடர்ந்துணவளக்குந்
தொழில்கொடுபாம்பிற் றுயிலும்
விழிமலர்குவியா விண்டுநாயகனே. (௨)

நாயிற்கடையே யாகியநார்புன்
வாயிற்சுவைபடு வாலிதழ்மடவார்
கொங்கைத்துணைக்குங் கொடுமயல்விளைத்துப்
பங்கப்படுமென் பாடலும்வேட்டனை
யாதலினின்னை யருட்பராசரன்றரு
வேதவியாதன் விறற்சலந்தரன்மனை
போகமார்ந்த புருடோத்தமனென
நாகவாணரு நன்கறிதரச்சொல
றகுந்தகுமென்னச் சஞ்சலமின்றி
மிகுந்தவப்பயனுற விரைந்தருள்கென்னப்
போற்றுகின்றேன் பொன்னிப்பெயர்ப்பே
ராற்றுட்கிடக்கு மனந்தனிற்றுயிலு
நாராயணனே நரேந்திரர்போற்றுஞ்
சீரார்தொண்டருட் சேரவைத்தாண்டு
மறப்பருஞானம் வருத்திப்
பிறப்புடனிறப்பறப் பேணிக்கொள்ளே. (௩)

கொள்ளைநாணின் குறித்துணைக்கொண்டு
வெள்ளைவாணியும் வியப்புறத்துதித்து
மெய்யடியவர்களை யன்றிவீண்விகற்பப்
பொய்யடியவரையும் பொதுப்படவணங்கி
நிற்குமாதவர்க்கு மெய்தருநிகழ்ச்சி
யெற்குளன்றியங்க வியக்கினையதனாற்
காருடற்சமணர் கற்பெருங்காணத்
தாருயிரிழப்ப வரைத்தோனன்னார்
பேறும்வேட்டுப் பெரிதிரக்கின்றேன்

சீறுநீர்க்கலிப்பேய் செருமிகப்பெருகிய
தஃதறத்தகுமா றுற்றுயாகி
லெஃதியற் றுதியென் றெண்ணலுமவமே
பல்குவட்டினமும் பரவையும்பாரும்
புல்கொடுந்தலைக்கோப் புயங்கவணையின்
மென்கொதுகிமைக்கும் வியனுமோர்ந்து
பொன்கவின் றருசீர் புலராக்கோயிற்
றிருவரங்கத்தமர் செல்வ
வொருவரங்கடிதெற் குதவுதியுவந்தே. (௪)

உவமையிலொருவ னோரஞ்சாரா
தெவனுளவுயிர்க்கு மினிதுணவளிப்போன்
பன்மதத்தினர்க்கு மவரவர்பற்றே
நன்மையாக நடம்பயில்கள்வ
னாணெனப்பெண்ணென வலியெனவொருவர்
பேணுதற்கரிய பெருந்தகைப்பெருமா
னெத்திறத்தினரு மேங்குறவுறுக்கு
மைத்திறப்பிறப்பின் மருளாவல்லவ
னெண்ணுநர் தங்குற் றேவல்செய்ய
நண்ணுநாயக னவையறுகடவுள்
பொறிவழியுழலும் புல்லரோரா
வறிதுயிலமரு மரங்கக்கோயிற்
போற்றும்வாழ்வுறப் பொறித்துளவிதிகை
வேற்றுருச்சமையா விதிவிதித்துளதோ
வின்றோவறியே னென்றுமன்றாற்
குன்றோடுறழ்பொற் குயங்கொடுபொருது
நாவகத்தளவற நடிக்கும்
பாவலிப்பாவாய் பகர்ந்தருள்பரிந்தே. (௫)

பரிமுகம்பரித்துப் பைந்தமிழ்நாட்டுள்
விரிகடற்றுணை மேதினிபுரப்ப
வருகலையொன்றை வகுத்துநூற்று
ளொருசிறுபங்கெற் குதவுதியாயின்
மேதகுபழமறை விதிபிறழாமன்
மாதவர்வேதியர் மனமறுகாமற்
கொற்றவர்தங்கைக் கோல்கோடாமல்
விற்றகங்களிப்பார் வேட்கைமிகாம
லுழுபடைக்கிழவ ருலோபமுறாமல்
விழுமியவாற்றன் மிகைபடவிளக்கி
நல்லாரின்புற ஞானமில்லாப்

பொல்லார்துன்புறப் புரிந்துபூரித்துப்
பொறியோரைந்தாற் புசிக்கும்போகங்
குறியாமுயலுங் கொள்கைமுற்றிகழ்ந்திட்
டரமார்கண்ணிய ராசையுங்கைக்கும்
பரமானந்த வாரியிற்படிந்து
வெட்கமோரணுத்துணை மேவாவிந்தன்
மட்கலத்துடனுறும் வயினடையேனே
தெண்ணீர்க்காவிரித் தென்னரங்கத்தில்
வண்ணீர்ப்புலவர் வாழ்த்தொலிவிளைஅய்த்
தெள்ளியபாந்தளிற் றினமும்
பள்ளிகொண்டருளும் பச்சையாயவனே. (சு)

மாயாவாழ்க்கை வானவரெய்தத்
தீயார்பலருஞ் செருப்புரிந்தழியச்
சட்டுவம்பரித்துச் சரியணிதடங்கை
மட்டுறுகூந்தன் மடமகளுருவாய்க்
காற்படமுழங்குங் கவின்றிரைபலதோய்
பாற்பெருங்கடலின் பெருங்கரைநின்ற
தாதியவாட லனந்தந்தறிந்த
வோதிமிக்கிரப்ப துணர்கிலேபோலும்
புல்லர்தாமும் பொருந்துபொய்ப்பொருட்பே
றுல்லருறு முதவிலையந்தோ
வதனுனின்மனை யாகுமம்புவித்தாய்க்
கிதமேநாடு மியானிலைக்கின்றே
னென்னிடைநின்னரு ளெய்தியெய்திப்
பன்னியமாற்றம் பலவுளவவற்று
ளொன்றுமப்பயனீண் டுதவாதாயின்
முன்றுதித்தடைந்தார் முத்திமெய்ப்படுமோ
விருநாப்பகுவா யீரைஞ்ஞூற்றோர்
பெருநாகத்திற் பிஞ்ஞகன்முதலோர்
போற்றத்துகடீர் பொன்னரங்கத்தி
லாற்றல்சானு மம்புயமலர்க்கண்
வளர்சினைக்கார்புரை மாய
துளவொடுதமியேன் சொற்றுளைதந்தருளே. (எ)

அருண்மலிசத்துவத் தந்தணர்பல்லோர்
தெருள்வடகலையொடு தென்கலைமொழியாற்
போற்றியபலபல புகழ்க்கடல்கிடப்ப
நாற்றிசையோரு நகத்தகுநவையுடைச்
சிறியேன்புன்சொற் றிரள்விழைதிருவருள்

குறியாமென்னக் கொண்டுவக்கில்லேன்
மென்றகைக்கிள்ளை வியன்பரியார்க்குந்
தென்றலஞ்சிறுதேர்ச் செல்வன்கணைக்கு
மாயிரமிதழ்சூ ழம்புயப்பொகுட்டின்
மேபிகபரச்சீர் விதிப்போன்விதிக்குந்
தீவிழிக்கூற்றின் றிரடோள்பரிக்கு
மூவிலைக்கொடுவேன் முரண்மலிபோர்க்கு
மஞ்சியஞ்சி யயர்ந்துயிர்த்ததனொடு
செஞ்சிகிக்கலபஞ் சிரம்புனைந்தொருக்கான்
முல்லைநறுங்கான் முதுபதிப்பொதுவர்
வல்லைநேர்முலை மகளிர்பாலாடல்
பயிலுறுநினதோர் படிவத்தாற்ற
லுயிர்வயிற்சிறிதீண் டொன்றலும் வேட்டே
னின்செயலுணர்த்துதி நிதமும்
பொன்செய்தென்னரங்கம் புரந்தபுங்கவனே. (அ)

புங்கவர்தம்மூர்ப் புலோமிசைபுனைபூண்
மங்கலம்புரப்ப வாண்முதற்றிகழும்
படைபுனைதிண்கைப் பைங்காரென்னக்
கிடைகொளுநெடுமால் கிளர்பதிபலவுள
வவற்றாடொன்றே யரங்கமுமென்னுந்
தவற்றுமாற்றஞ் சாற்றுபுன்புலவர்
கொங்கேய்ந்தலர்தரு கோமலர்விழையுஞ்
செங்கேழொண்கதிர்த் தினகரன்றன்னைத்
தாதைபாற்பகைத்துத் தவநனிமுயன்று
கோதையர்சுகமே குறிக்கொள்விண்ணோருந்
தவுதலினலம்பெறச் சமர்செயலன்றிப்
பவுரணைத்திங்கட் பருமத்தாற்பாற்
கடலுங்கடைந்த கைத்திரளுய்ப்பத்
திடல்படுபொன்னஞ் சிலம்பின்மீத்திகழ்
துருவன்றன்னை தொடுபேராழி
மருவக்குயிலிய மணித்திரள்போலுங்
கோட்களிலொன்றெனக் கூறி
நாட்கழிப்பார்புரை நவையினர்தாமே. (௯)

இனனிடைமதியிடை யேனையகோளிடை
பனகப்பாயற் பாலிடையாலிடை
சிவன்முதற்றேவர் சிந்தைத்திரளிடை
நவரசக்கடலுறழ் நான்மறைநூலிடை
கடலறப்பருகிய கலசமாமுனி

தடவரைக்குவட்டுத் தலைநின்றிழியுஞ்
செப்பாற்றலைபொரு தென்கரைப்பகுப்பின்
மெய்ப்பாற்போன்றே மிளிர்தருவெண்கட்
குடத்தான்மாந்திக் கூத்துமாடுந்
திடத்தாண்மள்ளர் சிறுமுலைக்கடைசியர்
புன்மொழிவினூஉய்ப் புளகமெய்து
நென்மலிமருத நெடும்பணைக்குருகையி
லொளிரிதழ்ச்செம்பூ வுதிர்த்திட்டுறங்காப்
புளிமாப்பொத்திற் புக்கமர்புலவோன்
முதலியபதின்மர் முத்தமிழ்ப்பெருக்கிடை
நிதநிதங்கிடந்து நிலவுதலன்றித்
தன்பெயர்த்தொனியே தாரகத்துயர்ந்த
நன்பெருமந்திர மெனநிலைநாட்டப்
பெரிதுமுயன்ற பிழைபடுதகுவன்
கிரிபுரையாகங் கீன்றுசெந்நீர்
பருகல்வேட்டுப் பகைத்தவன்மோது
மொருபெருந்தூணி லுற்றதொப்ப
வழுக்காற்றுற்சமைந் தலமருமென்ன
திழுக்காருள்ளத் தினும்வருமிறைவ
னத்திசெய்காவிரி யாற்றின்
மத்தியிற்கிடப்போ னெனமதித்தனமே. (ம)

முற்றிற்று.

ஆ செய்யுள் ருாயக.

தெய்வமே துணை.

## இரட்டைமணிமாலை.

வெண்பா.

பரிதியொடு சங்கணிகைப் பச்சைமா லென்றும்
விரிதிரைநீர்ப் பொன்னியிடை மேயா—னரிதி
லரிதாய பேறுதவி யாண்டருளற் கான்ற
கரிதானே கானிற் கரி. (க)

கட்டளைக் கலித்துறை.

கரியவன்றென்னரங் கத்தெம்பிரான்முற்றுங் காத்தருளும்
பெரியவன்பாருல குய்திறநாடிப் பிறக்கவஞ்சான்
சரியணிகைத்துங்க மோகினிக்கோலஞ் சமைந்திலனேல்
வரியுளித்தாரண்டர் தங்குலமியாவு மடிந்திடுமே. (உ)

### வெண்பா.

மடியாத வானவர்க்கு மாமறலி போலுங்
கொடியார் குலமழிக்குங் கூற்றே—தொடியார்கைம்
மானூர் நடிக்குமணி மாடநிரை நீடரங்கத்
தானூ வமுதா மவன். (௩)

### கட்டளைக் கலித்துறை.

அவனவளஃதெனு மூவகைச்சுட்டினு மண்ணியண்ணு
னெவனவனெங்குள னென்றெண்ணியேங்குமென் னேழைநெஞ்சே
சிவனொடுநான்முக னிந்திரன்போற்றத் திருவரங்கத்
திவளவுநாளென் றளவாதுறங்கு மிறையவனே. (௪)

### வெண்பா.

இறையளவு மெய்யுணர்ச்சி யில்லா வெனையுங்
குறைதவிர்த்தாட் கொள்ளவல்லாய் கொல்லோ—மறையவனைத்
தந்த திருவுந்தித் தாமரைப்பூந் தாடாளா
வுந்தரங்கத் தெந்தா யுரை. (௫)

### கட்டளைக் கலித்துறை.

உரையுமுணர்வுங் கடந்துநின்றானை யொலித்தெழும்பாற்
றிரைகடனூறச் சீரங்கத்தேதுயில் சீதரனைத்
தரையுங்ககனமு மந்நாளளந்தபொற் றாளினனை
வரைதருபூம்படம் போலுங்கண்டீரென் மனவெளியே. (௬)

### வெண்பா.

மனக்குரங்கொன் றுலடியேன் வாடுமின்ன றீர்த்தா
யினக்குரங்கன் றூண்டதுமெய் யேயாங்—கனக்குந்
தலையா யிரப்பாம்பிற் றண்ணரங்கக் கோயி
னிலையாத் துயின்றபிரா னே. (௭)

### கட்டளைக் கலித்துறை.

பிரானனையன்றிமற் றின்றெனநம்பும் பெருமைபெற்றுந்
தாரா தராநாடுகில் லாரிடமேற்கத் தகுங்கொல்சொல்லாய்
புராரிமுன்போற்றிய சீரங்கத்தின் புயங்கம்விடுத்
திராகவனாகி யிராவணன்சென்னி யிறுத்தவனே. (அ)

### வெண்பா.

இறுகுமுலைப் பாவைநல்லா ரிச்சைக் கடலின்
மறுகுமென்னை வாழ்விக்க வாராய்—சிறுகும்
விழியானை காத்த வியனரங்கத் தெந்தா
யிழிவா லழிவுறச்செய் யேல். (௯)

### கட்டளைக் கலித்துறை.

செய்யவள் வாழு மருமத்தினானைத் திருவரங்கத்
தையனைச்சங்குதண் டாழிவில்வாள்கை யணிந்தவனைப்
பையரவிற்றுயில் கூர்வானைநாடிப் பரவுகின்றேன்
வெய்யவன்கூற்றிற் கொடிதாயகோர மிடியறவே. (௰)

### வெண்பா.

மிடியறுக்குந் தீவினைநோய் வேதனையுந் தீர்க்கு
மடியவர்தங் கூட்டத்துள் ளாக்கும்—படியளக்குங்
கையான் றிருவரங்கக் காவலவன் கான்மலரி
னெய்யார் துழாயணியி னே. (௰௧)

### கட்டளைக் கலித்துறை.

அணியரங்கத்திற் றுயின்றாயயனை யளித்துவந்தாய்
பணியணிவான்கைத் தலைமண் டையோடு பறித்தெறிந்தாய்
பிணியுழந்தாரிற் றவிப்பவென்பாற்பல பீடைசெய்யுந்
தணிவில்பொல்லாமிடிப் பேயோட்டிடாததென் சாற்றுதியே. (௰௨)

### வெண்பா.

சாற்றா லுயருந் தனியரங்கத் தம்மானே
கூற்றா லயரார் குலதெய்வ—மேற்றானே
சான்றாமிவ் வுண்மை தனையுரைத்தாற் றானவர்க்குக்
கான்றாருஞ் சோற்றையொக்குங் காண். (௰௩)

### கட்டளைக் கலித்துறை.

காணாதுடனுற்று வேண்டியபேறு களித்தருளிப்
பேணாமெய்வீடு தரினும்புகேன்வந்து பேசியொப்பின்
மாணாரும்வாழ்க்கைதந் தப்பாணின்றாளுண் மறையச்செய்வாய்
நீணாகப்பள்ளி யரங்காவெல்லோரினு நீண்டவனே. (௰௪)

### வெண்பா.

நீண்டா னெவற்றினுள்ளு நின்றா னிசத்தினரை
யாண்டான்பொற் கோயி லரங்கேசன்—காண்டா
வனமெரித்தோன் றேருகைத்த மாட்சிமையை யன்பாற்
றினநினைப்பார்க் குண்டாஞ் செயம். (௰௫)

### கட்டளைக் கலித்துறை.

செயங்கொண்டசக்கரஞ் சங்குடனேந்துந் திருவரங்கன்
வயங்கொண்டபுள்ளர சூர்தம்பிரான்கனி வாயினிடை
நயங்கொண்டபுன்சிரிப் பொன்றெனக்காவந்த நாளதைச்சொ
லியங்கொண்டநெஞ்சக மேங்குமித்தீங்கறற் கென்செய்வதே. (௰௬)

### வெண்பா.

என்செயலே மேலென் றிருமாக்கு மீனனல்லே
னின்செயலே நாடு நிலையுள்ளேன்—பொன்செய்
திருவரங்கக் கோயில்வளர் சீதரனே நீயின்
றொருவரங்கக் கோதை யுற. (ய எ)

### கட்டளைக் கலித்துறை.

உறங்குநன்போற்பெரும் பாசாங்குகாட்டி யுலகினுண்மைத்
திறங்குன்றக்கண்டனை யெந்நாளெழுந்தினிச் சீர்செய்குவாய்
கறங்குஞ்செஞ்சக்கரக் கையரங்காநின் கடைக்கண்ணருள்
பிறங்குதல்வேட்டுத் தவஞ்செய்கின்றோர்பல பேருளரே. (ய அ)

### வெண்பா.

போற்றிடையே பெரும்பாந்த ளிற்கிடக்குஞ்
சீராற்றின் மேய திருவரங்கா—நேரானை
வென்றநின்மாண் பேன்றமட்டும் விள்ளுநான் வேண்டியபே
றென்றருள்வாய் கொல்லோ வியம்பு. (ய கூ)

### கட்டளைக் கலித்துறை.

இயம்பருங் கீர்த்தி பலதோய்ந்துளானரங் கேசனென
நயம்படப்போற்றுநர் தந்தாண்மலரி னறுந்துகளை
வயம்பெறச்சென்னியிற் சூடிநின்றுற்கொடு மாமறலி
பயம்பயந்தோடுஞ் சடகோபன்பெற்ற பரிசெய்துமே. (உ ய)

முற்றிற்று.

ஆ செய்யுள் ருாகூக.

தெய்வமே துணை.

## மும்மணிக்கோவை.

### ஆசிரியப்பா.

யானைக்கோவொன் றின்னுயிர்வேட்டுக்
கானைத்தொனியாற் கலைகலுமதறற்துச்
சுருதியிற்றின் றொல்பொருளமையக்
கருதியாண்ட கதைமுதற்சிலவே
மாறிமாறி வண்டமிழ்க்கவியாற்

கூறிக்கூறிக் குளிர்பொழிலரங்கத்
தம்மான் றிருவரு ளாசித்துள்ளேன்
பொய்ம்மால்விளைக்கும் புணர்முலைமகளி
ராசைப்பயனு மகப்பொருள்விரிவு
மோசைக்கடல்சூ ழுலகிலுள்ள
புறப்பொருட்பெருக்கும் பொலிவுறப்புகழ்ந்து
சிறப்பவென் று திண்டிறல்வேந்தர்
முடித்தலைகுலுங்க மோகித்தலையேன்
படித்தகம்வளர்க்கும் பாவலர்மகிழார்
தாய்முலைப்பாலுந் தணந்தருந்தவத்தாற்
பேய்முலைப்பால்கொளப் பிரானடிசேர்ந்த
காரிமாறன் கருணைச்
சீரியோர்கள் செவிமடுப்பாரே. (க)

வெண்பா.

பாரளந்து வானளந்த பாதாம் புயத்தொருவன்
சீரங்கக் கோயிற் றிருநெடுமால்—வாரமென்மேல்
வைத்த தறிந்து மறலியூர்த் தூதர்மன
மெய்த்த தறிந்துகொண்டே னியான். (உ)

கட்டளைக் கலித்துறை.

யான்சொன்னபாடல் பலவாமவற்றிடை யாதுமத்திக்
கோன்சொன்னபேரொன்றை யொவ்வாததோநிரைக் கோல்வளைக்கை
மான்சொன்னசொற்கொண் டொருமாயமான்பின் மகிழ்ந்துசென்றாய்
வான்சொன்னகீர்த்தி யரங்காவென்மேற்றயை வைத்தருளே. (ங)

ஆசிரியப்பா.

வைத்தமுள் ளெயிற்று மாசுணக் கொடியோன்
பொய்த்த வஞ்சகப் பொறாமையிற் பிழைத்துக்
குந்திமக்கள் குவலயம் புரப்பத்
தந்திரம் பயின்ற தாமோ தரனைக்
காவிரி யாற்றிடை கவின்றரு கனகக்
கோவி லுப்பட் குறுகிக் கண்டு
போற்றிசைக் கின்ற புனிதர்க் கெல்லா
நாற்றிசை யோரு நவில்பெரும் புகழு
மான்ற சித்தியு மமரர்தம் வாழ்வைக்
கான்ற சோற்றிற் காண்டரு களிப்பும்
பிறப்பிறப் பின்றிய பேறு
மறப்பறு ஞானமும் வருமென மொழிவே. (ச)

வெண்பா.

துணிவேண்டும் பொன்வேண்டுஞ் சோறுநெய்பால் வேண்டும்
பணிவேண்டு மென்றுபுல்லர்ப் பாடேன்—றிணிவேண்டும்
வீரர்பலர் போற்றும் வியனரங்கத் தம்மானின்
சீரணங்கு பார்த்தருளச் செய். (௫)

கட்டளைக் கலித்துறை.

செய்யுந்தனமு மடவாருமக்களுஞ் சேரப்பெற்றோர்
வையுந்துறவறத் தூற்றேற்குமேனம் மயக்களித்தாய்
பையுந்துபாம்பணைத் தென்னரங்கத்திற் படுத்திருந்தே
யுய்யும்பல்கோடி யுயிர்க்கூணளிக்கு முரத்தண்ணலே. (௬)

ஆசிரியப்பா.

அண்ணலந்தகையோ ரனைவரும்வழுத்தும்
பண்ணவன்செங்கட் பசுங்கார்போல்வான்
வாழ்வனவாய மாளிகைப்பெருக்கு
ளேழ்வகைப்புவியு மேத்துசீர்த்தலைமை
வாய்ந்தபைம்பொன் மணிமதிளரங்கந்
தோய்ந்தமாண்சில சொலத்தகுபுலவி
ரும்மிடையானு மொருவனாகி
விம்மிதமெய்தி வீடும்பெறினே
யவன்புகழனைத்துமெய் யாகுஞ்
சிவன்பிரமாமுதற் றேவர்சான்றிதற்கே. (௭)

வெண்பா.

இதம்பகரு நல்லுணர்வு மில்லாத வீனர்
பதம்பணிந்தும் பொன்றேடு பண்போர்—மதம்பொலியு
மிந்நிலத்திந் நாளெனைநீ யேன்படைத்து விட்டாயோ
பொன்னியரங் கேசா புகல். (௮)

கட்டளைக் கலித்துறை.

புகலருமந்திர மட்டாக்கரமென் றும் போற்றுகில்லேன்
சகலரும்பேசிடு மெய்ப்புகழ்வேட்டுந் தவித்துளன்காண்
பகலவன்றன்னைப் படையான்மறைத்துமுன் பாண்டவர்தம்
மிகலறுத்தாளரங் கேசாசற்றுன்னெஞ் சிரங்கினன்றே. (௯)

ஆசிரியப்பா.

இரவினுங்கரியா னிரவியிற்செய்ய
வரனையோர்பாகத் தடக்கியவண்ண
னான்முகத்தொருசேய் நளினவுந்தி

மேன்மூளைத்தியாவும் விதிக்கக்கண்டோ
னெண்சீர்ச்செய்யா ளிலங்கெழிலுரத்தான்
றண்சீர்மலராற் சரந்தொடுதனையற்
பெற்றானென்னப் பேசலொன்றொழியக்
கற்றார் தம்மைக் கனவினும்விழையா
னென்றாழொல்கு மிகற்பேராழி
நன்றார்மதிய நாணுறுசங்க
மேண்பொலிகதைகூ ரேதியிருஅ
நாண்படுசார்ங்க நகுதோளினன்
காசைப்பூந்துணர் கடுத்தகாட்சி
யாசைப்பெருக்கி லகத்திடையளித்து
நெடுநாட்டாழ்த்து நிறைபுனற்பொன்னி
நடுவாழ்கோயி னலஞ்சொல விசைத்தா
னவன்மகவைக மகலாத்
தவளமாதித் தகையறிவாளே. (௰)

வெண்பா.

வாளுடைய திண்கை மறவீரர் வாழ்த்தும்வைவேல்
வேளுறழ்சீர் வேட்டேன் வெருளாதே—நாளுந்
திருக்கா விரிநடுவாஞ் சீரங்கந் தன்னி
லிருக்காதி யேத்தநின்றோனே. (௰௧)

கட்டளைக் கலித்துறை.

நின்றாய்மறைச்சென்னி மேனடித்தாயொரு நெட்டரவிற்
சென்றாய்மெய்யன்பர் மனந்தோறுந்தானவர் சீரழித்தா
யென்றாயிருவர்க் கிடையேயரங்கத் தினிற்கிடந்தா
யொன்றாய்கொலோவென் மனத்தேமெஞ்ஞான முதித்திடவே. (௰௨)

ஆசிரியப்பா.

உதிரம்பருகி யொண்டிறற்கனகன்
சதிரழித்தன்னோன் றனையற்காத்த
நாரசிங்க னுவெதிர்நனுகிற்
கோரமஞ்சிக் குலைகுலைந்தயர்வே
னுதலிற்றென்னு ளாயர்பாடி
மாதராரு மகிழ்வுறுகோலங்
காட்டியாண்டருளிக் காலகேயரை
வீட்டினற்குரைத்த மெய்ந்நிலைதெரித்தி
யன்றெனிற்பழிதீ ரயோத்திமூதூர்
சென்றெலாநலமுஞ் சீர்பெறுநிமித்த

மிருபதுவாகுடை யிகலவற்செற்ற
சொருபங்காட்டித் தோமறப்புரத்தி
யாசறுசீர்த்திரு வரங்க
வாசநீங்கா மரகதமலையே. (கரு)

வெண்பா.

மரகதவெற் பாமரங்க மால்வயினை தேயக்
குரகதத்தி லேறுமணிக் கொண்டல்—கரகக்
கரத்தானை முன்பயந்த காகுத்தன் பொற்றாள்
சிரத்தாரக் கொள்ளல்பெருஞ் சீர். (௰௪)

கட்டளைக் கலித்துறை.

சீரங்கக்கோயிற் றிருநெடுமால்கழைச் செஞ்சிலைக்கை
மாரன்றனைப்பயந் தாளகலாத மருமத்தினன்
வாரம்பெருத்தவன் போற்சிலமாற்றம் வழங்கியப்பா
லோரஞ்செய்வானையொத் தானென்செய்வேன்கலை யொண்டொடியே.

ஆசிரியப்பா.

ஒண்டொடித்தொனிக்கை யுமையவள்கொழுநன்
மண்டையோட்டிரக்கும் வறுமையும்வளைபற்
செடித்தலைப்பல்பேய்த் திரளொடுமத்தி
னடிக்கச்செயுநடு நாடிக்குணமு
மொருவிவெள்ளி யொள்வரைத்தலைபோய்
மருவிவாழ வைத்தனையநா
னிந்நாவென்பா வியற்கவிபலநின்
செந்நாவாரச் செப்பெனவிசைத்தே
கொண்டுமெனுள்ளங் குலைவுறவுறக்கி
மண்டுதீக்கலி வாதனைநீக்கிலை
யனந்தையூரி லல்லிக்கேணியிற்
றனந்தருகுதுமெனச் சாற்றியுமெழுத்துத்
தந்தும்பிழைத்தனை சரதநன்கறியு
மிந்துநாமத் தெழிற்பெரும்பொய்கை
மருவுதென்னரங்கமா சுணத்திற்
கருமுகிலென்னக் கவின்றருவானே. (௰௬)

வெண்பா.

வானவர்தாங் கன்ம மகத்தூ டிடுமவியா
மூனருந்தக் கண்டு முதவினை—யானதனை
யெத்தா ரணிவரினு மெள்ளளவு முள்ளேன்காண்
சத்தாதி யாமரங்கே சா. (௰௭)

### கட்டளைக் கலித்துறை.

ஏசாரும்பொய்ப்பொருள் வாஞ்சையுற்றேனை யிருங்கயமை
மாசார்குபோனு மேமாற்றிப்பாடல்கள் வாங்கிக்கொண்டான்
றேசார்செஞ்சக்கர மேந்தியநீயென்ன செய்குதியோ
கூசா தரங்கத்தி லேநெடுநாட்டுயில் கொண்டவனே. (௰௮)

### ஆசிரியப்பா.

கொண்டலேழுங் குத்திரத்திகலாம்
வெண்டகைவயிர வேலுடைவிறல்வேந்
தானையாலிகன் றறல்பொழிந்திடுநாண்
மாணாறெழுமொரு மலைக்குடைபிடித்துங்
கோகுலம்புரந்தாய் கும்பிட்டேத்துமெ
னாகுலந்தீர்த்தற் கறியாய்போனு
மிந்நாணந்தமர்க் கிகலவராய்த்தம்
வெந்நாவின்புற வள்ளூரமிசைவார்
தம்பானின்னருள் சார்ந்ததென்ன
வம்பாமதிக்கு மாறுசெய்கின்று
யங்ஙனமாயி னருமறைநான்கு
மெங்ஙனமெய்யா மிவைபிழைப்படினும்
பந்தமுமுத்திப் பதமுமெய்ப்படுமோ
செந்தமிழ்வேட்குஞ் செயலொன்றுன்பாற்
குன்றுதோங்குங் குறிப்பறிந்துள்ளே
னன்றுமாற்ற நவிலற்பொருட்டுன்
மாமலர்புரையும் வாய்திறந்தருள்வாய்
பாமலர்ப்புலவர் பல்லோரேத்தக்
காவிரியாற்றிடை கவினுங்
கோவிலினுளுங் குலவுகொற்றவனே. (௰௯)

### வெண்பா.

கொற்றவருந் தேவர் குழுவுமிகக் கொண்டாடப்
பற்றடற்பே ராழியுடைப் பண்ணவா—முற்றடுத்தாண்
டித்தனைகாட் சென்று னெழிலரங்கம் போற்றவிட்டாய்
பத்தருடன் சேரவைத்துப் பார். (௨௰)

### கட்டளைக் கலித்துறை.

பார்கொண்டநாவலர் பல்லோருளார்கள் பழுதில்பொன்னி
நீர்கொண்டரங்கர்த் திருவரங்கேசனை நெஞ்சிலுன்னிச்
சீர்கொண்டபாடல் பலபாடியிந்திரன் சிட்டிசெய்வோன்
கார்கொண்டகண்டத் தினன்முதலோர்பதங் காதலித்தே. (௨௧)

### ஆசிரியப்பா.

காதன்மங்கையர் கருத்துவப்பதுவே
மாதவப்பயனு மெனமுயன்மடமைப்
புல்லர்தம்மிசை புனிதத்தமிழா
னல்லபாட னவில்பலநாவலர்
சீயமுகப்புச் சிவிகையுங்கவிகையு
மேயபல்பணியோ டியாவுங்கருதி
யொல்காவண்ண முன்றிருப்பெயரே
பல்காலோதிப் பழிச்சுகின்றே
னிந்திரன்முதலோ ரெண்ணத்தக்க
மந்திரசித்தி வழங்கியாண்டருள்வாய்
தோலாவளமைத் தொல்சோணாட்டுட்
சேலார்தண்புனற் றிருக்காவிரியிடை
பண்மறையாதிநூல் பரவுங்
கண்மலர்குவியாக் கனதுயிலோனே. (உஉ)

### வெண்பா.

துயின்மறந்து சோர்வுமற்றுத் துய்ப்பனவுங் கைத்துப்
பயிலுமிசைத் தென்னரங்கம் பாடி—மயிலிறகுச்
சென்னி புடையானே தேசிகனென் றெப்பொழுது
முன்னிடுவார்க் குண்டா முரம். (உங)

### கட்டளைக் கலித்துறை.

உரத்தேதிருமக ளோவாதிருந்துமென் னுள்ளத்திச்சை
தரத்தாமதஞ்செய லாகுங்கொலோபெருஞ் சக்கரத்திண்
கரத்தாதிநாயக னேசையமீதொர் கலசநல்கும்
வரத்தாற்றிடைகிடந் தாய்தமிழ்வேட் டென்னை வாழ்வித்திடே. (உச)

### ஆசிரியப்பா.

வித்தாயதனுண் மிளிர்சிறுமுளையாய்ப்
பைத்தார்த்தசைதரு பாதபமாகித்
தளிரிலைமலர்காய் பிறவுந்தானு
மிளிர்தலினீண்ட விழுப்பொருளொன்றுள
தெழிலிச்சூல்புரை யெழின்மணிவண்ணத்
தழிவிலாற்ற லரங்கக்கோயிலி
லதனையோர்ந்தோர்ந் தட்டாக்காஞ்சொற்
றுதகவான்கலை யுத்தமியருளுஞ்
செந்திருமடந்தை சீர்விழிநோக்கும்
வந்தியைதரப்பெறு மாக்கள்பலரலர்

தங்குலகுருவுந் தன்பெயர்செப்புங்
கங்குனீதிக் கனகனைக்கடிவா
னவன்மனைவயிற்றன் றவதரித்தானுந்
தவலருமறைநூற் றமிழ்செயற்பொருட்டான்
மூன்றுமுகத்தின் முகுளக்குவளை
வான்றூர்வேந்தின் மனைவயிற்றெய்தி
மற்றோருகத்தின் மாநிலத்துதித்துக்
கற்றோர்விழியே கடுக்குமாறனு
மனையசிற்சிலர்களே யாவா
ரினையவாறுணர்வா ரெமதுறவினரே. (உ௫)

வெண்பா.

துறவினரு மில்லறத்திற் றோய்வாரு மென்னை
யுறவினனென் றுன்னவைத்தா யோகோ—மறவியற்ற
ஞானமொடு சித்திகளு நல்கா திருக்கைநன்றோ
வீனமில்சீர்ப் பொன்னரங்க னே. (உ௬)

கட்டளைக் கலித்துறை.

அரங்கனன்றிப்பொரு ளொன்றுமின்றென்ன வறிந்தடங்காக்
குரங்கறிவாண்மை யுறுநாளிலெண்பொறிக் கூட்டுண்முதல்
வரங்களெல்லாந்தரு மென்போர்தம்போரினும் வாயலுத்துச்
சிரங்களிற்றொண்டர்தந் தாட்டுகளின்றித் திரிநனமே. (உ௭)

ஆசிரியப்பா.

திரிமூர்த்திகளுட் சீரியன்றிண்டோ
ளரியேயென்னு மறிவுறுநமர்கா
ளறிதலைச்சமணப் பதிதர்பல்லோ
ருறிவிடுத்திறங்கி யுலகமுற்றுய்வான்
கற்காணத்திற் காரொளாத்தரைபடச்
சொற்காரென்னச் சொரிதருகுரவன்
விதிவழிபழகும் வீரமில்லே
னதிர்தொனிக்கடலு மசலத்திரளுங்
காலும்வெளியுங் கனல்புனன்மண்ணும்
போலும்பிறவும் புருடோத்தமனே
யென்னச்சொல்லி யெழிற்புளியிடைவாழ்
சின்னக்குழந்தைத் திருவுருப்பெருமான்
சொன்மறைகருதித் தூணினுந்துரும்பினு
மொன்மகனொருவ னுளனெனப்புகல்வா
ரெம்மதத்தினரே, யென்னினுமவர்சொற்
சம்மதமென்னத் தலையசைக்கின்றேன்

கோறலும்புலையுங் கொடியவென் றிகழ்வே
றுறணையரங்கத் தாவன்மிக்குடையே
னென்னைப்பிறனென விகழா
தன்னைத்திரள்போன் றாதரிப்பீரே. உஅ

## வெண்பா.

ஆதரிக்கக் குன்றெடுத்த வங்கைமல ராயனுக்கு
மூதரங்கக் கோயின் முகுந்தனுக்கும்—பேத
நினைத்துந் தளரேலென் னெஞ்சே நிகழ்வ
தனைத்துமவன் றானென் றறி (உ௯)

## கட்டளைக் கலித்துறை.

அறிவோ மெனத்துணி வார்தம் முணர்வி லமைவரியான்
குறிபோலுங்கோலமுங் கொள்வான்றென்சீரங்கக் கோயிலம்மான்
பொறிநாணச்செஞ்சிறைப் புண்ணுணத்தான்றனி போய்ப்புரந்தா
னெறிநீர்த்தடாகத்தின் மூலமென்றோலிட்ட யானையையே. (௩௰)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௩௰க.

தெய்வமே துணை.

# நான்மணிமாலை.

## வெண்பா.

நிலமுழுது முண்டுமிழ்ந்த நீலமுகில் போலவா
னுலகில்புகழ்த் தென்னரங்கத் தண்ணல்—கலந்த
மதனைவிதி யைப்பயந்த வள்ளலவன் றன்னைச்
சதமகன்பிற் றோன்றலென்கின் றார். (க)

## கட்டளைக் கலித்துறை.

தாராகணம்புரை யுந்தலைமாலைத் தனிச்சிவனுஞ்
சீராரும்வேதனும் வாழ்வதற்காந்தலந் தேகத்திட்டா
யோரார்பதத்தொரு சாரடியேற்கிட மீந்தருள்வாய்
நாராயணாவரங் காகரும்பாம்பி னடிப்பவனே. (உ)

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நடிப்பவனூழி முதற்சொலைம்படைக ணளிர்பொழிற்றிருவரங்கத்தே
பிடிப்பவனனந்த மூர்த்திகள்வடிவாப் பிறப்பவன்பிறிதிணையில்லா [ங்கே
னொடிப்பவனிகலோன் விடுங்கரித்துணைக்கோ டுண்பவனுலகெலாமொரு
முடிப்பவன்றுளவும் பீலியுமவனே முத்திவித்தென்கைமெய்ம்மொழியே.

ஆசிரியப்பா.

மொழிமுழுதிறந்த மோனம்வேட்டு
விழிகளைமூடி வெறுவெளிநாடித்
தவிப்பீரரங்கந் தன்னிடைதடங்கை
குவிப்பார்க்கிரங்குங் கொண்டலொன்றுளது
பச்சைநிறத்தது பதுமக்காட்டது
கொச்சையாயர் குலக்கோவாய
ததனைநாடி யதன்பெயரனந்தத்
திதமுறுமோரெட் டெழுத்துளதியம்பீர்
சித்திகண்முழுதுஞ் சேருமப்பான்
முத்திவீடு முறைப்படிவருமே. (ச)

வெண்பா.

வருமமனத் தானவர்தம் வாழ்வொழிக்க வல்லான்
கருமமத வாதரையுங் காப்போ—னருமறைக்கோன்
றன்னைப் பயந்தோன் றனியரங்க மாளிகையி
லென்னைத் தடுத்தா ளிறை. (ரு)

கட்டளைக் கலித்துறை.

இறைபளவேனு மிரக்கமில்லாரிட மேகியென்னுட்
குறைகளெல்லாம்பகர் கோதொழித்தென்றனைக் கொண்டருள்வாய்
பிறையணிவானுக் குடற்பாதியன்று பிரித்தளித்த
நிறையருட்சீரரங் காநினைவாருணர் நேயத்தனே. (கா)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நேயமோராணுத் துணையுமிலாரென நெடிதுயிர்த்தயர்தீயேன்
மாயவாரிதிக் கலக்கமற்றுன்னருள் வளம்படப்பெறுவேனோ
வாயபாலக னுரைப்படிதூணினின் றமராதந்துயர்தீரச்
சீயமாயட லாடகனுயிர்கவர் திருவரங்கத்தானே. (எ)

ஆசிரியப்பா.

தானையாமெனச் சலதியேழுடுத்த
மானையாகுல மலிந்தழவிடுத்தாய்
தேனவிழ்ந்தொழுகுஞ் செழுந்தாமரைப்பூ
மானதிலோபர் மனைபுகக்கண்டாய்
வரமலிமுனிவரை மன்னவர்தம்மைப்
பிரமன்படையாப் பிழையுறப்பணித்தா
யென்னிடைத்தோன்றி யியல்பறவாழி
தன்னிடங்காத்திற் றரித்தமைதெரித்தாய்
பண்டைநாண்முறைப் படியதைவலத்தணிந்
திண்டைசூடியு மேனையதேவரு

நாரதாதி நன்முனிவரும்
பூரவாகனி முதலியபுலவரு
மார்வமிக்குற வருள்பொழிந்தருள்வாய்
கார்வளர்மேனிக் கவினரங்கேசனே. (அ)

வெண்பா.

அரங்கேசா நாரா யணமுகுந்தா வென்றியா
னிரங்கோதை கேளாத தேனோ—மரங்கோடி
தின்னுமத வேழந்தன் னோகமொன்று வாழ்வதெண்ணிய
பண்ணுமொலி கேட்டசெவிப் பால். (கூ)

கட்டளைக் கலித்துறை.

பாலாவுங்கொன் றுநின் பார்குடைக்கீழுனைப் பாடுமென்னை
நாலாவிதத்தினு நசோதனைசெய்வது ஞாயங்கொலோ
வாலாலமுண்டு மிறவாவெனப்பாமட லாண்மைதந்தாள
சேலார்தண்ணீர்ப்பெருங் காவிரியாற்றிடைச் சீதரனே. (௰)

கலிவிருத்தம்.

சீதரன்புரு டோத்தமன்றிருவரங் கேசன்
மாதவன்பரந் தாமனென்றநுதினம வாயா
லோதவல்லவ னுபயபாதந்தொழு *முவனுப
பூதலத்திலாழ் வானெனுமபுகழ்புனைந் தனனே. (௰க)

ஆசிரியப்பா.

தனமிகபம்பருக்குஞ் சணடியப்ரந்த
ரனவரதமுநின் னருளபெறமுபனு
மேலோாதமமை வெறுத்திகழவதனற
பூலோகத்தின் பொலிவுமுறறழிந்தன
கண்டுகண்டு கதிருங்கறுத்தது
பணடுபாரத்தன பரியுமைகத்திடுநீ
யிங்நாளொருவற கின்னருட்டுளிநின்
செங்நாவாற்பகர் திருமொழிவழிதெறித்
தறநிலைநிறுவி யகமுழுதொருவிப்
பிறவியில்கதிதரு பெருந்தவம்வளரக்
காணிவிழிவோ காவிரியாற்றிடை
வாணிகோன்பரவ வளர்திருமாலே. (௰உ)

வெண்பா.

திருமாலைக் காவிரித்தண் சீரங்கத் தானைக்
கருமாலை யன்றனைக் கண்டு—மருமாலைப
பைந்துளவம் போன்றதமிழ்ப் பாமாலை சூட்டுநர்பின்
வந்துபிற வாத மகர். (௰ங)

* உவன்—மதுரகவியாழ்வார்.

### கட்டளைக் கலித்துறை.

மகராலயங்கடந் தன்றிலங்கேசனை மாய்த்தவனுஞ்
சிகராசலக்குடைக் கையானும்போலுந் திருவுருவ
மிகர்காணவின்னமுங் கோடிகொள்வானிமை யாவொருகட்
புகர்சீடர் கூற்றெனப் பொன்னரங்கத்திற் பொலிபவனே. (௰௪)

### எழுசீர்த் தாழிசை.

பொலிமதங்கொளும் வேழமேல்வரு புங்கவன்றனை யிளவலென்
றொலியினும்பிற மாதியர்க்கிறை போலெணுமாறுதி யுரையினு
மலிபுயாரவமுற தகும்பெரு வள்ளல்வாழு மரங்கமே
கலியனுள்கையி லுட்படாதது கண்டுளோர்சில கவிஞரோ (௰௫)

### ஆசிரியப்பா.

கலியுருக்கொடுநின் கான்பலதாங்கிய
புவிமுழுதுணாமெய்ப் புகழ்புனை யொருவ
னரனவன்றனென் றறியுமென்னகத்துள
வாமளித்ததுவும வயப்படுமோ
வங்ஙனமாயி னறமொடுசாதமு
மெங்ஙனம்விளங்கு மியாமெனவனுய்வே
னவற்றொழியான்கெடி னுமருமறைத்திரட்கு
மெவற்றுளுநங்கலக்கு மீடுசாலு
முனக்குமற்றுள்ள வும்பராபலாகருந
சனக்குழுவினுக்கு தாரகமாய
வானினமவைதத்தண் டகமகிழாகரா
மேனிகாலுதிர வெள்ளமோடி
யாழியுட்புக் காத்தமாக்கும்
வாழியவாடல் வயங்கவேண்டுந
தொண்டராமியற்றத் துணியாயாயின்
மண்டலத்தொருநன மகவாவருதி
யெத்தனைமாறுத் திஃதுமொன்றென்னச்
சித்தமுட்டெண்ணேன் றிருவருளானே
தூவளம்பொலிதரு சோணாட்டரங்கத
தேவருமபணிய வினிதமாவானே. (௰௬)

### வெண்பா.

அமரர்க் கெளியா னணியரங்கத் தன்பர்
தமாவர்க்கும் வேணதரு டாதை—நமர்முபற்சி
காணுதான் போன்று கலியால் வருத்துகின்றான்
வீணாள் கழிநத பிக. (௰௭)

### கட்டளைக் கலித்துறை.

மிகக்கொடுக்குங்கொடைக் கன்னனுக்குந்தனி வீடளித்தோ
னகக்குடையேந்து மாங்கேசன்சத்திய ஞானவள்ள
லகக்கமலத்திடை வந்ததண்டியான்கண் டடைந்ததுமுண்
டிகத்தினர்க்காப்பொய்சொன் றுற்செறுங்கோடை யிடித்திரளே. (மஅ)

### அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இடியிடித் தனையபாட லியம்புவார் பலரிந்நாளிற்
படியிடை வறுமைநோயாற் பருவா லுறல்கண்டெய்த்தேன்
கடிமலர்ப் பொதும்பர்க்காமர்க் கரைகொள்கா விரிச்சீரங்கத
தடிகளை யவரோடியானு மகமகிழ் வுறச்செய்வாயே. (மகூ)

### ஆசிரியப்பா.

செய்யதாமரைச் செழுமலர்ப்பொருட்டுத
தையல்வாழுந் தகைமலிபகலத்
துன்னைநாடி மூரனுடைசசிலரோ
டென்னைநீகூட் டிடுநதினமியாதோ
வன்னவர்பலகா லடியனேனை
யின்னநீயெம் மினமெனவிசைததற
கேட்டிலேகொன்னின் கிளாருளின்றித
தாட்டிகத்தவர்க்கத் தயைமலிவுறுமோ
விண்டுசித்தன் வேய்பணிவான்முற்
பண்டுதூக்கொரு பைம்பொற்கிழியை
யறுத்ததுபோலு மதிசயமவரினோ
மறுத்தவிருவகை வாரியிறபடிவே
னிலங்கைவேநத னினிதுவநதிறைஞசக்
கலங்கலிறெண்ணீர்க் காவிரியாற்றி
னிடைகிடந்தென்று மியாவும்புரக்கு
முடைகமழ்கொட்டின மூல்லைநாயகனே. (உம)

### வெண்பா.

நாயருநது மூனே நனிவிரும்பு நாவுடைய
பேயரிடம் போயிரவாப் பேறளித்துத்—தூய
பணியணையிற் காவிரியுட் பள்ளிகொண்ட பைமபொ
னணிமுகிலே கண்பார்த் தருள். (உக)

### கட்டளைக் கலித்துறை.

அருளின்றிப்பொய்த்தவஞ் செய்வோர்தம்பேறு மடைவதின்றி
யிருள்கொண்டமேனிச் சமனூரிற்சேர வெனைவிட்டிடேல்
மருள்சிந்தையோரு மகிழ்கூருஞ்சீரங்க மாளிகையிற்
பெருள்விஞ்சையோர்தொழ மெஞ்ஞான நிததிரை செய்தெய்வமே. (உஉ)

### கலி விருத்தம்.

தெய்யவென்று மிடைச்சொலுஞ் செப்பும்வா
யையநாவல ரிற்கடையாக்கிடேல்
செய்யபூம்பொழிற் றென்னரங்கத்துளோர்
பையராவிற் றுயில்பரந்தாமனே. (உரு)

### ஆசிரியப்பா.

தாமநாபித் தனிமுகிழுமரைப்
பூமகளோடு புவிமகள்புணர்கோ
காரங்கத்தோர் கவின்மலைகடுப்பச்
சீரங்கத்திற் றினந்துயிதிருமான்
மலைகடல்புரையூண் மாந்துபேரியாக்கை
நிலைஇயவானவர் நீடுதானவர்க்கு
மொருதினைசிலபோ துறுமுயிர்த்திரட்கு
மருள்வழிதினம்படி யளத்தற்பொருட்டோர்
காலேவைத்துளன் கருதியோர்மின்
மேலேமியாமென வெட்குகிலாரே. (உசு)

### வெண்பா.

வெட்டித் தருவர்குல வேர்களையு மின்னிகர்வாட்
கிட்டிணன்ற ஞவியொரு கேசயா—யொட்டிவளர்
தேகத்தரங்கன் றிருவருட்சீ ராசறிவார்
பாகத்தீர் சொன்மின் பரிந்து. (உரு)

### கட்டளைக் கலித்துறை.

பரிமுகப்பார்ப்பனச் சேயாகிக்கைப்பற்று பல்படையால்
விரிகடற்பார்புரக் கின்றவங்நாளுன்னை மெச்சுசெஞ்சொற்
பெரியவர்தம்மொ டடியேனும்வாழ்வுறப் பேறுவையோ
கிரியெடுக்குங்கை யரங்காசங்காழிகொள் கேசவனே. (உஅ)

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கேசம்பற்றியத் துருபதன்மகள்பெருங் கிலேசமுற்றிடவீர்த்தோ
ணூசமன்னவற் கினியவர்பலரையு நணுகவாய்வளைவைத்தோ
னீசனன்னவ னேயரங்கத்திடை யென்னையுந்தடுத்தாண்டா
னீசர்புன்குடை நீக்கிடினதைது நிசப்படமாட்டாதே. (உஎ)

### ஆசிரியப்பா.

மாட்டுவாகன மயேசனுக்களித்தோன்
காட்டுள்வாழ்பொதுவர்க் காவியொடளிப்போன்
விண்ணோர்வியப்ப வேய்ங்குழலிசைப்போன்

பெண்ணோடாணலி யாகியபெருமாள்
விழிதுயிலரங்கம தேவிடென்னில்
வழிபடுமடியா ரியாவருமதியார்
விரசைக்கப்பால் வேறொன் றுளதென
றானுடைப்பல்லோ ருருமில்வாதிடுவார்
பாணன்போலும் பக்குவர்சில்லோ
ராணமிக்குருகி யகமகிழ்வாரே. (உஅ)

வெண்பா.

மகிழுமலர்த் தாரணிந்த மக்க ளிருவ
ரகிலமுண்ட வாயரங்க னன்பர்—நெகிழகததார்
மாரனுடன் மாறனவா வாய்ந்தபெயா வன்மைமென்மை
நீரறிவிக் குநதெரிமி னே. (உகூ

கட்டளைக் கலித்துறை.

தெரியற்றுழாய்தரு கில்லீரென்பேதைதன் சிநதைகொண்டீர்
வரிவிற்குனித்தன் று சானகிதன்னை மணந்ததின்றே
கரிவெட்குநன்னடை யாய்ச்சியர்தமமைக் கவர்தல்பொய்யோ
வரிதிட்டடியவ ரைத்தனிற்சேர்க்கு மரங்கையனே. (௩0)

கலித் தாழிசை.

அரங்கடுத்த கன்னரமபை பாரகணல்குகலவியின்
றரங்கணிததி டாதுவெந்த மூற்பிராணொரசாட்சியா
யிரங்கலற்ற நெஞ்சராயி றைச்சியுண்ப தினமே
வரங்கொடுக்கு மூதரங்க வள்ளலன்பா மட்டிலே. (௩க)

ஆசிரியப்பா.

மட்டுறுமலரும் வனப்பசுநதுளவு
மிட்டுநமமரங்க னிகபரமளநத
பததுணைகருதிப் பைநதமிழ்பாடு
மிதத்தவமவழங்கா தெனும்பயனின்றே
யாதலிறபொன்னு ரரிவையர்தமமைப
பூதலமீது புணர்தல்வேண்டி னுமாம
பசுவயமாதி பநிக்கும்வேள்வி
விசுவமேறசெயுஞ்சில வேதியர்ப்புகழே
மவரிநநதொருக்கா லணையுமன்றோ
குவடுநேர்தோட் கொலைவாளவுண
ரூர்தொறும்பணிசெய் துள்ளுலைநதெள்ளல்
சார்தொறுநடந்த சரிதமியாவு
மவனோர்கலையா யம்பியிற்பிறந்த
தவன்வாய்ப்பெருநூல் சாற்றுவபலவே. (௩உ)

### வெண்பா.

பலமதத்தும் வெவ்வேறு பண்ணவர்போ னின்று
கலகம்விளைக் குந்தொழிலேன் கற்றாய்—குலமயிற்கூட்
டாடுமலர்ச் சோலை யரங்கா வநுதினநிற்
பாடுநர்க்க துண்டோ பகர். (கூகூ)

### கட்டளைக் கலித்துறை.

பகரங்கமா றுடை நால்வேதனுஞ்சொல்லனின் பாலனென்று
னிகருன் றனக்கொரு தேவுமுண் டோமிக நீடுமணிச்
சிகரங்கொள்கோபுரம் பற்பலசூழுந் திருவரங்கா
வகரந்தொனிக்குமுன் னாதனேயாகி யளிப்பவனே. (கூச)

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அளியுருக்கொடு மாவலிக்காகரீ ரடைத்தவன் விழியொன்றை
யெளிதிலக்கணங் கெடுத்தருளரங்கனென் னிதயசாட்சியதாவோர்
களியளித்ததுண் டதுசகததவிர்கரு காலமெக்கணங் கொல்லோ
புளியிடைப்புகுந் தான்பதத்தடைக்கலம் புக்குளீர் புகல்வீரே. (கூரு)

### ஆசிரியப்பா.

புகழும்வசையும புண்ணியபபெருக்கு
மகமும்பிறவு மருள்வாெனொருவ
னவனகரததவிரு மாழிநோக்கி
யிவனகடவுளாககோ ரிறைபெனபபகர்வார்
முன்னவனொருக்கான் மொய்ம்பாரபோாக்களந
நன்னகத்தனுசுந தனஞ்சயறநேறறு
மாற்றங்கருதில வருத்தற்கரிய
தோற்றமுற்றவனோ சொருபமாகின்ற
வெதுநீசங்கொல்லோ விரண்டுமெங்ஙனமோ
பொதுவாதம்மனைதொறும புகழுழலவனோ
வநதுசொற்றிடினே மயக்கறுமரங்கத்
திநதுவின்பொய்கை யிடைமுழுகடியார்
பதமலாமகரம பரித்தெட்டெழுதது
நிதமிகச்செபிதது நீலமேனி
கருதிக்கருதிக் கடைததிசைநாடி
யிருமதிமதியென் னேழைமதியே. (கூசு)

### வெண்பா.

மதியுதிக்கு நெஞ்சகத்தோர் வள்ளன்மலர் மங்கை
பதியரங்கன் மெய்யருட்கோ பாலன்—விதிகள்பலர்ப்
பெற்றா னவனே பெரியானென் றோதுமட்டுங்
கற்றாரே கல்விக் கடல். (கூஎ)

## கட்டளைக் கலித்துறை.

கடலும்பச்சா லிலை யுந்தொண்டர்நெஞ்சமுங் காவிரியாற்
றிடமன்னுசீரங்கத் தானிடமேயென் றியம்புமன்பர்
விடமன்னகூற்றனுக் கஞ்சார்விதிக்கும் விதிக்கயரா
ரடல்வென்றிவேள்படைக் காற்றார்களாகி யடங்கலரே. (௩அ)

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அடங்கொள்வன்மனத் தருவர்தங்கூற்றென வரங்கமாநகர் தன்னிற்
படங்கொள்பாம்பர சாந்திருவணைமிசைப் பள்ளிகொண்டருள்வானை
யிடங்கொணன்மனத் தேசிகனினைபவ ரெக்குலத்தினரேனு
நடங்கொள்சங்கரன் பிரமனொப்பவரலா னரரெனல்கூடாதே. (௩௯)

## ஆசிரியப்பா.

கூடாவொழுக்கக் குணம்பலகோடியு
நாடாள்வாரையு நகுமிறுமாப்பு
மளவினிலடங்கா வாசைப்பெருக்குங்
களவுறுமடவார்க் கடுக்குஞ்சிந்தையுங்
கொண்டுளதமியேன் குறித்தவாறே
விண்டுநாயகன் விரைமலர்ச்சரணஞ்
சேரவென்றே தினமுழைக்கின்றே
னாரணங்களுக்கு மாகமத்திரட்குங்
காரணமொன்றெனக் கண்டதேசிகன்
பாரகத்தேனும் பருப்பதத்தேனும
வானகத்தேனும் வாழ்வானாயி
னியானறிதாமுன் னிலகவேண்டும்
பொன்னரங்கத்தைப் போற்றலன்றிப்
பின்னரோர்தவமும் பேணமாட்டே
னீடுபோதா வெனக்குமென்று
நீடுசெங்கதிரு நிலவுஞ்சான்றே. (௪௰)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௪௰.

தெய்வமே துணை.

# ஆயுதபஞ்சகம்.

## வெண்பாக்கள்.

காலங் கருமங் கடந்த கதியோடு
ஞாலமுற்றுங் கூறு நலந்தருமே—பாலமுண்டோ
னற்றுணையென் றேத்தாங்க நாத னளிர்மலர்க்கை
பற்றும்வெற்றி யாழிப் படை. (௧)

அன்பர்களை யெண்ணா தவமதிப்போ ராரெனினுந்
துன்பமெய்திச் சோரத் தொனிக்குமே—பொன்பழுத்
நெஞ்சரங்க நாத னிகழுலகெல் லாம்புரக்குங்
கஞ்சமலர்க் கைபுனைசங் கம். (உ)

கூடாவி வேறுசெயுங் கூற்றுவன்கைக் கொண்டதண்ட
நாடா தளிக்கு நலத்ததே—பாடாத
நீரரங்கண் ஞாலத்தே நேடிடினும் பீடுதவுங்
காரரங்க நாதன் கதை. (௩)

எதிகளுக் கோரரசா யேதமலி பாதகரைக்
காதிநல்லோர் தம்மையெல்லாங் காக்குமே—நீதிகுன்றாச்
சோழனெண்ணி லார்பரவத் தொல்கா விரிநடுவே
வாழரங்க நாதன்வென்றி வாள். (௪)

ஐந்துமுகன் கைச்சிலையு மாயிரங்க ணான்றவருந்
தந்துயர்தீ ரத்தினமுஞ் சார்வதே—செந்துவர்வாய்
மாலையன்ன மேனிநெடு மாலரங்க நாதனன்று
வேலைகுன்றச் சாயகம்பெய் வில். (௫)

முற்றிற்று.

ஆக செய்யுள் கூாக.

தெய்வமே துணை.

---

## சமயசட்கம்.

---

### கட்டளைக் கலித்துறைகள்.

இரங்கலிர்மானிடர் காடெய்வம்பற்பல வென்னினுமா
முரங்கொடொன்றேயெனச் சொன்னாலுமாமுண்மை யுற்றுணர்வீர்
கரங்களிலாழியுஞ் சங்கமுமாதிய காட்டிநின்றெம்
மரங்கனைப்போற்றிசெய் நாராயணரு மளவிலரே. (க

சிவனேபரமெனச் சொல்வாரைக்காணுறிற் சீறுவரோ
வுவமானமின்றிய செந்திருவென்று முவணனென்று
நவநூலநுமனென் றும்பிரமாபெற்ற நாதனென்றுங்
கவலாமலெண்ணுவர் நம்மரங்கேசனைக் கண்டவரே. (உ)

சத்தியென்னுஞ்சொற் பொருள்வலியாமன்றித் தையலுமாம்
பத்தியுள்ளாருணர் மெய்ம்மையுமாகும் பாராசரனைப்
புத்திரனாப்பெற் றவனுமவன்றன் புதல்வனுந்
நத்தியும்வாழரங் கேசனுக்கியாது நவைபட்டதே. (௩)

சேனைமுதலியுந் தெய்வக்கணபதி யும்பொருளோன்
றேனையன்றென்னத் தெரிகின்றகல்வி யியல்புமில்லார்
யானைமுகமுடை யான்றஞ்சமென்னி லெதிர்த்திகல்வார்
வானைநிலத்தொ டளந்தவரங்கன் மரபல்லரே. (௭)

பெருமாளெனும்பெய ருந்தலைமேற்றிகழ் பீலிக்கொத்து
மருமாலைக்குல்லையுங் காமக்களவு மலிசமரும்
வருமாண்பிறப்புமொப் புங்கவுமாரனை வாழரங்கத்
திருமாலடிமையென் றேயறியார்கள் சிறியவரே. (௮)

சூரியமண்டலம் வைகுந்தமென்னுந் துணிவினருஞ்
சீரியபொன்னரங் கன்றானென்பாருமோர் செங்கணென்னுடம
பேரியல்பாளரு மஃதேமுடிந்த பிரமமென்னு
நீசினர்பாலெதிர்த் தன்றெனவாது நிகழ்த்தலரே. (௯)

முற்றிற்று.

ஸ்ரீ செய்டன் சாமி.

தெய்வமே துணை.

## சுத்தசந்தகம்.

### கலிவிருத்தங்கள்.

பரிதியென்னைப் பகலவற்குநதுழாய்த
தெரியல்சூடரங் கன்கைத்திகிரிக்கும்
பெரியநாவலர் பேரிடும்பெற்றிமை
தெரிபவர்க்கடி மைத்தொழிற்செய்துமே. (௧)

கண்ணன்றாளிற் கடிமலர் கண்ணுத
றண்ணனுசெஞ்சடை ப்புறச்சாத்தினன்
மண்ணகத்தரங் கந்தனை வைகுந்தத்
தெண்ணலாருண ராவியல்பாளனே. (௨)

இந்திரற்கிள வற்றகை யெய்தியுஞ்
சிந்திடாப்புகழ் சேரரங்கன்சிலை
பிந்திடப்பிறந் தான்முதலென்பதா
னொந்திடான்புவி நூல்பெருஞ் சாட்சியே. (௩)

இரங்குநெஞ்சக மெய்தினரியாவரு
மரங்கநாயக னேயென்ற றிந்துளென
மரங்கல்புற்புதன் மண்ணுமன்றேனெனக்
குரங்குலாங்குரு கூரன்சொன்னனரோ. (௪)

மூலகாரணன் மூதரங்கேசனே
வாலமுண்ட வான்றலைப்பாலனே
சாலக்கூவித் தடத்திடைகண்டதோர்
கோலவேழத்தைக் கூறெனிற்கூறுமே. (௫)

தானவர்ச்செருத் திந்திரன்றன்னுடன்
வானவர்ப்புரக் குந்தனிவண்மையான்
ஞானவேளரங் கத்திறைநற்கலை
யானவுண்மை யதுவெளியாகுமே. (௬)

தெய்வமுண்டெனச் செப்பிடற் கொப்புவார்
பொய்வழக்குடைப் புத்தர்களாயினு
மைவனத்திரு மாலரங்கத்துதி
செய்வலாரெனக் கொள்வதென் றேற்றமே. (௭)

முற்றிற்று.

ஆ சைபுள் ளயசு.

தெய்வமே துணை.

## மந்திராட்டகம்.

அறுசீர்த்தாழிசை.

சிவனூர் நாடுமெய்ககோலமாய்ச் சீர்கொளச சாவதாரங்களாய்த
தவர்களாய் மன்னராய்த் தொண்டராய்ச் சாற்றுவார் தம்முள்வந்தாடுமா
னவாசத் தாடுமின்னார்கள்சேர் நாகரைச் சாடிவெல் பீடுதோ
யுவணன்மே லேறரங்கேசர்தம் மோநமோ நாராயணையவே. (க)

பிரமனாற் சமயமோராறுமோர் பேச்சுமில்லாதமெஞ்ஞானமுங்
கரவுடைப் புலைமதக்கூட்டுமாங் கணிதமெட் டாமெனக்காண்பதே
பாவியா காயமெங்கனுமூலாம பவனனே டெதிர்பொரும்பலமறு
வாரகனிற் றுஞ்சரங்கேசர்தம மோநமோ நாராயணையவே. (உ)

வேதமென் பனவனந்தங்களும் வேறுவே றுகமந்திரள்களும் [ரியே
போதவோ விடுமொலிப்பொருளெலாம் போற்றிவைத் திடுபெரும்புண
நாதரா மன்னுபஃறேவரு நானிலத் துயிரும்வாழ்வுறநினைத்
தோதனந் தருமரங்கேசர்தம் மோநமோ நாராயணையவே. (ங)

பன்னகத் தாசனும்பரிதியும் பதுமனும் பாரதிப்பாவையுந்
தென்னவற் செறுதிறத்தநுமனுந் தேறியுந் தேறருந்திருவதே
பொன்னகர்த் தேவருந்தவமுடைப் புனிதருந் தளர்வுறப்புரிகுணத்
தொனலர்க் கறுவரங்கேசர்தம் மோநமோ நாராயணையவே. (ச)

கள்ளுணு வண்டிசைக்கின்றபூங் கமலமுற் றுள்விழிக்கருணைதந் [தந்தே
தெள்ளுவார் தம்மையென்றேத்துவார்க் கின்பநல் கச்செய்பண்பேய்க்
புள்ளுண்மே லாயதன்கேதனம் போற்றிமுன் கானகம்போனதா
ளுள்ளுவா ருள்ளரங்கேசர்தம மோநமோ நாராயணாயவே. (௫)

வாகைவன் றனவர்க்கேமனாய் வானவர்க் கன்னையாய் மானிடாக
கைையங் கைப்பெருங்குரவரா யிலகவிச் சிப்பவர்க்கேற்றதே [வாரா
பாகைநேர் சொற்சொன்மின்னார்பலோர் பாயரேு றெவ்வொர்மெய்ப்படி
யோகையிக் குதவரங்கேசர்தம் மோநமோ நாராயணாயவே. (௬)

அலகில்பல் கோடிமென்சீவருக் காழுமார் விரசையாற்றப்புறத்
திலகுசங் காழியாதியகொடுத் தென் றுநீக் காதுகாத்திடுவதே
கலகநிட் டரைக்கொன் றுமெய்க் கருணையோர் தங்களைக் காதலித்
துலகமுற் றுளரங்கேசர்தம் மோநமோ நாராயணாயவே. (௭)

தென்றிசைக் கூற்றுவன்றொடர்பிலாச் செந்தமிழ்ப் புலவரோர் பதின்மரை
யன்றியும பற்பலோரா வீடுபெற் றமைவதற் காதாரமாயதே
பன்றிட் ணைமையாதிகளுமாய்ப ப ழுநின்மெய்ச் சமரசப் பண்பருக்
கொன்றிரண் டாமரங்கேசர்தம மோநமோ நாராயணாயவே. (௮)

முற்றிற்று

ஸ்ரீ செயபாள சகாஉள.

தெய்வமேதுணை.

---

## நவமணிமாலை

---

### வெண்பா.

பெரியபெரு மாளரங்கப் பேணிக்கிடக்குங்
கரியதிரு மாலவுணர் காலன்—கிரியெடுத்து
மானிரைகாத் திட்டபிரா னன்னவன்பொற் றுணிலத்தும்
வானிடத்தும வீசு மணம. (௧)

### கட்டளைக் கலித்துறை.

மணங்கொண்டதாமரைப போதுடைச்செல்வியை மார்பில்வைத்தான்
பணங்கொண்டபாம்பணை மீதரங்கத்திடை பள்ளிகொண்டான்
கணங்கொண்டமெய்யடி யாரேவலேசெயக் காதலிக்குங்
குணங்கொண்டநம்பெரு மான்புகழேமிகக் கூறனன்றே. (௨)

### கோச்சகக்கலிப்பா.

கூறரிய விளையாடல் கோடானு கோடிசெய்வோ
னீறணிவான் பிரமனெனு மிருவருக்கு மிடைநின்றே
னுறவணையுந் திருவரங்கத் தமர்பெருமா ளருளின்றிப்
பேறடைதல கூடாது பிறக்குமவினை நசியாதே. (௩)

## கட்டளைக்கலிப்பா.

ஆதவன் றனை யன்றுமறைத்துமோ
ரன்பனுவி யளித்தனை யையகோ
பாதகக்கலி தீர்த்துமிந்நாளெனைப்
பாலிக்கின்றிலை பாவமிதல்லவோ
சூதனுப்பரி தூண்டெனச்சொல்லிடாத்
தொண்டருக்கரு ளத்துணியாய்கொலோ
நாதகீத முழங்கரங்கத்திலோர்
நாகணைத்துயி லுரணத்தெய்வமே. (ச)

## அம்மானை.

### வெண்டளா.

தெய்வமொன்றே யுண்டு திருவரங்கக் கோயிலிடை
யைவகைப்பூ தங்களுக்கு மப்புறத்த தம்மானை
யைவகைப்பூ தங்களுக்கு மப்புறத்த தாமாயிற்
கைவயிற்சங் காழியொடு காணுமோ வம்மானை
காணுவது தொண்டர் கருத்தன்றோ வம்மானை. (ரு)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்மானைத்திருவரங்கத் தாதியைப்பண்ணவர்பலர்க்கோ ரனையானைப்
பொய்ம்மானைப்பின்றொடர்ந்து தடிந்தகனைச்சிலையானைப் பூவுள்ளானுங்
கைம்மானைம்முகத்தானுங் கருதுமிருகழலானைக் காணப்பெற்றுஞ்
சும்மாநைவுறமாட்டேன்சுகப்பெருக்கைத்தமர்களுடன் றுய்ப்பேனன்றே.

## எண்சீர்த்தாழிசை.

பேணடைந்த சுடர்ந்தன்மீது பிரசநாண்ம லர்த்துணர்
பெருகவைத்து விழிமருட்டு பேதைமாத ராசையா
னுனடைந்த துன்பமொன்றினுக் கிரட்டி யின்பநீ
நல்கவேண்டு மில்லையாகின் ஞானநல்க வேண்டுமால்
வானடைந்த விருசுடர்ப்பு ரைந்தசங்க மாழிமேல்
வைத்ததோள்க ளிற்கமழ்ந்த வண்டுழாய்பு னைந்துசெந்
தேனடைந்த தாமரைக்கண் மலர்தரப்பொய் நித்திரை
திருவரங்க மானதிற் செயற்கிசைந்த திருடனே. (எ)

## ஆசிரியப்பா.

திருடனென் றிகழினுஞ் சீரருள் புரிவான்
கருடவா கனத்திற் கவின்றரு கடவுள்
சற்பப் பாய றன்னிடை யனந்தங்
கற்பமோர் கணமாக் கண்டுயில் கரியோ
னெத்தனை யோதலத் தெய்தி வாழினு

மத்தனை யுந்திரு வரங்க மொவ்வா
வானகத் திரவில் வயங்குடுப் பலவு
மானவெண் கதிர்ப்பனி மதியமொவ் வாவே. (அ)

### சந்தக்கலி.

தான தத்த தன—தன தன தனனு.

வாவெனக் கதறி யோலமிட்ட கரி
வாழ்வுறக்கணமு - ளிலகினை யலையோ
மாதவத்தர் பலர் சேர்வனத் தினிடை
வாகுவிற் கருதி - யபயநல் கிலையோ
கோவெனக் கைதலை மீதுவைத் தழுத
கோதைபற் பல்கலை - பெறநினை கிலையோ
கூதளத் தொடையல் வேடனைத் தனது
கோகுலத் துணைவ - ராடுதழு விலையோ
பாவெனக் குளறி னூர்சிலர்க் குமதி
பாரமெய்ப் புகழெய் - தியகதை கடல்சூழ்
பார்சொலத் தளரெ னூடுதித் தினிது
பாடெனச் சொலினை - பரிசிட நினைவாய்
காவெனத் துதிசெய் தார்பலர்க் குமவர்
காதலிட்டு மகிழ் - கருமுகி லெனவே
காவிரிக் கிடையொர் கோயிலிற் றுயில்கொள்
காரணத் தலைமை - பெறுமுரா கரியே. (கூ)

### வெண்பா.

கரியழைத்த வோதையிலுங் காரூர் பொதியத்
திரிதமிழ்ப்பாட் டோசைமிகத் தீதோ—பெரியபய
னென்றுநல்கி லாயே யுயர்ந்தபுகழ்த் தென்னரங்கத்
தென் றுமுறை வானே பியம்பு. (ய)

### கட்டளைக் கலித்துறை.

இயந்தொனிக்குந்தனிச் சீரங்கக்கோயி லிடத்துறைவா
னயந்தவிண்ணோருய்யத் தானவர்தங்களை நாசஞ்செய்தான்
பயந்தமைந்தன்மக ளாம்பூமிகேள்வன் பதுமைநண்ப
னயந்தனைநேர்மனத் தென்னையும்வேட்ட ததிசயமே. (யக)

### கோச்சகக் கலிப்பா.

அதிரதர்மா ரதர்முதலோ ரளவிலவர் போற்றிசைப்ப
விதிமுறையா லாசுபுரி வேந்தொருவன் வரச்செய்வாய்
மதிநுதற்பார் மடந்தையழும் வாய்த்தொனிகேட் டிலைகொல்லோ
வதிர்திரைப்பாற் கடனீங்கி யரங்கநகர்த் துயில்வானே. (யஉ)

### கட்டளைக் கலிப்பா.

வான நாட ரு மாநில வாணரும்
வாழ்த்தெ டுக்கு மாகதக் குன்றெனப்
பானலார் வயற் சீரங்கக் கோயிலிற்
பள்ளி கொண்டரு ளும்பரந் தாமனே
ஞான யோகசித் தித்திறம் வேட்டுனை
நாடு மென்னை நலிப்பது ஞாயமோ
நீரைரட்சக னென்னுமோர் பேர் மெயாந்
திறஞ்செ யிக்கணஞ் செம்மலர்க் கண்கொடே. (௰௩)

### அம்மானை.

### வெண்டா.

கண்கொண் டருள்பொழியுங் காரரங்க நாயகனே
யெண்கொண்ட யாவருக்கு மீசனு மம்மானை
யெண்கொண்ட யாவருக்கு மீசனு மாமாகிற்
றிண்கொண்ட தானவரைச் சீறுவதே னம்மானை
சீறுவது மன்னவரைச் சீர்செயவே யம்மானை. (௰௪)

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மானவேற்படை மன்னவர் தம்மரண் மனையினும் புகுந்தேற்றும்
போனகத்துட னுடையுமருமையாப் புலரவிட்டிடலேனோ
தேனளாவிய பசுந்துளவாமெனச் செயுந்துதினைவாயோ
வேனமாநில மிடந்தவா வரங்கமுற் றியல்பெலாமிசைப்போனே. (௰௫)

### எண்சீர்த்தாழிசை.

இசைமலிந்து வேண்டுசித்தி யாவையும்பு ரிந்தலுத்
தேகமாயி ரண்டுமாயி ரண்டுமற்ற சமரசத்
திசையடைந்து மரணமும்பி றப்புமற்ற முத்தியிற்
சேரவேண்டி மாதவஞ்செ யத்துணிந்த சிந்தையீர்
நசையினர்க்கு நல்கும்வாழ்வை யசர்தம்ம வைக்கணே
நாச்சலிக்க வைதுளானு நண்ணநல்கு நாயகன்
றசையருந்து வார்களுக்கி ரங்கிடாவ ரங்கமால்
சரணபங்க யங்களேச தாநினைந்து சார்மினே. (௰௬)

### ஆசிரியப்பா.

சாருவும் பூவையுஞ் சதுமறை நுவலிய
சீருடைப் பொழில்சூழ் திருவரங் கத்தி
லாடகக் கோயிலி லாயிரஞ் சென்னிச்
சேடன் மேற்றுயில் செங்கணெம் பெருமான்
சொன்ன சொல்லுஞ் சோர்வுறு மாயி

## நவமணிமாலை.

வின்னலெங் ஙனக்தீர்க் கியானுயப் பெறுவே
னவன்றிரு வுந்தி யாயதா மரையி
னவந்தரு பொன்மை நகுமுடற் புதல்வன்
வாய்தொறும் வைகி வண்புகழ்ப் பராசரன்
சேய்திரு நாவினுஞ் செழிய னாட்டுக்
குருகைமா முனிமுதற் குலவுபல் புலவோர்
திருமலி நாவினுஞ் சீர்நடம் புரிந்து
சிதமலி சததளத் தேமலர்ப் பீடத்
துதயவாண் மதியொத் தொளிருமொள் வளையே. (௰௭)

### சந்தக்கவி.

தனனதந்ததன—தானனதானா.

வளைய ணிந்திலகு கரம டந்தையர்கண்
மயலெ னுங்கடலி—னூடமிழ்வேனோ
மனித ரென்றிசையு முருவ டைந்துமனை
மகிழு முண்டிநுகர்—வாரையெளேனோ
தளைமு றிந்தமத கயமெனும்படிசொ
றகுதி கொண்டவர்கள்—சோரவெலேனோ
சமர சம்பரம ரகசியந்தவசு
தருபெ ருங்கருணை—நீர்மறைவாமோ
கிளையு டன்றினமு னடியர்தம்பணிசெய்
கிறந லம்பொலியு—மாறருளாயோ
கிருபை யின்றெனிலெ னகமதன்கண்முது
கிழவ னுஞ்சிசுவு—மாவரலாமோ
களைபொ ருந்தகுவர் தமையடும்படைகொள்
கரமு குந்தவகல்—காவிரிநீர்சூழ்
கவின ரங்கநகர் நடுவுறங்கிறைவ
கரிய கொண்டணிகா—ரநெடுமாலே. (௰௮)

### வெண்பா.

மாலை யரங்கமணி மாளிகையின் வாஞ்சையினால்
வேலையிடைக் கண்டுயில்கை விட்டானைச்—சேலைநிகர்
கண்ணாய்ச் சியர்மகிழுங் காமுகனென் றோர்ந்தோனே
நண்ணார் குடிக்கோர் நமன். (௰௯)

### கட்டளைக் கலித்துறை.

நமனஞ்சவென் றுகல் லாலடிக்கீழுண்மை ஞானமுறும்
விமலன் றனெஞ்சகத் தெந்நாளுமோவற மேவுவன
விமயம்புரைபல கோபுரஞ்சூழரங் கேசனது
யமருமலர்த்துணர்ப் பைந்துளவார்ந்தபொற் பாதங்களே. (௨௰)

### கொச்சகக்கலிப்பா.

பாதமலர்த் துணைநாடிப் பசுந்தமிழாற் பழிச்சுமெனக்
காதரமா மொருமாற்ற மறைவதனுக் கிசையாயோ
வேதமுத லாய்க்கடல்சூழ் மேதினிக்கோர் வித்தாகும்
போதனைத்தந் தாயரங்கப் பொற்கோயிற் புண்ணியனே. (உக)

### கட்டளைக் கலிப்பா.

புண்ணி யம்புரி வோர்பல ரேங்கினர்
பூரி யக்குலத் தோர்மிகப் பூரித்தார்
திண்ணி மைத்தவத் தோரொரு வற்கருட்
சீர்வ ழங்கச் சிறிதுளத் தெண்ணுவாய்
தண்ணி லாவுறழ் சங்கமும் வெய்யவன்
றன்னை நேர்சுடர்ச் சக்கர மும்புனை
கண்ணி யாவரங் கப்பெருங் கோயில்வாய்க்
கட்செ விதுயில் கார்முகில் வண்ணனே. (உஉ)

### அம்மானை.

### வெண்டளை.

வண்ண மணிமேனி மாலரங்க னேயடியா
ரெண்ண முழுதறியு மீடுடையா னம்மானை
யெண்ண முழுதறியு மீடுடையா னாமாகிற்
றிண்ணநெகச் சோதனையேன் செய்கின்றா னம்மானை
சோதிப்பா னென்றவர்தஞ் சொற்கேட்பா னம்மானை. (உங)

### கலி விருத்தம்.

அம்மை வாதனை தீர்வது குறித்துமெய் யன்பா
லிம்மை யிற்றவ முயன்றுளா ரென்னுரை கேண்மோ
மும்மை யோர்புகழ் திருவரங் கத்துறை முகுந்தன்
செம்மை யார்கழற் சேவடி கருதுமின் சிறிதே. (உச)

### எண்சீர்த் தாழிசை.

சிறியோருட னுறவாடிய சிறுமைத்துயர் போகத்
தீயிற்கொடி தாம்வன்மிடி செயும்வாதனை தீர
வெறிநாய்நிகர் மதவாதர்தம் விருப்பழிவாக
வெற்பின்குகை தொறும்வாழ்வுறு மேலோரொடுகூடக்
குறியாமென நாளுடிய வடிவங்கொடு வந்துன்
கொற்றத்திரு வருளோர்துளி கொள்ளும்படி யருள்வாய்
பொறிதோய்பண மலிபாய்மிசை பொன்னூரும ரங்கம்
போற்றித்துயில் வாரிற்றிகழ் புனிதக்கிழ வோனே. (உரு)

### ஆசிரியப்பா.

கிழவனென் றுங் கேழிணர்முடிக்குங்
குழன்மினார்வியக்குங் கோலனென் றுங்
கால்விரல்சுவைத்துக் கரைதருகனிவாய்ப்
பால்விரைகுன்றாப் பாலனென் றுங்
திகழ்வதன் றிச் சேண்முதற்பலவா
நிகழ்வதுமுடைய நெடியோன் றன்னைச்
சீரங்கத்திற் றினங்கிடந் துறங்கும்
பாரவடிவாப் பவளப்பறவைப்
பிடர்மிசையம்பொற் பெய்வளையோடு
மிடர்கெடநினைவா ரியாவரேனு
மவரடி யவர்தம் மடியார்தாண் மகரந்
தவமலிவுடையார் தலைச்சுமையாமே. (௨௬)

### சந்தக்கவி.

தானன தத்தன—தனதன தானா.

ஆமையெனத்திரு மேனியுமுற்றவ
னாரணனைத்தரு—கரியவன்வானோ
ராகுலமுற்றற வேமுயலச்சுத
னாதியெனப்பகர்—கரியெதிர்போனா
னூமையெனத்திகழ் வாரைவெறுத்திகழ்
வோரையொறுப்பவ—னுலகுணும்வாயா
னூறுதவிர்த்திடு காவிரிமத்தியி
லோவறுபொய்த்துயில்—செயமனநானான்
யாமையுறத்தகு சோதனையிற்பெரி
தேதம்விளைத்தன—னியல்பவுமீயா
னீனர்கடைத்தலை தோறும்விடுத்தன
னேழிசைமுத்தமிழ்—விலையுநல்கானேன்
மாமையன்மிக்குறு பாவமதத்தினர்
வாழ்வுபொறுத்தமை—யழிவதெவாறோ
வாரிசவித்தக னான்மறையிற்பகர்
மாசினெறித்தொகை—வளர்வதெவாறே. (௨௭)

### வெண்பா.

எவ்வா று நாடுநர்க்கு மேற்றவா மீந்தருளுஞ்
செவ்வா யரங்கன் றிருக்கோயிற்—கொவ்வா
தொருதலமு மென்பதனுக் குள்ளபெருஞ் சாட்சி
யிருபுறந்தோய் காவிரியா றே. (௨௮)

கட்டளைக் கலித்துறை.

ஆறனந்தம்புவி மேற்றிகழ்ந்தானு மருண்முகுந்தன்
பாறருஞ்சாகர நீத்துத்தன்மத்தியிற் பள்ளிகொள்ளும்
பேறடைந்திட்டது மற்றென்றுண்டோவந்த பேர்பலர்க்கு
மூறணைத்துந்தவிர்க் குந்திருக்காவிரி யொன் றன்றியே. (௨௯)

கோச்சகக்கலிப்பா.

அன்றிலுக்குங் குயிலுக்கு மமபுலிக்குந தண்கடற்குந
தென்றிசைக்குன் றருள்காற்குஞ் செயும்பிழையா தறிகில்லேன்
வென்றிமலி சங்காழி மிளிர்தருகைத் திருவரங்கன்
றன்றிரடோணசைமீறித தயங்குமிளந தையலரே.

கட்டளைக்கலிப்பா.

தையலார்சுகத் தாயிரத்தோர்பங்குந்
தமிழின்றெனத் தக்கவர்தமமையும
வையமேற்பொரு ளாமெனநாடிநான்
வாடக்காண்பதுன் மாண்புகழ்க்கேற்றமோ
வையகோவினி யாயினும்வேண்டுபே
ரார்வநல்க வகததிடையுன் னுவாய்
செய்யதாமரைப் பூமகளுயகா
திருவரங்கத தினிற்றுயில்சீலனே. (௩௧)

அம்மானை.

வெண்டளை.

சீலமுளார் போற்றுந திருவரங்கக் கோயினெடு
மாலடியார் தாமே வலியுடையா ரமமானை
மாலடியார் தாமே வலியுடையா ராமாகில்
வாலறிஞ ரைவர் வனமபுகலே னமமானை
வனத்து மறஞ்செய்தே வாழ்நதனர்கா ணமமானை. (௩௨)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கையுநெஞ்சகக் கவலையாமபிணியிடை நலிவுறுநாயேனு
முய்யுமாறுநின் றிருவருட்கடற்றுளி யொன்றினிதுதவாயோ
பொய்யுமெய்யடி யாருயநிமித்தமாப் புகன்றருளரங்கேசா
வையுஞ்சிற்சிலர் தம்மையும்புரநதநீர் மறைவதுமுறையன்றே. (௩௩)

எண்சீர்த்தாழிசை.

முறைதவிர்ந்த பத்திசோத னைத்தொழிற்பு ரிந்ததான்
மூவகைப்பி ணக்குமீறி முற்றுசோர்வு றச்செய்தாய்
பிறையணிந்த செஞ்சடைப்பி ரானுமன்னு நான்முகப்
பிரமனும்பு ரைந்தபேறு பெற்றிடச்செ யாய்கொலோ

கறைபடும்ப ணுடைவிப்பெ ரும்பணிக்க ணுடொறுங்
கண்டுயின்று ளாயெனக்க ணித்துணுவ னீங்கிடேன்
மறைமுழங்கு தென்னரங்க மாளிகைக்க ணேகியே
வாழ்த்துவார்ம னக்கணேரில் வந்திலங்கு மாயனே. (௩௪)

ஆசிரியப்பா.

மாயவன் றொண்டர் மனமல ரகலாத்
தூயவ னரங்கத் தொல்பெருங் கோயின்
மேயா னனந்தம் வெள்வளை மகளிர்
சேயா மிளிர்தரச் சிறிது நாணுன்
சத்துவ குணத்தோர் தாமே விழைதரு
வித்துறழ் ஞான விளக்கொளி யானுன்
வேதமு மிமையா விண்ணவர் திரளும்
போதமா தவரும் புலரா வண்ண
மானிடர் தமையும் வதைத்துணுங் கனக
னூனிட ருதிரத் துடனுணற் குறித்தோர்
தூணினும் வந்தா ணுதலிற் றொழுவார்ப்
பேணிட லன்றிப் பிறிதொர்கட் டிலனே. (௩௫)

சந்தக் கவி.

தத்ததந்த தன—தானனதனன.

கட்டி லும்பழுதின் மெத்தையுஞ்செவிகொள்
கட்புயங்கமென—வேமிசைதுயின்மால்
கற்பகஞ்சினைமு கிற்புரைநதவிரு
கைத்தலங்கொள்கொடை—யாளரைமறவா
னெட்டிரண்டுமறி யத்துணிந்துமுய
லிச்சைகொண்டவர்க—ளூடினிதவிர்வோ
னெக்கியம்பலவி தித்தவநதனை
யிக்கினன்றனைமு—ளருள்கரியோன்
மட்டில்விஞ்சையர்வ ழுத்தரங்கநகர்
மத்திகொண்டுவளர்—சீர்மிகநினைவார்
மற்பெருந்தகுவ ரைப்பல்குன்றொடும
வச்சிரங்கொண்மக—வானையுமதியார்
கொட்டிலங்ககன முற்றவஞ்சிநிகர்
கொச்சைமங்கையர்க—ளாவலின்முழுகோர்
கொற்றவன்குருவெ னத்துணிந்தவர்கள்
குற்றமுங்குணமெ—னுமொழிபவரே. (௩௬)

### வெண்பா.

பவமொழிக்க வாஞ்சிப்பீர் பாருலகில் வேறோர்
தவமுயல வேண்டாந் தமிழா—னவாசமு
மொன்ற வரங்க முடையானைப் போற்றுமினோ
பொன்றலுந்தீர்த் தாள்வான் புகுந்து. (௫௭)

### கட்டளைக் கலித்துறை.

புகுங்கலையாயிரங் கோடியுள்ளான்றனைப் போற்றுநர்க்குத்
தகுந்ததுணர்ந்துணர்ந் திவானரங்கந் தனிற்றுயில்வான்
மிகுந்தவதாரஞ்செய் வானென்னுநூல்களின் மெய்யிதன்றோ
நகுந்தவளப்பணி பூண்டுவெண்பூவளர் நாமகளே. (௫௮)

### கோச்சகக் கலிப்பா.

நாமகளுக் கொருமாம னளிர்திருப்பாற் கடற்றோன்று
மாமகட்கும் பூமகட்கு மணவாளன் மலைக்குலத்தின்
கோமகட்கு முற்பிறந்தோன் குலவரங்கக் கோயிலுளான்
காமகளிர் துயர்தீர்க்கக் காத்தாழி யெடுத்தானே. (௫௯)

### கட்டளைக் கலிப்பா.

எடுத்த குன்றமொன் றூற்பசுக் கூட்டமுற்
　　றின்பு றப்புரந் தாயிமை யார்கண்மேற்
கடுத்த தானவர் வேரறக் காய்ந்திட்டாய்
　　கடைய னேனுயக் காப்பது பாரமோ
கொடுத்த லேதொழி லாம்பலர் போற்றுசீர்
　　குலவு தென்னரங் கத்திருக் கோயிலிற்
படுத்த நாரண னேயடி யார்செயும்
　　பாவ நோயறப் பார்த்தருள் பண்பனே. (௬௰)

### அம்மானை.

### வெண்டளை.

பண்பாடும் வண்டுமலி பைந்துளவத் தாரரங்கன்
வெண்பாவொன் றூலுடன்போய் மீண்டவன்கா ணம்மானை
வெண்பாவொன் றூலுடன்போய் மீண்டவனே யாமாயிற்
றிண்பாப் பலபுகன்றூற் செய்வதென்கொ லம்மானை
　　செய்யதடந் தாமரையிற் சேர்விப்பா னம்மானை. (௬௧)

### எண்சீர் விருத்தம்.

நம்மை யல்லது பொருளிலை யென்றே
　　நவில்கின் றூரினு நானிழி வடைந்தாற்
செம்மை யார்தநின் றிருவடித் தொழும்பே
　　சிறந்த தென்றசொற் றிறப்படுங் கொல்லோ.

மும்மை யாந்தமிழ் பாடுகின் றிலனோ
முன்னி யெண்பொறி மொழிந்துரு கிலனோ
கொம்மை மென்முலை யார்நடம் பயில்சீர்
குலவு சீரங்கக் கோயிலு ளானே. (௪௨)

எண் சீர்த்தாழிசை.

கோயிலெண்ணி றந்தகோடி குவலயத்தி ருப்பினுங்
கொண்டல்வண்ண மாயவன்கு லாவரங்கமாகுமோ
வேயினைப்ப ழித்ததோண்மி னார்பலோர்நி லாவினும்
வெண்கடற்பி றந்துபூவின் மேவுமாது போல்வரோ
வாயினல்வ ழுத்தியுய்ந்து ளாரனேக ரென்னினு
மறையினைத்த மிழ்ச்சொலிற்செய் மாறனோடு நேர்வரோ
காயினைப்பு ரைந்தினம்ப கைத்திகழ்ந்து வசைபெறு
காவலீரி வற்றைநீவிர் நன்குணர்ந்து சொன்மினே. (௪௩)

ஆசிரியப்பா.

சொன்மல ரொடுபைந் துளவுஞ் சொரிந்து
பன்மறை முதலாம் பகவன் றன்னைக்
கான்மலர்ப் பொதும்பர்க் கவினொடு பொலியத்
தேன்மலிந் திசைக்குந் திருவரங் கத்து
மயிலிய விருவர் மருங்கு சாரத்
துயிலிய கோலந் தோய்தரக் கருதி
லன்னவன் றொழிற்பே ராசை யுண்டா
மின்ன ஞாய மியாவரு மறிதற்
பால தன்று பழயமா தவத்துச்
சீல ரானார் தெளிதரற் பாற்றே. (௪௪)

சந்தக்கவி.

தாத்த தன தான—தந்தன தானா.

பாற்றிரைவெருத நாக்குடைய மூடர்
பாற்றினமுமேகி—நின்றிரவாதே
பாக்குமுலைமாதர் வேட்கையுறலேயொர்
பாக்கியமெனாநி—னைந்துருகாதே
நாற்றிசையினோரும் வாழ்த்தவிளையாடி
நாத்திகர்தமாவி—யுண்டிடுமாறே
நாட்டமுறுசீலர் கூட்டமொடுகூடு
நாட்கருதிநோமென்—முன்பவிராயோ
தேற்றியொருபேடி போர்க்கிசையுமாசெய்
சீர்த்திமொழிவார்கள்—பின்பலையானே

சேட்டையுறவாளர் கேட்கிலிகழ்மேன்மை
சேர்த்தபுயமீதொர்—குன்றணிமாயா
காற்றினிகலான பாப்பரசின்மீது
கார்க்கிறைவன்வாழ—வைங்கரன்மேனாள்
காட்டுநதியூடு தோற்றிமறையாத
காத்திரவிசேட—மொன்றியமாலே. (௬௫)

### வெண்பா.

இயமாநின் றாதாகளே யென்மேல் விடாதே
சயமாது சேரரங்கற் சார்ந்து—நயமார்ந்த
பாடற் றமிழாற் பழிச்சுகின்ற பண்புறுநா
ளூடற் கிளேயே னறி. (௬௬)

### கட்டளைக் கலித்துறை.

அறிவறியாமை யிரண்டுந்தவிர்ந்த வதீதநிலை
குறியிறந்துள்ளதென் றெண்ணிமைநையேனலர் கோகனகப்
பொறிமரு மாபுடைப் பூநிலவெறபெனப் பொன்னரங்கத
தெறிமணிக்கோயி னடுவேகிடபபதென றெண்ணுவனே. (௬௭)

### கோச்சகக்கலிப்பா.

எண்ணுமனப பாவணைக்கு ளெட்டியுமெட் டாவரஙகன்
விண்ணுமண்ணு மளந்தபதம் விழையாதுண் மெலிநதாலும்
பண்ணுலவா நான்மறைச்சொற் பயன்முழுதுந தமிழ்செய்தோ
னண்ணுநிலை யடைந்தாற்போ லறைவதனுக் கஞ்சேனே. (௬௮)

### கட்டளைக்கலிப்பா.

அஞ்ச லென்றொரு கைம்மலர் காட்டியே
யானை யொன்றை யளித்தவ ரஙகனென்
னெஞ்ச கத்திடை பல்விசை தோன்றியு
நீச வெஙகலி நீடுதற் கென்செய்வேன்
செஞச ரோருகப பாவையுங் கண்களாற்
சிறிது நோக்கில டீர்வறி கின்றிலேன்
*பஞ்ச பேதத் திலங்கொரு பூமியும
பலபல் வாறு பதைத்துழல் கின்றதே. (௬௯)

### அம்மானை.

### கோச்சகம்.

உழலுமனப் பேய்க்குரங்கை யோடவொட்டா மற்றடுத்துக்
கழலிணையிற் கட்டவல்லான் காரரங்க னம்மானை
கழலிணையிற் கட்டவல்லான் காரங்க னுமாகிற்
பழவுரற்கட் டுண்டழுதல் பாசாங்கோ வம்மானை
பாசாங்கன் றூய்ச்சியர்கள் பாசத்தா லம்மானை. (௭௰)

* பஞ்சபேதம்—குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல், என்பன.

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தாலமாதழப் பசுக்குலந்தளர்வுறச் சாதமொடறமாயக்
காலமுங்கொடுங் கருமமுஞ்செயும்பிழை கழிக்குமாறுணராயோ
மூலமேயெனக் கூவியகரிக்கருண் மூதருளிழந்தாயோ
சீலவேதிய ரநுதினம்வழிபடுந் திருவரங்கத்தானே. (௯௪)

## பதினான்குசீர்ப் பெருந்தாழிசை.

தானேயுலகு மாகியதற்கோர் தலைமையும்பெறுந் தகவுளான்
சதுமறைப்பிர மாவையுந்தியிற் றந்தவன்செழுந் தாமரைத்
தேனேயனைய மங்கையொருத்தி தினமும்வைகிய மார்பினான்
றெண்ணீர்க்காவிரி யாற்றினிடையிற் றிகழுநம்பெரு மாலவன்
வானேயென்னினும் வாயுவென்கினும் வன்னியேயெனச் சொல்லினும்[டா
வனமென்றேநினுமண்ணென்றெண்ணினும்வம்பென்றெட்டுணைமறுத்தி
ஞானேயுரைக்கின்றேனென்றெண்ணன்மினளிர்தென்குருகைப்புரிக்குளே
நான்குமறைக்குந் தமிழ்செய்துற்றவ னவின்றுளான்மிக நாடியே. ()

## ஆசிரியப்பா.

நாடி நாடி நவையில்சீ ரரங்கம்
பாடிப் பாடிப் பச்சை மாய
னெழுத்தோ ரெட்டு மிசைத்தரு ளேற்றி
வழுத்திரந் துள்ளார் மாட்டிகல் விளைப்போர்
தேவர் தானவர் முதற்படச் செப்பு
மியாவ ராயினு மிசையொடு பொலியார்
வினைதை வாழ விண்ணவர் தம்பாற்
கனசமர் விளைத்துக் கடங்கவர் நினைகைச்
செஞ்சிறைப் பறவைத் திறற்பெருங் கோவும்
வெஞ்சினக் குரக்கு வேந்தின் மந்திரியும்
போன்றவ ராலுயிர் பொன்றியென் று
மான்றவெந் நரகத் தமிழ்ந்திடு வாரே. (௯௫)

## சந்தக்கவி.

தனன தந்ததன—தந்தன தானா.

அமிழ்த முண்டமத கயமி வர்ந்துலவு
மளவி லிந்திரர்வ—ணங்கியதாளா
னதுவி தென்றிக லு மதம னந்தமுடை
யவர்க ளும்பெருகி—டும்படியாள்வா
னுமியு றழ்ந்திரத மணுவு மின்றியசொ
லுரைசெ யும்புலவ ரும்புகழ்வாழ்வா
னுயர ரங்கநக ரிடைகி டந்திரையு
முரக மொன்றின்மிசை—கண்டுயில்வானே

ணிமிலி லங்கும்விடை முருகி லம்பிகையு
மினைய மைந்தனுமு—டன்கொண் மயேசா
வெழின்ம லிந்தசத தளம லர்ந்தமல
ரினிலி ருந்துலகை—முன்றருவானே
தமிழ்செய் கும்பமுனி வனுநி கர்ந்தபல
தவர்க ளுங்கொளுந—லம்பெறுமாறே
தனிவ ருந்திமுய லெனது நெஞ்சிலுறு
தளர்வ றும்படிமொ—ழிந்தருள்வீரே. (௱௪)

வெண்பா.

வீரைவிட முண்டானும் வேதாவு மேத்தெடுக்குஞ்
சீரை மருவுந் திருவரங்கா—நீரை
விழைந்தொருகற் பமிங்கு வெட்டுமென்னுண் மெய்ம்மை
தழைந்திலங்கச் செய்வாய் தயை. (௱௫)

கட்டளைக் கலித்துறை.

தயையொருசற் றுமில் லாக்கொடியோர்க்குந் தனப்பெருஞ்சீ
ரியைதருபார்மிசை நல்லோர்பல்லோர் துய ரெய்துவதேன்
குயையுறுகைத்தலத் தார்பற் றுநான்முற் றுங் குற்றத்தவோ
செயைவளர்மார்பகத் தெந்தாய்தண்காவிரிச் சீரங்கனே. (௱௬)

கொச்சகக் கலிப்பா.

சீரங்கக் கோயிலிடைத் தினந்தினங்கண் டுயின்றருளுங்
காரங்கப் பெருமானைக் கருதாத கடையரெனப்
போரங்க மிடிப்பேயாற் புலரவெனை விடலாமோ
வீரங்கற் பவர்போற்ற விளங்கெழிற்செந் திருமாதே. (௱௭)

கட்டளைக்கலிப்பா.

திரும டந்தையுந் தெண்டிரை வாரியாஞ்
சேலை யாளுந்தன் சேவடிப் பூத்தொடக்
கரும நூற்புல வோனுந்தி மீதுறக்
கண்டு யின்றருள் காரரங் கேசனே
யொரும னத்துட னுன்னரு ளடிலே
னூர்க டோறு முழன்றிரந் தேனென்மேல்
வரும முண்டுகொ லின்றெனி லியானுமோர்
வள்ள லாக வரங் கொடுத் தாண்டிடே. (௱௮)

அம்மானை.

வெண்டளை.

ஆண்டுதொறும் வீடணன்வந் தாதரிக்குஞ் சீரங்கன்
வேண்டுமவர் வேட்கை விரைந்தருள்வா னம்மானை
வேண்டுமவர் வேட்கை விரைந்தருள்வா னுமாகி
லீண்டுபுகழ் மாவலிபா லேனிரந்தா னம்மானை
யிரந்த விதங்கருதி லேமாற்றே யம்மானை. (௱௯)

## எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தேயமெங்கணுஞ் சென்றுசென் றிரந்துழ றிவினைப்பயனீக்கி
நேயமிக்கிரப் பவர்விருப்புதவுநன் னிலையெனக்கருள்வாயோ
பாயலாமெனப் பாம்பரசினைக்கொடு பழுதில்பொன் னரங்கத்தே
சேயகண்மலர் குவித்திடாதறிதுயி றினஞ்செயுந்திருமாலே. (௩௰)

## எண்சீர்த்தாழிசை.

திருமாதொடு புவிமாதனை திண்டோளொரு நான்கிற்
சிறியேனுவல் கவியும்புணர் தினமொன்றுதி யாதோ
வருமாந்தப சுக்கூட்டமு மறவோர்களு மிடரா
லழும்வெந்துயர் கலியன்றனை தகமோடழி யாதோ
மருமாலிகை கனகஞ்சுடர் மணியோடுபு னைந்தாய்
மலயத்தமி ழினுமெண்ணிலர் வாய்ப்பாடல ணிந்தா
யொருமாநதி யிருகூறுற வூடோங்கும ரங்கத்
துற்றுய்ப்பிர மனைவேலுடை யுதவும்புக ழோனே. (௩௧)

## ஆசிரியப்பா.

புகழ்நனி பெறநிற் போற்று மென்னை
யிகழ்வொருங் குறுமா றென்செய் கின்றாய்
நின்னடித் துணையே நினையச் சோம்பார்
பொன்னடித் துகளும் புனைந்துளே னென்றே
வுன்றிரு நாமந் தொழுதா வண்ணந்
தன்றிரள் செவியிற் றுனைவர் களிப்பக்
கண்டை தூக்குங் கடுங்குணைத் தானும்
பண்டை நாணின் பதம்புகல் படிறே
வன்ன சீர்த்தி யடியேன் றனைக்கு
ழின்ன னீத்திலை யெனினிசைப் படுமோ
காவிரி யாற்றிற் கவின்றரு மாங்கக்
கோவிலி னுளுங் குலவுகொற் றவனே. (௩௨)

## சந்தக்கவி.

### தத்தன தனன—தத்தன தனன.

கொற்ற வரளிமழை முற்பெய் தேயுததி
குட்ட மாவடித—ரக்கருவரசோ
கொச்சை யாயர்மனை யிற்பன் மாதர்முலை
குத்த லால்வலிமி—கப்பெறு புயனே
மற்ற வாவாசர் பற்பலோர்களைவ
தைத்து வாகைபுனை—கைப்பாசினனே
மச்ச மாயலைக டற்குளேகிமுன்ம
றைக்கள் வாறுயிர்கு—டித்திடுமவனே

செற்ற தீடுகன கற்கொல் வாளொருதி
றத்த சியவடி—வத்தவிர் பவனே
திக்கெ லாமிகவ முத்தா மாவலிதி
டுக்க மாமுருவெ—டுத்தவலவனே
பற்ற லார்குலந டுக்க மாசமிளிர்
பச்சை மேகநிகர்—பொற்புடை யவனே
பைத்த பாய்நடுவி ரித்த காவிரிவி
பத்துறுதருளு—மச்சுதவரியே. (௯௩)

வெண்பா.

அரியோமென் பார்க்கிகலா மாடகனைக் கீன்ற
பெரியோ னரங்கப் பெருமாள்—கரியோ
ரிரண்டுகும்ப நீராட்டு மேந்திழைகோ னைமச்
சரண்டுணைமற் றெல்லாஞ் சலம். (௯௪)

கட்டளைக் கலித்துறை.

சளங்கண்டுநீக்குந் தகுதியின்றாகிலென் றண்டமிழ்ப்பா
வளங்கண்டுசொன்னசொல் லெல்லாம்பொய்யோசெய்ய வாரிசப்பூந்
தளங்கண்டுவொல்கெழிற் கண்ணரங்காதவர் தந்நிமித்தங்
குளங்கண்டுநேர்சொல்லி தன்னோடுகாணிடங் கொண்டவனே. (௯௫)

கோச்சகக்கலிப்பா.

கொண்டணிகர் திருமேனி குலவவொரு கனவிலுனைக்
கண்டமனத் திலுங்கிய கலிக்கொடும்பேய் வாலாமோ
வண்டமிழ்ப்பா வில்லயேனும் வழங்காதன் முறைதானோ
வண்டர்குழாம் போற்றிசைப்ப வணியரங்கத் தமர்வானே. (௯௬)

கட்டளைக் கலிப்பா.

வான மாதியைம் பூதமுங் காத்தருள்
வள்ளல் காவைச மலர்த்துணர் மேனிமா
லேன மாயுநி கழ்ந்தன னென்னின்மற்
றெந்தரூப மெடுப்பதற் கொல்குவா
னை தாலவன் றன்னடி யாரையே
யவனென் றெண்ணியுள் ளன்பொடு கும்பிட்டுத்
தேன ருப்பொழிற் சீரங்கத் தேயுறல்
செய்த வங்களுட் சீரிய தாகுமே. (௯௭)

### அம்மானை.

#### வெண்டளை.

சீரங்கக் கோயிற் றிருநெடுமால் செம்மலர்க்கட்
காரங்க மன்றிக் கடவுளரின் றம்மானை
காரங்க மன்றிக் கடவுளரி னாமாகி
னீரங்கச் சென்னி நிருத்தனு ரம்மானை
நிருத்தனொரு பாதியிடை நோந்தவன்கா ணம்மானை. (௰அ)

### கலிவிருத்தம்.

காணம் வேண்டுபு கதறிடுங் கடையனேன் கருது
மாண நின்னருட் காநகொலா காகென வகற்றேல்
வாண னாயிரந் தோளுக வடிக்கணை தொடுத்த
கோணல் வில்லுடைக் கோவலா வரங்கமவாழ் குருவே (௰கூ)

### எண்சீர்த் தாழிசை.

குருவரங்க நாகமென்று கூறிடற்கி சைந்திடாக்
கூட்டமொது போகமுங்கொ ளாதிவன்கு லைந்தநான்
பெருவரங்க ளாயிரம்பெ றத்துணிந்து நின்றுளேன்
பெற்றிடச்செ யாதுமாய்ந்து பிழைபடச்செய் வான்கொலோ
வொருவரங்க னுவினிறகொ டுத்தசெம்ம லர்ப்பொனே
பூட்டுமன்னை பானுநீதது ணாந்துமந்த வுத்தமா
விருவரங்கை மூடொளிக்க வொருவனுகி மூவரென
றேத்துவார்க்கு மங்கனுடு மெந்தைபாலி யம்புமே. (௨௰)

### ஆசிரியப்பா.

இயமவலார் தம்பா லீரிரு வதனத்
தயனெனத் தொனிதந் தாடல வல்லார்
தம்மெதிர் மதனன் றனெனக் குலவி
யம்மெயிற் பொன்னூ ரவாக்கொடுப்ள் ளரசா
மெனவலி காட்டி யிராகக்கூத் தருவா
மனவலி குன்ற மாருதி போலுஞ்
செயங்கொடு நிலவச் சிந்திக் கின்றேனை
கபங்குற மிடியுறக் கலக்கன் முறையோ
வல்லிக் கேணி யதனிடை யனபாற்
சொல்லிய செம்பொற் றெரைகவழுக் கேனு
மிக்கணந் தீர்த்தென் னிருந்தவ நெறியிற்
சிக்கலுற் றலையாச் சீர்பெறச் செய்வாய்
வரைதரப் பெறுஅ மறையோர் நான்கு
மிசைதரு சிறப்பி னீடின்மூ தரங்க
நாரண னென்றோர் நற்பெயர் புனையுங்
காரண ஞானக் கருணைவா ரிதியே. (௨௰௧)

## சந்தக்கவி.

### தானன தனத்த—தன தன தானு.

வாரிதி யுடுத்த பார்மக ளழச்செய்
வார்குடி கெடுக்க—நினைதறகாதோ
வானவர் பதத்தி னாசையும் வெறுத்த
மாதவர் கருத்து—முடிவுபெறுதோ
சீரிய தமிழ்ச்சொ லானுனை வழுத்த
ற்றெனு மவர்க்கு—மருள்புரிவாயோ
தேடிய தனத்தொ டாவியு றுமற்பர்
சேகர முரைக்கும்—வகைதொலையாதோ
நீரியல் சடைச்ச தாசிவ னுளத்து
நீமரு வுநுட்ப—மறிபவாரோ
நீலம லைவெட்கு கோலமொ டெனக்கு
நேரில கிடற்கு—னுளமிசை யாதோ
காரிய மனைத்து மாகிய வைபெற்ற
காரண பதத்து—நிலைவுகிலாயோ
காவுடை யொருத்தன் வாழ்வுற வுதித்த
காவிரி யிடைக்கண்—வளர்கரியோனே. (௭௨)

## வெண்பா.

கரியவனைச் சங்காழிக் கையானை யார்க்கும்
பெரியவனை யெங்கள் பிரானை—வரியரவப்
பாய லரங்கநகர்ப் பள்ளிகொண்டான் றன்னையனபா
லாயவல்ல நெஞ்சே யருள். (௭௩

## கட்டளைக் கலித்துறை.

அருளாழியில்வரு மாரமுதாஞ்சித்தி யானந்தமே
பொருளாகக்கொண்டு முயல்வேனையின்னம் புழுங்கவிடேன்
மருளாளரோர்வரு மானங்குலாம்பொன்னி மாநதியிற்
சுருளாகப்பாம்பணை மேற்சலியாது துயிலையனே. (௭௪)

## கோச்சகக் கலிப்பா.

ஐயமின்றித் திருவரங்கத் தரவணைமேற் றுயில்வானைக்
கையனந்தந் தலையனந்தங் காட்டிடவும் வல்லானை
மெய்யருணர் வார்சமய விகற்பமெனும வேலைபுகும
பொய்யாறி யாரவர்பாற் புகன்றாலும் போர்வருமே. (௭௫)

## கட்டளைக் கலிப்பா.

வருமச் சிந்தைத் தருவர்தங் காலனோ
வான நாடரை வாழ்விக்கும் வள்ளலோ
தரும தேவதைக் கோர்பெருந தோழனோ
சத்தி யததலை மைததனித் தெய்வமோ

கருமம் பத்திமெஞ் ஞானமென் றுள்ளமுக்
காண்ட முங்கணிக் குங்கருங் காரெனத்
திருமகட்கும் புவிக்குமொர் கொண்கனுச்
சீரங் கத்திற் றிகழ்தரு செல்வனே. (எசு)

அம்மானை.

வெண்டா.

செல்வமலி கோயிற் றிருவரங்க நாதனுக்குக்
கல்வரைகா டாழி கவிகையா மம்மானை
கல்வரைகா டாழி கவிகையே யாமாகில்
வில்வரையர் போற்றும் விறலாறே வம்மானை
வேதங்க டந்தவருண் மெய்யனே யம்மானை. (எஎ)

எண்சீர் விருத்தம்.

நேயமொரு கோடாறு கோடிவிதத் துள்ளே
னெருப்பனைய கோபமுறு நீசர்பகை மிக்கேன்
காயகநெஞ் சுடைக்கயவ ரிடமிரக்க நாணேன்
கடனெழுதி நீகொடுத்த கைச்சீட்டும் பிழையோ
மாயனெனும் பெயர்ப்பயனை யென்னிடங்காட் டாதே
மலிகருணை நிதியெனும்பேர் வயிற்பயனே காட்டிச்
சேயவரு டொருவனென வென்னைவைக்க வேண்டுஞ்
சீரங்கக் கோயிலிடை திருக்கண்வளர் வானே. (எஅ)

பன்னிருசீர்த் தாழிசை.

திருக்கண் வளருந் தலத்தொன்றுஞ் சீரா ரனந்தைப் பதியினிடை
சிறியேன் றொடுக்குந் தமிழ்கவர்ந்து செம்பொற் பணமு மருளில்லாய்
கருக்குமிடியாற் றளர்கின்றேன் கண்டுமரங்கத் தினுக்கிந்நாள்
கவிபாடெனக்கேட் டணிகின்றாய் கருத்தெவ் விதமோ வறிகில்லே
னிருக்குமுதனுன் மறைப்பயனீ ரிரண்டுங்கொடுத்தா னலமன்றே
லேதாயினுமொன் றிடவேண்டு மியாதுமுதவா தேமாற்றே
லருக்கனிகர்சீ ராழியங்கை யரசேயிலங்கைக் கிறைநிமித்த
மயோத்திநகர்விட் டெழுந்தருளி யணிக்காவிரியூ டமர்வானே. (எகூ)

ஆசிரியப்பா.

அமர ரியாரு மரசுட னுய்யத்
தமரொடு தலைமைத் தானவர் மாயச்
செய்வா னனந்தஞ் சீருருக் கொண்டாய்
வைவா ளேந்தி மாமுகங் காட்டி
வருவா யென்று மறைமணங் கமழுந்
திருவாய்ப் புலவோர் செப்பு கின்று

ரதுவரை புவிமின் னழுதுலைந் தானுஞ்
சதுமுகன் வகுத்த சண்மதங் களுக்கோ
ராதர மாகு மானினம் வதையாற்
போதவும் வருந்தப் போகா தந்தோ
விந்நா ணீயே யெனினு நின்னும
முந்நான் கோதோர் முனிவர னேனும்
வந்தவை தவிரும் வகைசெயல் வேண்டு
மிந்த விதப்பே றிரப்பது முன்ற
னருளசை வென்றே யகங்களிக் கின்றே
னிருண்மலத தசைப்பா மெய்யிலெங னுய்வேன்
குரங்குலாவு சோலை குலவு சோலைட்
டரங்கக் கோயி லாண்டவச் சுதனே. (அ௰)

சந்தக்கலி.

தனன தன தந்ததன—தனன தன தானா.

சுதருமட மங்கையரு முதலியவர் பந்தவினை
தொடர்தரவ ருந்துநரு—ளெனையும் விடலாமோ
சுரருலகி னின்பம்வரு மெனமகமு யன்றினிது
சுடுதசைய ருநதுநரு—நகுதுயர் கெடாதோ
மதநெடுவி ரிஞ்சனெனு மிருபுதல்வ ருமபெரிது
வருமமெனி டஞ்செயனி—னுளமறிவுறாதோ
மலர்மகளொ டமபுவியு முடனுறவொா செங்கனக
வடிவுறுக கநதனின்முன்—வரவிசை வுறாயோ
சததளமு றுங்கமல மலரனைய கண்களகொடு
சகலபுவ னங்களையு—நெடிதருள்விநோதா
சமயநிலை கண்டளவி லமைவருமை கண்டமுணர்
தவமுனிவர் சிநதைநடு—மிளிருமிரு பாதா
வதலமவரை சென்றுதிகழ் கனகநிகர் கண்கொளட
லவுணனைவ தஞ்செய்துய—புகழ் புனைவராகா
வரவரசெ னும்பொருவி லமளிமிசை சநததமு
மணிபொழில ரங்கம்வளர்—பெரியபெரு மாளே. (அக)

முற்றிற்று.

ஆ கவி ௭௱அ.

தெய்வமே துணை.

# காட்சிப்பத்து.

ஆவினந்தளர் வுறலொழித்தன்றி யரியவைகுந்த மருளினு மமையே, னீவிரும்பியெற் கொருவரமேனு நிசத்ததாத்தர நினைத்திலையந்தோ, பாவி பைம்பொன்மாற் பெருக்கினர்போன்றே படியிலிங்ஙனம் பாதவிக் கின்றேன், காவிரிக்கிடை துயிலரங் கேசா கருடன் மீதருட் காட்சிதந் தருளே. (க)

பனகபூடணச் சிவனுநான் முகனும் பருப்பதக்குலப் பகைவனும் பிறரு, முனது கோலமென் றேசரு திடுநா னுலகர்காணுறு முரனெய் தொணுதோ, சனகநாயக னுவுதித்ததற்பின் றனியயோத்தியைத் தணந்த சீரங்கா, கனவிலன் றுநான் கண்டவாநனவிற் கருடன்மீதருட் காட்சிதந் தருளே. (உ)

நற்சுகோதய மேவிழைவுறுநான் ஞானமின்றிய நரரையுமதித்துப், புற்சுணங்கலொத் தலைவுறக்காணல் புகமுன் றெண்ணினை போலுநிற் கழகோ, விற்சுலோசன மாயிரமுடையான் வெருளமேகங்கள் வெட்குற வொருக்காற், கற்சுமந்துமான் புரந்தபொன்னரங்கா கருடன்மீதருட் காட்சிதந்தருளே. (ங)

ஞானயோகியர் நெஞ்சகந்தோறு நடனமாடிய நல்லரங்கேசா, பான லன்னகண் மடந்தையர்முதலாப் பகருமேடணை படர்தருகொடிதான், மானநோய்மிகத் துயர்செயநொந்தேன் வரமொன்றாயினும் வழங்கிலை யந்தோ, கானமார்த்தபைந் துளவின்மேலாணை கருடன்மீதருட் காட்சி தந்தருளே. (ச)

உட்செருக்குறு மிகலவர்தமைக்கண் டொல்கிநாடொறு முழன்றயர் கின்றே, னெட்டெரயந்தாற் கிசைகுதியாயி னிகபரங்களுக் கேற்றமெய் துறுங்காண், மட்செய்நான்முகற் பயந்தபூவுந்தி மலர்ந்தகார்புரை மாலரங் கேசா, கட்செவிப்பணி யணிதருசெம்பொற் கருடன்மீதருட் காட்சிதந் தருளே. (ரு)

தண்ணிலாவிய காவிரியிடையிற் றமநியங்கொடு சமைத்தபொற் கோயி, லுண்ணிரந்தர மறிதுயிலமரு மொருவயாவையு முண்டெனிது மிழ்ந்தாய், பெண்ணிலாணிலென் னிகர்துயருடையார் பேசுதற்கிலர் பிரம ணுதியராங், கண்ணிமைப்பரி யாரெலாஞ்சூழக் கருடன்மீதருட் காட்சிதந் தருளே. (சு)

புவிமகட்குமா மலர்த்திருமகட்கும் போதவின்பருள் பொன்னரங் கேசா, தவிசிலுற்றல காள்பவர்நீதித் தவறுந்தீர்த்திடுந் தனித்திறல் வேட்டே, னவிவுறுதெனக் கதுதரவேண்டு மற்பமாந்தரொ டலமரப்பா ரேல், கவியினத்துயர் மாருதிவியக்குங் கருடன்மீதருட் காட்சிதந் தருளே. (எ)

அத்தியொன்றருங் கானகத்தொருக்கா லழைப்பவோடியன் றரு ளரங்கேசா, பத்தியில்லவர் போற்பல விதத்தியான் பாதவிக்குமிப் பாடறி கிலேயோ, சித்தியேமுதல் வேண்டுமப்பாலே திருவடித்துணை சேர்கதி வேண்டுங், கைத்திறத்தொடு சிறைத்திறம் பொலியுங் கருடன்மீதருட் காட்சிதந்தருளே. (அ)

மரணமஞ்சியோர் தூணிடையினுநீ வாழ்கின்றாயெனு மகவுயற் பொருட்டா, விரணியன்குடர் புனைதாமடங்க லேற்றுருக்கொளு மெழி லரங்கேசா, சரணநாண்மல ரேமிகநினையுந் தவஞ்செய்யேன்மனந் தனை முதற்கொடுசொல், கரணதண்டமுஞ் செய்திடமாட்டேன் கருடன்மீத ருட் காட்சிதந்தருளே. (௯)

பம்புநீர்பொரு நைத்திருக் குருகைப பாலனுதியர் பதின்மர்சொற் புனைந்தாய், நம்புமென் றுதிக் கவிகளாயிகழே னாணுதமிழ் நசைமலி யரங்கா, வம்புராசியை நிகாதிருமேனி யழகும்பூண்களு மாடகக்கலையுங், கம்புமாழியுந் திகழுவெனவிழிநோ கருடன்மீதருட் காட்சிதந்தருளே. (௰)

முற்றிற்று

ஆக செய்யுள் எாயஅ.

தெய்வமேதுணை.

---

## புகழ்ப்பத்து.

### அறுசீர்த்தாழிசைகள்.

ஆதியுமநாதியுந்தன் கோலமா யரங்கமத் தியில்வள ரண்ணலே, சாதி யும்பல் சமயமுந் தாண்டியுந் தயங்கவென் றன்னைவிட றன்மமோ, காதி யுண்ணு நீசர்களைக் கறுவியே கருணைநீ லிநிறுவக் கருதினேன், மேதினி மங் கையைமக வாய்பெறும விண்டுசித்தன் புகழெய்த வேண்டுமே. (௧)

செய்யவளுமை பைந்துளவு மார்பினிற் சேரவணிந் தரங்கத்தொர் சேடன்மே, லையர்களு மாதவருஞ் சூழவே யறுதினங் கண்டுயிலு மப் பனே, பொய்யடிமைத் தன்மையுமில் லார்கள்போற் புண்படுகின் றேனி னிசை போற்றியே, மெய்யடியர்க் கானபணி செய்ததோர் வேன்மறவன் புகழெய்த வேண்டுமே. (௨)

பானிறச்சங் கொன்றுமட லாழியும் பற்றியரங் கத்தினிது பள்ளி கொண், டானினமின் புறக்குறித் தேத்துவா ரருந்தமிழ்ப் பாடல் கொள்ளுமச்சுதா, மானிகர்கண் ணார்முதற்சொ லேடணை வழிக்கொடு போய்ப்பெரிது வாடுநான், வேனின்மத னேருமெழி லைவராம் வேந்தர் பெரும் புகழெய்த வேண்டுமே. (௩)

பண்ணுடைய நான்மறைசொ னான்முகன் பதுமவுந் தியிலொரு
பாலனை, நண்ணுறச்சி ரங்கநகர்க் கோயிலி னனந்தலைக் கண்டுயிலு நாரணா,
மண்ணுலகின் புறச்செய னாடியே மாறிலருட் பேறடைய வாஞ்சித்தேன்,
விண்ணுலகி னாதனை யாதியா மிக்கவர்தம் புகழெய்த வேண்டுமே. (௪)

ஆலைநறும் பாகனைய சொற்களா லகமுருக் கும்பலப லாய்ச்சிமார்,
சேலைகவ ராடல்பகர் வார்க்கெலாந் திருவரு ணல்கரங்கச் செல்வனே,
காலையுச்சி மாலையெனும் போதெலாங் கருதிக் கருதிமிகக் கன்றினேன்,
மேலையும்பர் கோன்முதலி னோர்களு மெச்சுபெரும் புகழெய்த வேண்
டுமே. (௫)

நன்றியறி யாத்தகுவ ரூரெலா நாசமுறப் போர்செயுங்கை நாரணா,
வின்றிணையில் சீரங்கம் பாடென்று யேத்திசைக்கின் றேன்றனையெசெ
யாதெனேல், கொன்றிரையுண் ணும்புலையர் கைக்கொடுங் கோலொ
ழித்து ஞாலமுயக் கொள்வதால், வென்றியநு மந்தன்முதல் வானர வீரர்
பகர் புகழெய்த வேண்டுமே. (௬)

கடவுளர்க்கெல் லாமரச னென்றே கையிடத்தொ ராழிகொண்டு
காவிரி, யிடமிருக்குந் தென்னரங்கக் கோயில்வா யாவுமறி துயில்கொள்ளு
மீடுளாய், யுடன்முதற்சொன் மூவகையு மீந்துளேற் கொன்றுநல்கி டாதி
ருக்கொ ணாதுகாண், விடவரவப் பூண்வயின தேயனோர் வீரர்மகிழ் புக
ழெய்த வேண்டுமே. (௭)

எம்முதலுந் தன்வடிவ மேயெனா வெண்ணுமவர் சிந்தைநிக ரீடுசான்,
றைம்முகன்மு நாள்பரவு சீர்த்திதோ யரங்கமத் தியிற்றுயி லையனே,
பொய்ம்முதிர்பொல் லாரிடத்து மேற்கவே போகவிடு பாழ்மிடியிற் புண்
பட்டேன், வெம்முதலை வாயினின்று முய்ந்ததோர் வேழமொக்கும் புக
ழெய்த வேண்டுமே. (௮)

செப்பியன்மென் கொங்கைமட மாதரார் திரளுநறு பொன்னகரிற்
சேர்வமென், றொப்பிமகத் தானுகர்பொ லாரெலா முணர்வருஞ் சீரங்கத்
தோங்குவாய், முப்பிழையுந் தோய்ந்தமுழு மூடர்நின் மொய்ம்பிகழ்ந்தின்
றேயெனலின் முறையிட்டேன், மெய்ப்பிரக லாதனனை யாதியா மேலவர்
தம் புகழெய்த வேண்டுமே. (௯)

ஆறுசம யங்களுநின் மைந்தன்வா யாக்கியதென் றேயுணரு மறிஞர்
தம், பேறுபெறி னன்றியக மகிழ்வுறேன் பெரியதி ருவரங்கப் பெரும
நின், னாறுமலர்ச் சேவடியுட் புக்கதா னாபிமலர்ப் பிரமன்கை நழுவிய,
வீறுசட கோபன்முதற் பதின்மர்முன் மேயபெரும் புகழெய்த வேண்
டுமே. (௰)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௭௱௨ ௮.

தெய்வமே துணை.

# பொன்னாசைப்பத்து.

## கோச்சகக் கலிப்பாக்கள்.

பதுமமக ளருள்வேண்டிப் பலவாறு முயலுமெனை
யிதுவரைதுன் புறச்செய்தா யினியெந்நா ளுயக்காப்பாய்
மதுமலர்த்தண் பொழிலரங்க மாளிகையி லம்மானே
புதுமைபல பலகாட்டும் பொன்னாசை தீர்த்தருளே. (௧)

நாகமொன்றின் மீதேறி நாடகஞ்செய் நாண்மலர்த்தா
ளூகமுற வேட்டுநனி யுழைக்குமெனை யுணராயோ
சீகரநீர்க் காவிரிசூழ் திருவரங்கப் பெருமானே
போகமுத்திக் காதரமாம் பொன்னாசை தீர்த்தருளே. (௨)

சீரியநான் மறையோர்வாழ் திருவரங்கக் கோயிலிடை
நாரியர்க ளிருவருக்கு நடுத்துயிலு நாரணனே
காரியமுங் காரணமுங் கழற்றுணையென் றுணரார்போற்
பூரியரைக் கெஞ்சவிடும் பொன்னாசை தீர்த்தருளே. (௩)

இந்திரரும் வானவரு மின்பமுற விகலவுணர்
தந்திரமெல் லாமழியச் சமர்புரியுந் தாரரங்கா
மந்திரநான் மறைச்சென்னி வாய்மையுந்தேர்ந் தளிகூரும்
புந்திமயங் குறவிளையும் பொன்னாசை தீர்த்தருளே. (௪)

சீதளநீர்க் காவிரியின் றிருவரங்கப் பெருங்கோவின்
மூதரவப் பாயன்மிசை முழுதறிபொய்த் துயில்கூர்வா
யாதவன்போற் பிரகாசித் தம்புலிபோற் குளிரருட்செம்
போதமரு ளூறநீடும் பொன்னாசை தீர்த்தருளே. (௫)

கல்லதனைக் குடையாகக் காத்தேந்திக் காலியினத்
தல்லல்களைந் தவன்போல்வா ரளவிலரா மரங்கேசா
மல்லன்மலி மாஞாலம் வாழ்வுறவே முயலுமெனைப்
புல்லர்முன்னும் போகவிடும் பொன்னாசை தீர்த்தருளே. (௬)

காழிநகர்க் கள்ளர்பிரான் கவிப்பணியுங் கற்பணியும்
வாழியசீர்த் திருவரங்க வயினேற்ற மாதவனே
யேழிசைமுத் தமிழ்ப்பனுவ லின்னமும்பற் பலபகர்வேன்
பூழியனா டறிதரவென் பொன்னாசை தீர்த்தருளே. (௭)

ஈராறு சமயமுநின் னிணையடிக்கூத் தெனத்தேறும்
பேராண்மை பொறுத்துளநான் பிறர்நகைக்கப் படலாமோ
காரானை காத்ததற்பின் கவினரங்கத் திடைதுயிலும்
பேராழி முகுந்தாவென் பொன்னாசை தீர்த்தருளே. (அ)

செல்லார்தண் பொழிலரங்கத் திருக்கோயிற் சீதரனே
யில்லாமை யெனும்பேய்நின் னிகலாணைக் கடங்காதோ
வெல்லாரும் வெருளவெகு ளிரணியனி லெண்மடங்கு
பொல்லாங்கு செயும்பாழ்த்த பொன்னாசை தீர்த்தருளே. (௯)

ஆரணங்கண் மிகமுழங்கு மரங்கநகர்ப் பெருங்கோயி
னாரணனே வானவர்க்கு நரர்க்குமொரு துணையானாய்
பாரணங்கி னணியாய பதின்மருட னெனைக்கூட்டிப்
பூரணதத் துவங்காட்டிப் பொன்னாசை தீர்த்தருளே. (௰)

முற்றிற்று.

ஆட செய்யுள் ௭௱௩௪.

தெய்வமேதுணை.

## பெண்ணாசைப்பத்து.

எண்சீர் விருத்தங்கள்.

குற்றமுளா னெனப் பலரு மிகழநொந்து
குலைகின்றே னுத்தமரைக் கூடுகில்லேன்
பற்றகன்ற பெரியோர்க்கு மரிதாஞ் சீர்த்தி
பலகருதித் தமிழ்கொடுனைப் பழிச்சுகின்றேன்
செற்றமலி நமதூதர் வசத்தனாகித்
தீராத பாழ்நரகிற் சேரச்செய்யேல்
பெற்றமிவர் வான்விரும்பு மரங்கநாதா
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௧)

ஆதவனைச் சக்கரத்தான் மறைத்துத்தேவ
ரதிசயிப்பப் பகலையிர வாக்கித்தன்பொற்
பாதமற வாற்புரந்த வரங்கநாதா
பலவாறென் றனைத்துயரப் படுத்தவேண்டா
மாதவநா ராயணகே சவகோவிந்த
வாசுதேவாவெனுஞ்சொன் மறக்கமாட்டேன்
பீதகமா லுதிப்பதற்கும் விதையாய் நின்ற
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௨)

மருந்தனைய மொழிமடவார் பலர்க்குமொவ்வோர்
வடிவெடுத்து விளையாடும் வண்மைநாடித்
திருந்தறிஞர் மனக்கமலத் திடத்தும்வாழுந்
திருவரங்கப் பெருமானே தெளிசொற் பாவாற்

பொருந்தவுனைத் துதிக்கும்வித முணராய் போலப்
புண்படுத்திக் கடக்கநிற்கப் போமோ போதப்
பெருந்தவமாம் பயிரினுக்கோர் களையேயான
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௩)

தீயகுணத் தானவர்க்கோ ரியமனாகித்
தேவருக்கு மாதவர்க்குஞ் செவிலித்தாய்போன்
மாயவனே யரங்கநகர்க் கோயில்வாயோர்
மாசுணப்பா யலிற்றுயிலும் வள்ளாலென்பா
னீயறைந்த மாற்றநிசப் படவேநாடி
னெட்டுயிர்த்தெட் டெழுத்துரைக்கு நெறிசென்றெய்த்தேன்
பேயனந்தங் களைக்கொடுருச் சமைத்தாற்போலும்
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௪)

கஞ்சமலர்த் தலையுதித்த மனையுஞ்சேயுங்
கருமேனி யிடத்தமையக் களிப்பிற்கொண்டு
நஞ்சமைந்த வாயரவப் பாயன்மீது
நளிரரங்க மாளிகையி னடுவாழ்வானே
கொஞ்சமுநின் னருளிணக்க மில்லாதார்போற்
குலைகின்றே னென்றொருசொற் கூறிலாயோ
பிஞ்சலவன் முடித்தாலுங் கடக்கமாட்டாப்
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௫)

ஈறுமுத னடுவெனுமூன் றளவுந்தாண்டி
யேக மாய்ப்பலபலவா யெண்ணிலன்பர்
கூறுபுகழ்த் திருவரங்கக் கோயினாப்பண்
கோகனக மலிநீலக் குன்றொத்துள்ளாய்
நாறுபசுந் துளவனைய பாடலென்று
நவிலுமெனக் கிரங்காமை ஞாயந்தானோ
பேறுசிறி தானாலும் வழங்கியப்பாற்
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (௬)

அறப்பயிர்க்கோர் மழையாகிப் பாவக்காட்டுக்
கழலாகித் திருவரங்கத் தமர்கின்றானே
யிறப்பினோடு பிறப்பொழிய முயல்கின்றேனை
யிகதலத்தோர் களுநகவிட் டிருந்தாயந்தோ
மறப்பிணக்க முடையசிசு பாலனாதி
வம்பருக்கு நலஞ்செய்குண மாறிற்றேயோ
பெறப்பெறக்குன் றாதுபெரி தோங்கும்பொல்லாப்
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே, (௭)

அத்தியொன்று காப்பதனுக் கோடிச்சென்ற
வனுப்பாறக் காவிரியா றதனூடான்ற
துத்தியரா வணைக்கிடந்த நெடியமாலே
தொழும்புறுமெய் யடியர்பதத் துகளாவாரி
நித்தியமுந் தலைக்கணிந்தும் வினைப்பேய்க்கோர
நீங்காமைக் கென்னசெய்வே னிலையொன்றில்லாப்
பித்தினுறா ருயிரம்பங் கினமான
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொள்ளே. (அ)

ஆடகனைக் கீன்றுகுடர் மாலைசூடி
யருவியெனச் சொரியிரத்த மனைததுமாநதி
நாடனைததும போறறுதிரு வரங்கக்கோயி
னடுததுயிலு நாரணனே நவிலுமென்சொற்
பாடல்கட்கோா பயனேனு முதவிடாமற்
பலவாறு பாதவிக்கப படுததவேண்டாம
பேடனமபோ னடைகாட்டி விழியாலவாட்டும
பெண்ணாசை நீக்கியெனைப பேணிக்கொள்ளே. (கூ)

பரமானந தககடலி னமுதமாநதும
பதின்மரொடு கூடுமிசசை பழுக்கக்கண்டுந
திரமாய பேறுவழுங் கிலைமிக்கெய்ததுத்
தீமிடிபபாழுங கடலினிடை திளைததேனநதோ
சரமாரி பொழிகருமா முகிலேபோன்று
தண்ணரஙகக் கோயிலிடைத தழைததமாலே
பிரமாதி தேவாநெஞ்சுங் கலங்கததாககும
பெண்ணாசை நீக்கியெனைப் பேணிக்கொளளே. (ய)

முற்றிற்று.

ஆ செயடள எ௯அ

தெய்வமேதுணை.

---

## புலியாசைப்பத்து.

### கலித்தாழிசைகள்.

நெஞ்சகத் துன்னருளே பெற நினைதது காடிலர்போல்
வஞ்சகர் தம்மனைப்பான் மிக மறுகி வாடுவனோ
கஞ்சம லர்த்திருமா தனை காரரங் கப்பெருமா
னஞ்சல ளித்தனையாற் புலி யாசை தீர்த்தருளே. (க)

பூரண தத்துவமோர்ந் தவர் போற்றப் பொன்னரங்கத்
தோரண வும்பணிப்பா யலி லென்றும் வாழிறைவா
காரண காரியந்தேர் கிலர் கணத்துட் புக்குழன்றே
னாரண நிச்சயத்தாற் புலி யாசை தீர்த்தருளே. (௨)

காழுறைப் பாதபமா மிரு கள்ளத் தானவர்தாம்
வீழவு சற்றுணையோ டவண் மெல்லச் செல்லரங்கா
வாழுவி ழைந்தொழியா மிடி வலையிற் பட்டுழன்றே
னாழநெ டுங்கடல்சூழ் புவி யாசை தீர்த்தருளே. (௩)

கனந்த ணைப்புரைபே ருருக் கவினுங் கைப்படையு
மனந்த னிற்கருதா தவர் வாழ்வுஞ் சூழரங்கா
வினந்த னிற்பகைத்தே சம ரியற்றச் செய்ததனு
லனந்தம் வேந்தரைக்கொல் புவி யாசை தீர்த்தருளே. (௪)

இருட்க ருங்குழன்மோ கினி யென்ன முன்னின்று
தெருட்க லைப்புலவோ ருயச் செய்த சீரரங்கா
பொருட்க டன்பெருக்கான் மிகப் புலர்ந்தும் போற்றுகின்றே
னருட்க டற்றுளியாற் புவி யாசை தீர்த்தருளே. (௫)

பைந்தோ கைச்சிகிநா டகம் பயிலும் பூஞ்சோலை
நந்தோ லுங்கரைக்கா விரி நாப்பண் வாழ்முகுந்தா
நொந்தோ ரிற்றலையாய்ப் பெரு நோன்பு முற்றிடைந்தே
னந்தோ வென்னைவிடாப் புவி யாசை தீர்த்தருளே. (௬)

பளப ளீரெனவே மிளிர் பாரச் சக்கரமுங்
களவில் வெண்கோடும் புனை கமலக் கையரங்கா
துளவ மேநிகராந் தமிழ் தொடுத்துன் றுட்கணிவே
னளவினு ள்ளடங்காப் புவி யாசை தீர்த்தருளே. (௭)

பானையொ டோர்பொதுவன் பெரும் பதத்திற் சேரவிட்டுத்
தேனையொக் கும்புனற்கா விரிச் சீரங் கத்துறைவாய்
பூனையிற் சூதுடையார் வினைப் புலைகண் டுள்ளுடைந்தே
னானையைக் காத்தாற்போற் புவி யாசை தீர்த்தருளே. (௮)

ஏடவிழ் தாமரையான் றனை யீன்ற சீர்விரிக்கும்
பாடல்பு னைந்தரங்கந் தனிற் பள்ளி கொள்வானே
மூடவி ரணியனைக் கண முடித்த சீர்மொழிவே
னாடகத் துங்கொடிதாம் புவி யாசை தீர்த்தருளே. (௯)

பொன்படு மார்பகத்தே நறும் பூந்து ழாயுமணிந்
தின்பம லியரங்கத் திடை யென்று நின்றோனே
துன்பமி னிச்சகியே னுனைத் துதித்துய்ந் தோரெனும்பத்
தன்பரு டன்கூட்டிப் புவி யாசை தீர்த்தருளே. (௰)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௭௫௮.

தெய்வமே துணை.

# வயினதேயப்பத்து.

## கலி விருத்தங்கள்.

ஆசுரர்க் கெமனிக ராங்க நாதனைப்
பேசுமென் னோரவன் பிறங்கக் காட்டுவாய்
தேசுடைச் சிவனெனச் சிரங்கை கால்களின்
மாசுணப் பணிபுனை வயின தேயனே. (க)

சீர்செறி யரங்கம்வாழ் செங்கண் மாயனென்
னோர்சிறந் திடச்செய னினது பாரமே
கார்செய்வெவ் விடவராக் கணங்கட் காதிடும்
வார்சிறை வலிமலி வய்ன தேயனே. (உ)

அண்டுவார் மகிழ்திரு வரங்க நாதனைக்
கொண்டுவந் தென்னெதிர் குலவக் காட்டுவாய்
பண்டுவா னவர்குலம் பதைப்பத் தாக்கொரு
வண்டுவர்க் கிரிபுரை வயின தேயனே. (௩)

ஆசறு பெரும்புக ழரங்கன் றன்னையென்
னேசறக் கொண்டுவந் தென்று காட்டுவாய்
காசறு செந்தகைக் கனல்வெற் பாமென
மாசறப் பொலிதரு வயின தேயனே. (௪)

எத்தனை யோதர மென்னுள் வந்தநீ
யத்தகைக் கேற்றபே றருளி லாயையோ
முத்தமி ழரங்கம்வாழ் முகுந்த னொமொரு
மைத்தடங் கிரிச்சுமை வயின தேயனே. (௫)

ஆறிரண் டிடைதுயி லரங்கன் றன்னருட்
பேறிலே னெனிலெனுட் பிறங்கு வாய்கொலோ
வீறிய பேரெழில் விளைதை மைந்தருண்
மாறிலா வலிபெறும் வயின தேயனே. (௬)

தாழைசூ ழரங்கம்வாழ் தலைவன் றன்னருள்
கோழைநெஞ் சுடைப்பொலேன் கொளச்செய் வாய்கொலோ
வேழைமை யடைந்ததாய்க் கினிய வாழ்வருண்
மாழைமால் வரையுறழ் வயின தேயனே. (௭)

காரண காரியங் கடந்த தாம்பரி
பூரண முணர்ந்தவர் புடையென் றெய்துவே
னாரண னரங்கநன் னகர்விட் டன்றொரு
வாரணங் காணல்செய் வயின தேயனே. (௮)

பாகைநேர் கவிகளா லரங்கம் பாடெனக்
கிகையுந் தவமுமென் றெய்தச் செய்குவா
யோகையா லிரணிய னுதிர முண்டவன்
வாகைவண் கொடிகுலாம் வயின தேயனே. (௯)

ஒருபது புலவர்முன் னுற்ற மெய்ப்புகழ்
திருவரங் கேசனெற் சேரச் செய்வனே
கெருவநோ யகத்துறு பாலர் கேடுற
வருமமிக் கடுந்திறல் வயின தேயனே. (௰)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௭௯௮.

தெய்வமேதுணை.

---

## அன்னப்பத்து

அறுசீர்த் தாழிசை.

பாதிமதிச்சடை நாதனும் பங்கயநாண்மலர் வேதனுந்
தீதில்வரம்பெற நல்குசீர்த் தென்னரங்கற்கெனைச் செப்புவா
யேதிலர்சொல்வசைத் தீமொழி யின்னமுநான்சகிக் கின்றிலே
னாதிவித்தாமவ னுந்திநே ரம்புயப் பூவள ரன்னமே. (௧)

மங்களமத்தனை யும்பெறும் வண்புகழ்ச்சீரங்க மாநகர்ச்
செங்கண்முகுந்தனெ டென்குறை தீர்த்தருளும்படி செப்புவாய்
சங்கரனன் றுகல் லாலடி தன்னிற்செயோகந்த விர்த்ததா
மைங்கணையிற்றலை யாயசீ ரம்புயப்பூவள ரன்னமே. (௨)

பாரணங்கின்முகம் போலவே பன்னுபெரும்புகழ்ச் சீரங்க
நாரணன்றன்னுட னாயினே னன்றுறுமாறுந வின்றிடாய்
கூரணவுங்கொலை வேற்கணார் கொள்ளையிற்பட்டுக் குலைந்துளே
னாரணன்றன்மனை போலவே யம்புயப் பூவள ரன்னமே. (௩)

புற்புதக்கொங்கைம டந்தைமார் போகம்விழைந்துபு லர்ந்துளே
னற்புகழ்ச்சீரங்க நாதன்பா னானுயற்காமொர்ந லஞ்சொல்வாய்
கற்புறு மங்கையர் பண்புதன் கால்களிற்றோய்ந்தக வின்கொள்வா
யற்புதச்செந்திரு மங்கைபோ லம்புயப்பூவள ரன்னமே. (௪)

காதித்தினனுங்கொலைத் தீயருங் கருணைப்பண்புறக் காண்பதே
சாதித்திடற்குறித் தெய்த்துளேன் சற்றரங்கற்கிது சாற்றுவாய்
வாதிக்கும்பன்மதத் தோர்களும் வரவுநாடிய மாண்புதோ
யாதித்தற்கண்டல தின்புறு வம்புயப் பூவள ரன்னமே. (௫)

மாயிரும்பூதலங் கோவெனு வாய்விடுகின்றதை மாற்றியே
ஞாயிறுந்திங்களும் போல்வதா நற்புகழெய்திட நண்ணினேன்
வேயிசைக்குந்தொழி லாயனு மேவரங்கற்கிது விள்ளுவா
யாயிரஞ்செவ்விதழ் சூழ்வதா மம்புயப்பூவள ரன்னமே. (௬)

பளிக்குநேர்மனத் தெண்ணிலாப் பற்றுறச்சோர்ந்துப தைக்கினுங்
களிக்குஞ்சித்திக ளாடவுங் காதலித்தேனந்தண் காவிரி
தெளிக்கும்பாம்பணைப் பள்ளியா னேரிற்சென்றீதுநி கழ்த்துவா
யளிக்குழாமுணத் தேன்சொரி யம்புயப்பூவள ரன்னமே. (௭)

இரங்கும்வேழமொன் றந்தநா ளிடங்காற்றுய செய்தலுங்
கரங்கொள்சக்கரத் தாலவன் காத்தது சத்திய மாமெனி
லுரங்குன்றத்துயர் செயுமிடி யோடச்செய்வானென வுன்னுகே
னரங்கநாயகன் கண்கணே ரம்புயப்பூவள ரன்னமே. (௮)

கோடரவின்றலை யோடுபூங் குருந்தைக்கொம்பும ணத்ததாள்
சூடல்விழைந்துழைக் கின்றநான் றுன்பமுறுவகை சொல்லுவாய்
பாடல்வல்லார்புகழ் சீரங்கப் பள்ளிவிட்டங்ஙனம் பாய்ந்துபோ
யாடகற்செற்றவன் கைகணே ரம்புயப்பூவள ரன்னமே. (௯)

நவையிறென்குரு கூரனேர் நாவலர்பாடிய நற்றமிழ்ச்
சுவையொடென்கவி மாலையுந் தோய்வதற்காம்வகை சொல்லுவாய்
சவையெங்கும்புகழ் சீர்குலாந் தாரரங்கன்றடந் தாண்முனை
மவையவங்கள னேகநே ரம்புயப்பூவள ரன்னமே. (௰)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௭௭௮.

தெய்வமேதுணை.

---

## கிளிப்பத்து.

### அறுசீர் விருத்தங்கள்.

கும்பமுலைமடவாரே படையாக்கொண்டமர்விளைக்குங் கொற்றமார
னம்பரத்திலூர்சிறுகாற் றேரிழுக்கும்பரியாய வணிப்பைங்கிள்ளாய்
வம்பர்பலபலமாற்றம் பயிற்றுவாரவைபகர்ந்து மகிமைகுன்றேல்
செம்பவளம் புரைவாயாற் றிருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. (௧)

நாவதனலெவரியாது நவிற்றிடினுமந்தவண்ண நகர்சூழும்
பூவலயத்துள்ளசிறு பூவையருங்கிளிகூரப் புகல்பூங்கிள்ளா
யாவனுற்றபடிசெயுந்தீ யவுணருவப்பனசிறிது மறையவேண்டாத்
தேவர்குழாம்பணிந்தேத்துந் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. ()

பாகனையமொழிகூறிப் பண்ணவர்கோன்முதலினரும் பணிந்துகெஞ்ச
மோகம்விளைத்திடுமடவார் களுமுருகத்தக்கவின்சொன் மொழிபைங்கிள்
தேகமுதற்பகர்மூன் றுங் குரவனுக்கீந்தரியதவஞ் செய்வாருய்யச் [ளாய்
சீகரநீர்க்கடலடைத்த திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. (௩)

பொல்லாதநிந்தைமொழி புகன்றாலு மதிசயித்துப் புளகித்தியாண்டு
மெல்லாருமதிமகிழ்ச்சி யுறத்தருசெங்கனிவாய்கொண் டிலங்குங்கிள்ளாய்
நல்லான்பாலொடுதேனுஞ் சருக்கரையும்பழமுமிட்டு நாளுமீவேன்
செல்லார்தண்பொழிலுடுக்குந் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே.

மஞ்சனையநெடுங்கூந்தன் மாதருக்குந்தேவருக்கு மகிழ்ச்சிநல்கும்
பஞ்சவன்னக்கிளிப்பிள்ளாய் பயனிலவாமாற்றமொன் றும் பகரவேண்டா
மஞ்சலஞ்சலெனக்கூவி யாழியுஞ்சங்கமுமேந்தி யடியார்முற்போய்ச்
செஞ்சரணத்துணைசூட்டுந் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே (௫)

பாதபமும் பஞ்சரமு மங்கையர்செங்கையும்விரும்பும் பசுங்கிள்ளாய்நீ
போதமிலார்பயிற்றுவிக்கும் புன்சொலுங்கேட்டங்ஙனமேன்புலம்புகின்றா
யாதவனுஞ்சந்திரனு மம்புலியுமுள்ளமட்டு மழியாதாகிச்
சீதளநீர்க்காவிரிசூழ் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. (௬)

ஐங்கணைவேள்வாகனமா யபிற்படைவேள்புயத்தேறுமணிப்பைங்கிள்ளாய், மங்களமியாவையும்பொருத்தத் தகுமொழியாதெனக்கருதி வருந்த வேண்டாங், திங்கணிகர்சங்கமொன் றுஞ் செஞ்சுடர்நேராழி பொன்றுந் திண்கையேந்திச், செங்கனல்வெற்பனையபுள்ளூர் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. (௭)

பத்தியொன்றேதஞ்சமெனப் பாடுமவர்மனம்புரையும் பசும்பொற் கிள்ளா, யெத்திசையுள்ளாருமுனை சொற்றுணையென்றெந்நாளு மிசைக் கின்றாரா, லத்தியொன்றுங்கழைத்தலுமக் கணமேபோயளித்தகதை யறைவார்க்கான்ற, சித்தியுமுத்தியும்வழங்குந் திருவரங்கா வென் றுதினஞ் செப்புவாயே. (௮)

புண்ணியமேவடிவாகிப் பூவைகுயிலாதியபுட் போன் றாணியாது
நண்ணியருந் தாமையினு னறியமணங்கமழ்கிள்ளாய் நவில்சொற்றள்ளேல்
பண்ணியனுன்மறைவிளங்கப் பண்ணவரின்புறக்கனகன் பதைத்துமாயத்
திண்ணியதூணிடையுதித்த திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. ()

மையல்கொள்ளுமாதருக்கு மாதவர்க்குந்தூதுசெல்லும் வனப்பூங்கிள்ளாய், துய்யபுகழ்ச்சுகனுமுன்றன் சுதனன்றோயான்வகுக்குஞ் சொற்சீ ரள்ளேல் வையகஞ்சூழ்கடல்போன் ற மாறன்முதற்பதின்மர்முன்னாள் வகுத்துப்பாடுஞ், செய்யதமிழ்க்கடலணியுந் திருவரங்காவென் றுதினஞ் செப்புவாயே. (௰)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௭௮௮.

தெய்வமேதுணை.

# மாங்குயிற்பத்து.

## எழுசீர்த் தாழிசைகள்.

ஆதவன்சந்திர னுள்ளமட்டுந்தொலை யாதமெய்ப்புகழ்வேட்
டேதமில்சித்தியெட் டுந்தருமென்றெழுத் தெட்டுமெண்ணுகின்றேன்
மாதவத்தோரொடு வானுலகோர்களு மகிழ்பவேசெயலாற்
கோதறுசீரங்க நாயகனார்வரக் கூவாய்மாங்குயிலே. (க)

பெற்றமுகைத்தவ னும்பிரமாவுமுன் பெற்றபேறுறவே
நற்றவத்தொண்டர்ப தத்துகள்சென்னியி னாளுஞ்சூடுகின்றேன்
மற்றடந்தோட்கரு டப்பெருங்கேதனம் வாய்ந்தவண்மையினாற்
குற்றமின்றித்திகழ் சீரங்கனார்வரக் கூவாய்மாங்குயிலே. (உ)

ஆகமமுஞ்சதுர் வேதமும்போற்றிடு மானினங்கதறச்
சீகரநீர்ப்புவி யிற்கொலைசெய்பவர்ச் செறுதலைவிழைந்தேன்
போகமுமுத்தியும் வேண்டியபேர்பெறப் பொருத்திடும்புகழ்சேர்
கோகனகக்கண ரங்கரென்முன்வரக் கூவாய்மாங்குயிலே. (ங)

ஒன்றெனப்பற்பல வேயெனவாதுசெ யுரங்கொள்பன்மதமு
நன்றெனத்தக்கமெய்ச் சித்திகளேசெய நாடிவாடுகின்றேன்
கன்றெடுத்துக்கனி மீதெறிந்திட்டபின் காலிக்கூட்டமுய்வான்
குன்றெடுக்குங்கைய ரங்கரென்பால்வரக் கூவாய்மாங்குயிலே. (ச)

செந்திருமங்கைதன் சேலுறழ்கண்ணருள் சிறிதிங்கெய்தியதா
லிந்திரனாதிய வானவர்தாமுமங் கேத்தல்வேட்டுழைத்தேன்
பந்தியநால்வகைச் சேனையுந்தூள்படப் பறத்தும்பாண்டவராங்
குந்திமக்கட்கருள் சீரங்கனார்வரக் கூவாய்மாங்குயிலே. (ரு)

முத்துப்புரைந்தம னத்துநல்லோர்குல முழுதும்வாழ்வதற்காஞ்
சித்துப்பெருக்கியற் றிக்கொடியோர்களைச் செகுத்தலைவிழைந்தேன்
சத்துச்சித்தானந்த மாகியுண்மைப்பெருந் தவத்தர்பாவனையாங்
கொத்துத்துழாயரங் கேசரென்னேர்வரக் கூவாய்மாங்குயிலே. (சு)

தாழைமலர்ச்சுரி கைக்கரமாரனென் றன்னைச்சிறும
வூழையும்வென்றுவக் கும்பெருவாழ்வினை யுள்ளியுள்ளுடைந்தேன்
வாழைநெருங்கரங் கத்திருக்கோயிலின் மாயனாரடியேன்
கோழைமனத்தவிர்ந் தாங்கெதிரேவரக் கூவாய்மாங்குயிலே. (எ)

நஞ்சமுநல்லமு துங்கலந்துற்றகண் ணாரிமார்மயலால்
வெஞ்சளமுற்றும ருந்தவப்பேறதன் விருப்பம்விட்டறியே
னஞ்சலுரைத்தென்முற் சீரங்கனாயக ரந்தநாளழைத்த
குஞ்சரமொன்றின்முற் சென்றதுபோல்வரக் கூவாய்மாங்குயிலே. (அ)

காப்பகர்ந்திட்டசொற் போனடக்கும்பெரு நலந்துய்த்தப்பாலென்
பாப்பகர்வார்விரும் பும்பயனும்பெறப் பார்ப்பதேநினைந்தேன்
சேப்பணைகட்கன கற்செறுஞ்சீரங்கச் செல்வனுரென்முனோர்
கோப்பறவைப்பிட ரேறியென்றும்வரக் கூவாய்மாங்குயிலே. (௯)

ஆறியநெஞ்சம தோடருளாடன்மிக் காடலைக்குறித்தே
நாறியபைந்துள வம்புனைசீரங்க நாதரென்விழிநேர்
தேறியபத்தடி யார்தொடுக்குங்கவித் திரளொடென்சிறுவாய்
கூறியபாடல்க ளுங்கொளவேவரக் கூவாய்மாங்குயிலே. (௰)

முற்றிற்று.

ஆக செய்யுள் எகூஅ.

தெய்வமேதுணை.

## மணிவண்டுப்பத்து.

### எழுசீர் விருத்தங்கள்.

தூயதொண்டர்தம் பதத்துகள்சூடியுந் துணிந்துமாதவஞ்செய்யாத்
தீயனேனுமுந் துயரெலாமுணர்தரத் திருவரங்கனுக்கோதாய்
சாயகங்களென் றைந்துமென்மலர்கொடு தருக்குவான்படையாகு
மாயவஞ்சக நெஞ்சியர்கண்புரை வனப்புறுமணிவண்டே. (௧)

பாவிமாயைவெங் கடலிடையானிநாள் படும்பெருந்துயரெல்லாங்
கோவின்மூதெயி லரங்கமாளிகைப்பசுங் கொண்டறன்செவிக்கோதாய்
தூவியன்னமு நாரையுங்குரண்டமுந் தொனிக்கரண்டமும்வாழும்
வாவியெங்கணுஞ் சென்றுநாண்மலர்ப்புது மதுநுகர்மணிவண்டே. (௨)

சோரவல்வினைத் தளையினுட்பட்டுளங் குலையுமென்குறையெல்லாஞ்
சீரரங்கநா யகன்மகரக்குழைச் செவிகளுட்புகச்செப்பாய்
தீரயோகியர் சித்தமுங்கலங்குறச் செருச்செயுந்திறல்குன்றா
மாரவேள்கழைச் சிலைத்துணைநாணியா வயங்கியமணிவண்டே. (௩)

ஆரணத்தொகை யருளியநான்முகற் கப்பனுமரங்கத்து
நாரணப்பெரு மான்றிருச்செவியிலென் னலிவெலாநவிலாயோ
பாரணங்கினற் சென்னியிற்றுள்களிற் பரவும்வானகத்துள்ள
வாரணக்களிற் றினக்கவுள்சொரிதரு மதநுகர்மணிவண்டே. (௪)

கங்கைவேட்டொரு கற்கிணறமைத்துநான் கலங்குமித்துயரெல்லாங்
கொங்கைமோகினித் தாயுமாமரங்கமால் குளிர்செவியுறக்கூறாய்
செங்கைமான்மழுப் புனைதருபுலவன்முன் செயுமொருகவிசான்றாய்
மங்கைமார்கருங் குழன்மணமுழுதறி மகிமைசான்மணிவண்டே. (௫)

சந்திரன்கரும் பாம்பின்வாய்ப்படுதலிற் றயங்குமென்றளர்வெல்லா
மிந்திரற்கிளை யவனுமாமரங்கனு ரெழிற்செவியிடங்கூறாய்
தந்திரத்தின ருணர்வருஞ்சதுமறைத் தாரகத்தலையாய
மந்திரப்பொரு ளிதெனத்தெரிதரு மாகதமணிவண்டே. (௬)

சற்றுமுண்மையின் மூடரையுறவெனத் தழுவுமென்சலிப்பெல்லா
முற்றுபோரு ளாலரங்கந்துயின் முகுந்தர்பான்மொழியாயோ
விற்றுணைப்புரு வத்தியர்கலவியின் வியன்களத்தொலியன்றி
மற்றுமோரிணை யின்றியவிசைவளம் வாய்ந்தவிர்மணிவண்டே. (௭)

ஞானமில்லவர் தம்மினுங்கடைப்படு நாயினேனசையாவுந்
தானமால்கரி புரந்தருளரங்கனா் தஞ்செவியிடஞ்சாற்று
யூனருந்துபுன் வேள்விசெய்வார்களு முறுதலினுளங்காந்தி
வானநாட்டுறு கற்பகப்பூந்துணர் மணமிகழ்மணிவண்டே. (௮)

ஆணிமுத்துறழ் நகைச்சியர்மயற்கட லழுந்துமென்னயர்வெல்லாந்
தூணில்வந்தட லாடகற்கின்றதிண் டோளரங்கனுக்கோதாய்
வீணிதென்றுபன் மதுக்குடித்தலமரும் வெறியினால்வெறுத்தெள்ளேல்
வாணிசெந்திரு நான்முகன்பீடமேல் வதிதருமணிவண்டே. (௯)

கூறரும்பய னடைந்துமற்றோரெனக் குலையுமென்குலைவெல்லா
நீறணிந்தவன் பரவுதென்னரங்கர்பா னிகழ்த்திடற்கிசையாயோ
சோறலாதுதாய் தருமுலையமுதமுந் துறந்தொருபுளிபுக்க
மாறனுதிய பதின்மரும்பிறருமுன் வழுத்தியமணிவண்டே. (௰)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௨௱௭௮.

தெய்வமேதுணை.

## திரிவுமஞ்சரி.

### கட்டளைக் கலித்துறைகள்.

ஒருவரங்காவுடை யார்கண்டுநாண வுதவியெண்டோ
ளிருவரங்காமன் முதலோரொடென்னையு மேற்றுக்கொள்வாய்
செருவரங்காரகன் போற்சுடுமாற்றங் கிளத்தநொந்தேன்
றிருவரங்காபெரும் பாம்பணைமேற்றுயில் சீதரனே. (௧)

திக்கடங்கக்குறித் தேத்தியமாண்புறு சீரங்கத்தின்
மெய்க்கடங்கக்குலக் கோவாயபாயன் மிசைத்துயில்வா
யிக்கடங்கக்கு வளமிட்டான்செய் திடலொழித்தாண்
மைக்கடங்கக்கு கவுளியானைக்கோவில் வருந்தினனே. (௨)

ஆரணனேயருள் காட்டுங்குருவென் றறிகின்றிலேன்
சீரணனேயம் பலகொண்டுளேனெனைச் சீற்றிகமேல்
காரணனேயனந் தஞ்சொரிந்தன்று கடல்வடித்த
நாரணனேயரங் கப்பெருங்கோயி னடுவினனே. (௩)

பஞ்சனையன் றுயர் மிக்குடையேன்றற் பயந்தருளு
மஞ்சனையன் றுக டர்சொற்பவித மவாவல்பொய்யோ
மிஞ்சனையன் றுய்க்கும் வாழ்விழந்தாற்ற வெறுத்திகழ்ந்த
கஞ்சனையன் று செறுமரங்காவெற் கடைக்கணியே. (௪)

வந்தனவேவரை கின்றேனெரெண்கலை வாய்ந்தவிரு
மிந்தனவேவரை யுஞ்செறுமாண்மை யிசைத்தினிதா
ளந்தனவேவரை யார்பெருஞ்சேனை யணிநடுப்போ
நந்தனவேவரை யாக்காயரங்கமு நண்ணினனே. (௫)

வரங்கம்புரந்தங்கு மொன்னார்முன் னூதிய வண்மைசொல்வேற்
கிரங்கம்புரந்தான் வாழ்வுநண்ணுநிலை யீந்தருள்வாய்
சிரங்கம்புரநதனைத் தீண்டிடநீண்டு செகமளநதிட்
டரங்கம்புரந்த முகுந்தாசங்காழி யணிகையனே. (௬)

நஞ்சானனத்தனென் றூழநுமன்புரை ஞானநல்கக்
கெஞ்சானனத்தணி கைவாழ்த்துமாதவங் கீழ்மைகொல்லோ
மிஞ்சானனத்தமு ருதன் றுகானிலோர் வெற்பெடுத்தா
யஞ்சானனத்தன் புகழரங்காசச்சி தானநதனே. (௭)

விஞ்சலமாற்றி யறிவழித்தோங்கு மிடிப்பெரும்பேய்க்
கஞ்சலமாற்றிய லுந்தடைநீத்தற் ககமிரங்கா
யெஞ்சலமாற்றியங் குஞ்சிரங்கத்தை யிறைஞ்சுமவா
சஞ்சலமாற்றிய நாராயணாமுத்தித் தானத்தனே. (௮)

அஞ்சக்கரக்கைய னுன்முகத்தோனறி யாதுளநின்
னெஞ்சக்கரக்கை யறிவேன்கொலோசற்று நீதமிலா
வஞ்சக்கரக்கையர் பாலிரவாதென்று வாழ்விப்பையோ
செஞ்சக்கரக்கை யரங்காவிண்ணோர்கள் சிகாமணியே. (௯)

செட்டித்தவனையர் மாலோபர்பாலினுஞ் சென்றுதுதி
கொட்டித்தவனைய தீங்கொருங்கீர்ந்தெற்கைக் கொண்டருள்வாய்
வெட்டித்தவனையட் டும்பண்டைவேத விதிபுரந்தாய்
சிட்டித்தவனைய னுவரங்கத்திற் றிகழண்ணலே. (௰)

செக்கரத்தானைய னிந்திரனாதிய தேவர்மெச்ச
மைக்கரத்தானை யளித்தபிரானை வயங்கெழிற்சொன்
னக்கரத்தானை யணிமார்பினானை நலமவிளக்குஞ்
சக்கரத்தானை யரங்கத்திற்போற்றுந் தவம்பெரிதே. (௰௧)

நீரங்கத்தாதிரை யான்பலியோடுகை நீக்கியதாற்
சேரங்கத்தாதின் மறையோனையுந்தியிற் செய்ததனால்
வீரங்கத்தாதினம் போர்செயுந்தானவர் வேர்கெல்வதாற்
சீரங்கத்தாதிப் பிரானன்றிவேறில்லை தெய்வங்களே. (௰௨)

சத்தருக்குந்தஞ்ச மாதியுள்ளார்க்குந் தவமிகநோற்
றுத்தருக்குந்தஞ்ச மானரில்லார்க்கு முதவல்விடாக்
கைத்தருக்குந்தஞ்ச மாழிவிற்காரர் களுக்குமுண்மைச்
சித்தருக்குந்தஞ்ச மாவதரங்கன் றிருவருளே. (௰௩)

வெஞ்சனமேனித முந்துதிப்பாடல் விளம்பிமிகக்
கெஞ்சனமேனிலைக் கேற்றபண்பன்றன்று கேட்டிநெஞ்சே
யுஞ்சனமேனினி யஞ்சுகிற்பாமென் றுரைப்பலுண்டா
மஞ்சனமேனி யரங்கனைப்போற்றுதி யன்புவைத்தே. (௰௪)

மிஞ்சாயுதம்பிற கிற்பலபேர்வரும் வீறுயர்ந்தோர்
நெஞ்சாயுதமித் தகையவென்றோரு நிலையிகலோர்
கஞ்சாயுதம்பிய வாய்வேழமாதிக் கணங்களன்ன
வஞ்சாயுதம்புனை தோளரங்கேச னடியர்பங்கே. (௰௫)

இருடப்பரிய துயர்கோடிநல்கலி னீடழிந்தேன்
வருடப்பரிய தெனுஞ்சீர்த்திபொய்த்தலின் மாவலிமுன்
னொருடப்பரியகெண் டிக்கிடைகண்கெட் டுழலச்செய்த
கருடப்பரியரங் காவென்றன்மேற்கடைக் கண்பதியே. (௰௬)

ஆர்த்தனறியக்க மெய்தவன்றட்ட வான்கருது
மூர்த்தனறியற்கை யோர்வாழரங்கத்தை முன்னியன்பாற்
சீர்த்தனறிய துழாய்போலும்பாடல்கள் செப்புவது
பார்த்தனறியப் பகர்ந்தமெஞ்ஞானக்கண் பாலிக்கவே. (௰௭)

நன்னம்பிறக்க மதவாதரானிலை நாலுங்கெட்டுப்
பின்னம்பிறக்கல கந்தோய்ந்துநின்றிருப் பேர்சொற்றுளேன்
முன்னம்பிறக்கணை மாரிபெய்வென்றியு முன்னுகின்றே
னின்னம்பிறக்கவி டேலரங்கத்தெம் மிறையவனே. (௰௮)

கின்னரங்கத்தைய கைத்தொண்டர்வாய்த்துதி கேட்கிலனின்
முன்னரங்கத்தைய கத்தோடுவீழ்க்கிலன் மூதருளா
லென்னரங்கத்தையர் வாழ்க்கையிற்சேர்க்க வியற்றுவையோ
தென்னரங்கத்தைய னேயலர்தாமரைச் செங்கண்ணனே. (௰௯)

பூதரநாமக் குடையேந்திக்காலி புரந்தநின்று
ளாதரநாமக ளேசாட்சியாப்பெற்று மஞ்சினன்கா
ணீதரநாமற்றை யோர்கூற்றுவாவவ நீடரங்கச்
சீதரநாமமுன் னுன்கிசைப்பார்பெருஞ் சிந்தையனே. (௨௰)

கடையற்றண்சாகரத் தின்னமுதண்டார் களிக்கநல்கித்
தொடையற்றகுவர் குலவேர்களைந்ததிண் டோளரங்கன்
சடையற்றன்மேனியிற் சேர்த்தானம்மட்டன்று சார்ந்தவர்க்குத்
தடையற்றவாக்கருள் வாண்மணவாளனைத் தந்தனனே. (௨௧)

திருமாதரைக்கண நீங்காதமார்புடைச் சீரங்க
னொருமாதரைமற வாப்புகழாளனென் றாமெழுதில்
வருமாதரைக்கம் பெறக்குருகூரிடை வாழ்வித்தமால்
பெருமாதரைவஞ்சித் தானென்றுபோற்றிற் பிறப்பறுமே. (௨௨)

விற்பனத்தேவரும் வேண்டக்குலாவும் வியனரங்கன்
கற்பனத்தேவருள் சார்ங்கப்பிரான்கறைக் கண்டன்மகிழ்
பொற்பனத்தேவருய் யத்தாயுமாமோர் புனிதனென்னுட்
சொற்பனத்தேவரு வானன்றிவேறு துணையில்லையே. (௨௩)

வெங்கரனுக்கு முனிவோரெல்லாமுய்ய வில்வளைத்த
செங்கரனுக்குற ளாச்சென்றுமாவலி சீர்கவர்ந்தோன்
பைங்கரனுக்கும வாற்றிடையேநெடும் பள்ளிகொண்டோன்
சங்கரனுக்குப் பலியோடுநீக்குந் தகையினனே. (௨௪)

நெருங்கயலார்க்கு மவர்வேட்கைநல்க நினைக்குமென்றன்
மருங்கயலாயுதன் பின்னேயுதித்த வடிவொடுற்றுண்
முருங்கயலாய்ப்புளி யாணுய்கடலின் முரணவுணர்ப்
பொருங்கயலாமரங் காதமியேனைப் புறந்தள்ளலே. (௨௫)

குரங்கரங்காதரிக் கக்கடற்றாண்டிவெங் கோளரக்கர்
சிரங்கரங்கால்கொய்த வென்றிபெற்றோமுஞ் செப்பல்விடே
ணிரங்கரங்காண்டகு கண்ணனிருவர்க் கிடைவளர்சீ
ரரங்கரங்காதுங்க நாராயணனுவச்சு தானந்தனே. (௨௬)

கமலவாரக விழியான்பஞ்சாயுதக் கையரங்கன்
வெமலவாரகம் பலகோடிசெற்றுயர் வென்றிப்பிரான்
சமலவாரகவெண் சங்கமொடாழியுந் தாங்குமம்மா
னிமலவாரகமு மாய்ப்புகுந்தானிந் நிலமுய்யவே. (௨௭)

நீத்தாரையன்றிரட் சிப்பவெங்கானிற்சென் னேயனதங்
காத்தாரையன்றிருச் சீரங்கநாதன் கமலநறும்
பூத்தாரையன்றிக முந்திப்பிரான்றனைப் போற்றுநர்கட்
கோத்தாரையன்றிமற் றொன்றின்றுவல்வினைக் கொத்தடவே. (௨௮)

பாதாளமாலைய மாம்பணிக்கோமிசைப் பள்ளிகொள்வான்
வேதாளமாலை முகத்தானும்போற்றும் வியனரங்கன்
போதாளமாலை நிறங்காட்டுமார்பன் புகழமுதங்
கூழாளமாலைக் கிராதானோர்க்குக் கொடுங்கசப்பே. (௨௯)

முந்துளவாரம் பெருக்கேனன் ஞமங்கண் மூன்றுமிடேன்
றந்துளவாரம்ப மொன்றுஞ்செய்யேன்பெருஞ் சையநல்கு
மந்துளவாரம் பொலிதுறைக்காவிரி யாற்றரங்கன்
பைந்துளவாரம் புனைதாளென்சென்னி பதிவதென்றே. (௩௰)

கட்டக்கரத்தையன் ஞார்மனைவாயிற் கடைதொறும்போய்
முட்டக்கரத்தைய கண்மாதரேவன் முழுதொழித்தாள்
வெட்டக்கரத்தை யணைமார்பனேபல வேதமுஞ்சொல்
லெட்டக்கரத்தைய னேயிரண்டாற்றி னிடைக்கண்ணனே. (௩௧)

உருமஞ்சரித்திரந் துண்டுந்தவஞ்செய்த லுத்தமர்தந்
தருமஞ்சரியை முதலாயநான்குந் தருபயன்சற்
குருமஞ்சரிதிற் பெயுந்தமிழ்போலுங் குளிர்துளவத்
திருமஞ்சரிபுனை தென்னரங்கேசன் றிருவடியே. (௩௨)

முற்றிற்று.

ஆக செய்யுள் ௩௨.

தெய்வமே துணை.

---

## யமகமஞ்சரி.

### கட்டளைக் கலித்துறைகள்.

தருமத்தையாதரி சிப்பார்க்கெல்லாஞ்செயொந் தாயமுதந்
தருமத்தையாதரிக் குங்குடையாகச்செய் தாயுரந்தோய்
தருமத்தையாதரி யாதேனரங்கந் தனிற்கிடந்தாய்
தருமத்தையாதரி யாயென்மறையுஞ் சாதமுமே. (௧)

தரித்திரந்தீரமில் லார்மனைதோறுந் தயங்கெனையா
தரித்திரந்தீரவுள் வீடுறுநெல்லிற் றளர்த்தனின்மா
தரித்திரந்தீரம் விழைந்தேனென்றெள்ளல் சனியனைய
தரித்திரந்தீரரங் காதமியேன்செய் தவமுற்றவே. (௨)

தருவரையன்ன வசாமுநீயெனச் சாற்றுதவத்
தருவரையன்சங்கன் சக்கரனுனிரை சாரவின்பந்
தருவரையன்னண மூதும்பிரானென்சொற் றள்ளுவரோ
தருவரையன்பர்க் கெளியாயரங்கத் தலத்தையனே. (௩)

சக்கரஞ்சங்கம் பெறுந்தொண்டரேயெனச் சார்ந்திலனஞ்
சக்கரஞ்சங்கம் பரித்தான்பல்பேறுந் தருகெனப்பல்
சக்கரஞ்சங்கம் புதலார்வனத்தினுஞ் சாற்றுகின்றேன்
சக்கரஞ்சங்கம் புனையரங்காவெனைத் தள்ளிடலே. (௪)

சஞ்சாரமற்றிருக் கண்ணுசைமிஞ்சித் தயங்குமெனைச்
சஞ்சாரமற்றிருக் கச்செயவேண்டுந் தவஞ்செயுநே
சஞ்சாரமற்றிருக் கஞ்சுறநேர்ந்தது தண்ணரங்கா
சஞ்சாரமற்றிருக் கங்கையிலாழி தரித்தவனே. (௫)

கன்னலம்பாகு களிற்கொண்டவுணர்க் கறுவுமரங்
கன்னலம்பாகு நிறத்தான்கையாழியிற் கால்குறைநாற்
கன்னலம்பாகுறை யானுயச்சூரற் கரந்தபிரான்
கன்னலம்பாகுறழ் செந்தமிழ்கேட்டுக் களிப்பவனே. (௬)

கங்கையளித்தன் பிடர்மேற்சுமக்குங் கரிபபிரான்
கங்கையளித்தரை யோடணைகாந்தன் கவினரங்கக்
கங்கையளித்தகை காட்டிக்கிடப்பவன் காசிலருட்
கங்கையளித்த கழல்சூட்டியாளல் கடினமன்றே. (௭)

காதமனந்தம் பெறுதன்றுபால்வெண் கடற்கடைந்தாய்
காதமனந்தம்மி லொத்தவெந்தானவர் காலனொத்தாய்
காதமனந்தம் பருத்தோங்கினுய்தமிழ்க் காதல்கொணின்
காதமனந்தம் பெருகரங்கத்திடைக் காட்டுதியே. (௮)

கதமலியாடர விற்றுயின்றுயொளி கான்றணையங்
கதமலியாவர்க்குங் கோவாயரங்கத்திற் கண்டனையே
கதமலியானை புரந்தாய்பசுத்திரட் காதல்கொளியான்
கதமலியாதவ னுவந்தஞானக் கலையருளே. (௯)

கலகங்களையப் பணியோடுபூண்டவன் கண்டுமெச்சக்
கலகங்களையச் சமர்க்களஞ்செய்யுங் கரத்தரங்கா
கலகங்களையழுல் லைத்தலநதோய்பசுக் கன்றுங்கொல்வார்
கலகங்களையத் தகுஞ்சீரெனக்கிக் கணத்தருளே. (௰)

சிந்திக்கவல மெனத்தக்கவின்பச் செறிவருள்பூச்
சிந்திக்கவலன் றனைத்தந்துளாள்புணர் சீரரங்கச்
சிந்திக்கவலகை நேர்மிடிதீரும்வெந் தீவினைகட்
சிந்திக்கவலப் படாவநுபூதித் திறம்வருமே. (௰௧)

சீரானனத்தையொ ராழியொடேந்திய திண்புயனெண்
சீரானனத்தையன் றெண்ணீர்த்தண்காவிரித் தென்னரங்கன்
சீரானனத்தைக் கிளையாள்கணவன் றிருவருணஞ்
சீரானனத்தைய மெஞ்ஞானமென்றுஞ் சிலர்சொல்வரே. (௰௨)

சித்திரத்தத்தை யனையசொல்லார்மயற் சேற்றினையா
சித்திரத்தத்தையெல் லாஞ்சிந்திமாயச் செயேலிருண்மிஞ்
சித்திரத்தத்தையஞ் சேரநோக்தேனலர் செங்கமலச்
சித்திரத்தத்தை யகலாதமார்புடைச் சீரங்கனே. (௰௩)

திரவியந்தான்பர மென்பார்முனெல்கித் தினந்தினஞ்சித்
திரவியந்தாவறப் பல்வாறுரைத்துத் திகைத்தனன்மு
திரவியந்தாழிப் படையாயரங்கத் திறைவசெங்கேத்
திரவியந்தார்க்கெளி யாயெனக்கானலஞ் செய்தருளே (௰௪)

செங்கமலாதனத் தாளுறைமார்ப திறற்கனகன்
செங்கமலாதனச் சிரங்காவெனைத் தேற்றுநதியிற்
செங்கமலாதனந் தஞ்சேய்பெற்றன்றித் திரிகிடதச்
செங்கமலாத னலியாதுதவியுஞ் செய்தனையே. (௰௫)

சிகரக்கிரியெடுத தானினங்காததவன் சீரருட்டே
சிகரக்கிரியெனப் பார்த்தனுக்கோருண்மை செப்பியதே
சிகரக்கிரியுரு வுஞ்சேராங்கன் றிருமுகவ
சிகரக்கிரிசை மணாளனைப்பாதியிற் சேர்த்ததென்னே. (௰௬)

சிந்தனையானன்று மாவலிபாற்புவி சென்றிரந்தோன்
சிந்தனையான படியடியார்க்கருள் சீரங்கன்பாற்
சிந்தனையானதை தாற்கெளியான்மறைச் சீர்சிறிதுஞ்
சிந்தனையானவ னேயென்றனுட்டா தெரிபவனே. (௰௭)

சிந்தாகுலமறந் தன்னோடுநீடச சிகரிகொள்கைச
சிந்தாகுலமறங் குங்கொட்டின் முலைசசிறுவவெண்பாற்
சிந்தாகுலமற வன்றொண்டுமேற்ற திருவரங்கா
சிந்தாகுலமற வின்றென்னையாண்டு செயமருளே (௰௮)

சீகரவாரிடஞ் சென்றிரப்போனெனச சீற்றிடவெ
சீகரவாரிய ளுதியரோடெனைச சேர்த்துக்கொள்வாய்
சீகரவாரிதி நீத்துவநதுறற திருவரங்கா
சீகரவாரிணைக் கொங்கைமின்போனாறுந திசரநாவனே. (௰௯)

கடமாதரங்கம பலபுணர்ந்தானோர் கராப்பிடித்த
கடமாதரங்கம பொலிவாவியூடுபக காத்தவன்ச
கடமாதரங்கம பெறுமபதகதொணையுளங கல்வியார்வி
கடமாதரங்கம புரைவாரிவியசருங கனத்தினதே (௨௰)

காவலன்றன்னை யனையானையண்டக் கணங்களுக்கோர்
காவலன்றன்னைத திருவரங்கத்துக கடவுளைவெஃ
காவலன்றன்னைததுத தானைவநதென்னைச் கவர்ந்தபோ
காவலனறனைய நான்முகததோனறிருக கையெழுததே. (௨௧)

கணங்கருதிககெங்கு மெய்திறுமவேட்கலங் காரரங்கன்
கணங்கருதிக்குங கடலாடைபபார்மின் களிநிமிததங்
கணங்கருதிர நதிகாணல்வேட்டுளங் கறபெண்செய்தாட்
கணங்கருதிக்கதி சேர்நதாரையெண்ணிற் கணககிலரே. (௨௨)

கருமாமலையனை யானரங்கேசன் கடிமலிய
கருமாமலைத்துணர்க் கூநதன்மின்னுளென் றுங் காண்டருமால்
கருமாமலைந்தகைப் பார்கொண்கனெனைற்கருதிடின
கருமாமலைவுறு மாவசையாது களிக்குநெஞ்சே. (௨௩)

கண்டனகண்ட னடியார்குற்றேவல்செய் கையரிதி
கண்டனகண்டன வென்பாரும்போற்றுங் கரியவன்சொற்
கண்டனகண்ட னரங்கனன்னுன்மலர்க் கண்ணருளாக்
கண்டனகண்டன வெல்லாங்கருதிற் கருமமின்றே. (உச)

காவாளியையக் தவிரக்கடலைக் கடைந்தவனை
காவாளியையர் ககத்தனமேற்சொரி கார்கழிவா
காவாளியையடற் சக்கரத்தான் சினங் கான்முகம
காவாளியைய னரங்கனல்லாற்றுணை காண்கிலமே. (உரு)

பணியலங்காரப் பெரும்பாயற்சிரங்கப் பள்ளிகொண்டாற்
பணியலங்காரண காரியமோர்கிலம் பைம்பொன்மணிப்
பணியலங்காரம் புனைமாதர்மையலிற் பட்டுழன்றேம்
பணியலங்காரத் தொடுத்தாரிற்சேரப் பதைத்துளமே. (உசு)

பாதவித்தாரம் பணிச்சென்னிமேற்பயில் பாதமிகப்
பாதவித்தாரண நிச்சயஞ்சொன்ன பகடளித்த
பாதவித்தாரணி வாழுவரங்கத்திற் பள்ளிகொடா
பாதவித்தாரகந் தேரனொந்தேனைப் பரிந்தருளே. (உஎ)

பங்கேருகள பதத்துங்கொண்டாற்குடற் பாதியிட்டாய்
பங்கேருகனைப் பயந்தாயரங்கப் பதிக்கிடந்தாய்
பங்கேருகரம் பொருபடையானன்னர் பான்மைநல்கு
பங்கேரு கண்ணன் முதலோரிடைவைத்துப் பாரென்னையே. (உஅ)

பாடலனந்தம்பு மேற்றோர்விட்டோன்முதற் பற்பலரும்
பாடலனந்தம் பதஞ்சூட்டரங்கப் பரன்கலையென்
பாடலனந்தம் படிமீதிலுள்ளன பாடியவர்
பாடலனந்தம் பயனுந்துமாய்சொரி பத்தர்களே. (உகூ)

படப்பாயலைய திருமேனியாடப் பரியெனப்பல்
படப்பாயலையவெண் பாற்கடலீந்த பதியரங்கா
படப்பாயலையனு மானுமெற்பார்த்தி பதுமையுவப்
படப்பாயலையஞ்சொல் வார்குழுநானும் பரிசழிந்தே. (௩௰)

மாதவநாரண கோவிந்தகேசவ மாயவநன்
மாதவநாரண வும்பெரியோர்பலர் வாழ்த்தரங்கா
மாதவநாரணம் பட்டநெஞ்சென்று மகிழும்வெள்ளை
மாதவநாரணச் சென்னியென்றெய்துஞ்சொல் வாய்மலர்ந்தே (௩௧)

மஞ்சரியிட்டம் பெறத்தானவர்ச்செறு வார்க்கினிதே
மஞ்சரியிட்ட நிறத்தது நான்கு மறைத்தலைச்சே
மஞ்சரியிட்டள கம்புரைபந்த மறுப்பதுபன்
மஞ்சரியிட்ட மணிமார்பரங்கன் மலர்ப்பதமே. (௩௨)

முற்றிற்று.

ஆ செய்யுள் அஎஉ.

தெய்வமேதுணை.

# ஏகபாதம்.

## கட்டளைக் கலித்துறை.

திருவரங்கத்துறை வான்செயலேயென்று தேறுமினே
திருவரங்கத்துறை வான்செயலேயென்று தேறுமினே
திருவரங்கத்துறை வான்செயலேயென்று தேறுமினே
திருவரங்கத்துறை வான்செயலேயென்று தேறுமினே.

### (இதனது பதப்பொருள்.)

திரு-செல்வத்தில், வரு-வாராநின்ற, அங்க-தேர் முதலிய சதுரங்கங்களின், துறு-நெருக்கமுள்ள, ஐ-அரசனே, வான்-சுவர்க்கத்தை, செய்-அலங்கரிக்கின்ற, அலே-மதிலே, என்று-போன்று, தேறு-பக்குவப்படுகின்ற, மினே-பிரகாசத்தையுடைய (தவசியே), திரு-இலக்குமியும், வரம்-மேன்மையும், கம்-பிரமாவின், துறை-நிலையாகிய (வைதிகமும்) வான்-ஆகாயமும், செய்-(விளைவிற்காதாரமான) நிலமும், அலே-இருளும், என்று-சூரியனும், தேறும்-(மெலிவுநீங்கிப்) பருப்பதும், இன்-இனிய (அமுதத்திற்கு), ஏது-உண்டாதற்காரணமுமான (சந்திரனும்), இரு-விசாலமும், உவர்-உவர்ப்பும், அம்-சலமுமான (சமுத்திரமும்). கத்து-சத்திக்கின்ற, உறை-துளியுள்ள, வான்-மேகமும், செயல்-சேற்றின், எய்-பொருத்தம்போலும், என்-எனது, து-அஞ்ஞானநுபவத்திற்கு, தேறும்-தெளிக்குந் தேற்றான்வித்தாவதும், இன-இப்படிப்பட்ட, ஏ-வியப்பெல்லாமும், திருவரங்கத்துறைவான்-சீரங்கத்திலெழுந்தருளிய நாராயணனது, செயலேயென்று-வல்லபத்தாற் செய்வனவேயென்பதாய், தேறுமின்-நன்குணரக்கடவீர், (என்றவாறு) வ-று்றசை.

### (கருத்துரை.)

சதுரங்கசேனையுள்ள வரசர்களே, தமது நன்மையாற் சொற்கத்தைச் சீர்படுத்துங் குருத்துவத்தை விரும்பிமுயலுந்தவசிகளே, இலக்குமிதேவி மேம்பாடு வைதிகம் ஆகாயம் பூமி இருள் சூரியசந்திரர் சமுத்திரம் மேகம் அபக்குவரையுஞ் செவ்வைப்படுத்துங்கருணை முதலிய வெல்லாமுந் திருவரங்கத்தி லெழுந்தருளிய நாராயணனாற் செய்யப்படுவனவேயெனத் தெரிந்துகொள்ளக் கடவீர். (என்பதாம்.)

### (ஞாயம்.)

இலௌகீகத்தில் அரசனும், வைதிகத்திற் பொதுநலத்தை விரும்புந்தவசியுந்தவிரப் பெரியோரின்மையால், அவர்களை முன்னிலைப்படுத்தியாவுந் தெய்வச்செயலென்னு முண்மையை வற்புறுத்திக் கூறினமை காண்க.

(இலக்கணம்.)

மதிட்பெயராகிய (அல்) என்னும் பதத்திற் புணர்ந்த ஏகாரம், தேற்றம். பிரகாசமேயென்னும் பொருடந்து கிடந்த (மினே) என்னும் பதத்திற் கஃதுடைய தவசியெனக்கொண்டது பின்மொழித்தொகை, இதனை ஆகுபெயரென்பாருமுளர். கம் துறையென்னும் பதம் கத்துறையென விதிவழி வலித்தது. இருட்பொருடருவதாய அல்லினின்ற ஏகாரம் எண்கூட்டுப்பொருளாய் மற்றுள்ளவற்றையுந் தழீஇயது. இனிய அமுதை இன்னென்றதும், இன்-ஏ, இனே ஆனதும் பிறவு மதித்துணர்க. வானென்னுமொருபதத்திற்குச் சுவர்க்கமென்றும் ஆகாயமென்றும் மேகமென்றும், தேறுதலைப் பக்குவப்படல் பருத்தல் உணர்தலென்றும் பொருள்கூறியவற்றையும் போல்பவற்றையும் விரித்திலமாயினுங் கண்டுகொள்க. (௮௱௩)

மும்மண்டில வெண்பா.

அரங்கமே போற்றுவா யாடரவிற் பூத்த
வரங்கமழுங் காற்றுணைநேர் வாடல்—கரங்கூப்பு
விற்றுவகைப் பாடல்களால் வீழுகமே பாழாகா
மாற்றுயர்ந்த வீடெதென வாழ்.

இச்செய்யுளின் இரண்டாஞ்சீர் மூன்றாஞ்சீர்களை முதலாகக்கொண்டு கடைக்குறைக்கு முதலைக் கூட்டி வாசிப்பினும் இரண்டு செய்யுள்களாய் முடிதலின் இயல்பாயுள்ளதோடுகூட்டி மும்மண்டிலமென ஆன்றோராற் கூறப்பட்டது. (௮௱௪)

மாலை மாற்று.

கலி விருத்தம்.

நேத ஞரிவி காதுமு லாதகா
மாத நீயபி ஞசரி வாதசீ
சீத வாரிச நாபிய தீதமா
காத லாமுது காவிரி நாதனே.

(இ-ள்.) நே-பிரியமுள்ள, தன-திரவியத்துக்கு, அரி-பகையாகியமிடி, விகாது-சர்வ விக்கினமாயும், முலா-முலையின் சம்பந்தமாயும் இருக்கின்றது, தகா-(அஃது) தக்கதன்று, மாதது-உமது பத்தினியினதான (செல்வத்தை) ஈ-கொடுத்தருள்வீராக, அபிஞ-எல்லாவற்றிலும் பின்னமறக் கலந்தவரே, சரிவா-சரிவென்னு மாபரணத்தோடு மோகினியானவரே, தசீ-தசாவதாரஞ் செய்தவரே, சீதவாரிசநாபி-குளிர்ந்த தாமரைபோன்ற வுந்தியோடுகூடியும, அதீத-அக்கிரபாத்துவம் பெற்றவரே, மா-மகத்தான, காதலா-பிரியத்துக்குரியவரே, முதுகாவிரிநாதனே-பழமையான காவிரியாற்றில் வசிக்குஞ் சீரங்கநாதனே. (எ-று.)

விகாதம் விகாதெனச் சாரியைகெட்டு நின்றது. கதா கலா முதலிய சொற்சார்புபற்றி முலை முலா ஆனதும் பிறவும், தக்கோராற் றெரியக்கடவர்.

அன்றியும், மாலைமாறறென்னும பெயர்ப்படி, மாலை () மாறறென்னும பொரூளே யிச்செய்யுளி லமைந்தமைபற்றி வியப்பதுந்தகும. (௮௱௫)

# எழுகூற்றிருக்கைச் செய்யுட் சித்திரம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ௧ | | | | | | |
| | | | | | ௧ | ௨ | ௧ | | | | | |
| | | | | ௧ | ௨ | ௩ | ௨ | ௧ | | | | |
| | | | ௧ | ௨ | ௩ | ௪ | ௩ | ௨ | ௧ | | | |
| | | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௪ | ௩ | ௨ | ௧ | | |
| | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௫ | ௪ | ௩ | ௨ | ௧ | |
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௬ | ௫ | ௪ | ௩ | ௨ | ௧ |

ஆசிரியப்பா.

ஓரொரு பொருளா யிரண்டா யொன்றி
யொன்றிரண் டின்றி மூவிரு நெறியோர்க்
கொருமைகண் டிருமையின் மூவா நாற்பயன்
முத்தமி ழிருங்கட லொடொருங் குதவலு
மொன்றுட னிரண்டு மூன்று நாலுங்
கூடிய தொகைப்படு கோலங் கொள்ளலு
மைவ ரொற்றென நாற்றிசை பரவ
மூவருந் தானு மிருப்பது மறைத்தோ
ரோர னிருஞ்சவை மூப்பினர் தம்முக
நால வைந்தி லாறி யேற்றலு
மைந்நாற் றேளின் மூன்றல கெடுத்தோ
னிருகூ றுவிழ வொருகணை யேவலு
மோருரு ளிரதனை முக்கண னான்முக
னயர்கோன் முதலின ரறிய மறைத்தலு
மேழெரு திணையு மிளைப்பறப் பிணித்திட்
டைம்பா லோதி யணங்கனைப் பெறலு
நாற்கான் மும்மதத் திருமருப் பொருமா
வுய்யக் கானத் தோடிச் சேறலு
மாமறை யொலிசான் மணிமதி ளரங்கக்
கோயி லுப்பட் கொடும்பற் பேழ்வா
யாயிரங் காட்டு மரவப் பாயலின்
மீத்துயில் குவியா விழித்திரு யாலே. (அஎசு)

## ஒருவருக்கப்பா.

### வெண்டளைக் கலிப்பா.

தீதுததுத தொத்தத்தே தித்தித்த தேதேது
தாதுதத்தத் தத்தத் ததிதாதா தாத்தாதா
தூதுதித்த தாதை துதித்துத் திதத்ததித்தா
தோதுதைத்த துத்தத்தத் தாதூத் திதித்தீத்தே.

(இ-ள்.) தீது-பாவமான, தத்து-ஆபத்தின், தொத்தத்தே-சம்பந்தத்தில், தித்தித்தது-இனிமையானது, ஏதேது-ஏது ஏது, [இல்லையென்றபடி] தாது-பொன்வெள்ளிமுதலியன, தத்த-ததும்பிவழியும்படி, தத்த-பிரதியுபகார விருப்பமின்றிக் கொடுப்பதற்கு, ததி-நல்லசமயம், (ஆதலால்) தாதா - கொடுத்தருள்வீராக கொடுத்தருள்வீராக, தா - வல்லபமுள்ள, தாதா-வள்ளலே, தூது-உமது தூதரான வநுமார், உதித்த-பிறத்தற்காரண, தாதை-பிதாவான, (வாயுபகவனால்,) துதி-புகழப்பெற்ற, தத்தி-படப்பொறியுள்ள, தத்தி-பாமபாகிய, (ஆதிசேடனோடுகூடிய) தா-பள்ளமான காவிரியாற்றிடைச் சீரங்கத்தில் வசிப்பவரே, தோது-உவமையை, உதைத்த - ஏற்றுக்கொள்ளாமற் றள்ளுகின்ற, துத்தத்து - வயிற்றினையுடைய, அத்தா-சர்வான்ம பிதாவானவரே, தூ-பரிசுத்தமான, திதி-இரட்சிப்புத்தொழிலில், தீ-புத்தியைச (செலுத்துகின்ற), தே-தெய்வமான நாராயணனே. (எ-று.)

தொத்தெனப இயல்புப் பதமேயனறித் தொநதமென்ற பதத்தை வலிததுக்கொண்டதன்று. மேருவின் கொடுமுடிகளில், மூன்றைப்பறித்து வாயுசெயம் பெற்றனென்னும் பிரசித்தமிருபபினும், ஆதிசேடனது பலத்தைக்கணித்து வாயுவியநத வுண்மையு முண்டாதலி னங்ஙனங் கூறப்பட்டது. தத்தியென்னும் பாமபுப்பெயர் தவழுநதன்மையால் வரினும ஆன்றோராட்சியேயாம. எல்லாவுலகங்களையு முண்டமைபற்றி மற்றோருவமையை பேற்றுக்கொள்ளாத வயிறென்று சொல்லப்பட்டது. தாவெனல் பள்ளத்திற்கும் பெயரென்பது செநதமிழ் நாட்டு வழக்கமாம். பாம்போடு கூடிய பள்ளமென்பது பற்றிச் சீரங்கமென்று வருவிக்கப்பட்டது. பொருளேக்கம்பற்றி அஃதுடையவனென்று விரிக்கலுற்றும். போல்வன பிறவுந தக்கோராற் றேறக்கடவர். (அஎஎ)

# சதுரங்கபந்தம்.

வெண்பா.

மாய வயனமையா வானரிதன் றோர்பரிமா
வாயமுகஞ் சேர்மாத ராடல்சொல்வாய்—தூயதவத்
தாயரங்க னேமத் தருவன்வத மாரிஙய
மாய னரிமாத வன்.

அறுபத்துநான்கறையுள்ள சித்திரமமைததிச் செய்யுளின் கடைவரி நாற்புறத்து மதிள்போற் றிகழவமைத்து முதலிற்றுவக்கி யிரண்டாம அறையினின்று கீழிறங்கி யங்ஙனமுறைப்படி மடித்தது மடித்து வாசிப்பது. இங்ஙனமான்றோ ராட்சியுமுண்டு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | ய | ன | ரி | மா | த | வ | ன் |
| ட | வ | வா | த | ர | ா | கு | ய |
| ன | மை | யா | ன் | ச் | ட | த | த |
| ரி | ப | ர | றோ | ஞ | ல் | க | மா |
| மா | வா | ய | மு | க | சொ | ம | ரி |
| த | ய | து | ய | வா | ல | னே | ன |
| வ | த | தா | ப | ர | ங | க | ய |
| ன் | ய | த | மா | ரி | ன | ய | மா |

(அ௱அ)

மடக்குத் தாழிசை.

ஆறுவகைய மதத்தாரே யாறுவகைய மதத்தாரே
　　　ையமறியாப் புலவோரே யையமறியாப் புலவோரே
கூறுமலரி லிருப்பாரே கூறுமலரி லிருப்பாரே
　　　கும்பனையை முனிவோரே கும்பனையை முனிவோரே
மாறுபடுவார் தமககரியான் மாறுபடுவார தமககரியான்
　　　வயமாவாயுங் குதித்திட்டான் வயமாவாயுங் குதித்திட்டான்
றேறுமாவத் தரங்கத்தான் றேறுமாவத் தரங்கததான்
　　　செயமார்புணரச செப்புமினே செயமார்புணரச செப்புமினே.

(இ-ள்.) ஆறுவகைய - ஆறுவகையினவாகிய, மததாரே - சமையத்தோர்களே, ஆறு-பொறுக்கின்ற சாநதமான, உவகை-சநதோடத்தால், யமதத்தாரே-இயமனுக்காபததாக வசிப்போரே, ஐயமறியாப்புலவோரே-சந்தேகங்கொஞ்சமுமில்லாத மெய்யறிவுடையவர்களே, ஐய - அழகிய, மறி-மானானது, யாப்பு-கட்டுப்பட்டுள்ள, உலவோரே-திரண்டகற்பேரலுங்

தோளுள்ள வுருத்திரர்களே, கூறு-(சிவப்பு வெள்ளை யென்று) பகுக்கப் பட்ட, மலரில்-தாமரைப்பூக்களில், இருப்பாரே-வசிக்கின்ற தெய்வங் களே, கூறும்-சொல்லப்பட்ட, அலரில்-பழிச்சொல்லில்லாத, இரு-பெருக்க மான, உப்பாரே-இனிமையோரே, கும்பனனைய முனிவோரே-அகத்திய னைப்போலு முனிவர்களே, கும்பல்-கூட்டமானசேனை, நனைய-(இரத்த வெள்ளத்தின்) மூழ்கும்படி, முனிவோரே-கோபிக்கும் வீரர்களே, மாறு படுவார் தமக்கரியான்-தனதுநீதியில் உடன்பாடின்றிப் பிணங்கும் அசுரா மிசத்தோ ரடைதற்கரியவனும், மாறுபு-வந்தவழியே திரும்பி, அடு-(மற் றுந் தன்னைப்போல் வருவனவோடு) பொருகின்ற, வார்-(அலைச்) செல முள்ள (கடலையும்), தம-இருளையும்போன்ற, கரியான்-கருநிறத்தோனும், வயமாவாயுங் குதித்திட்டான்-சிங்கரூபமாயு மொருக்காற் குதித்தவனும், வயமா-வையமென்னும் பிரபஞ்சரூபமாய், ஆய்-ஆராயும், உங்கு-இடத்து, உதித்திட்டான்-(அனேகருக்குச்) சேவைசாதித்தவனும், தேறும்-தெளி கின்ற, அரவ-தொனியோடுகூடிய, தரங்கத்தான்-அலையுள்ள திருப்பாற் கடற்காரனும், தேறும்-நன்குமுதிர்ந்த, அரவத்து-சற்பமான (சேடனோடு விளங்கும்,) அரங்கத்தான்-திருவரங்கத்தை யுடையவனும், (அன நாரா யணனது) செய-சிவந்த, மார்-மார்பை, புணர்-தழுவுகின்ற, அச்செப்பு-அந்தச் செப்புப்போன்ற (தனங்களையுடைய) மின்-மின்னற்கொடிபோ லும் (இலக்குமிதேவியினது) நே-பிரிபரூபமான, செயம்-வெற்றியின், ஆர்பு-நிறைவை, உணர-அடியேன் அறியும்படி, செப்புமின்-சொல்லியருள் வீராக. (எ-று.) ஏ-ாற்றசை. (அ௭கூ)

---

## கலவிமகிழ்தல் வண்ணம்.

குழிப்பு.

தனனதத்தன தனனதத்தனனு தனதனன
தனனதத்தன தனன ததனனு தனத்தன
தநதனுதன தததனதன தநதனுதன தத்த தனதன
தந்தனுதன தததனதன தநதனுதன தத்ததனதன
தனனதநதன தனனதநதன தனனதநதன தனனதநதன
தனனதநதன தனனதநதன தானதன தான,
(தொங்கல்) தனதான தாததன தய்பனு.

ஆண் கலை.

அருள்வளக்கட லனையகட்பெருமாள்—காத்திலொர்
பெரியசக்காம் வளைபிடித்தபிரா—னிணைபபவ
ரந்தணுளரின் மிக்கரெனினுமி றந்துபோனபி ணத்தினிணறுகர் [கரி
கின்றபான்மைகொள் புத்தரெனினும்வி ழைநதபேறுகொ டுக்குமுரா
யகிலமுண்டுமிழ் தருமுகுந்தனெ ணறும்விரிஞ்சரை யுதவுமுநதிய
னகளமும்பல சகளமுந்தன வாநின்றகுணலன்.

விழிமிகப்பெறு மகபதிக்கிகலே—யெனத்தகு
தருவரைக்கிளை யொடுகெடுத்திடுமால்—சகத்திர
விஞ்சைமாதவ ருக்குமமுதிட வென்றுநாடிவ னத்தின்மறுகிய [பவன்
வைந்துபேருமொர் பத்தினியுமகிழ் வொன்றுமாரொரு வித்தைபுரி
விரகமிஞ்சிய பொதுவமங்கையர் கலைகவர்ந்தலர் சொரிகுருந்தையின்
மிசையிவர்ந்துகொள் கரியகொண்டல்பல் வேதம்புகழ்மீளி,

யதிநயத்தமிழ் கொடுதுதித்திடுவா—னுரைப்படி
யுடனடப்பது சொலிலுவப்புறுவா—னருச்சுன
னஞ்சிறுனிகர் சிற்சின்மொழிசொலு மங்குதேவர்மு தற்சொலனைவரு
நங்குபேசிந கைத்துமுமியுமுன் முநதுஞானவி ளக்கமருள்பவ
னசலமொன்றொரு குடையெனும்படி கையினிடங்கொடு பசுவினங்களி
யடையவன்றுசெய் நெடியவன்றுளவ வாரங்கமழ்மார்பன்,
அடியார்கள் கேட்டபடி செய்வோன்,

அணிலளித்தொரு பதிகமுற்புனைமா—சரித்திர
நினைவுகெட்டுள மறுகினைத்தொடர்வோன்—மலர்க்கணை
யைந்திறேடுகை ருப்புவரிசிலை கொண்டமாரனு திததவயிறுறு
செம்பொன்மேனியொ ருத்திமருவிய நெஞ்சிலீடிவி ரத்தினமுமணி
யதுலசுந்தரன் விபுதர்வந்தினி தடிபணிந்தெழு மகிமைதுன்றின
னரசரென்பவர் பலருமஞ்சுற வாடுஞ்ரமாளி,

விதரணக்குண புனிதருக்கெளியா- னிரக்கமில்
கயவருக்கெம னனையவைப்பிரியா—னழற்புரை
வெங்கண்வானரர் சுற்றவுததிக டந்துபோயொரு பத்துமுடிபுனை
துங்கராவண னைப்பல்கிளையொடு கொன்றபின்மைபடைத்தரகுபதி
விமலமங்கள கவுரிபங்குறை சிவன்விரும்பிய படிசெய்கின்றவன்
விதிமகந்தனில் வருபெருஞ்சினை மேகம்பொருமாயன்,

அதிரதத்திர ளறமுறுக்குநரோ—தொழுதகு
கழல்படச்சிலை மகளுருப்பெறுசீ—ருமைரப்பவ
ரங்கணேரொரு பட்சிமுதுகிலுடை வநதுபோகும கிழ்ச்சியுடையவ
னம்புராசிவ றப்பமலிகணை சிநதுசாபம்வ லாதநபுயபல
னதிர்பெருநதொனி யொடுநயபெறு தமிழ்மொழிநடு பதின்மர்தங்குரு
வபலையென்றுமொ ருருவுகொண்டவ னுவின்றலைவாசன்,
அழியாத கீர்த்திபல மல்குகோ,

தெருளுடைத்தவர் துதிபிகப்புனைவோ—னடிக்கடி
கபடவித்தைக ளுலகுயப்புரிவான்—மலர்த்திரள்
சிந்துதாருவி னைப்பொனகரினர் கண்டுகாணநி லத்தினடுமவன்
வஞ்சமாமன்வி டுத்தசகடமு றிநதுவீழவு தைத்தகழல்பெறு
சிறுவனஞ்சனை மகனறிந்துசொ லொருபெரும்பெய ருடையவன்சில
சிகிதருங்கவி னிறகணிநதவிர் சிர்தங்குமொ யாரன்,

மரகதக்கிரி யனைய பொற்புடையான்—மிகத்தினம்
வழிபடத்தகு மடியர்பிற்றிரிவோன்—மறைப்பொருள்
வம்பெனுவொரு வித்தனதுபெய ரெங்குமியாருமு ரைப்பவாசுசெய்
துண்டரீகனி ரத்தமுடனுயி ருண்டுலாவிபு வக்குநரகரி
மலைகொடன்றொரு கடல்கடைந்தவன் மறுவிலங்கதன் மகிழ்பெருந்தகை
மதிவருந்திரு மதிகொளுங்கன வாணைமபடையாளி,
திரிகிடத்திமி யெனவொர்கட்செவிமே—னடிப்பவன்
முதலையைக்களி றுயவதைத்தருள்வோ—னினிப்புறு
செஞ்சொல்வாணனொ ருத்தனுயிரொடு டமபும்வாய்கொடு முத்தியருளரி
பந்தபாசமொ ழித்தமுனிவரர் தங்கண்மாதவ சிற்கோர்கடிமகிள்
செவிலியென்றுவல் விடமுறுநதனை முதவவந்ததொ ரலகைகொன்றமை
தினம்விளம்புநர் மனதிடங்குடி சேரெண்குணவாரி,
செடிநாறு மேற்பொதுவர் வெளவுதாய்,
செறிபொழிற்றலை முகில்வரக்களியால்—வனப்புயர்
கலபமுற்றிய மயினடித்திடுமே—பளித்தி
டெநதனுவென மிக்கவிசைபயி லுமபல்வானர முட்கனிகளைவ
கிர்ந்துசேயநி றத்தசுளைகளெ றிந்துமூடிம ணக்குமுனிவரர்
சிறிதுமங்கசை வறவரைந்துள பொறிகளென்றறு தினமிருந்துயர்
செபதவம்புரி குவர்நெருங்கிய சேண்விஞ்சையர்சூழ்வர்,
மறைமுழக்கிடை யறமிகப்பெறுமே—புயிர்க்கொலை
தவிர்மகத்தழ லினர்கள்பற்பலரே—மறுக்கரும்
வஞ்சலோபர்த மக்கொரெமனிகர் துங்கவீரரு மற்றையவர்களு
நெஞ்சினுடிய விச்சைமுடிவுற வென்றுவேணத வத்தின்முடுகுவர்
வயலினும்பல தெருவினுங்குளிர் மனையின்முன்றில்க ளினுமிகுஞ்சினை
வளையிரைந்துவெண் மணியுமிழ்ந்திடு மாதந்தொறுமீடில்,
சிலவிதப்படு விழவுதித்திடுமே—யரக்கர்க
ளனையவர்க்கெம புரபதிற்கொடிதே—யெனப்பலர்
சிந்துபாடுவர் பற்பலடியவ ரநதநாள்குரு கைப்புளியினுழை
யுந்தபோதிதி செப்புதமிழ்மறை தந்தஞானவ ளக்கர்முழுகுவர்
செழியன்முன்பொரு கிழியறுப்படி கவிபகர்நதவ னனையர்தங்கழல்
சிரமணிந்தவ ருணரும்வணபெறு சீரங்கமதான,
திருநாடு போற்குலவு தையலாள்,

பெண்கலை.

மருளுறப்பல ரையுமயக்கிடும்வேல்—விழித்துணை
யுடையசித்திர மனையபொற்கொடியாண்—முழுச்சினை
மஞ்சுபோலுநி றத்தகுழலினள் வென்றிவாளினை யொத்தநுதலினள்
கண்டுபோலுமி னித்தமொழியினள் கும்பமேநிகர் குத்துமுலையினள்
வகுளமென்றொடை யணிதரும்புய மிசைகரும்பொடு மலர்நெடுங்கணை
மருவுமங்கச னதுமெரும்படை வாய்முந்தும்விசேடி,

இருளெனப்பகர் கரிவெருக்கொளவே—வெளுத்தப
 விரைவனப்பவிர் நகைநகைத்திடுவா—ளலைக்கட
லினக்கணேவரு பற்பனமகளிரு மிந்திராணியும் விதத்தைமுழுதுணர்
 துங்கவாணியும் வெற்பிலற்றினம் கிழந்துவாழ்பல பொற்புமகளிரு
மிணைதவிர்ந்தவிர் தருபெருந்தகை யுடையளிங்கித மயிலெனும்படி
 யிதந்தடம்பயில் குமரிமின்கொடி யோவென்றிடுதேகி,

மலர்பறித்தொரு வனமதிற்றனியே—நிலைத்தன
 ளிதுதவப்பய னெனநினைத்தருகே—யடுத்தனன்
மந்தமாருத வெற்றியிரதமி வாந்தமாரனெ திர்த்துமலர்க்கணை
 சிந்தினனவ சத்தின முழுகினி மிர்ந்துமோகம ணக்குநயமொழி
வகைபகர்ந்தன னவளறிந்துமெ லெனநடந்தன ளோடிதொடர்ந்தனன்
 வதனமென்றிலை வெயர்வரும்பிப மாலைகொண்டிலள் போல,
 மடிவாளில் வார்த்தைசில சொல்லினாள்,

மஞ்சமயக்கள வறமிகுத்தலினா—லடிக்கடி
 பெரிதிரப்பதொர் துணிவுபெற்றனனே யெனிச்சையில்
வம்பியாமவளிச்சைசத்தப ந பங்குமேலிட லுற்றுமைதையவள்
 சிந்தையூடுமறைத்து நயமறு வெளுசொலோதிவெ றுப்பினமுடுகினள்
வஞ்சபுங்கவ னதுகரங்களை மிருவாதொந்தமும் வரைதல்கொண்டற
 மறுகிநொந்தடி தொழுதலினறிப வாறங்கயாம் போதுள்,

இசையுமப்பெரு மயலினைக்கணை போ—லெழிற்பெறு
 கடைவிழித்துணை சிறிதுணர்த்திடலா—லுவப்புட
னின்றுணைசைபிட் டதினமுழுகிய வென்றனுநபிர் தப்பியுய்வருள்
 வமயிலாணவதை சுற்றிநாகில் பூசிடேலென நட்பொட னுறுகின
னிதயமென்றகி லவளெமிஞ்சிய கனிவுவந்தொரு நகைதுலங்கலு
 மிடர்தொலைந்தது சுகமுற்றாதகி யோபென்றறவாடி,

மதனனுக்கணி முடிபொனக்குணை முற தந்துணை
 தொடநினைத்துமொர் சிறிதுராசசுறு மேவன—முருக்கிதழ்
வஞ்சியாமல ளிதகிடெனவுமவி ளம்ப ணைனவள சற்றுளிசைவுட
 னெஞ்சினாசக சத்திலவருமள வும்பொருகவ ரற்பொனுமவிதி
மதனதந்திர மதனினந்திபு மனைய நம்பகா வகைதெரிந்தவென
 வயினுறந்துய ரிவளமவனற்றி வாரிங்கிலரோயென,
 வழிபாடு நோக்கிமிக வெஃகினாள்

சுருணமலர்க்குழல் சரிவுறக்கையினா—லிணைத்திதழ்
 பருகிமுத்தின னவளுமப்படியே—நடத்தினள்
சொந்தமாமிம கடகுமவளவு தொந்தமானந டக்கைவரலரி
 தந்தமாதுசெய் திட்டகலவியின் விந்தையாவுமு ரைப்பதரிதுப
சுபதிமுன்பொரு முனிமகன்சொல் வழுவையென்றுள வதனனங்கவிர்
 சுவணமந்தர மிசைவரைந்தது தோதென்றிடலாகும்,

விரகமிப்படி யொருவருக்குறுமோ—முலைத்துணை
யெனவுரைத்திடு மதகளிற்றமரா—விளைத்தனன்
வெங்கண்வாளர வொத்தகடிதட சும்பனுதிக ளுக்குமிசைவொடு [தையர்
கொஞ்சினுளளை யொத்தசெயலவ ளுஞ்செய்தாளவ ளொக்கும்வனி
விபுதர்தந்திரு நகரினும்பெற லரிதணைந்தவெ னுளமறிந்தது
வெளிறுநெஞ்சுடை யவருடன்சொலில் வீணென்றிகழ்வார்கள்,

சுபகரத்தன கரணமெத்தனையோ—வவற்றினை
முழுதுரைப்பது முறையெனத்தகுமோ—மணத்துயர்
தொங்கல்சூடுவள் வெற்றிலையைநனி மென்றுவாயினி டத்திலுதவுவள்
கொஞ்சமேனுமுள் வெட்கமிலளவை யெங்குமேபோகவிடுத்துமருவினள்
சுரதவிங்கித முழுதறிந்தவ ளவளுடன்புணர் விதிபெறுந்தலை
சுகிர்தமொன்றிய திதுநிசந்தெரி தோளென்றவிர்தோழ,
துடியான ராத்திரிய தல்லவோ,

துடைகளைக்கொடு மிகநெருக்கிடுவா—ளடிக்கடி
நெடியபுட்குர லிசையெழுப்பிடுவாள்—விழித்துணை
துஞ்சல்போலநெ ருக்கமுறவும யங்குவாடெளி வுற்றுன்வலியள
வுஞ்செய்சோர்வுறல் கெட்டியெனவும்வி ளம்புவாளுபரிச்சுரதவகை
தொடர்வள்சந்தன களபகுங்கும முலைமதம்பெரி திறுகும்வன்பிடி
சுகமிளம்பிடி தவிர்தியென்றணி தாசும்புறமாக,

வெகுவிதப்படு தொழினடத்திடவே—முறைப்படி
யிருவருக்குமோர் கணநழுக்கமதோ—டுதித்திடு
விந்துநாதவொ ழுக்கமெழுகட லுஞ்சமானமெ னப்பெருகியது
பஞ்சபாணமெ டுத்தமதனனு ளொஞ்சியேமுழு குற்றுவெருவினன்
விநயமங்கள் புனிதரஞ்சித வனிதையுந்தளர் வெனிலடைந்தனள்
விடியலென்றிட மிகமுழங்கின வீரம்பொலிகோழி,

சுரகணத்தினர் மிகும்வியப்புடனே—துதித்தன
ரெவரிதற்குரு கிடுமயக்கமிலார்—நிலத்தினர்
துன்பவாரிதி வற்றவயமலி வொன்றுகாரித வத்தின்மகவென
வந்துநீடுபு ளிக்குளுழைதரு செஞ்சொன்மாறன்வ குத்ததமிழ்மறை
சொலுமரும்பொரு ளுணர்பெருந்தகை யினர்களன்றிய தவருமிஞ்சிய
சுகிர்தமென்பதி தலதெதென்றநி சோரம்புரிவார்கள்,
சுகமீது கூட்டுவது தெய்வமே. (௧)

தோங்கற்றுழிசை.

அடியார்கள் கேட்டபடி செய்குவோ
னழியாத கீர்த்திபல மல்குகோ
செடிநாறு மேற்பொதுவர் வெளவுதாய்
திருநாடு போற்குலவு தையலாண்
மடிவாளில் வார்த்தைசில சொல்லினுள்
வழிபாடு நோக்கிமிக வெஃகினு
டுடியான ராத்திரிய தல்லவோ
சுகமீது கூட்டுவது தெய்வமே.

இவ்வண்ணப்பாவின் மோனை நயயாதிய வுணர்வாரு மிருப்பாரென நினைக்கின்றும். (அஅ௰)

# திருப்புகழ்.

## குழிப்பு.

*தனன தநதத் தானன தானன—தன தானு.*

அருள்விளங்கப் பாடியபாவல
    ருடனிணங்கித் தேவருமோர்வரு
    மறிவினின்றுற் சாகமதோடுணை — நினையேனோ
  வகிலமஞ்சத் தீமைகளேபுரி
    கொடியவஞ்சத் தோர்களைவேருட
    னழியவென்றிட் டேசெயபேரியொ — டுலவேனோ

பொருள்விரும்பிப் பூரியர்வாயிலின்
    மிகவலைநதெய்க் காதவிராதவ
    புதல்வனென்றெப் போதினுமீகையின — முயலேனோ
  பொருவில்செம்பொற் சோதிகுலாவிய
    பறவையொன்றிற் சூலொழியாதுற
    புயலெனும்பொற் போடடியேனைநீ — வருவாயே

இருள்கருங்கற பாறையிலோர்மகள்
    வரநடந்திட் டேபுகழ்தோய்தரு
    மிருபதங்கட் காசைகொள்வார்களை — மறவானே
  யெழிலியொளுசக் கோகுலம்வாழ்வுற
    மலைசுமந்திட் டாயடியார்களை
    யிகழும்வண்டர்க் கோரெமனுமென — மிளிர்வோனே

தெருளுநெஞ்சத் தோர்பதுமாதவர்
    வணையுமின்சொற் பாடல்களோடளி
    செறிபசும்பொற் பார்துளவாரமு — மணிவோனே
  சிவன்வணங்கத் தாமரைமேல்வளா
    பிரமனன்பிற் பூசைசெய்சீர்திகழ்
    திருவரங்கக் கோயிலின்மேவிய — பெருமாளே. (க)

*தானநத தானதன—தனதானு.*

ஆனந்தவாரிதியின் மூழ்குநதபோதனர்க
    ளாருந்தளாதநிலை — யடையேனோ
  வாடுங்கலாபமயில் போலுமயபன்மாதாநகை
    யால்வந்துமூடுமிருள் — விலகாதோ

பானநதொடாழிபுனை தோளகொணடு நீயெனது
    பால்வநததோர்கனவு — பழுதாமோ

பாகன்றுதேனிதென வேயின்சொலாலடிமை
பாடும்பல்பாடல்களு மணிவாயே

கானஞ்செய்நான்மறைவ லான்வந்துபாருதவு
காலந்தனுபிமலர் கரியோனே
காலன்றன்மார்பிலுதை தாள்கொண்டுளானணையர்
காணுஞ்சுபாவமுறு நெடுமாலே

தீனங்களாவனவெ நாளுஞ்செய்தானவர்கள்
சேதஞ்செய்வாய்திருமின் மணவாளா
சீதங்குலாவுபுன லேவந்தகாவிரிகொள்
சீரங்கமேவிவளர் பெருமாளே. (உ)

தனந்தனதன தானன — தனதானு.

கறங்கு போலுமெனுதுபுன் மனஞ்சதாவுனதாரருள்
கலந்துவாழ்வுறநாடித லறியாயோ
கருங்கண்மாதர்களாகிய தளங்கொள்பாலனென்பதொரு
கரும்பினுலமராடிட விடலாமோ

குறங்கின்மாமகண்மேவவொர் பெருமபுனேறியசிருணர்
குணங்குலாவுநரோடுற வருளாயோ
குருந்தைமேலிடைமாதர்கள் வருநதியோலிடவேறிய
குழந்தைவேடமதோடெதிர் வருவாயே

மறங்குலாவியதானவ ரடங்கநாசமதாகிட
வதனுசெய்மோகினிரூபமு முடையானே
வளர்நதகாதிலுலாமக ரகுண்டலாமசயசாரண
வலங்கொண்மாருதிபேணிய கழலோனே

திறங்கெடாவரிவார்சிலை சுமநதபோடியினேடருள
சிறநதநூலுரைகூறிய புலவோனே
சிவன்சொன்மான்மியமார்திரு வரங்கமாநகரேநனி
சிறந்ததாமெனமேவிய பெருமாளே. (௩)

தனதனந்தத்ததனதன - - தனதானு.

தவபலன்சற்றுமிலரென மிடியினுநதெய்த்துனடியவர்
தமைநகுந்துட்டர்மனையினு நுழையாதே
சரதவிஞ்சைப்புணியமுனி வரர்கணெஞ்சத்தின்மலர்தரு
சரணகஞ்சத்தின் மகிமையை மறவாதே

யவலமின்றிபலசமயரும் வழிபடுஞ்சித்திமருவியு
னருளிலென்றைக்குமுழுகிட விடுமாறே

யமார்வந்திக்கவொருமுது பறவையின்கட்பொன்மகளுட
னறனிறைந்திட்டமுகிலென வருவாயே

குவலயந்துய்த்துமுமிழ்தரும் வகைதெரிந்திட்ட பெரியவர்
குலகடுங்கச்செய்தகுவரை யடுமாலே
குவடதொன்றைக்கையிடைகொடு மழையைவென்றிட்டபுகழ்பகர்
குரவரின்சொற்களொடுதுள வணிவோனே

சிவனயன்சத்திகணபதி முருகனங்கிக்கடவுணிகர்
சிலருளொன்றிச்சில்செயல்புரி பெரியோனே
திருடனென்றற்பநினைவுட னிகழினுந்தக்கமகிழ்வொடு
திருவரங்கத்தில் விழிதுயில் பெருமாளே. (௪)

தனந்ததானன தனதன—தனதான.

வயங்குபூண்முலைமகளிரை விரும்பியேயவர்பணிசெயு
மடங்கொள்வாரிடையடிமையு முறலாமோ
மகிழ்ந்துபால்சொரிபசுவதை தினஞ்செய்பாதகர்குடியிடை
வருநதிமேதினியழுவது முறைதானோ

கயங்கிவானவரலமர வதஞ்செய் தானவர் கிளையடு
காங்கணுநினிடமிலை யெனலாமோ
கறந்தபாணிகர்களமொடு சிவந்தவார்சிறைகொடுதிகழ்
கவின்கொடாவொருபறவையில் வருவாயே

வியன்கொள்வார்கலைபலகொடு குருந்தையேறியபெருமையை
விளம்புவார்துயர்முழுதடி மருளாளா
விதண்டவாதர்களினைவரு நடுங்குமாடல்செய்திடநிதம்
விரும்புமாதவர்மனமல ரகலானே

யயன்சொனுன்மறைமுதலினும் விடங்கொணமாசுணமுடியினு
மகண்டபூரணவெளியினு மவிர்தாளா
வனந்தனாகியவணைமிசை யிரண்டுமாதர்களருகுற
வரங்கமாளிகை யமர்தரு பெருமாளே. (௫)

தனனதநத தானநதனந்தன—தனதான.

சிவனிருந்தவா லுங்குருந்தையு
முனதுகஞ்ச பாதம்புனைந்தமை
தெரியுமன்ப ரோடென் றுறும்படி பெறுவேனோ
திருவிருந்த மார்பன்பரம்பொரு
ளெனவிளம்பு வார்முன்பும்வம்புசெய்
திருடர்கண்டு நாணும்பெருந்தகை யருளாயோ

கவளமுண்ட வேழஞ்சினந்தொரு
முசலமுங்கொ டேவந்தவன்றது
கதறவென்று வார்கொம்பிரண்டையு நொடியூடே
காயிரண்டி னாலும்பிடுங்கிய
வலிமைசிந்தி யார்நிந்தைமிஞ்சிய
கலியொழிந்து நானுய்ந்திடும்படி நினைவாயே

யிவனவன்பி ரானென்றிகன்றுழல்
பலமதங்க டோறும்புகுந்தவ
ரிதையநம்பு ரூபங்களுங்கொளு மொருமாயா
விளமடந்தை மார்கொங்கையின்பமு
முயர்வதன்றெ னுமிஞ்சுசெஞ்சுவை
யியல்வனைந்து ளார்பின்றிரிந்திடு நெடுமாலே

யவமழிந்த போதம்பொருந்திய
பதின்மர்தங்க ளாலுந்தெளிந்தபி
னதுவிதென்றி டாதோன்றுகின்றவர் குருவாவா
யரவினங்கள் கோவென்றிறைஞ்சிட
விடம்விளைந்த வாயங்கதந்தனி
லணியரங்க மேவும்புரந்தரர் பெருமாளே. (௬)

தனன தந்த தான தான—தன தான.

பனைநெடுங்கை யானைமூல மெனமொழிந்த போதிலேகல்
படிவிளம்ப லானுனை கொளல்வீணே
பசுவனந்த மாகமாய வதைசெய்கின்ற பாவசால
பதிதாஞ்சு மாடலீய நினையாயோ

வினைமறந்து நாமம்வேறு வழியில்லிண்ட பேருமீடி
லுயர்வுதுன்றும் வீடுசேரல் பிழைதானே
வுலகமெங்கும் வாழநாடு மெனையிகழ்ந்தி டாயெனவு
னூறுதிகொண்டு ளேனையாள வருவாயே

மனைவிமைந்த ராடுமாடு பலபல்பண்டம் வீடுகாடு
வயல்விரும்பு வாரொநாளு மறியானே
மகனெரிந்து வீழநாடு முனிவுகொண்ட பேரனோர்கை
மருவுமண்டை பாவமோடு களைவோனே

சினைமுதிர்ந்த சேல்கள்போலும் விழிகளொன்று மாயமாதர்
தினம்விரும்பு போகமீயு மணவாளா
சினம்விளைந்த பூமியாகு மரவமென்ற பாயன்மேவு
திருவாங்க நர்தனை பெருமாளே. (௭)

தன தனந் தத்த தானன — தன தானா.

பசுவினங் கட்குநீடிய துயர்செயுந் துட்டராதிய
பதிதர்தங் கட்கொர்காலனின் மிளிரேனோ
பணிலமுங் கொற்றவாழியு மருவுகுன் றொத்ததோண்மிசை
பலபல்சந் தத்தபாடல்கள் வனையேனோ

விசுவமுண் டிட்டுமீளவு மும்மிழுநின் பொற்புவாயெனுள்
வெருவிதஞ் சொற்றவாய்மைகள் பலியாவோ
விதாணந் துற்றசூரியன் மதலைகண் பெற்றசேவையென்
விழிமுனுஞ் சற்றுதோணிட வருவாயே

நசுநசென் றிட்டவாசக மொழியும்வஞ் சக்குணலர்க
ணனவிலென் றைக்குநாடரு நெடியோனே
நறியசந தப்பயோதர முதவவந் துற்றபேயுயிர்
நமனடுங் கக்கொல்சீர்சொலின் மகிழ்வோனே

யசுவமொன் றுதததவானன முடனிலங் கிப்பல்பாதக
ரதலமொன் றச்செய்வான்மிக நினைவோனே
யறல்வளம் பெற்றகாவிரி யிடையிமேலான் றிக்கெடாதொளி
ரணியரங் கத்திலாடல்செய் பெருமாளே. (அ)

தானதன தத்த தநத—தனதானா.

ஆலடியினிற்றவஞ்செய் நாலுமுனிவர்க்குமன்பொ
டாரணமுடிப்பைவிண்ட சிவனேபோ
லாகுலமொழித்திருந்துன் மேன்மையறிபக்தொடங்கி
யாய்வுறுமெனக்கிரங்கி யருளாயேன்

ஞாலமயன்மிக்கெதிர்ந்து போர்செயுமவர்க்குளன் று
நாலுகுதிரைக்குணங்க ளறிவோனே
நாகபதிபெற்றமைந்த னேறியரததிருந்த
ஞாயமதுமெய்ப்படுங்கொ லறியாயோ

கோலமதெனச்சமைந்து பாதலமதிற்புகுந்தொர்
கோரதகுவற்றடிந்த முதல்வீரா
கூர்மமதெனததிகழ்ந்து பாலுததியிற்கிடந்து
கோதிலமுதக்குடஞ்செய் தருண்மாலே

காலபயமற்றதொண்ட ரேவியபணிக்கிசைந்த
கார்நிறமுகிற்புரைந்த நெடியோனே
காசினியினுக்கொர்தஞ்ச மாகியவனப்புயர்ந்த
காவிரியிடைக்கிடந்த பெருமாளே. (கூ)

தனன தனதன தனதன தனதன—தன தானு.

கயலேநிகர் துணை விழியினர்மயலிடை
முழுகியுனதிரு பதமலருரிமையொர்
கடுகினளவுமெய் தில்ரெனமறுகுவ தொழியேனு
கபடமலிவுறு தகுவரையடியுட
னொருவியுனதடி யவரொடுபழகிய
கருணைமுனிவரரெனையுமொர்பொருளென நினையாரோ

பயமொரணுவுமி லெமபடரெனதுற
வினர்களதுபெயர் நுவலினுமிருளுடல்
பதறிவசமற மதிசயமிகைபட நடவாதோ
பவளமலையென விடமுமிழ்பணியணி
குலவவதிவிரை வினிலுலவியதொரு
பறவைபாசதன் முதுகிலென்விழியெதிர் வருவாயே

நயமுமதரமு மொலியுமினிசைமுத
லியவுமருவிய தமிழ்கொடுதுதிசெயு
நரரையிமையவ ரினுமுயர்வுறவிடு நெடியோனே
நரலைகடைதலு மதனிடையெழுமெழி
லமுதகடமதன் விழைவொடுநிசிசரர்
நசியமலர்மக ளுருகிடவொருமக ளுருவானு

பயனுமரனும்விண் மகபதிமுதலிய
கடவுளருமிக நினைதொறுமருள்கொடி
வவனிமிசைசில மதலைகளெனவுமுன் வருமாலே
பகிலமொருசுமை யெனமுடிமிசைகொடு
சகலகலைகளு நுவலியபுகழ்பெறு
மாவவணையினி லிருநதியிடைவளர் பெருமாளே. (௰)

தன்னதந்ததானன—தனதானு.

என்னகஞ்சதாநிலை தரமேனு
வின்னல்குன்று மாறுசொ லியவாறே
யின்னமுஞ்செயாதுறன் முறைதானே
வெண்ணிறந்தசோதனை செயலேனே
பன்னரும்பல்வேதியர் தமையீவாய்
பன்னகங்கொல்வாயுறு பரியானே
புன்னலங்கொள்வாருணர் வருமாயா
பொன்னரங்கமேவிய பெருமாளே. (௰௧)

தாத்ததன தானன—தனதானா.

பாக்கனையதாமுலை தோற்றுமுனுமாதர்கள்
பாற்பெரிதுமால்கொடு சுழல்வேனோ
பாழ்த்தகுணலோபர்மு னேக்கமொடுபோயவர்
பார்த்திகழநாயென வலைவேனோ

நாக்கணிசமேதுமி லார்க்குமிகு பாடல்க
ணாட்டுபுலவோர்களு மிகழ்வாரோ
நாத்திகர்முனுநிகழ் தூர்த்தமதவாதரை
நாற்றிசையுமோதிட வரமீவாய்

பூக்கணிகர்தாணிலை காட்டியெதிராளிகள்
போர்க்குமலைபோடியை யருண்மாலே
பூச்சையனையார்பகை மேற்கொளுமெனேடொரு
பூட்டகமதாமுரை புகல்வாயா

வாக்கமனுவேனுமி லாப்பலகுரூரசெ
யாக்கொலைபொருதழு மவர்நேயா
யாற்றலுடையாருணர் கீர்த்திபெறுகாவிரி
யாற்றிடைகுலாவிய பெருமாளே. (௰௨)

தானனதாத்ததன தன—தனதானா.

ஆபாசமூர்க்கமடையரை மேலானமாக்களெனவெளி
யாயாசமாய்ப்பல்பெருமையு முலையாதே
யாடாதியாச்சொலுயிர்வதை யாலினயாக்கையுமுனை
வார்பாலுமேற்கவிடுகளி தழையாதே

பூபாரமாற்றவருமுனை யேநாடுமாறறலுமை யவா
போல்வேடம்வாய்த்தசிலரையு மிகழாதே
போர்நாடும்வேற்கைவயவரும வானோருமேதமலவிருள்
போய்ஞானவாழ்க்கையுறவருள் புரிவாயே

கோபாலர்கூட்டமொடுபசு மாயாதுகாத்தபுயவலி
கூறுதபேர்க்குமுணவருள் குணசீலா
கோமாளிமூர்த்தியெனினும காமேசாசீர்க்கனெனினுமொர்
கூர்மாதியாச்சொலினுமகிழ் வுறுமாலே

காபாலிதோத்திரமுமல ரோன்வேதவாக்கியமுநுவல்
கார்மேனிகாட்டுமழகிய மணவாளா
காணாதகாட்சிகளையினி மீளாதமோட்சமுடனருள்
காவேரியாற்றிடையில்வளர் பெருமாளே. ([illegible])

தனந்தனதன தனதன தனனத்—தனதான.

குரங்கெலாமொரு படையெனவலையத்
துணிந்துபோய்வலி மிகுதசமுகனைக்
குழந்தையாதிய கிளையொடுதடிதற் பகரேனே
குலுங்குபூண்முலை வனிதையர்தொடரக்
கலைந்தவார்கலை பலகொடுநொடியிற்
குருந்தையேறிய குணநுவல்பவரைப் பணியேனே
கரங்களாயிர முறுமவன்மெலியச்
சொரிந்தவார்கணை மழையினதுயர்வைக்
கனிந்துபாடிய புலவரொடுருகிப் பழகேனே
கரண்டவாகன னதுகிழமையுனக்
கிசைந்ததாமெனு மவரெதிர்சினவிக்
கலின்கொண்மாலது நடுவுளதெனுநட் பருள்வாயே
சிரங்கணூறுப து றுமரவரசிற்
குவந்தநாயக னரியெனிலுருமிச
சிவன்கணேசனெ னவர்களுமகிழ்துய்ப பருள்வோனே
தெளிந்தவார்கட னுகர்முனிதமிழிற்
கிரந்தநான்மறை முடிவினைமொழியத்
தெரிந்தபாலகன் முதலியபதின்மர்க் கெளியோனே
யரங்கணேர்விழி யொடுதுருபதன்முற்
புரிந்தவேள்வியில் வருமகண்முறையிட்
டவன்றொராயிர மணிகலையருண்மெய்ப் புகழோனே
யகண்டபூரண வநுபவமகிமைத
திகம்பராதிய முனிவரர்நனிசெப்
பரங்கமாளிகை நடுவளர்சயனப் பெருமாளே (௰௪)

தானதனன தந்தத்தானன—தனதான

மாயாமுனிவர் தங்கட்கொர்கோனென
மேயானினிது வநதித்தபூமகண்
மாறுதுனது நெஞ்சத்தில்வாழ்வது நிசமானால்
வாவாவெனவு னன்பிற்பல்பாடல்க
ளோயாதுரைசெ யும்பத்தனுமென்முன்
மாபாவகலி வந்திற்றைநாள்வரை பொரலாமோ
வீயாதவரை யுண்கட்புலோமிசை
கோமான்முருக னங்கிக்கொர்காலினை
யீவான்மதன னென்றொப்புவார்களு நகலாயோ
வேனியிதைநி னைந்திட்டிலாய்துயின்
மேலாயளவின் மிஞ்சுறநதோவினி
யாரேனுமொரு செஞ்சக்கரேசுர னுளனேயோ

காயாமரமொல் குஞ்சுத்தலோபிய
ராநூறரச ருஞ்சுற்றுவாரும
காகாளிபடை பின்குட்சிமேலல்செய் வஃோயோனே
காணுறனைய பண்புற்றவாழ்வினை
யேமேலெனம கிழ்ந்துற்றமூடர்கள்
காணுவிருப தந்தொட்டயோகிய ருணர்மாயா

தீயாசறிவ ரும்பச்சைமாதவ
போகாதிபரி ணம்பற்றுகேசவ
சேணுடைய துங்கர்க்கொர்நாயக நெடுமாலே
சேலேயனைய கண்பெற்றமாதர்முன்
வாடாதுறசு கன்சித்தநாடிய
தேவாதிருவ ரங்கத்தின்மேவிய பெருமாளே. (௰௫)

தனன தனந்தான தத்தத்—தன தானா.

கரியமதன்சேனைசுற்றிப் பொரவின்மெலிந்தேதமுற்றிக்
கவலையெனுஞ் சாகாத்திற் குளியாதே
கயவரிடம்போயவர்க்குத் தயைவருமென்றேநினைத்துக்
கவிபகர்கின் றேழைநச்சிப் பழகாதே

பெரியவர்தம்பாடலிற்செப் பியபொருணன் கோர்தலற்றுப்
பிழைபகர்சண்டாளரச்சப் படுமாறே
பிரபலசிங்காரசித்தித் திறமுழுதுந்தோயவிட்டுப்
பிறவியறும்பேறமைத்தற் கிசைவாயே

சரியணிமென்றோள்படைத்துப் புலவர்குலஞ்சாவறத்துர்த்
தருவர்குலஞ்சாவறச்சொற் பயில்சோரா
சகளமிகழ்தார்தமக்குப் பகைவனெனும்பேர்பொறுத்துச்
சரணநினைந்தார்மனத்துட் புகுமாலே

யெரிநிகர்கண்டோயுமைக்கற் புரைகயமொன்றேடெதிர்த்திட்
டிருபிறைவெண்கோடொடித்துச் செறும்வீரா
விகலறுசந்தோடசித்தப் பொதுநிலைகொண்டாடுமுத்தர்க்
கினியவரங்காவெணிச்சைப் பெருமாளே. (௰௬)

தனந்தனதன—தனதானா.

துணிந்துமூடர்சொ லிடும்பொலாவசை
தொடர்ந்ததாலுயிர் தவியாதே
சுகன்பராசர னிரண்டுபேரிடை
துலங்குவரன்முத லினர்போலே

பணிந்துன்வார்கழல் சுமந்துமாய்வறு
பதம்பெறுதிவண் மெலிவேனோ
பயந்தபேடிவெல் செயங்கொள்வானனி
பகர்ந்தஞானநல் கிடுவாயே

தணிந்திடாமுடி கொளுஞ்சுயோதன
சயங்கொல்வால்வலை யுடையானே
சரண்புகாதிகழ் குணுங்கர்வாய்நுகர்
தரும்பலூண்வகை களுமீவா

யணிந்தபூண்மலி சிவந்தபூமக
ளமைந்தமார்புறு நெடுமாலே
யகண்டகாவிரி வகிர்ந்துசூழ்தரு
மரங்கமேவிய பெருமாளே. (௫௭)

தனதனந தத்த தநத—தன தானா.

தனையர்தம் பொற்சதங்கை யணிபதந் துற்றநெஞ்சா
தமைபிகழ்ந் திட்டுனன்பி லமிழ்மேலோ
தரம்விழைந் துற்றவென்ற னிடமதோ னறசெய்கின்றை
தனம்வழங் கிச்சளங்கொய் கிலையேனோ

நினைவிலொன் றைக்கொடின்சொ லொலியிலொன் றைச்செய்வம்பர்
நிலைபுணர்ந் துட்புழுங்க லறியாயோ
நிகமவந் தத்தவிர்ந்த சமரசம பெற்றனந்த
நெறியுமவந் திக்கவென்று நிகழ்வேனோ

தினவனஞ் சுற்றுகுன்றோர் குடையிலொன் றசசுமந்த
திறமவிளம் பிற்சிறந்த பயனீவாய்
செகதலந் துய்த்துமிழ்ந்த விதழ்திறந் திட்டியமபு
திருவரம் பெற்றதொண்டர் துணையாவா

யனையரின் றிப்பலண்டர் பரவவென் றைகருமவண்ட
ரழிவுகண் டிட்டவெனறி நெடியோனே
யதுலர்சிந் தித்திறைஞ்சு திருவரங் கத்திலென்று
மரவமொன் றிற்றுயின்ற பெருமாளே. (௫௮)

தனனதந்த தத்தத்ததந்த—தன தானா.

முகில்படர்ந்த வெற்பொத்தகொங்கை மகளிர்தங்க ணத்திச்சைகொண்டு
முறைபிறழ்ந்து சுற்றித்திரிந்து தவியாதே
முருடரும்ப யபபட்டொதுங்கு கொடுமையிங்கி யற்றத்துணிந்து
முதல்வனின்றெ னசசெப்புமவம்பி லிசையாதே

பகிரதன்ற னக்கிட்டனென்று வெகுசனஞ்சொ லக்கற்பிளந்து
பழுதில்கங்கை யிச்சித்தசிந்தை கழுவாதே
பனுவலுன்ற னக்குப்புனைந்து மிடியில்வெம்பி யெய்க்கச்செய்கின்ற
படிறொழிந்து மெய்ச்சித்தியின்ப மருள்வாயே

சிகியினங்க ழுற்றக்கழுன்ற விறகணிந்த பொற்பைப்புகழ்ந்து
தினம்விளம்பு பத்தர்க்கிசைந்த வரமீவாய்
திருடனென்றி கழ்ச்சிச்சொல்விண்ட கவிஞருங்க ளித்துப்பொலிந்த
செயமடைந்தி டச்சற்றிரங்கு நெடுமாலே

யகிலமுண்டு கக்கிச்சிவந்த பவளநஞ்ச ருத்தற்குவந்த
வலகையுங்கு டித்திட்டவிந்தை யுடையானே
யரவபந்தி னத்துக்குண்முந்து பெருமைகொண்ட மெத்தைக்கணின்று
மணியரங்க முற்றுத்துயின்ற பெருமாளே. (௰௬)

தனன தந்தன தனன தந்தன—தனதான.

ஒருவரும்பகை யலருனன்பர்க ளௌனநினைநதிடு நிலையினின்றுமெ
னுளமிவண்குலை குலைவுறும்படி செயலாமோ
வுலகமெங்கணு நலமுறும்படி முயல்பெருந்தவ மதுவும்வம்பெனி
னுறவரின்புறல் கருதுகின்றவர் தாமியாதோ
மருமலிந்துள துளவமன்றியொ ரிணையில்லைந்தமிழ் பொழியுமென்றனுள்
வலியவந்தது நுவலுநின்றயை யழிவாமோ
வனசமங்கலை யெனவுனெஞ்சிடை குடியிருந்தவள் புனிதான்றிய
மனிதர்தங்கிளை யொடுமகிழ்ந்திட விடலேனோ
பருவதந்தனை யொருகருங்குடை யெனநெடுங்கர மதனிடங்கொடு
பசுவினஞ்சுக முறமுனஞ்செயும் வலியோனே
பழுதறுந்துரு பதன்மகந்தனில் வருமடந்தைக ணழமகிழ்ந்திடு
பதிதர்கங்குல முழுதடுநதிரு வருளாளா
வருவமும்பல வுருவமுந்தன வெனவுணர்ந்திடு பெரியதொண்டரை
பரகதியஞ்செயு மகிமைதுன்றிய விழியானே
யறன்மிகுந்திரு நதியிரண்டிடை நிகழரங்கந னகரிடந்தனி
லரவபஞ்சனை மிசைகிடந்தவிர் பெருமாளே. (௨௰)

தய்யத் தனன தந்தத்—தனதான.

பொய்வக் கனையுறுஞ்சிற் சிலநூலோர்
புல்லிக் கொடுநகுஞ்சொற் புகலாதே
மெய்வர்த் தனைசெய்துன்சிற் சுகவாழ்வே
விள்ளத் தகுதிறந்தொக் கருள்வாயே

நெய்வற் றரியகஞ்சத் தினள்கேள்வா
நெய்தற் கரையிடந்தெற் பையில்வீழ்வாய்
தெய்வத் திரள்வணங்கத் தருகோவே
செல்வத் திருவரங்கப் பெருமாளே. (உக)

தானந்த தனன தன—தனதான.

மானங்கள னுவுமரு வாவம்பர் குடைநிழலின்
மாழ்கென்றன் மனவிசன மொழியாதோ
மாதங்கமிவருமக வானும்பலமரர் களும்
வாழ்வொன்றவமுதுதவல் படிறுமோ
வேனந்தன்வடிவுகொடு போயங்கொர்தருவனுட
வீர்கின்றகருணைதவ றியதேயோ
வீரைந்துபுலவருட னேயொன்றிமறைமுடிவி
லேயும்பொனடிபுகுத வருள்வாயே
யானந்தபரவசவி னோதங்கொண்முனிவரெ
லாருஞ்சொலியபெருமை யுடையானே
யாடுங்கொல்கொலைமகம தேதஞ்சமெனமுபல்பொ
லார்சிந்தையறிவரிய நெடுமாலே
தேனந்துபொழிலையொரு நாளண்டரொடுபொருது
தீயுண்டியெனவுதவு மவனேயா
சீர்தங்குதலமுழுது நானும்பல்வளமருவு
சீரங்கநகரில்வளர் பெருமாளே. (உஉ)

தனன தந்தன தானத்தத—தனதான.

சருவதந்திர யோகத்துக் குரியதொண்டர்கள் பாலுற்றுத்
தனையிழந்தசு பாவத்திற் படிகேனோ
தடிமுரண்டுறு மூடர்க்குப் பொறுமையிங்கித மோதிப்பொய்த்
தனமிரந்துழல் பாழிக்கட் டொழியாதோ
வருவமென்றதை யேமெச்சிச் சகுணம்வம்பென வேசிச்சித்
ததிசயங்கரு தார்பொய்ச்சொற் கயர்வேனோ
வகிலமுண்டுமிழ் வாய்முத்துச் சிறிதிலங்கிட வேபட்சிக்
கரசில்வந்தெனை யாளச்சற் றிசைவாயே
தருவளம்பொலி வானத்துற் றவர்நலம்பெற வேநத்தித்
தனமுறுங்குயில் போனிற்கைக் குரியோனே
தழல்விடங்கலுழ் வாய்வெற்றிக் கரியவங்கத மேன்முத்திச்
சரணபங்கய மேறத்தொட் டருண்மாலே
திருமடந்தைதன் மார்பத்திற் குடியிருந்தவை போகத்தைத்
தினநினைந்தவர் பாடற்சொற் புனைவோனே
செடிநெருங்கிய சோலைக்குட் பசுவினங்களி கூர்பொற்புத்
திகழரங்கவி லாசத்துப் பெருமாளே. (உ௩)

தனந்ததன தன—தன தானா.

சமன்செய்வதையொடு மதன்செய்திடுமமர்
தவிர்ந்தசிலரிடை வசியேனோ
தனந்தனுயிர்நிலை யெனும்பல்கயவர்க
டமுன்புகயமொழி புகல்வேனோ

வமர்ந்துமுயல்வுறு பயன்கொள் சுகமெனை
யடைந்தவுறவரு மருவாரோ
வகண்டவநுபவம் வழங்குகுருவென
வவிர்ந்துபழவினை களைவாயே

தமங்கொல்பரிதியை நிகர்ந்ததிருவருள்
சமைந்ததிருவுள முடையானே
சளஞ்செய்தகுவரை வதஞ்செய்துயர்புகழ்
தழைந்தமரகத மலைபோல்வாய்

கமழ்ந்ததுளவொடு வனைந்ததமிழ்புனை
கவின்கொடலர்தரு மிருபாதா
கணங்கள்வழிபடு மரங்கநகரிடை
கவின்று விழிதுயில் பெருமாளே. (உச)

தானன தானன—தன தானா.

தேனவிழ்பூவகை யால்வழிபாடுசெய்
சீரியரோடுள மகிழேனோ
தேவருமானிடர் தானவராதியர்
சேனையுமோதிசை புனையேனோ

பானலைநேர்விழி யார்படைசூழ்தரு
பாலனெனன்மீதமர் விளையாதே
பாரொடுவானமு நாறுவதாமிரு
பாதசரோருக மருள்வாயே

கூனல்விலாலலை வாரிதிநீர்மிசை
கோல்பலகோடிபெய் முகில்போல்வாய்
கோபுரமீதுல கோரறியாமொழி
கூறியதேசிக னுணர்சீலா

கானகம்வாழ்கர டாடணனுதியர்
காலனெனுமலை யொடுபோனாய்
காதகர்சூழ்கினும் வீடுறுசீர்தரு
காவிரியூடமர் பெருமாளே. (உரு)

தனனதன தந்தன தன—தனதான.

அரியசெய மங்களாகர மருவியசு கங்கொள்வானுன
தடியவர்ப தஞ்செய்தாதனி தலைகீழோ
ரமர்மனைதொ றுஞ்சதாநுழை தருகொடிதி கழ்ந்துனலைய
மலைதொறுநு ழைந்துபாடிட வருள்வாயோ

கரியரசி டங்கர்வாயிடை மெலிதருதி னஞ்செய்பேரொலி
கவின்மருவு சந்தமாலிகை யினுமேலோ
கனிவனன டுங்கிநேர்பட வொருசிறிய வெண்சொலார்கவி
கருதுதயை யின்றுனதிட மிலையேயோ

வரியரவ மொன்றிலாடிய புகழ்கொடுசி வந்ததாள்களென்
மடிமிசைய மைந்ததோர்கன வருள்வோனே
மலர்மகளி ருந்தமார்பிடை பரிதிமதி கண்டுநாணிய
மணியணித ருங்கன்மால்வரை யனையானே

தெரியல்பல வுஞ்சில்பாடலு முதவுமொரு தொண்டன்மாமகள்
சிலைமணம்வி ழைந்தொராடல்செய் நெடுமாலே
திரிகிடதெ யென்றுநாடொறு மயில்கணட னஞ்செய்சோலைக
டிகழ்திருவ ரங்கமேவிய பெருமாளே. (௨௬)

தனனதந்தத்ததன—தனதான.

அவனிவன்றத்துவமென் மொழிவிளம்பிப்பலரொ
டமர்செயும்பித்தருட னிசையாதே
பமலைபங்கிற்குடிகொள் வனசான்கைக்கணைகொ
ளடியவன்சொற்பணிசெ யருளாலே

தவளமின்சற்றுவகை யடையுமின்சொற்கவிதை
தருதல்குன்றிப்பழியின் மறையாதே
தழலெனும்பொற்பிலகு வளசமொன்றிற்குலவு
தவமினுண்கட்கருணை சிறிதீவா

யிவளவென்றெட்டிநுவ லரியவண்சத்தியுட
னெனதுநெஞ்சத்தும்வரு மிறையோனே
யிகழும்வன்சொற்றெருகுதி யரசர்முன்செப்பினனு
மிருபதம்பெற்றுயமு னருண்மாலே

சிவனிடங்கைச்சிலையின் முறிவுகண்டற்றையொரு
சிறுமடந்தைக்குமண மருள்கோவே
செயலிழந்திட்டதவ முனிவர்வந்திக்கமிளிர்
திருவரங்கப்பெரிய பெருமாளே. (௨௭)

தனன தனதந்த தத்ததந்த—தனதானா.

புகழ்மிகைபொ ருந்தறகுணம்பி லமிழுமவர் தங்கட்குணின்று
புரிதவசு வம்பிறந்தொழிந்து விடலாமோ
புவிமகளு ழந்துக்கமிஞ்சி யுளவறவ ருந்துற்றசிந்தை
பொருவருந லம்பெற்றுயர்ந்து மகிழாதோ

பகலொளிம ழுங்கிச்செறிந்த விருள்வரவு மன்றைக்கெறிந்த
பரிதியொடு சங்கத்தைநம்ப லறியாயோ
பறவையர சின்கட்டிலங்கி யெனதுகவி யும்பெற்றணிந்து
பதின்மருட னொன்றச்செய்தின்ப மருள்வாயே

சகலபுவ னங்கட்குளொன்று முயிர்களுமவி ளங்கத்தொடர்ந்து
தகவுணவி டுங்கைத்தலங்க ளுடையானே
தனனதன தந்தத்தனந்த வெனவொருப யங்கத்திலன்று
தனிநடமி டும்பொற்பதங்கொள் கரியோனே

சிகரகிரி யொன்றைச்சுமந்து பசுநிரைக டங்கச்செயவென்றி
தினநினைபு நண்பாகக்கிரங்கு மருளாளா
செயமுனிவர் வந்திக்கவண்ட ரனைவருமவ ணங்கச்சிறந்து
திகழ்திருவ ரங்கத்தமர்ந்த பெருமாளே. (உஅ)

தனனாதந்தனாதன—தனதானா.

பதமேதருசமாமென நிதநாடுந்தபோதனர்
பலரோடிங்குவாழுநல மடையேனோ
பசுவூனுண்டபாதகர் குலநாசஞ்செய்வீரர்கள்
படியீதென் றுலாவிட வருள்வாயோ

புதனேயென்றபாவலர் பலர்பாடும்பல்பாடல்கள்
புனைசீர்வம்பெணுமொரு விடலாமோ
புருகூதன் றனுதினே யவனுநின்றதோர் புகழ்
புகலவேதங்களாகிய பிழையேயோ

கதமீறுங்கணுளரி வடிவாயம்பொன்மேனிகொள்
கடுநோவம்பனமார்பினை வகிர்வோனே
கயிலாயந்தன்வார்புய நிரைமீதொன்றமேவவரு
கனகோபன்பன்மாமுடி யடும்வீரா

மதவேள்வந்தசீர்வயி றுடையாளொன்றுமார்பிலொர்
மணியோடுந்துழாயணி நெடுமாலே
வருவார்கண்டுதாழ்தலுய் வினைதீர்ந்தயார்தலினை
மகிழ்சீரங்க மேவிய பெருமாளே. (உக)

தானந்த தானனத்—தனதான.

ஆருஞ்சொன்மேன்மைபெற் றுறெங்குமேகிநிற்
காமின்சொன்மாலேமிக்  கிடுவேன்மீ
தார்வங்கொளாதுபொய்ப் பாசந்தனூடுவிட்
டாடும்பொயாடல்விட்  டருளாயோ

காருண்டநீரெனச் சீர்துன் றிவாழ்புகழ்க்
காடொன்றநாடுநட்  பறியாயோ
காலன்றனேலேயெட் டாமுன்புன்வார்கழற்
காணென்றவேசித்  தணிவாயே

பாருண்டவாயெனக் கோதுஞ்சொல்பாழ்படிற்
பாவஞ்சுடனமுற்  றறிவோனே
பாடுஞ்சொல்வேதன்மற் போர்வென் றுவாரியிற்
பாய்வண்டன்மாயமச்  சமுமானய்

தேருங்கடாசலத் தோடுந்துயாவுமற்
றீரங்கொள்வாரும்வைத்  தவர்கோவே
சிலங்கொண்மாதவர்க் கோர்தஞ்சமாமணிச்
சீரங்கநாயகப்  பெருமாளே. (ரூய)

தனன தன தான தன தானதந்த—தனதான.

அதுவிதென வாதமிடு மூடர்தங்க
ளுறவுமினி தாகுமென நாடிநொந்த
வடிமைமன தூடுவெகு வா றிலங்கு  மவனுரோ
வமலபரி பூரணசு பாவமொன் று
தவமுனிவர் பாதமலர் வாசமிஞ்சு
மரியதுகள் சூடுமெனே யாளிலுன் ற  னிசைபோயோ

பதுமமல ரோன்வதன நாவில்வந்த
முதுமறைமு னைபல நூல்புகழ்ந்த
பசுவினிண மாருமதி பாவஞ்சர்  மிகலாமோ
பரிமுகம தோடுவரு காறுமிந்த
யுகபுருட னுண்மைநிலே யாதுனன்பர்
பலரிலொரு மீளிவினே யாடும்விந்தை  யருள்வாயே

பொதுவமட மாதர்பல பேருநிந்து
கரையிலிடு தானேகவ ராடல்விண்ட
புலவர்கவி நோயொழியு மாறுசெம்பொ  னருள்வோனே
பொருவில்புகழ் மாவலிமு னேயிரந்த
தினமுதவி டாதபடி யேதலைகந்த
புகர்பெரிது நாணமுற வேகணென் று  கனேவோனே

விதானது மாளிகையி லேவிருந்து
நுகரவும ராவிலகு கேதனன்றன்
விசனமிக நீடவும நாணடந்த கழலோனே
விரைமலிது ழாயணிபு யாசலங்கொள்
கரியமலே யேயெனவெ நாளுமண்டர்
விழையவரு காவிரியி னூடவிர்ந்த பெருமாளே. (௬௪)

தான தன தத்த தந்த—தன தானா.

மாசுணசி ரத்தவிர்ந்த பூதலமு ழுக்கவுய்ந்து
வாழ்வுறநி னைத்தபண்பு மெனதாமோ
மாதவமு டித்துயர்ந்த பாகவத ருக்கிசைந்த
வாபணிசெ யத்துணிந்து மெலிவேனோ
பூசுரர்க ளிற்சிறந்து ளார்துயரு றக்குனுங்கர்
போல்பவரு வக்கும்வம்பு தொலையாதோ
போர்புரிக ளத்திலன்றோர் பேடியினி டத்தறைந்த
பூரணமு டிப்பையின்று புகல்வாயே
யாசுரர்த மைக்கடிந்த காலனென மெச்சுமன்ப
ராகுலமில் சித்தியொன்ற வருண்மாலே
யாயிரம திற்றெரிந்து மேலவரெ டுத்தியம்பு
மாறிருபெ யர்க்கிசைந்த நிலையோனே
காசுமயன் மிக்குவண்டர் வீடுதொறு றத்தணிந்து
காரணமி ழுக்கும்வம்ப ரறியானே
கான்மலிம லர்ப்பொதும்ப ரோரிருபு றத்துமிஞ்சு
காவிரியி டைக்கிடந்த பெருமாளே. (௬௫)

தானான தாத்தனத் தானந்தனா தனனா—தன தானா.

ஆனாதகீர்த்திபெற் றேயுன்றனாதருளி லயிழேனோ
வாபாசமூர்க்கநிட் டூரங்கொள்வார்பலரும் வெருளாரோ
மேனாளிலாற்றன்மிக் காடுந்தபோதனர்கள் சிலர்போலே
வீறூர்வராக்குமெட் டாவிஞ்சைமோனமதை யருள்வாயே
பானாளிராத்திரிப் போதங்கொராயன்மனை புகுபாலா
பாடாதுதோத்திரிப் பார்சிந்தைமீதுநடமிடுமாலே
கானாறுபூப்பொருட் டூர்செம்பொன்மாதனையு மணவாளா
காவேரியாற்றிடைச் சீரங்கமேவிவளர் பெருமாளே. (௬௬)

தனந்தத் தத்தன—தன தானா.

நிதம்பத்திச்சையி லழுந்திப்பற்பல
நினைந்திட்டுத்தளர் வடையாதே
நிணந்துய்த்துப்பொலி வுறுந்துட்டர்க்கித
நிதஞ்செப்பித்தவ முலையாதே

பதந்தொட்டுப்பா சுகம்பெற் றுற்றவர்
பதங்கத்தக்கன — யுரிதீயோர்
பயந்துட்கிக்கெட வடுஞ்சிற்சித்திகள்
பரிந்திற்றைப்பொழு — தருள்வாயே

விதண்டப்புத்தரும் வணங்கிப்பத்திசெய்
வியன்பொற்புச்சர — ணுடையானே
விலங்கொத்துச்செய மடைந்திட்டுப்புனல்
விரும்பச்சிற்றுயிர் — களுமானா

பதம்பட்டுப்புலை மதந்தட்டுக்கெட
வடுங்கொற்றத்தொரு — குருவாவா
யயன்கைப்புட்பமு மிலங்கப்பொற்றிரு
வரங்கத்திற்றுயில் — பெருமாளே. (௩௪)

தநதனாதன தானதனதன—தனதானா.

எந்தநாளுமு னாபதயுக நம்பிடாதவர் போலமெலிவுறு
மென்றன்வாதனை யாதுமறிகிலை — யெனலாமோ
வெண்கண்வேதனு மேருவரிசிலை கொண்டமீளிபு மாகநகர்வள
ரிந்திராதியர் தாமுநுவல்புக — ழருளாயோ

மந்தமாருத மாகுமிரதமி வர்ந்துமாதர்கள் சூழவருமொரு
மைந்தனாண்மலர் வாளிபுரிதுயர் — களையாயோ
வண்டறுவன மாலிகையைநிகர் செஞ்சொன்மாலைய னேகமவைதரு
மங்களாகர மானதொழில்பய — னிலதேயோ

தந்தமாவொடு மாமன்மடியவ தஞ்செய்தாவென வோதுமடியவர்
தங்கள்பாலநு கூலமுறவரு — ணெடியோனே
சந்தனாசல மேயமுனிவர னன்றுபாடிய பாடல்புனைதரு
தங்கமானொரு போதுமகலரு — மணிமார்பா

வந்தனாளர்ப ராவமகிழுமு குந்தநாயக னேவிணவருய
வன்றுதூயம கோததியின்மலை — நடுவானே
யம்பொன்மாமதி ளேழுவளையும்வை குந்தமேயென யாருநினையும
ரங்கமாநக ரூடுவிழிதுயில் — பெருமாளே. (௩௫)

தனதன தனதன தநதன தத்தன—தனதானா.

அகிலமினழுதுபு லும்படிபற்பல
கொடுமைசெய்திடுமவர் தம்பகைமிக்குறு
மடிமையுண்மகிழ்செய லெங்கொருசற்றுநல் — கிலையானா
லவசவருயிருய நம்புகழ்த்திறை
துருபதன்மகள்கண கன்றருபுத்திர
னனையவர்பலரைவி ரைந்தருண்மெய்ப்புக — ழழியாதோ

முகிலொருபவளநெ டுங்கிரியிற்புணர்
தகையெனவரவணி யும்பறவைப்பதி
முதுகிலென்மனநித முங்கருதித்தொழும வடிவோடே
முதிருமொளொடுகம லந்தருபொற்பிடி
துளவமுமணியும ணிந்தவராத்துற
முனிவரொடமரர்வ ணங்குதுதித்திட வருவாயே

சுகிர்தமொர்சிறிதுமில் வண்டர்களைப்பல
கிளையொடுகொலவென வந்துபிறப்பதொர்
தொழிலிடையனுவள வுந்தளர்வற்றொளிர் நெடுமாலே
சுரகணமகிழ்வுற வங்கவரைச்சுடு
கனலுறழ்தருவரி றந்தொழியச்சரி
சரிகுழல்வனிதையெ னுங்கபடத்திரு வுருவானாய்

நகிலமதனில்விட மிஞ்சவடைத்துண
வுதவியவலகையு டம்புதிரத்தையு
நார்வெருளுறநொடி யொன்றினிலுட்கொளு மலர்வாயா
நகுமணிகுயிலிய குன்றினமொத்தபல்
சிகரிகொள்சினகர மொன்றுறுபொற்றிரு
நதிநடுநிலவும ரங்கமதிற்றுயில் பெருமாளே. (௩௬)

தானதந்ததானன — தனதானா.

ஆடகங்கொள்வார்முலை வாயிலின்கணேகியொ
ருவிகுன்றுதீவினை தொலையாதோ
வாசிலந்தனுளனெ னுவிளங்கியோர்கண
வானதின்கணேதிய மொழியீனோ

பாடல்விண்டுபேறடை வாருமுண்டெனுவகல
பார்விளம்புமவாசக நிலையாதோ
பாரதந்தனூடொரு தேர்விடுங்குலையா
பாகனென்றுகூறிய பரிவோ

பூடல்கண்டிராதையென் மாமிகுஞ்சநாண்மல
ரோடியைநததாள்பணி யவுநானு
யோரமிஞ்சுபாதகர் கூடிடுஞ்சபாநடு
வோர்மடந்தைதேறிய வருளாளா

மூடர்நிந்தையான்மிக வாடுமென்சொன்மாலையின்
மோகமுங்கொள்வாய்முனி வருமாவாய்
மூலமென்றுகூவுமொ ராணைநண்பனேயருண்
மூதரங்கமேவிய பெருமாளே. (௩௭)

தான தத்ததன தனதன தனதன—தனதானா.

பாணமொத்தவிழி மகளிர் தமிளமுலை
யாசைமுற்றியதன் வழிதொடர்பலதுயர்
பாறிடக்கருணை மழையிலொர் துளியினி தருளாயோ
பாரதத்தலைவர் களினடுவுளசிலை
வீரனுக்கிரத நடவியபுகழ்மிகை
பாடும்வித்தகர்க ளுடனுறவிழைதலு மறியாயோ

தூணமத்தியினி லரியெனவொருநொடி
யூடுதித்திரணி யனைவகிர்தருபுய
சோபையைக்கருது மடியருமிடியுறன் முறைதானே
சூரியப்பிரபை யையுமிருள்கவர்வினை
பாடவிட்டனையெ னளவிலினனம்வெரு
சோதனைத்தொழில்செய் வதுசரியலவெதிர வருவாயோ

நாணமற்றவிலை மகளிரையனையவென்
மூடசித்தமத னிடைசிலகனவினி
ஞானக்கடவு ளிவனெனவறியவும் வருவோனே
ஞானவிற்பனரி லுயர்சுகன்வரவருள்
வேதவித்தனைய பெரியவருணர்பத
நாண்மலர்த்துணையை வழிபடுமவர்வினை களைவோனே

காணமிக்குடைமை யலதொருசுகரிலை
யேயெனக்குதிகொள் கயவர்கள்வெருள்செயல
காணுறக்கருதும வயினவதிலகரை யகலானே
கானகத்தெயினர் குடில்சிலபொருள்பல
பாதபத்தொகுதி மலைபணிநுரையெறி
காவிரிக்கிடையொர் கருமலைபெனவளர் பெருமாளே. (௩அ)

தனன தந்த தானனத்—தனதானா.

பலமடந்தைமார்களுக் குரிமைகொண்டுவீணினிற் றிரியாதே
பழிசுமந்துநாயெனத்
பழுதொழிந்தபோருட் புலவர்கண்டுசீயெனப்
பசுநிணங்கொள்வார்களைப் புகழாதே

கலகமிஞ்சுதானவர்க் கியமனென்றவீரரைக்
கருதுகின்றதாகுநட் பழியாதே
கனவில்வந்தவாறெனக் கெதிரினுங்குலாவிமெய்க்
கருணையின்பவாரியைத் தருவாயே

சலசமங்கைமார்பிணிற் குடியிருந்தசீர்சொலத்
தரும்தொழும்பர்நோயறக் கனைவோனே
சரணகஞ்சநாண்மலர்ச் சுமைவிருமபுவார்களைச்
சமனினைந்திடாதளித் திடுவோனே
யலகிலண்டகோடியுட் படுசராசரங்களோடுமற்
றவைபுரந்தவாழிதொட் டவிர்மாலே
யறன்மலிந்தகாவிரிக் கிடைவகுந்தநாடதொத்
தமையரங்கமாநகாப் பெருமாளே. (௩௬)

தனன தந்தந தனத்தநதந—தனதானு.

கயலெனுங்கண் கனைக்கொண்டுங் குவமடனுங்கொங் கைகட்கொண்டுங்
கபடநெஞ்சந் தனைக்கொண்டுங் கொளுமானுர்
கலவியின்பங் குறிதமென் றும பணிசெயுங்குண் டரைககண்டுங்
கவிசொலும்புன் றொழிற்பங்கந் தவிராதோ
வயனினைந்தென் றலைக்கென்றன் றெழுதுமவமபென் பவற்றின் றுன்
பழியநின்றொண் டரைத்தெண்டன் செயல்வீணே
வரியசந்தந் தொடுத்துமபைந் துளவொடுன்றன் பதத்தின்றிங்
கணியுநண்பொன் றிடத்தந்துங் கெடுவேனே
புயனிறங்கொண் டுகைக்கைந்தொண் படைபுனைந்திந் திரர்க்கெங்கும்
புகழ்விளங்கும் பெருக்கந்தந் தருண்மாலே
புவனமுண்டுண் டுகக்குளுசெம் பவளமவந்தங் கெனுட்சொந்தம்
புகனிசங்கண் டவர்க்கென்றுந் துணையாவாய்
செயமிகுங்கண் டகர்க்கொன்றந் தகனடுங்கும பதக்கஞசன்
றினமிறைஞ்சும் படிக்குங்கண் டுயில்கோவே
திருடனென்றுந் திதிபபண்பொன் றிறைவனென்றுஞ்சொலப்பொங்குந்
திருவரங்கந் தனிற்றங்கும பெருமாளே. (௩௭)

தனதனதன தானதானன தந்தத—தனதானு.

ஒருமனதொடு ளுதுபாதநி னைந்திட் டியுமேலோ
ருடனெனையுல கோதுமேன்மைமி ருமபச செயலேனே
கருமறவன தானபாடலு மன்றைக் கணிநீயோர்
கடுகளவரு ளேனுமீகிலை யென்றைக் கருள்வாயோ
திருமகளக லாதமார்புறு செங்கட் கரியோனே
சிவன்முதலிய தேவரியாவரும வந்தித் திடவாழ்வா
யருமறைபல கோடிபாடிய சொந்தச் செயலோனே
யழகியமண வாளனுனவ ரங்கப பெருமாளே. (௩௮)

தனன தானன தந்தன தந்தன — தன தானா.

கருணையோ ரணு வும்புரிகின் றிலை முருடரோர்சிலர் சிந்தையுமொஞ்சிய
    கயமையோரிட முஞ்செலவொஞ்சில                    னறியாயோ
  கருடகேதன மென்றதைநம்பிய புலவராமவர் முன்பகரும்பல
    கவிகளோடெனி ளங்கவியுஞ்சிறி                    திழையாதோ

தருணமீதென விண்டசொல்வம்பல வதுவுமீதரு பண்பலதிங்கிலை
    தரையும்வானும ளந்தபதங்கரு                    திலனேயோ
  தருமனுதிய பஞ்சவருய்ந்திட விரதசாரதி யென்றுமவிர்ந்ததொர்
    தயையினுளழி யுங்கொனிசஞ்சிறி                    துரையாயே

வருணன்மாமணி துன்றும்வடம்பல சரணமீதுசொ ரிந்துவணங்கிட
    மழையைநேர்சர மன்றுபொழிந்திடு                    முகில்போல்வாய்
  வழிபடாதிக ழும்பலகுண்டரு மினையில்வீடடை யும்படியன்றுசெய்
    வனசநாண்மல ரென்றவிருந்துணை                    விழியானே

யருணசீதள பங்கயமங்கலை பொருவிலோர்மணி பைந்துளவம்புனை
    யகலமீதொரு தொண்டனுதைந்ததொர்                    கறையோனே
  யரவமாகிய பஞ்சணையின்றலை துயிலுமாதவ திங்களைநெஞ்சின்மு
    னருள்குணாலவ ரங்கம்விரும்பிய                    பெருமாளே. (௪௨)

தனன தந்தத் தனந்தானன — தன தானா.

பழிதரும்பொய்த் தனந்தேடியுண் மகிழும்வம்பர்க் கிதம்பேசிய
    பலருடன்செப் பிடுந்தீமைய                    தமையாதே
  பசுவருந்தத் துணிந்தோர்குடி கெடமுயன்றிட் டுநொந்தோரடி
    பணியுமன்புற் றசிங்காரம                    துலையாதே

கழிமெலிந்தெய்த் துவன்பானுயர் முதலைபொன்மறக் கொலென்றேவிடு
    கரிமுனன்றுற் றிடுந்தாண்மலர்                    நினைவேனோ
  கருடனென்றிற் கருங்கார்புரை வடிவிலங்கத் துலங்காதடு
    கலிவளைந்திட் டவெஞ்சோகநல்                    கிடலாமோ

வழிபடும்புத் திரன்சோர்வற வவனைமுன்பெற் றவெந்தானவன்
    மடியவன்றக் கணந்தூணிடை                    வருமாலே
  வனசவுந்தித் தலந்தோய்சது முகனடுங்கச் செயுஞ்சோமுகன்
    மரணமொன்றப் பெருந்தோணுறு                    கயலானாய்

செழியன்முன்புற் றவன்றேயொரு கிழியறுஞ்சொற் புகன்றானருள்
    சிறுமிகொண்டைக் கிடும்பூமிக                    விழைவோனே
  சிவன்விரும்பித் தனன்பார்சிலை யுடன்விளம்பத் தகுஞ்சீர்பெறு
    திருவரங்கப் பெருங்கோயில்கொள்                    பெருமாளே. (௪௩)

### தனன தானத் தனனதந்தத்—தனதான.

காரணாதைக் கிடைபடுந்தட் டழிவெலாமற் றுனைவணங்கிக்
கருணைவாரித் தலையழுந்தக் குறியாதே
கபடமாதர்க் கிதம்விளம்பித் தழையுமோகக் கலவிமிஞ்சிக்
கருமபாசப் பிரதிபந்தப் படலாமோ

விரவிலேயக் கனவில்வந்தப் படிகுலாவித் தருமநெஞ்சுக்
கினியவோலைப் பொருள்வழங்கத் துணியாயோ
வெமனுநாணத் தகுமதம்பெற் றுலவுமீனக் கவியனைஞ்சுற்
றெனையடாமற் றொலையினன்றிக் களியேனே

பரமஞானக் குரிசிலென்கத் தகுவியாசக் கடவுளன்றப
பலர்முனோதத் திகழொரோசெஞ்சொற் குரியோனே
பழுதில்சீலக் குருகையின்கட் புளியினூடுற் றவனமொய்ம்பிற்
பகரும்வேதத் துரைசெயுஞ்சொற் பொருளானாய்

பிரமன்வாழத் தகுநலுந்திப பகவனேதூச் சனர்நெருங்கிப்
பிழைசெய்போர்மத திபிலொர்சங்கத தொணியீவாய்
பிறவிநாசப் படவிரும்பிப் பரவுவாருக் கினியசெம்பொற்
பெரியகோயிற் றிருவரங்கப் பெருமாளே. (௪௪)

### தானன தந்தத—தனதான.

பார்மகளஞ்சிக் கூவெனுமிந்தப பாடறிபண்பைத தாலாரோ
பாலொடுகொம்புத் தேனிகரின்சொற் பாடலவிரும்பிற் பழியாமோ
சீர்மகணெஞ்சத் தேயினிதொன்றச சேணிடைசெம்புட் பரிமேலே
சேவைவழங்கிக காவலாதங்கட் கேறாமுந்தற றருள்வாயே
யார்மதிகொன்றைப பூவணிநண்பற காவொருவம்பற் செறுமாலே
யாயிரமவிந்தைப் பெருமவிளம்பற் காசைகொளன்பர்க் கெளியோனே
கூர்மலியும்பொற் பாழியுறுங்கைக் கோவலனென்கிற் களிகூர்வாய்
கோதறுமின்பக் காவிரியின்பொற் கோயிலரங்கப பெருமாளே. (௪௫)

### தானனத தானனத்—தனதான.

ஆதிவித்தாமுனக் கேதமிழ்ப்பாடல்செப்
பார்வமுற்றேனிலைத திடலாமோ
வாடகப்பேய்செய்நிட் டூரமெப்போதுமிக்
காகுலத்தாலழச செயலேனோ

தீதில்சத்தாதிமுப் பான்மையுற்றானுற்
சேவைபெற்றியானுயப புரியாயோ
சேனையப்போர்செய்விற் பேடிமுற்கூறுமச்
சீரெனக்கோதுதற் கிசைவீரோ

பாதிரிப்பூமுடிப் பாயெனப்பாடுமப்
பாவலற்கார்வமிக் கருள்வோனே
பானலைப்போல்விழிப் பூமகட்கேழுடைப்
பார்மகட்கூடுநித் தமும்வாழ்வாய்
கோதில்சற்பாதிப் பாயலுற்றாய்நிரைக்
கோவுயச்சூழ்மலைக் குடையோனே
கூதளச்சாரன்மற் றேய்புனற்காவிரிக்
கோமளச்சாமளப் பெருமாளே. (௬௬)

தானதத்த தந்த—தனதானா.

சோரமற்றவின்சொ லோசைகட்டறிந்து
கூறுபெட்பமைந்த பலரோடே
கோவெனத்திகழ்ந்து வாழுமிச்சைதந்து
கூவெனத்தயங்க விடலாமோ
மாரனைப்பயந்த பாவையுற்றிருந்த
மார்பினிற்கிடந்த பணியூடோர்
மாலையைக்களைந்தி னேயளித்தெனெஞ்சின்
மாமகிழ்ச்சிபொங்க வருள்வாயே
சோரவித்தைவண்டன் மாலெனத்துணிந்து
தூடணிக்கினுங்க ணருள்கூர்வாய்
சோமுகற்றடிந்து வேதமுற்றுமன்று
சோர்வறக்கொணர்ந்த நெடியோனே
வாரம்வைத்தொர்குஞ்ச ரேசனைப்புரந்த
மான்மியத்தைநம்பு மவர்வாழ்வே
வானகத்தர்வந்து பேணுபொற்பரங்க
மாநகர்க்கிசைந்த பெருமாளே. (௬௭)

தனதன தனனதானத் தனந்த—தனதானா.

கருணையில்கயமை யோரைத்தொடர்ந்து
மகபதிமதன வேள்சத்திதங்கு
கானடல்விசைய னெனப்புகன்று கெடுதீயோர்
கவிகளுமொலிசெய் பாரிற்பல்விஞ்சை
முனிவரருணர்நி றைடற்றெரிந்து
கழறிடுமெனது பாடற்குலங்க ளழிவாமோ
பொருண்மயல்களைகி லாய்முத்தியின்ப
மருள்வதெனமை யோவற்றைவிண்ட
புதுமொழிகபட மோமுற்றும்வம்பு செயலாமோ
புரகரியெனவ ராமிக்கணிந்த
பறவையின்முதுகி லேறிக்கவின்று
புரையறுபரம ஞானத்தையின்று தருவாயே

யிருள்கடன்முகிலு நாணச்சிறந்த
மாகதமலைய தேயொத்தெனெஞ்சி
லியைதருகனவி லேமெத்தவநத — நெடுமாலே
யெமபடர்வெருள நாமக்கணங்கள்
சொலிவழிபடவ லார்பொற்பதங்க
ளிடுதுகண்மகிமை சாலப்பிறங்க — வருள்வானே

தருநிழன்மருவு வாரைப்பரிந்து
முதுமறைநெறிகொ ளாதுக்கிரனுசெய்
தருவர்கள்பலரை யாழிக்கிடுங்கை — வலியோனே
தமிழ்முனிகரக நீரிற்பிறந்த
முதனதிநடுவி லேயுற்றரங்க
சயனமதனைவி டாமற்றிகழ்ந்த — பெருமாளே. (சஅ)

தானந்தத்தானன தானன—தனதானா.

மானங்கெட் டனர்கள்வாழ்மனை தோறுமபுக் கியானிரவா தென்முன்
வாய்விண்டிட் டோர்விழைவியாவையு — முதவேனோ
மாயங்கற் றேவிழியாம்வலை வீசுமபொற் பாவையராசையின்
மாயுந்துர்ச சாதனமானதை — யொருவேனோ

வேனன்சொற் கூறுணராதுப லூனுண்டிட் டேபுரிவேள்வியர்
வேதங்கற் றோரொடுவாழ்பிழை — தவிராதோ
வேலங்கைப் பாவலனாதியர் போலும்பெட் பியானுறநீயொரு
வேடநதொட் டாயினுநேர்வர — விசைவாயே

யானந்தச் சாகரமேடெழு பேரன் புகாரர்களாமவ
ராருஞ்சிற் சோதியினாடுற — வருண்மாலே
யாலின்கட் டேசிகனானபி னேமன்றிற பாவதியாளதி
ராடுஞசித் தேசனைமால்செயும — வலியோனே

சீனங்கற் பூரமனோசிலை வீரங்கற் பாசிபல வேரிலை
சேர்தொநதத் தேயுழையாதவ — ருணர்தேவே
தேகஞ்செத தாலதுவேகதி யாமென்றுரூப பாதவாசூழ்தரு
சீரங்கத் தேவிளையாடிய — பெருமாளே. (சகூ)

தனன தனதன தனன தனதன
தனனதந்தன தனனதநதன—தனதானா.

விடமுமமுதமும் விரவும்விழியினர் விநயவிங்கித மொழிகள்கொண்டுப
விளைஞருயிர்கவர் கபடநினைவின ரெழில்கொள்குங்கும முலைதிறந்ததன்
விலையுமொழிதரு கணிகைவனிதையர் விரகமிஞ்சிய பதிதர்தங்களை
மதியாதே

வெளிறுமுததிமு னுதவுதிருமினும் விரியுமம்புய மலர்விரிஞ்சனு
மிடபமிசைவரு சிவனுமதகளி றிவர்புரந்தரன் முதலவும்பரும்
வினதைமதலையு மறுமனையரு மிகவிரும்பிய பதயுகங்களை
மறவாதே

நடலையொடுபுலை மலியவலைபொரு நரலையின்றலை வதிதருந்திற
லவுணரடியொடு கெடமுனமர்புரி யடல்கொளம்படை யுறுகரங்களை
நமனும்வெருளுற விரவுபகன்மிக நறியசெந்தமிழ் கொடுவிளம்புத
லொழியாதே

நதிதனதுகுல மகிபனொருவன்மு னணிமுயன்றுள தவமிலங்குற
வவனைமருவுபன் மகளிர்தமுளுய ராசிபண்டியி னிடைபிறந்துட
னகிலமுமிழுமி னமுதுமொருவின னனவுறழ்ந்ததொர் கனவில்விண்டது
தருவாயே

கடகரியினதி பதிமுனறிதரு கருணைதங்கிய திருவுளம்பெறு
நெடியரகுகுல பதியில்வடிவுகொ ணிமலபுங்கவ சமரசந்தரு
கமலவிழிபல பலகொண்முகினிகர் கவினிலங்கிய வரததந்திர
நெடுமாலே

கவுரவரின்மிகு கொடியரடியொடு கரியவங்கொரு நடைநடந்தவ
நெறியில்வழுவறு விதுரன்மனையிடை நிறையுமின்சுவை யடிசிலுண்டவ
கருடன்வரைதரு கொடியினலநுவல் கவிஞர்தங்கலி யறவழங்குகை
மிசையோனே

திடமொரணுவுமி லெனதுமனதிடை சிலைவிதம்புக லவுமுன்வந்தவ
பசுவினினமெலி வுறுதல்புரிதரு பதிதர்தங்குல கலகரஞ்சித
சிகரகிரியுரை யிரணியனதுயிர் சிதையவென்றுள குடர்புனைந்தவிர்
திரடோளா

செழியன்விழைதரு வளவனதுபுவி திகழவந்ததொர் நதியிலநதரர்
பரவநிசிசரர் வெருளமுனிவரர் பணியவங்கத வயவரும்பிறர்
திரளும்வழிபட நிலவுமழகிய திருவரங்கம தனில்விளங்கிய
பெருமாளே. (௲௰)

தன்னதநதத் தானத்—தனதானா.

இன்னமென்றற் கோர்சற் றருளாயே
வின்னலொன்றிப் பாரமிக் கழுதோயா
ளுன்னதன்பர்க் கார்வத் திரள்வாயா
துண்மைகுன்றிப் பாழ்பட் டிடுமோர்வாய்
கன்னலங்கைச் சேயைத் தருகோவே
கன்னிதங்குற் சாகத் தடமார்பா
சின்னமைநதுற் றோருக் கெளியானே
தென்னரங்கக் கோயிற் பெருமாளே. (௲௧)

### தனனதந்த தனனதந்த—தனதானா.

கடினகும்ப புளகிதங்கொண் முலைமடந்தை யினர்வழங்கு
கலவியின்ப வுததியின்க ணமிழாதே
கலசமொன்றி னிடைபிறந்து பொதியையின்கண் மருவுதண்ட
கரனையுஞ்சில் விசையிகழ்ந்து குதியாதே

மடிவிலண்ட ருலகையும்பொ யெனவிகழ்ந்து னருளைநம்பும்
வயிணைவந்த னிடைகலந்து பிழையேனை
வகுளமென்ற தொடையணிந்து புளியதன்க ணமருநண்பன்
மருவுதுங்க நிலைபொருந்த வருள்வாயே

படியுடன்க கனமளந்தொ ரவுணன்முன்பு செயமடைந்த
பதநினைந்து ளுருகுமன்பர் துணையாவாய்
பரவுதொண்ட னுடனடந்து கணிவணன்ற னகமிழந்து
பணிதல்கண்ட பிறகுவந்த வருளாளா

செடிநெருங்கு வனமதன்க ணலறுதுமபி யுயவிரைந்து
செலுமுகுந்த னெனிலிரங்கு நெடியோனே
செவிகண்முன்சொல் பொறிகளைந்து மயர்தலின்றி வளமலிந்த
திருவரங்க சயனமொன்று பெருமாளே. (௫௨)

### தத்தனந தததன தானன—தனதானா.

பத்தியின் றிப்புலைவேள்விசெ யற்பாமுன் புற்றிகல்வேனது
பட்சம்வம பிற்றொலையாதருள் புரியாபோ
பற்குனன் சற்றுமெனாதெதி ரிட்டவண் டாச்செறநானும
பக்குவங் கெட்டிடவோதிய துரையாபோ

சித்தியொன் றிக்கணமேபரு ளிற்பசும் புற்பருகானிரை
செற்றுணுந துட்டர்களியாவரு மழியாரோ
திக்கொருங்குட்கொளுமவாய்கொடெனக்குமுன்செப்பியதோர்மொழி
திட்டமிரு சிப்பலகாண்மறை வுறலேனோ

சத்தியங் கெட்டெதிர்தானவர் முற்றுமங் கத்தொழுமவானவர்
தத்தொதுங் கப்பலவாடல்கள் செயுமாலே
சற்பமொன் றிற்பலதேவரு மெசசவன் றைக்கினிதாடிய
தத்துவஞ் செப்பவலார்வினை களைவோனே

புத்தியின் றித்தனவாலம ருததவந் துற்றதொர்பூதனை
பொற்றையென் றக்கணம்வீழல்செய் மகவானாய்
புற்பபஞ் சக்கணைவேள்படை மிக்கசெம் பொற்றுறைவாணிகொள்
பொற்பரங் கத்தினிலாவிய பெருமாளே. (௫௩)

தனனதந்த—தனதானா.

வெருவிதங்கள் கருதுமென்றன் விரதமொன்று மறியாயோ
விரைமிகுந்த துளசிதந்த வியனும்வம்பு படலாமோ
முகுளகஞ்ச மலர்விரிஞ்சன் முனம்வரைந்த விதிதீதோ
முரண்வயங்கு கருடனம்பொன் முதுகில்வந்து னருடாராய்
பகுதிவிண்ட தொகுதியென்ற பரமவிஞ்சை யருள்வோனே
பலமதங்க டொறும்விளங்கு பகவனென்கின் மகிழ்மாலே
நகுடவம்ப னனையகுண்டர் நணுகரும்பு ணியரூபா
நலமலிந்த திருவரங்க நகரிடங்கொள் பெருமாளே. (௫௪)

தானத்தானத—தனதானா.

பாதத்தேகட் பேறிச்சாலப் பாடிக்கூறித் தொழில்கீழோ
பானற்காடொத் தேநிற்காறுற் பாதச்சீர்பெற் றவாரோ
வேதப்பேய்தொட் டேமெய்ச்சோர்வுற் றியானித்தாழ்வுட் படலாமோ
வீகைக்காரர்க் கோர்நற்றூயொத் தீடுற்றூடற் புதமீவாய்
சீதப்பூவுற் றூளைக்கூடித் தீரக்காமற் பெறுவானே
தீயைப்போல்கற் பாயத்தார்பொற் சேலைச்சோரத் தொழிலோனே
கோதற்றூர்சொற் பாடற்சூடிக் கோண்மற்றீரப் புரிவானே
கோரக்கோலச் சேடப்பாயற் கோயிற்காவற் பெருமாளே. (௫௫)

தனன தன தான தானன—தனதானா.

அமலமுனி வோர்கள்சேனையி னிடைவதியு மாசைமீறலி
னநுதினமு ளுமமோதிடல் பிழையாமோ
வதிரதம காரதாதிய ருனதடியர் பாததூளித
மணிதலையு ளாரின்மேலெனல் விதிதானோ

சமரசசு பாவஞானமொ ரணுவளவு மேவிடாதெழு
தடிமுரடர் வாதினுன்மெலி வுறலேனோ
தவளநிற மானவார்கவ மனலனைய தூவிதோய்தரு
தனிவயின தேயன்மீதெதிர் வருவாயோ

பமமுரல் சேயதாமரை யனையதிரு நாபியாலுயர்
பனவனைமு ளுவிலீனிய பகவானே
பலவரசர் கூடுபேரவை யிடையிகழ்பொ லானுமேதகு
பரமபத மேவுமாறரு டிருமாலே

நமன்மடியு மாறுசாடிய பதயுகள நாதனுடொறு
நவில்புகழ மேனகோடிகொ ணெடியோனே
நனையுமவர் பாவநோய்களு மறவருள்வ தானகாவிரி
நடுநிலவு கோயின்மேவிய பெருமாளே. (௫௬)

தானதத்ததந்த—தனதான.

மாபுளிக்கணன்றி யேதமிழ்ப்பொழிந்து
வாமொருத்தனன்றோர் கனவூடே
வானவர்க்குளென்ற னேடுரைத்தபின்பு
வாசகத்தைநம்பல் பிழையேயோ

நீபுரக்கினன்றி யார்புரக்குமவென்றி
நேர்திறத்தரின்றி தறியாயோ
நீணிலத்துனன்பர் கூடிடத்துணிந்தொர
நீதியிக்கணுஞ்செய் தருள்வாயே

நூபுரப்பதங்கள் சூடியப்புறம்பொய்
நோயறத்தொடுங்கை யுடையானே
நோன்மையுற்றசிந்தை மாதவர்க்கிசைந்த
நூல்விரித்தவிஞ்சை முனியானாய்

கோபுரத்தினின்று மாமனுப்புகன்ற
கோனுளத்தமைந்த விருபாதா
கோதறுக்குமம்பொ னூறதிற்றிகழ்ந்த
கோயிலிற்குளிர்ந்த பெருமாளே. (௫௭)

தனனதன தநததானன—தனதான.

தனவறுமைகொண்டுமாணவ குணமதிலழுந்திமாதர்கள்
கலவியின்முயன்றுதாழ்வுற லொழியேனோ
கனவுநனவின்கணீபெறுள வெகுளிதமுமன்றவாடல்கள்
கருதியும்விதண்ட வாதர்முன் வெருள்வேனோ

பனகவிறையுஞ்சதாரிக நடுநடுநடுங்கவோவிடு
பறவையரசன்றன்வார்பிட ரதன்மேலே
பரவைதருசெம்பொன்மாதொடு நிலமகண்மருங்குவாழவொர்
பசியமுகிலென்றுநாடொறும் வருவாயே

புனலுதவுகஞ்சநாண்மல ரனையசரணங்களுடைய
புனிதர்விழையும்பல்போகமு மருள்வானே
புயகம்வரைகின்றகேதன மணியுமிரதங்கடாவிய
புரவலனழிந்துபாருய முயல்வானே

தினகரன்மறைந்திராவொரு பகலில்வரவுஞ் செய்தேவரி
சிலைவிசையன்மங்குறுதரு டிறலோனே
திரணுறுகருங்கண்மானிகர் வனிதையர்நெருங்கும்வேள்பெறு
செயமலியரங்கமேவிய பெருமாளே. (௫௮)

தனதனந்தத்தத்தனந்த—தனதானு.

இருள்பொருங் கொற்றச்சமன்றன் வலையிடம் பட்டுத்தயங்கி
யினியொராங் கத்திற்புகுந்து பிறவாதே
யெவளவுஞ் சொற்சத்தியங்க ளிலதுவஞ் சச்சொற்சொல்வண்ட
ரெதிர்வணங் கிப்பற்றிறந்து தவியாதே

தெருள்வளம் பெற்றுற்றதொண்ட ரொடுகலந் திட்டுத்தவஞ்செய்
திறமழுங் கித்துட்டர்நிந்தை புனையாதே
திருவைகுந் தத்திற்புகுந்த பெரியர்தங் கற்பைப்புகழ்ந்து
தினம்விளம் பத்தக்கவிஞ்சை யருள்வாயே

மருளும்வன் புற்றுத்துலங்கு மிரணியன் பெற்றிட்டசொந்த
மகன்மனந் தித்திக்கவங்கொ ரரியானுய்
மதுரபுஞ் சக்குப்பலென்ற கவிவலைந் தெத்திக்கும்வென்ற
மறவனெஞ் சத்துக்கிசைந்த படிபோனு

யருடருஞ் சித்திக்கலந்து மிகமுயன் றெய்த்துட்கலங்கு
மடியர்சிந் தைச்சொற்பனங்க ளறிசீலா
வளவிலின் பத்தற்புதங்கள் பெறவிரும் பிச்சித்தர்நம்பு
மணியரங் கத்திற்றுயின்ற பெருமாளே. (நிகூ)

தானந்த தானனத்தானத்—தனதானு.

காலன்கை யோலைதொட்டாருக் கயராதே
காவொஞ்சு மீகைகற்றுரைப் பழியாதே

சீலங்களி யாதுமற்றோரைப் புகழாதே
சீர்மங்கை பாலலனைப்பேணப் புகல்வாயே

ஞாலங்கொள் வாயுடைக்கோலத் திருமாலே
நாலைந்து தோளுடைத்தீயற் செறும்வீரா

சேலஞ்சும் வாள்விழிக்காரர்க் கொருசோரா
சீரங்க மாநகர்க் கோயிற் பெருமாளே. (கூய)

தனனதன தானதன தனனதன தானதன
தந்ததன தானதன தந்ததன தானதன—தனதானு.

அருவமுமவெ வேறுபடு முருவமுமு னுதெனவு
ணர்ந்துமகி ழாதிகல்வி தண்டமத வாதர்களை
யொருபொருளெ னுநினையு மடமையடி யோடுகெட
வென்றுணிரு பாதவன சங்கருது வேலையிவ
ணயரவிட லேனுனடி யவர்பதச ரோருகமு
ருந்துகளெ நேரமுடியி ன்கணுறு மேன்மையமி வளவேயோ

வசலவின மியாவும்விரி சிறைதவிரு மாறடரும்
வெண்குலிச வாயுதம ணிந்தபுய மீளியுள
மகிழவென வாயரிடு மொருபெரிய பூசையுண
வங்கொருரு வாய்நுகர்வி தங்கருத லாலிகல்செய்
தவன்முகில்க ளேழும்விட வருமதிக மாரியின
லைந்துபசு மாய்தலற நின்கருணை யாள்கதைபொ யெனலாமோ

தருவையொரு மாதுவகை யுறவவனி மீதுநடு
கின்றதினு மானையிரு கொம்புமற மோதலினு
மலைகடலி னூடணைசெய் திடலினும்வ லாடகனொ
டுங்குடரை மாலையில ணிநதுலகெ லாமுலவு
தகையினுமெ னுதுமிடி யெனுமலகை யானதைவ
தஞ்செய்தகன் மார்புறும டநதையருள் சேரவிட லரிதேயோ

தருசிறைகொள் வாருமுயிர் வதைநனிசெய் வாருமனு
வுநதளர்வின் மாதவரை நிநதனைசெய் பாதகரு
மிரவலர்க ணோர்வரிலொர் கடுகளவு மீகிலரு
மந்திரச காயமிலை யென்பவரு நோபதிதர்
தரையின்மலி வாதலின லறமுழுது மாறிடல
றிந்துமிவ ணீதுயிலு றுங்கொடுமை தீரொர்தின முதியாதோ

கருணைநெடு வாரிபுரை திருவுளமு ராரிசிவ
சம்புவழி பாடுகொடி ரந்தலையு மோடொருவு
பெருமையின னுன்மறைசொ லொருவனைமு னுளுதவு
முந்திமல ரானறல ருநதுமுகி லேயனைய
கரியபெரு மான்விபுதா கணவசிய மாயன்மதி
யந்தனைய நாளருள்செய் நெஞ்சநெடு மாலெனினுண் மகிழ்வோனே

கடுவுமிழும வாயரவ மெழுதியப தாகையனு
மங்கவனை யேபொருளெ னுமபலம காரதரு
நிறையுமொரு பேரவையி லவனிளவ லானமுபூ
வம்பனதி பாவமென வஞ்சுதனு ருமலணி
கலையுரியும் வேளையினி லழுதுதொழு தாளரையி
லம்பொனகர் மாதரும்வி ரும்புபல சேலைவர வருள்வோனே

தெருளுமுனி வோர்கடுயர் களையும்விழை வாலிணையில்
செம்பொன்முடி சூடுதரு ணந்தனில தோவியெழின்
மனைவியொடு மோர்சிறிய துணைவனொடும் வார்சிலைசு
மந்துதவ வேடமும ணிந்துவன மேடுபுகு
தினநதியி லோடம்விடும் வனசரர்பி ரானையுமு
வந்தொருச கோதரனெ னுமபவள வாயுடைய வர்சானுய்

'செழியனெதிர் போயவன தாண்மனையின் வாயிலிடை
தொங்கியதொ ராடகமு றுங்கிழிகொய் தேயவனு
மொருபெரிய பாகவத னுருவுகொளு மாறுபுரி
யும்பெரிய பாவலன ருந்தவம தேயனைய
சிறுமிபுனை மாலையொடு வனைதமிழு நாளுமணி
யுங்கிழவ னேதிருவ ரங்கநகர் வாழவருள் பெருமாளே. (௬௧)

தானன தானன —தனதானு.

சீதளவாரிச மேமனையாவளர் சீர்மகள்பேரருள் கருதாதே
தீயவர்வாழ்மனை தோறலைபாவலர் சேர்துயாநா னுறன் முறைதானே
காதளவோடிய வாள்விழிமாதுமை காவலனுதிய ருரையோடே
காணமதேபொருளாமெனநாடிய காசுடையேன்மொழி புனையாயோ
பூதனைபாலமு தாகியகார்விட போசனமார்தலின் மடியானே
பூமகள்பாரமெ லாமறவால்வளை போரிடையூதிய கனிவாயா
வாதவனூர்பக லேயிரவாகவு மாழியைவீசிய புயமாலே
யாசறுபேரரு ணீர்பொலிகாவிரி யாறதனூடமர் பெருமாளே. (௬௨)

தனநதத்த தாந்த—தனதானு.

கறங்கொப்பதாமபுன் மனந்துற்றநான்சொல்
கவின்பெற்றதீனுசொ லினியாதோ
கருங்கட்பொன்மான்கொ லெனுமபொற்புவாய்ந்த
கணஞ்சுற்றுமவாஞ்சை தவிராதோ
மறங்கெட்டுனன்ற பதஞ்சித்தமோங
மகிழ்ந்திட்டமாண்பு மழிவாமோ
வலிந்தற்றையூர்ந்த பெருமபட்சிவேந்தில
வயங்கிப்பொய்தீர்ந்த வருடாராய
துறந்தச்சமீர்ந்து மிகுமபததிதோய்ந்த
சுகன்சற்றுளோர்ந்த புகழோனே
சுதன் றுக்கநீங்க நினைந்திசசைபோன று
துலங்கத்திபூந்தொர் கயலாறு
யறஞ்செற்றதீங்கர் குலங்கைகருமவேமபி
லவிர்ந்தட்டசார்ங்க மணிதோளா
வகன்றெட்டிநீண்டு வளைந்துற்றபாமபி
லரங்கத்தில்வாழ்ந்த பெருமாளே. (௬௩)

தனதன தந்த தானனத்—தனதானு.

பளபள வென்ற வாழிகைக் கொடுவளை யொன்றையூதிமுற்
பகைவரை வென்றசீருரைப் பவரோடே
பழகினி னன்பிலார்களைக் கறுவிவி தண்டவாதாசொற்
' பலவும்வெல் கின்றமேன்மைபெற் றமையேனோ

குளநடு மண்குலாவுபொற் படியர்செ ருங்கமாசுணக்
குலநகர் செம்பொன்வார்சிறைக் கசுமீதே
குவலய மங்கையோடலைக் கடன்மகள் பங்கில்வாழ்வுறக்
குறுகியி சைந்தபேறளித் தருள்வாயே

தளமலி சொர்ந்தமாமனைக் களிறொருடுகொன்றுதாதையைத்
தலைவிடு திண்புயாசலக் கரியோனே
சகளப தம்பொயேயெனத் துணிவுறு மின்றபாழ்மதச்
சனமும்வி ளங்கவூணளித் திருமாலே

யளமிகை யொன்றும்வார்செய்தற் கரையிடை நின்றநாள்சினத்
தளவுறு மம்புவாரியிற் பொழிவோனே
யகிலம ளந்தசோர்வறத் துயில்வது கெஞ்சினுடி மிக்
கழகிய ரங்கமேவருட் பெருமாளே. (௩௪)

தான தத்தன தனதன—தனதான.

ஆன்மநிச்சயமனுவள வேனுமற்றவர்தமையுநி
னுளெனக்கொளு மடமுழு தொழியாதோ
வாரணத்தொகைகளின்முத லானசிற்குணபிரணவ
மாருமெய்ப்பொருணிலையினை யுணரேனோ

கூன்மழப்பிறைநிகர் நுதன் மாதர்மத்தியில்வருமத
கோளரிச்சமாடியொடு தொலையாதோ
கோபுரத்தலைமறைநுவன் மாமுனிக்கருளியசெயல்
கூடிடத்திருவுளமதி னினைவாயோ

பான்மணக்குமெலிகழுநு சேயெனக்கடைமுடிவிலொர்
பாசிலைக்கிடைதவழ்தனு முடையானே
பாரதக்குலபதிபுரி வேள்வியிற்பெரிதிகழொரு
பாதகற்குமுனெளிதருள் கதியோனே

தேன்மழைத்துளிநிகர்பல பாடல்செப்பியபுலவர்கள்
சேரமெச்சியபுகழ்பெறு திருமாலே
தீதறச்செறுபுனல்வரு காவிரிக்கிடையமிர்தரு
சேடமெத்தையில்விழிதுயில் பெருமாளே. (௩௫)

தானதன தந்த—தனதான.

பாகுநிகரின்சொற் கூறிவரும்வஞ்சப்
பாவையர்கள்கொங்கைத் துணையாலே
பானலைமுனிந்திட் டாழியையிகழ்ந்துற்
பாதமுயலுங்கட் கணையாலே

யோகுழுதிர்சிந்தைச் சீர்கனிகுறைந்தெய்த்
தூழ்வினைவசம்புக் கழிவேனோ
வோலமிடுமந்தக் கானமததந்திக்
கோடியருள்பண்புற் றெதிர்வாயே
தீகுடிகொள்வன்கட் டானவரடங்கத்
தீயவடுமைம்பொற் படையானே
சேணிறைமகன்கைப் பூவிடுதினஞ்சித்
தேசனுருவம்பெற் றவிர்பாதா
கோகுலம்விளங்கற் காமலைசுமந்தக்
கோரமுகிலொஞ்சப் புரிதோளா
கோடைதவிர்பைம்பொற் காவிரியரங்கக்
கோயில்வளர்செங்கட் பெருமாளே. (௬௬)

தந்த தனதன தனனத் தனனத்—தனதானா.

கொஞ்சுநயமொழி கனியக்கனியச்
சிந்துபொரும்விழி பிறழப்பிறழக்
கும்பநிகர்முலை தெரியத்தெரியக் கமழ்பூவார்
கொண்டைகுழையணி செவியிற்சரியச்
செம்பொன்மணிபுனை பணிமிக்கிலகக்
கொண்கர்பரவச மடையத்திரியத் தகுமானார்
பஞ்சுபுரைதிரு வடியிற்றலைவைத்
தன்புசெயுமதி மயலுற்றவரைப்
பண்டைமதனெனு மடமைப்புலவர்க் கயராதே
பங்கையனையநு மனையொத்தபுகழ்ப்
பொங்கமருவிநி னருளைப்பெறமெய்ப்
பண்புதவிலுனை யெவர்தட்டுவர்செப் பிடுவாயே
பஞ்சுபடைபுனை கரவச்சுதசற்
சங்கமுனிவரர் தொழுமுத்தமபத்
தங்கமுடையவ வெனமெச்சுநருக் கெளியோனே
யண்டர்குலமுழு தழுதுட்குலையத்
துன்பமிகைபுரி தகுவத்திரளட்
டந்தணுரகமெ லமளித்தலையிற் றுயில்வானே
தஞ்சனருளல திலைமெய்ச்சொலெனக்
கெஞ்சிபுருகொரு வனிதைக்கவையிற்
றங்கநிறமுறு கலைபற்பலதொக் கருள்வானே
தண்டம்வெருவியொ ரமையொத்துருவுற்
றங்குதளர்மக பதிதுய்த்துயமுற்
றந்திமுகனரு ணதிமத்தியினிற் பெருமாளே. (௬௭)

தந்ததனனதனா தனனதன—தனதானா.

கும்பமனைய முலையார் கலவியிடை
நொந்தனவர்சொ லியவேலைகள்பலசெய்
கொஞ்சமதியெய் தினர்பா லநுதினமு மிரவாதே
கொன்றமிருக நிணமா மிசமுதிர
முண்டுகளிகொள் கொடியோ ரவனிமிசை
கொண்டகுடையி னிடையேபதறியழு துலையாதே

செம்பவளம தனையேயனையசடை
கொண்டுகுலவு குறுமாமுனிவனருள்
செந்தமிழ்மறையெ னியபாதகர்தமெதிர் விழியாதே
சிங்கமெனமு னொருதூணிடைகடிது
வந்துதிகழு னருளேகருதிமகிழ்
சிந்தையுடைய சடகோபனையனைய ருடனாள்வாய்

சம்பரனையொர் கணையால்வதைசெய்திடு
மைந்தனுதவு மரிகேசவவிபுதர்
தங்கள்பகைமை முயல்வார்குலமுழுது மடுமாலே
தங்கமலைவி லதனாலமர்செய்தெயில்
வெந்துபொடிய வடுவானிடமருவு
சங்கரியுட னெடுநாள்பகர்பெருமை யுடையோனே

நம்பலனுவு மிலராய்வசைமொழிப
கர்ந்தசிலரு முதல்வீடுறவருளி
நன்றியறியு மவரேவியபணிகள் செயநாணாய்
நந்துமணியு மாமாமுதலியவு
முந்துமலைக வெரிகாவிரிநடுவ
ரங்கநகரை யகலாதினிதுவளர் பெருமாளே. (௬௮)

தனதன தனதன தந்தத் தந்தத்—தனதானா.

அருளறுகயவரை வந்திக்குஞ்சொற்
புலவருமிகழ்தர நொந்திட்டிங்கெய்த்
தளவறுகவலையு றுந்துக்கங்கெட் டொழியாதோ
வதிநயமதுரந லந்துற்றும்பர்க்
குணவெனுமமுதமு மொஞ்சச்சந்தத்
தழகியகவிபக ருங்கொற்றம்பெற் றுயரேனோ

விருளறுகலிபுரு டன்சுற்றம்பட்
டறமொடுசாதமு மிஞ்சிக்கஞ்சத்
திருவனிதையருள முஞ்சற்றென்றற் குருகாவோ
விடிவினவரவின டுங்கத்தொந்தப்
படமிடியதனைமு னிந்தத்தஞ்சத்
தினம்வலிமுதலிய வின்றைக்கொன்றத் தருளாயே

பொருளலதுயர்விலை யென்றுய்த்தங்கற்
றெதிர்பொருமவுணர்க டம்பட்டங்கட்
பொடிசெயுமொலிதரு சங்கத்திண்கைத் திருமாலே
புதுநிலவுமிழ்தரு வெண்பொற்பொன்றச்
சரசுவதியைமரு வெண்கைத்துங்கப்
புலவனைமுதலினர் சிந்தைக்கின்பக் கடலானாய்

தெருளுறுமுனிவரர் சங்கத்துண்கட்
கயன்மணம்விரவுமி னன்றற்கங்கைச்
சிறுகலமதிலரு டுங்கற்கின்சொற் கலையீவாய்
திரையினமணியெறி பொங்கர்ப்பைம்பொற்
கரைநடுவொழுகும கண்டச்செம்பொற்
றிருநதியிடையின ரங்கச்செங்கட் பெருமாளே. (௬௯)

தனன தந்தந் தனன தந்தந்
தனன தந்தந் தானந்தந்—தன தானா.

கருணையன்பின் றியகுணங்கொண் டவரிடஞ்சென் றூர்வந்தங்
கியசெழுஞ்சந் தமுமொழிந்தெந் துயரிதென்றுங் கூறும்புன்
கவிஞருங்கண் டிகழநொந்திங் கலமருந்துன் பியாவுஞ்சென்
றொழியாவோ

கமலமொன்றுஞ் சதுமுகன்றன் சுருதியுங்கொண் டாடும்பண்
பதுபொருந்தும் பசுவினஞ்சஞ் சலமலிந்தந் தோவென்றுங்
கதறிடுந்துன் பமதொழிந்தின் புறமுயன்றிங் காயுந்தொண்
டெளிதேயோ

சருவமுந்தன் செயல்களென்றென் றுரைசெயுஞ்சண் டாளங்கொண்
டுயிர்வதங்கண் டழிநிணந்தின் றிடவுநெஞ்சொஞ் சார்தந்தந்
தலையுடைந்துங் குடர்சரிந்தும் படுகளந்துன் றேர்மிஞ்சுந்
தினமியாதோ

சகளமென்றுங் கடைநலந்துன் றகளமென்றும் பேசுந்துங்
கமதடைந்தெங் கணுமிலங்குந் தகைமையுங்கொண் டாடுஞ்செஞ்
சரணகஞ்சங் களைவலிந்தென் சிரமதன்கண் சூடும்புங் கவனோ

பருவதஞ்செங் கையிலிலங்குங் குடையிலொன்றன் றேழ்மஞ்சுஞ்
சதமகன்சிந் தையுமவன்றன் படையுநெஞ்சஞ் சோர்தண்டம்
படலுணர்ந்தெம் பரும்விளம்பும் பெருமைதங்குந் தோளின்பைந்
துளவோனே

பழுதில்கும்பன் பிறகுசென்றின் றுதிபெறுஞ்செந் தாளஞ்சம்
பொருவுமந்தண் கமலையுஞ்சிந் துடைகொளும்பெண் பாலுந்திண்
படுபயங்கண் டுருகியென்றும் புணர்தருஞ்சொந் தாநந்தொன்
றுடையானே

தெருவிடஞ்சென் றமுதிரந்துண் பவனறங்குன் றுள்கொண்கன்
புரமெரிந்தங் குவிழவுஞ்சென் றெளிநகுங்கங் காளன்றென்
றிசையிடந்தங் கினைமுன்கொன் றவனிதஞ்சந் தோடங்கொண்
டுணர்சிலா
செகமளந்துண் டுமிழ்கருங்குன் றனையநந்தந் தாயண்டம்
பலவழுங்கெண் கானைமுன்றந் தருளும்வண்கொண் டாய்வம்பன்
றிருடனென்குஞ் சொலும்விழைந்தந் திருவரங்கஞ் சேரொந்தம்
பெருமாளே. (௭௰)

தய்யதத்த தாத்ததன தந்தத்ததானன—தனதானா.

கல்விகற்ற பேர்க்குமகிழ் வின்றிச்செய்தாயிது முறைதானோ
கள்ளமெச்சி னார்க்குமரு ளன்றிட்டநீர்தவ றியதேயோ
புல்விருப்ப மாக்களுனும் வண்டர்க்கொராள்கைநல் கினனாரோ
பொய்யொழித்தெ னாத்திரம றிந்திற்றையேயெதிர் வருவாயே
பல்விதத்தி னாற்கருதி னுஞ்சுத்தமாமிளிர் புகழோனே
பௌவமுற்ற ராக்கதரி லங்கைக்கொர்தூதனை விடுவீரா
செல்வியுற்ற வாற்றலில கும்பொற்புமார்புறு திருமாலே
தெய்வமுற்று மாய்த்திருவ ரங்கத்தின்மேவிய பெருமாளே. (௭௧)

தந்ததன தன—தனதானா.

இந்தவுலகில்வி ளைபாந்தபயனிட லின்றியருள்கதி நிசமாமோ
வென்றுமுனதுப தங்கள்கருதினு மெண்கண் மகன்விதி கொடிதேயோ
பந்தமுழுதுமொ ழிந்தமுனிவரர் பண்டுபகர்வன தவறுமோ
பஞ்சவரினடு மைந்தனுடனுவல் பங்கமறுநிலை யருள்வாயே
கந்தமலிதரு பைந்துளவநிகர் கண்டதமிழொடு திரிவோனே
கன்றைவிளவிலெ றிந்துமிகன்மலி கஞ்சன்வதைபட முனிவோனே
நந்தன்மனையில்வ ளர்ந்தவடிவினை நம்புமடியவர் குருவாவாய்
நஞ்சமுமிழர வொன்றினிணையில ரங்கநகர்வளர் பெருமாளே. (௭௨)

தனனதந்த தத்த—தனதானா.

கலையுணர்ந்தபுத்தி யருமனன்றுரைத்த கருணையிங்கிதச்சொல் வழுவாதே
காடதந்திவிட்ட புனலிடங்குளித்த கமலைதன்கடைக்கண் விலகாதே
மலைசுமந்துசத்த முகிலையுஞ்செயித்த வகைவிளம்புநட்பு மறவாதே
வகுளமுன்றரித்தொர் புளியிலொன்றுமுத்தன் மருவியுய்ந்தபத்தி
யருள்வாயே

மூலைமுகந்திறக்கு மலகையங்காத்த முழுதுமுண்டு செற்ற கனிவாயா
முகுளகஞ்சபுட்ப முறைவிரிஞ்சர்நத்தி மொழிதரும்புகழ்ச்சி மிகையோனே
சிலையின்வென்றிமிக்க வொருவனங்கைதொட்ட தினமரன்றலைக்கொ டவிர்பாதா
செயமலிந்தசித்த ரனைவருந்துதித்த திருவரங்கமுற்ற பெருமாளே.(௭௩)

தானன தந்த தானன—தன தானா.

மாதவரஞ்சுகூர்விழி யார்கள்செய்கின்றதோதக
வாரியமூழ்ந்திமாழ்குவ தொழியேனே
வாசவன்வென்றிவேளுடல் வீமனெனுஞ்சொலீகையின்
மானிடர்முன்சொல்வார்களு மெதிர்வாரோ
ஓதரிகழ்ந்தபாடல்க ளாலுனையென்றுமோதிய
சீரியர்தங்கள்பேறுற வமையாதோ
சீதளமென்சரோருக மேநிகருன்றனதிரு
சேவடியின்பமோர்சிறி தருள்வாயே
காதகநெஞ்சுளார்குல மோடறவென்றுமேதினி
காமுறநின்றகாவல ருயிராவாய்
காரணனந்தநாரண னேயெனவன்பினுடிய
காதலர்சிந்தைதோறமர் கரியோனே
யாதவன்மங்கியோர்பக லாடிரவுங்குலாவிட
வாழியெறிந்ததோர்புக ழுடையோனே
யானைமுகன்செய்சீர்பெறு காவிரியின்கணேதிக
மாதியரங்கமேவிய பெருமாளே. (௭௪)

தந்தன தந்த தனதன—தன தானா.

கந்துகமென்றமுலையினர் கெண்டைகளொன்றவிழிகொடு
கன்றிடவென்றுதுயர்தர லறியாயோ
கன்றொடுநின்றபசுவதை யும்புரிவண்டர்குடிகெடல்
கண்டலதுன்றனடிகளி னுழைவேனோ
பைந்துளவென்றனதுகையி லன்றுதவுந்தணருள்வலி
பம்பியிலங்குமொருதின முதியாதோ
பன்றியுடம்புமொருவிசை கொண்டுலகுய்ந்துகொளவருள்
பண்பையியந்தகவிவிலை யருள்வாயே
சந்துசொலென்றும்விடவல பஞ்சவர்தங்களிகலவர்
சஞ்சலமிஞ்சவொவிதரு வலோனே
தண்டரளங்கொள்வனமுலை துன்றமினென்றவனிதையர்
தங்கலைகொண்டோர்மரமிசை யிவர்வானே

சிந்துரமொன்றுகதறிய வன்றுபுரந்தவருள்பகர்
செந்தமிழன்பர்பலர்பெறு கதியோனே
திங்களணிந்தசிவனையும் வென்றுயர்மைந்தனுடன்வரு
தென்றலரங்கநகர்வளர் பெருமாளே. (௭௮)

தனனதான தான தானதந்ததந்த——தனதானா.

கடபடாதி ஞாயநாடி யுன்றனன்பொ
ரணுவிலேக தேசமேனு மின்றிவமபு
கழறுமவாத ராதியோர்மு னெஞ்சுலைந்து தளராதே
கரியமாத வாசுரேசா வந்திறைஞ்சி
வழிபடாதி கேசவாவெ னுஞ்சொனன்கு
கழறிடாது கூவுமானை யுய்ந்தபண்பை மறவாதே

யிடரெலாமு நாசமாக வுன்றனன்பா
பதுமபாத தூளிநாடொ றுஞ்சிரங்கொ
டிகழுமவா னுநேரொணாமு யன்றதொண்டு நழுவாதே
யிலையெனாத வீகையேபு ரிந்துசந்த
முதலவாய பாடன்மீற வுமொழிந்தொ
ரிடபமேறு வானையேறி காந்தனன்பி லமிழ்வேனோ

படவராவின் மீதுநாட கமபுரிந்த
சரணநாடி டாதமூடா பின்புசென்று
பனுவலபாடு நாவலோரை யுமபுரந்த வருளாளா
பலபல்கோடி வீரர்தேரில வந்தடாந்த
களமதூடொரா பேடிவாழ வென்றுபாந்த
பணிலமூதுப வாயுதாய கந்தமிருக துளவாளா

நடனமாடும வானமாத ரொடுசமிந்த
மெழில்கொண்மாதெ னுவநாளச மைந்துநின்று
நலமீறியா போரின்மாய்தல் கண்டவந்த நெடுமாலே
நமனடாத ஞானசாக ரமபொருந்து
முனிவர்தேவர் வேதியோரொ ருங்கரங்க
நகரினுளும் வாழுமேக மென்றவிர்ந்த பெருமாளே. (௭௯)

தநததன தானன தததநன——தனதானா.

கந்தமலர் சூடுநீலக்குழல விழ்ந்துலையுமா றுவிசைதொழில்செய்
கண்டுநிக ராகுமவா யெச்சிலுடை யவரோடே
கங்குன்மத வேழமேலுற் றுனது மைந்தனம ராடலாலெய்த்தனன்மெய்
கண்டுமரு ளாமலேலுற்றனையி தறமாமோ

முந்தவொரு நாளெனதுட்கனவில் வந்துவிளை யாடலெனக்கருணை
மொய்ம்பழியு மோநினைக்கெதிரு மூளதேயோ
முண்டகம தேறுவானிற்பொதுவி னின்றதவ மாறியினைக்கயவர்
முன்றிறெறு மேகிடாமற்சிறிது நினைவாயே

பைந்தகைய மேகமேயொத்துருமு மந்தமத வேழம்வாழக்கடிது
பண்டுசெலும் வாரமேசெப்புநரை யகலானே
பன்றியுரு வாகியேகிக்கனக மென்ற விழியானைமோதிப்புவனி
பந்தமறும் வாழ்வுதோயப்புரியு நெடியோனே

நந்தன்மக னாயவூரிற்பொதுவ மங்கையர்கள் சேலைசேரக்கவரு
நங்குபகர் வாரும்வாழப்பெரிது முயல்வோனே
நண்டதிப னாமவாவிப்பெருமை யென்றுமழி யாதசீலத்திருவ
ரங்கநகர் வாழுஞானப்புலவர் பெருமாளே. (௭௭)

தானான தந்தத்—தன தான.

தேடாமலின்றைக் கேவேணசெம்பொற் சீரியநெஞ்சத் திசையாயோ
தேனாமெனுஞ்சொற் பாமாலைகொண்டச் சீரேடுதந்திட் டதுவீணே
பாடாமலன்புற் றோர்தாமுநின்பொற் பாதாரவிந்தத் தடையாரோ
பாழாவருந்துற்றியான்மாயினின் சொற் பாதாளமுங்கித் தொலையாதோ
தாடாளவென்றிக் கோபாலவஞ்சத் தாய்மாமன்மங்கப் பொரும்வீரா
தாராகணங்கட் கோர்கோவைநெஞ்சிற் றானாவழங்கத் தருமாலே
காடாளும்விந்தைத் தேவாவசந்தக் கார்வேளைமுன்பெற் றவள்கேள்வா
கானாறனந்தத் தோர்தாயெனும்பொற் காவேரிரங்கப் பெருமாளே. ()

தத்தான தந்தத்—தன தான.

பொற்றோடமிஞ்சிக் கெட்டேன்முனண்டப்
புத்தேளிரொஞ்சப் புரிவாயோ
புத்தாதிவண்டார்ச் செற்றோடவென்றிப்
புட்கோவில்வந்தெற் கருள்வாயோ

வற்றாமைநிந்தித் துட்பேசும்வம்பர்க்
கற்பாயுளொன்றக் கறுவாயோ
வக்காரவின்சொற் சொற்றாயெனெஞ்சத்
தப்பான்மைதுன்றக் கருதாயோ

பற்றாகையம்புட் கொப்பார்கள்கெஞ்சப்
பட்டோர்குருந்தைத் தலைமேயாய்
பத்தாயதிண்கைச் சித்தேசனஞ்சப்
பற்பாசுரன்செத் திடநேர்வாய்

கற்றோர்நெருங்கச் சிற்கோலவிஞ்சைக்
கற்பார்வணங்கத் திகழ்மாலே
கற்பூரசந்தக் குப்பாயவங்கக்
கத்தூரிரங்கப் பெருமாளே. (௭௯)

தனனதன தனனதன தனனதன தனனதன
தந்தந்தனத்தனன தந்தந்தனத்தனன — தனதானா.

அதிகவழ குடனிளமை யுடையவர்கள் பொருளவளமை
யொன்றின்றி முற்படினு நஞ்சென் றுகைதகிகழும
விலைமகளிர் தமையுயிரி லினியதுணை யெனநனிவி
ரும்புங்கு ணக்கயவர் பின்சென்று சொற்பணிசெய்
தலமருபுன் மதியுடைய சிறுவர்களும வசைசொலமெ
லிநதிங்கு தட்டழியு நெஞ்சுளுங் கக்கடலின் முழுகாதோ

வலர்கமல மலரின்மிசை யுடல்பலசெய துறையுமவிதி
முன்றநத மெய்சசுருதி யினபஙகு படடபல
சமயர்களு மிகழரிய பெருமைகொடு நிகழ்பசுவை
யுங்கொனற றுதத்துநிண முணடுணடு வக்குமவ
ரனைவர்களு மொருநொடியி லெரிகளுவு மலையனைய
பஞ்சென்ற றக்கறவு தெம்பொன்று சிதகியொடு பொலியேனோ

கதிரவனு மறையமுகி ரிருளுமவா வொருபகல்செய்
தன்பன்க னறகண்விழ லின்றஙக ளிதததனை
முதலியபல் புகழினையும விரவியமு தனையபல
சநதநத மிழ்ககடலி டநதுன்றி டததுதிசெய
கவிஞர்திர ளிடையிவனொ திலகமெனவ விகடபமவி
ளம்புநதி றத்தொடுமவை குநதாநத ளிற்றின டப வசியேனோ

கருடனெனு மொருபெரிய பறவையர சதலமுதுக்
லம்பொன்ற னைப்பொருநி றநதுன்றெ ழிறற்ருவும
விரிகடல்க ளெனுமுடைகொ ணிலமகளு மருகுறவி
யன்சங்கு சக்கரமி ரண்டஙகை பறறவிரு
காமலரி லபயவர தமுமணியு முடிமுதல்வ
யங்கும்ப ணித்திரள்க ளுங்கொண்டென் முற்றினமும வருவாயே

சதிபுரியு மவுணர்குல கலகமுகி னிகாபகவ
வென்றும்பி றப்பிலவா நமபுநது னைசசரண
வுலகமுய வெனவளவில் பலவுடல்கொ டிலகொருவ
நநதங்தொ னித்தமர்வ பூங்குகை ளத்தினிடை
சாதநிலை தவிராசர் பலரும்வச மறவிடுதி
. றங்கொண்டு மக்கினித ருந்திண்டி றற்குதிரை விடுவேனே

சலதியத னிடைபெரிய மலைகள்கொ டொரணையிடு
ரங்கின்ப டைக்கதிப னென்றிங்கி சைக்குமவர்
பழிவினையு மலவிருளு மறவொருவு மலரணைய
செங்கண்ப ண்டைத்தவநி லந்தந்தி டப்பொருவில்
சனகன்மனை யிடைவளரு மவண்மகிழ வரன்விழைத
ருந்திண்கை யிற்படையி றுந்துங்க வெற்றிபெறு விறலோனே

நதியுதவு புதலவனென வருகிழவ னரவமெழு
துஞ்செங்க லைக்கொடிகொள வமபன்றன் முற்புகழும
விசையனொரு தினமிரவி லுயயபத மலரிலணி
புந்தொங்கல் பட்டவகை யுமபைந்த ளிரகதிரொ
நலைவிட மயிலவல ரயிலமலை யிறையவனெ
டுஞ்சௌச டைத்தலையி டங்கண்டு வக்கவருள் தரவோனே

வரிமதியி னழுபொருகொ டிலக்குநட மதனிமுழு
குமபணப ரைக்கதியி டுஞ்சென்றி டசெயலு
மகபதிமு னுபவரு னதிவலைய முயாபுகழு
மஞ்சொஞ்சு றபபொழிக ருஞ்செந்த மிழுபபதினமா
நுரியகவி பொலிமுதல வியனுரில கிபதிருவ
ரங்சந்த னிறகுடிகொ ளநடம்பந்த கைபபழைய பெருமாளே. (அய)

தனந்ததன தானனந்தத — தனதானா.

கருங்கணிளம பாவையாகொங்கைக | கயராதே
காந்தகொடும பாவிகணமுனைபுற | றிராவாதே
பெருங்கலியின கோரமடங்கிய | கெடுமாறே
யிசைந்தபெருஞ் சீர்முழுதினமறைக | கருள்வாயே
மருங்கொருபெண சோசிவனவந்தித | திடுநாதா
மதனறனைய ன்னியமங்கைக்க | கினியோனே
பொருங்குலகுண் டேபுமிழசெமபொற | கனிவாயா
புறங்கியுறங காதவரங்க | பெருமாளே. (அக)

தநததநதன தநததநதன — தனதானா

வணடுஞ்சிப கணகொணடமாபொரு பெணகண்டு குஞ்சிநதையிலருள
வநதினடபவ ழங்குமபடி கரு | திடலவினை
வண்சநதமவி ளமபுமபுலவாகள கெஞ்சுமபொழு துஙகொஞ்சமுமிடி
மங்குங்கொடை யெனறுமபுரிகிலா | மிகலாமோ

தண்டமபுனை புநதிண்காநம னஞ்சுமபுகழ கொண்டுனபாமப
தநதங்குநர் மிண்டுமபடிகக | பதிமேலே
தஙகமபுரை கொமபுமபுவிமக ளுமபங்குற வநதுன்றிருவரு
டநதெணபொறி பினசெமபொருனைபு | துவலவாயே

கண்டங்கரி யன்செங்கமலத் தொன்றுந்தலை விண்டுய்ந்திடமலர்
  கஞ்சம்பொரு கண்டங்கருண் மழை — பொழிவானே
 கந்தங்கம ழும்பைந்துளவணி யுந்திண்புய மொன்றைம்படைகொடு
  கண்டம்பட மிண்டுந்தகுவரை — யடுவோனே

யண்டம்பல வுண்டுண்டுமிழ்செயல் விண்டன்பொடு தெண்டன்செயுமவ
  ரஞ்சிந்திய முங்கொன் றுயவரு — ணெடுமாலே
 யம்பைந்துறு மைந்தன றனியிர கஞ்சந்தக முப்பொங்கரிலவரு
  மந்தண்பொன ரங்கந்தனிலவளர் — பெருமாளே. (அ௨)

தத்தத்தன தத்தத்தன தன — தனதானா.

அச்சத்தொரி லைச்சத்திய தணி கைச்சித்த முரைத்திடுளப்பு
  யக்கற்றொட லுற்றுத்தள ருவ — கறியாயோ
 வத்திக்கிணை செப்பத்தகு தட முற்றுக்கத றித்தட்ட ழிகய
  மற்றைப்பக விற்செப்பிய பெயர் — மொழியேனே

விச்சக்கமு ரைத்துப்பல பிற குற்றுத்தள ரப்பப்புலவோர்த
  மிக்கட்டுறழ் துக்கப்பிணி யொழுள — வரலாமோ
 விக்குச்சிலை பற்றிப்பொருமத லைகுப்பிற மறக்குத்தணை வனெ
  னெய்ப்பப்பற்று கழப்பக்குவமுற — வருள்வாயே

பொச்சத்தின்மு யற்சித்தெம்பட ரச்சப்படு கொற்றச்சமர்புரி
  பொற்றைப்புய விற்கைத்தகுவர்கள — குலகாலா
 புத்திச்சல னத்துப்பதிதர்கள் மொய்க்கக்குறை சைப்பைக்கதறிய
  பொற்புக்கும ரிக்குக்கலைப — கருவோனே

மச்சத்துரு வுற்றுக்கடலினி டைப்புக்கொரு அட்டப்பயிலவ
  னைத்துச்சக ருதிக்குச்சக மரு — ளியமாலே
 மைக்கொத்தவ னப்புக்கழல்புனை முப்பத்தினி யிற்செப்பவைகளின்
  மத்திப்பொன கிர்க்கட்குலவிய — பெருமாளே. (அ௩)

தய்யதன தன தனன தத்தனந்த — தனதானா.

களையிழிவென விகழ்சொற்பகர்ந்து கொளாமலொளிநிய களிக்குடைந்து
  கல்லைநிகர்மன மெலிவுற்றதுனப — மொழியாதோ
 கல்வியறிவிலா மனையிற்புகுந்து செலவவளைகைமன வயிரத்தனென்று
  கள்ளமனதொடு சொலுமற்பா நிந்தை — மலிவாமோ

வெள்ளைமலருறை புனிதைக்கிசைந்த நலவுணர்வினர் சபையுற்றிருந்து
  வெள்ளநிகர்பல கவிசெப்பியின்ப — மடையேனோ
 வில்லைமுதலிய படைவைத்தவிர்ந்த மையைநிகர்திரு வுருவத்தொடின்று
  வெஃகுதிருவுள முறுபட்சமென்றன — மிசைவாராய்

வள்ளைவளர்செவி யுறுபற்பன்மின்க ளையவருளென வுடனுற்றிரங்க
வெளவுபலகலை யொடுபொற்குருந்தை யிவர்வோனே
வல்லசமர்புரி தகுவக்கணங்கள் கைகள்குவியுமொ ராசற்குமுன்பு
வையமொடுகக னமுமற்றைகொண்ட விருபாதா

தள்ளையெனவுயிர் களைமுற்பயந்த செய்யவளையகன் மருமத்தணிந்து
தள்ளலரியபல் புகழுற்றுயர்ந்த நெடுமாலே
தவ்வையுறவற வெறுநெற்றியின்றி மல்குசமயர்த முணர்வொத்தெழுந்த
சையமலைதரு நதியிற்கிடந்த பெருமாளே. (௮௪)

தனனத்தானன தானன—தனதானா.

கமையற்றேபலவாவிகழ் கொடுமைத்தீமொழிபேசிய
கலகப்பாதகரான்மனம வெருளாதே
கருணைப்பான்மையுமீகையு மிவையொப்பாவனயாவுமொர்
கடுகொத்தேனுமிலாரொடு பழகாதே

யமையைப்போலொளிர்தோளியர் பலருக்கோராசாமத
னலர்பட்டீர்தொறுநாயென வலையாதே
யருளிற்றோய்தருமாதவ ரொடுசித்தாடிடநாடிய
வதியுற்சாகமறாநிலை தருவாயே

தமையொப்பா ரிலரேயென மகிழ்நிட்டூரகுணகர
தகுவர்க்கோரிடியேறுறழ் திருமாலே
சரதச்சீர்பெறுமாவலி யெதிரிற்போயகல்வானொடு
தரையைத்தாண்மலராலள வியகோவே

யிமைகொட்டார்களிகூரவ விருளைப்போலடர்தானவ
ரிழியக்கோமளமோகினி யுருவானா
யிபமைக்காகமதாவருண் மகிமைக்காவிரியாறத
னிடையிற்கோயிலின்மேவிய பெருமாளே. (௮௫)

தனத்தாதன தன—தனதானா.

உனைப்போலொருதுணை யெனக்கேதிலையிலை
யுரைத்தேனிதுநிச முணராயோ
வுருக்காலியல்கணை யெனக்கூறிடும்விழி
யுடைப்பாவையர்மய லுறலேனோ

தனைத்தானிகர்பர சுகத்தேயெனதுயிர்
சணப்போதமையவு மருளாயோ
சனிக்காதுறுகதி கொடுப்பாயெனிலுயிர்
தவிக்காதுயவருள் புரிவாயே

விணைப்பேயொடுசம ரிழைத்தேசெயமுறு
மிடற்சீரியருணர் நெடுமாலே
விதிப்பார்பலரையு மளிப்பாயெனுமவர்
மிடிக்காடறவருள் விறலோனே

திணைக்கானெயினரில் வதைத்தேயுணவுகொள்
செயற்றீயவாறி வரியானே
திருக்காவிரியத னிடத்தோரவிடை
தினத்தேவிழிதுயில் பெருமாளே. (அசு)

தானனதத்தன—தனதானு.

வாரணமச்சமொ டேடாலமிடற்பெரு வாரம்விளைத்தது நீசமானுன்
மாதுரியத்தமிழ் பாடிவழுத்தெனை மாழ்கவிடுப்பது முறையாமோ
வாரணநிச்சய ஞானவிளக்கம தானவருட்சுவ றியதேயோ
வாவதைபற்பல நாளுநடப்பது னுடலெனச்சொல விசைவேனோ
பூரணதத்துவ மாகியஎப்பறு போகமுமுத்தியு மருள்வோனே
போகியுயத்தகு வேசர்பொடிப்படு போர்புரியத்தகு புயமாலே
காரணசற்குரு வாயுலகத்துறு காதலொழித்தருள் கரியோனே
காவிரிமத்தியில் வாழ்வுபடைத்தொரு காவல்செய்துற்றதொர் பெருமாளே. (அஎ)

தனனதந்தத்தானனதானன—தனதானு.

எழுதருஞ்சிற் கோலமனுலய முடையதொண்டர்க் காகியவாறுசெய்
திடலொழிந்தெப் போதினுமேசுநர் நசியாரோ
விகபரங்கட் காநலமேமிக முயலுமன்புற் றோர்மனநோவுற
விடியெனுஞ்சொற் பேசுநர்வாய்வலி யுலையாதோ

முழுதுமுன்றற் கேயடியானென வழிபடுஞ்சித் தேசருமாதவ
முனிவருஞ்சொற் பாவலர்தாமுமுண் மகிழாரோ
முகுளகஞ்சப் பூவளர்நான்முகன் மறையினாதத் தாடுநின்வார்கழன்
முடியிலின்றைக் கேயொருபோதினி தணிவாயே

வழுதிமுன்புற் றேதமிழாலொரு கிழியறுஞ்சித் தாடியவேதியன்
மகள்விரும்பிச் சூடியமாலிகை புனைவானே
வகுளமன்றற் காமுறுபாலனொர் புளியிடம்புக் கோதியவாயிர
மதுரவண்சொற் பாடலின்மேவிய பொருளானாய்

பழுதிலின்பச் சாகரமூடெழு மமுதபுஞ்சக் கோமளநாயக
பகைவர்குன்றச் சாடுமகாரதர் துணையாவாய்
பறவைமன்பொற் பார்கொடியாலுயர் பெருமைதுன்றிக்காவிரி யூடவிர்
பழயரங்கத் தேகுடியாகிய பெருமாளே. (அஅ)

தானதந்ததான—தனதானு.

நீவலிக்தெனோடு பேசுமந்தவாய்மை நீணிலந்தன்மீது திகழாதோ
நீதியின்றிவேண வாறுவம்புபேசு நீசர்தங்களாண்மை குலையாதோ
பாவமென்றபார மாறியுன்றனுது பார்மடந்தையார்வ மடையாளோ
பானல்விண்டகாடு போலவந்துசேய பாதமென்றன்மீது புனைவாயே
நாவலொன்றினீழன்மேவுகின்றதீவின்ஞானவிஞ்சையோகர் துணையாவாய்
நாமடந்தைகேள்வன் மேவியென்றும்வாழு நாபியொன்றுநீல முகில்போல்வாய்
தேவருய்ந்துவாழ மேருவென்றுநீடோர் சேயகுன்றையாழி நடுமாலே
சேண்வியந்தவாய கோபுரங்குலாவு ரரங்கமேய பெருமாளே. (அகூ)

தந்தந் தந்தந் தந்தந் தந்தந்
தனதன தந்தன தனதன தந்தன—தனதானு.

அம்பொன் கொண்டெங் குஞ்சென் றங்கங்
கமையுந லம்பல பலநுகர் நண்பரும்
வம்புந் தெம்புங் கொண்டென் றுங்கொம்
புடையன வும்பரு கியபல்கு ணுங்கரு
மஞ்சங் கண்டொஞ் சுஞ்சந் தந்தங்
கியநடை மின்புரை வனிதைய ரும்பெரி திகழாதே
யங்கிங் குங்கெங் கென்பங் குன்பங்
கவனது பங்கென வமர்செயும் வண்டரும்
வெம்புஞ் சிங்கந் தன்றுங் கங்கொண்
டிகலடு நின்செய விகழ்தரு குண்டரு
மண்டம் பிண்டங் கென்றுந் தூன்றுங்
கடவுள ரஞ்சவெ நிசிசரர் கும்பலு மகிழாதே
செம்பொன் குன்றென் றென்றுந் தூந்திண்
பறவைய தன்பிடர் மிசைமலர் மங்கையு
நந்தஞ் சிந்துஞ் சிந்தொன் றுந்தண்
பருவரை மங்கையு மருகுற மங்கலில்
செங்கஞ் சந்தன் பொங்கந் தங்குந்
திருவிழி கொண்டுல குயவரு ளுஞ்சினை முகில்போலே
தெண்டன் றண்டங் கும்பம் பைந்தண்
டுணரிவை கொண்டவர் பலர்வளை யும்படி
யென்றன் புன்கண் கண்டின் பம்பொங்
கிடவெளி வந்தொரு கனவின்மொ ழிந்துள
தெம்பொன் றுஞ்சொந் தந்தந் தந்தண்
புளியினு ழைந்தவ னடியர்ப தம்பெற வருள்வாயே

வம்பொன் றன்றங் கன்பொன் றும்பெண்
கொடிகத றும்படி செயுமவர் தங்களை
யுந்தண் டுங்கொஞ் சும்பெண் கும்புங்
கனல்படு பஞ்சென நொடியில் ழிந்திட
வண்டங் கொண்சங் கம்பம் பம்பம்
பமெனமு ரன்றிட மலர்குழு தம்புரை கனிவாயா

மஞ்சும் பொங்குஞ் சிந்துங் கண்டெஞ்
செழில்கொளுடம்புறு பகவபு ரந்தரர்
தந்தந் துன்பந் துஞ்சின் பங்கொண்
டவிர்தர நம்பிய சரணவ சந்தனின்
மைந்தன் சென்றன் றுந்தந் தந்தங்
கலர்களை சிந்தலும் வெருவுசி வன்றயர் களைவானே

வெம்பொன் கொண்டுன் சந்தந்தங்குந்
திருவுருவின்பணி பலபுரிகின்றவ
னஞ்சுண் டங்கஞ் சிந்துந் துன்புங்
கொடுதளருந்தின மெமனிகர்வண்டன்முன்
மின்றங்கம்பின் கும்பொன் றுஞ்செஞ்
சிலையிருபுங்கவ ரெனவுமவிர்ந்தருள் கரியோனே

விந்தங் கண்டுங் கொஞ்சும் பைம்பொன்
சிகரிய ரங்கந னகரிலி யம்பல
டுண்டுண் டுண்டுண் டுண்டுண் டுண்டுண்
டுடுடுடு டுண்டுடு வெனவுமுழங்கிட
விண்டங் குங்கும் புங்கண் டின்பம்
பெருகவி யங்குபல் விழவொடு தங்கிய பெருமாளே. (௯௰)

தானதத்த தத்ததத்த—தனதானா.

பானலொத்த கட்சிமிட்டி னுன்மயக்கி யெச்சில்பட்ட
பாசிலைச்சு ருட்கொடுக்கு மடமாதர்
பான்மயக்க மிக்குனிச்சை மாறுமறப் பர்.பக்கலுற்ற
பாரமற்பு கழ்ச்சிசெப்பி யயராதே

ஞானவித்த கர்க்குளுற் றுன் மேன்மையைத்து தித்துமுத்தி
நாடதைப்பெ றக்குறித்த தறியாயோ
நாகமொற்றை யைப்புரக்க வேகுமக்கு ணத்தொடிற்றை
நாளெனக்கு முற்கணத்தில் வருவாயே

வானரக்கு லத்தினர்க்கு ளேபெருத்த வெற்றிபெற்ற
மாருதிக்க ளித்திருக்கு மிருபாதா
மான்விருப்ப மிக்கனுப்பு சானகிக்கி டுக்கணிட்ட
வாளரக்க னைத்துணித்த கணையேர்னே

காணகத்தி னிற்றவித்த மாதவர்க்கு வப்பளித்த
காரணத்தி னைச்சொல்பத்தர் துணையாவாய்
கார்நிறத்தொர் வெற்பையொத்து மாசுணத்தி னிற்செழித்த
காவிரிக்கு மத்தியுற்ற பெருமாளே. (கக)

தானந்ததானதனத்—தனதான.

ஞானந்தம்வாயா லுரைப் பவரோடே
நானும்பல்வாதாடிமிக் கயராதே
யானந்தமாயோகசித் திகண்மேன்மே
லாடுஞ்சுயாதீனமிட் டருள்வாயே
பானந்தழூதார்வமிக் குடையானே
பாடும்பல்பாவாணருக் கெளியோனே
தேனந்துதார்மார்புடைத் திருமாலே
சீரங்கநாராயணப் பெருமாளே. (கஉ)

தத்தத்தன தந்தன தந்தன—தனதானா.

சித்திப்பிரி யங்கடுகென் றுமி லற்பக்குண மொன்றியவண்டர்க
டிக்கெட்டினு நிந்தைசெயும்படி தளராதே
தித்தித்தந யம்பொலியுங்கவி கட்டிச்சொலி னுங்கொடையின்றிய
செட்டுற்றவர் தம்பிறகன்பொடு திரியாதே
பத்தித்துறை நஞ்செனும்வம்பர்க ளுக்குச்சம னென்றுவிளங்கியொர்
பற்றற்றசு கந்தனின்முங்கியுண் மகிழ்வேனே
பைச்சற்பம ருந்தியணிந்தம ரர்க்குத்துய ரன்றுமெசயுஞ்செய
பட்சிப்பிடர் வந்துநினைந்துள வரமீவாய்
துத்திப்பணி யொன்றுநடுங்கந டித்திட்டப தங்களைநம்பிய
சுத்தக்குண புங்கவர்நெஞ்சிடை யவிர்வானே
தூர்ப்புத்திம லிந்தொருபெண்கொடி யைப்பற்றிய ணிந்தவியன்கலை
தொட்டுக்கவர் கின்றவர் தங்களை யடுமாலே
புத்திப்பிழை மிஞ்சிநிணம்பல துய்த்திட்டா சின்றலையன்புசெய்
புத்தர்க்குமி சைந்தகுணங்கொளொர் குருவானாய்
புற்றுப்பணி யென்றதொர்பஞ்சனை யிற்சத்திபி ரண்டொடுகண்டுயில்
பொற்புற்றவ ரங்கவரங்கமழ் பெருமாளே. (கங)

தனத்தன தந்ததன—தனதானா.

கனைத்துணை யென்றவிழி யினர்க்குமய ங்கிமிகு
கலைப்பிணி கொண்டுலகின் மருளாதே
கதைக்கையு டன்பெரிய பகட்டிலி வர்ந்துசொரி
*கனற்கணை மன்பொரலின் மடியாதே

திணைத்தொகை யைந்துமொரு குடைக்கிடை கொண்டுமகிழ்
சிறப்பினர் தங்கண்முனும் வெருளாதே
திருத்திம லிந்தபா சுகத்தில மூந்தவொரு
திறற்புளி வர்ந்தெனெதிர் வருவாயே

யிணைப்பொரு ளின்றியக னிலத்தைமு னுண்டுமிழு
மியற்புகழ் விண்டவரை விழைவானே
யிரத்தக ளந்தனில்வி லருச்சுன னுய்ந்திடவ
லிருட்டொர்நெ டும்பகலி லருள்வானே

பணைத்தபு யங்கொளசு ரருக்கிக லென்றமக
பதிக்கொரு தம்பியெனின் மனநேர்வாய்
பழிப்பில ரங்கநக ரிடத்தொர்பு யங்கமிசை
படுத்தொளி ரும்பெரிய பெருமானே. (௯௪)

தனன தன தந்த—தன தானா.

பரிதியொடுசங்கு மணிதருபுயங்கொள்
பசியமுகிலென்றென் மனதூடே
பலவிசையவிர்ந்த பெருமையையறிந்து
படியினரருஞ்சொ விடுமாறே

யெரிபுரைநிறங்கொள் பறவையரசன்ற
னெழிலுருவரைந்த கொடியேமே
லெனமிகமுனைந்து பொருசமர்முயன்று
மிகலறவெல்வென்றி யருள்வாயே

பெரியசரணங்கொ டுலகினையளந்த
பிரபலமியைந்த நெடியோனே
பிழையறவிரைந்த சதுமறைபுகன்ற
பிரமன்வருமுந்தி மலரோனே

பரிவையர்களைந்த கலைபலகைவந்தொ
ரழகியகுருந்தை பிளர்மேவானே
பணிபொழிலரங்க நகரினிடையென்று
மறிதுயிலமர்ந்த பெருமானே. (௯௫)

தானதன தந்தத் தத்த—தனதானா.

சேலனைய வுண்கட்பொற்பு மாதர்மயன் மிஞ்சத்துற்ற
தீயவரி டம்புக்கிச்சை மொழியாதே
சேணுலக ருண்டற்கொத்த தாகுமென வம்பிற்பற்பல்
சீறுயிர்கொ லுந்துட்டர்க்கு வெருளாதே

காலமறை யொஞ்சத்தக்க பாடல்களி னம்பிச்சுத்த
காரணம்வி ரும்பிக்கிட்ட லறியாயோ
காரவ மொன்றுக்கற்றை நாள்புனைப தம்பெற்றிட்ட
காமியம்வ ழங்கத்தக்க செயலீவாய்

கோலவுரு வம்பெற்றெட்டு மாதிரமும் வென்றிட்டுற்ற
கோரணையொர் கொம்பிற்செற்ற பெரியோனே
கோதிலெயி னன்பெட்புற்றொ ராறுபது மைநதர்ப்பெற்ற
கோவலனெ னுஞ்சொற்செப்பின் மகிழ்வோனே

காலபய மின்றிப்பத்தி யோகமுய லன்பர்க்குட்பல்
காணும்வரு செங்கட்பச்சை முகில்போல்வாய்
காமனைவி ரும்பிப்பெற்ற கோதையொடு கொஞ்சிக்கைப்பில்
காவிரிய ரங்கத்துற்ற பெருமாளே. (௬௬)

தானன தத்த தநத——தன தான.

பாவாணருக்கிசைந்த வாறேகொடுக்குநண்பர்
பார்மீதுவக்கவென்று புரிவாயோ
பாகேயெனச்சொலுஞ்சொன் மானார்தரத்தழைத்த
பாழ்மோகமுற்றுமென்று தொலைவாமோ

மேவார்தமைத்தடிந்து சேர்வார்களைப்புரந்து
வேல்வீரர்மெச்சவென்று மிளிர்வேனே
வீயாவினுக்குமிஞ்சு மோர்வாகனத்திவர்ந்து
மேலோர்துதிக்கவென்று வருவாயோ

கோவாகுமத்தியொன்று வாழ்வான்வனத்திலன்று
கூவாமுனுற்றுவந்த பெரியோனே
கோடாதபத்திகொண்டு ளார்நாடுறிற்றுணிந்து
கோமாளிவித்தையுஞ்செய் குணமாலே

காவாளுமற்பொலிந்த வாஞ்ஞேரிறைக்கிசைந்த
காரேழுமவெட்கமிஞ்சு மெழிலோனே
காமாயுதக்கண்மங்கை மாராடுமெற்பிறங்கு
காவேரியுட்கிடந்த பெருமாளே. (௬௭)

தனனதன தநதந தனந தானன—தன தான

பதுமமிசை யென்றுஞ்சிறந்தேமறை
மொழிதருவி ரிஞ்சன்செயுஞ்சீர்பெறு
பலவுடலு ளொன்றும்பொருந்தாவுயு முதல்வீடே
பயமெனவு ணர்ந்தங்கசன்சேனையை
வழிபடுகு றும்புந்தவிர்ந்தேபழி
படுசமயர் வம்புந்துறந்தேயுனை மறவாதே

பொதுநிலையி னின்றெம்பரும்பேணியா
திருவருள டைந்தண்டருங்காமுறு
புகழ்பெறமு யன்றிங்குநொந்தேனிது — தெரியாதோ
புளியிடைபு குந்துய்ந்தவன்றொடாழ
மதுரகவி தன்பண்புவிண்டோர்பலர்
புகலிசைவ ழங்கிநதிரன்போகமும — விழையேனோ

மதுகயிட வன்றிண்டிறந்தேவர்க
டுயரொடுநொ றுங்கும்பெரும்போர்புரி
மலையுறழ்பு யங்கொண்ட சங்காழியொ — டவிர்வானே
மழிசையதி பன்றொண்டுகந்தாயிகழ்
கணிவணன கங்கொண்டுவந்தாய்பற்
மழுவணித ருஞ்சங்கான்போல்பவா — தொழுநேயா

வதுலவிரு கந்தன்சடந்தோய்ந்தர
வொருபெரிய கம்பந்தருஞ்சேயென
வரைநொடியில் வந்தங்குழுஞ்சேய்துயர் — களைவானே
யாரிமித வஞ்சம்புனைந்தோனென
விகழினும்வ ரந்தந்துசந்தோடமொ
டழகியவ ரங்கம்புரந்தாடல்செய் — பெருமாளே. (கூஅ)

தானன தாத்ததன தாந்தத தனந்த—தனதான.

நானாதுவேட்கைபல நோய்ந்திட்டுநொந்த — தறியாயோ
நாடாதபோர்க்குழுண வந்துற்றசெங்கை — யினனாரோ
வீணாள்படாததவசில் வாய்ந்தபட்டெளிந்த — பலரோடே
மேவார்வம்வாய்த்துனடி சேர்ந்துட்பிறங்க — வருள்வாயே
யானாதியாத்திகழு மூன்றுக்கிலங்கந்த — நெடுமாலே
யானைகீர்த்தியொடு சாந்தக்குணங்கொள் — பவர்தேவே
கானாதகாட்சியடி போனபெற்றவந்தை — புணர்கோவே
காவேரியாற்றிலொரு பாமபிற்றுயிலை — பெருமாளே. (கூகூ)

தனதன தானன தனதன தானன
தனதன தானன தனதன தானன
தத்தன தானன தந்தன தானன
தததன தானன தந்தன தானன—தனதான.

அறிவனுவேனுமில் கயவர்கள்வாயிலில
விழைதருமாடக முதவுவரேயெனு
நட்பொடுபோய்மத னன்குமரேசன
நுசகுனன்வீமனெ னும்புலவோர்களு

மூலகினிலாவதை யதுதினமேவிடு
கொடுமையைநாடியு மதுகெடுமாறமு
யற்சிசெயாதுத மின்பமதேகரு
தித்தளர்வுடமு றுந்தவரோகரு
மளவில்சராசர முழுமையுமீனிய
வொருவனுளானெனு நினைவிலராயணி
கைப்படையாதிவ ளம்புகழ்காவலை
னைத்தொழுதார்வமு றும்பல்நியருறும வெருளாரோ

வவனசையாவிடி லனுவசையாதெனு
மொருமொழியேகுறி யெனமிகநாடியெ
ழுத்திருநாலுமொ ழிந்துசுபாவநி
லைக்கணைநேரமு றும்பெரியோர்களு
மதுரையில்வாழுடல் வழுதியர்கோனரண்
மனைமுதல்வாயிலி னிலவியதோர்கிழி
யற்றுடனேவிழ வுநதமிழ்பாடின
னைப்பவர்சீர்கரு துங்கவிவாணரு
மகிலமெலாமொரு குடையிடையாள்செய
லமையினுநாமுமொ ருயிரெனவேயுணா
புத்திவிலாசமு றுஞசிலராசரை
மெச்சும்விவேகம முங்கலூரர்களு மகிழாரோ

மறிமழுவோடணி தருகைமயேசனு
மலர்மிசையோகுடி யெனவளாவேதனும
வச்சிரவேல்கொடு குன்றடுமீளியு
மற்றவனூர்மரு வுமபலதேவரு
மனைதருபாலமு தையும்விழையாதொரு
புளியிடைபோய்வதி தருசடகோபனு
மொத்தவராவுல களுசொலுமாறுத
மிழ்க்கவிபாடிய வொன்பதுபேர்களு
மடமறுகோதைம துரகவியாதிய
புலவர்குழாமுநி னடியரெனுமொழி
யத்தகுசீலர்க ளென்றனைவேறுமெ
றிக்கொடியோனென விண்டிகழாநல முறுமாறே

மரகதமால்வரை யொருபவளாசல
மதன்மிசையேறிமுன் வரும்விதமேயென
விட்புலவாணரை வென்றமுநாளமு
தக்கடமோடு'திரும்பியதாமொரு
பறவையின்மீதெழு கடலுடைசூழ்தரு
புவிமினும்வாரிச மலர்தன்மேல்வளர்

பொற்கொடிதானும ருங்குறமாதவர்
பற்பலகோடிவ ளைந்தரிகியெனை
மணவெளியூடொரு கனவினிலாவிய
வலையவமாடைபொ னணிமுதலாவன
முற்றும்விடாதில கும்படிசேவைகொ
டுத்திருதாள்களை யுநதலைமீதினி தணிவாயே

புரியினெய்பாறுயிர் பருகியசோசமு
முரலொடுபோயிரு மருதமொண்மையும
வெற்பதனுமெழு கொண்டல்பெய்மாரிவி
லக்கியுமாயரு டன்பசுவாழல்செய்
வலிமையுமாடர வதன்மிசையாடிய
பெருமையுமாமன துயிர்கவர்நீதியு
மக்கொடியோன்விடு குஞ்சரமாயம
ருப்பதன்வேர்களை யுநதனிவீரமு
முபநிடதாதிய பலகலையோதரு
மநுபவசாரம தனையொருபோடியி
டததிலொனூர்கணை ருங்கியபோரின்மு
கப்பினிலோதிய விந்தையுநாடுநா துணையாவாய்

வுததியினீர்முழு தறவடுசாயக
மழைபொழிகார்புரை சிலைவிராகவ
பற்பொலிவாய்மக ரந்தனிலேறியு
வப்புறுசீர்வரு ணன்றொழுநாயக
சனகிதனதுள மறுகிடுநீசைசெ
யிருபதுதோளொரு பதுமுடிராவண
னுக்கெமனுகும ரம்பெறுமாரத
சத்தியசீலர்த நெஞ்சகலாதவ
வொளிவிடுமாமணி யணிபுனைமார்பமை
துளவொடுமாமக ளமர்விபனுடுநா
சித்தியெலாமுழு ணர்ந்தினிவேறுபி
றப்பின்மெய்விடு குமபெருவாழ்வுற வருள்வோனே

பறிதலைநாறிய சமணர்களாமவ
ரவசெயமாகவெ லவில்விடாதுபல
செக்கிடைபோடும வன்றனியானைந
டத்துநரேவல்செ யுங்கருணாகர
வரிபுரியோசைமல் கிடுமிருதாள்கொளு
மயில்புரைமோகினி யுருவுகொடாடிய
வெற்றியைநாளும்வி ளம்பவலாரது
சுற்றமும்வாழந லமபுரிமாதவ

பகவமுராசுர னுயிர்கவர்சேவக
விரணியனோடவ னிளவலுமாயவ
தைத்தவகோரசெ யம்புனைநாரண
முற்றுமொரேவடி வென்றவிர்பூரண நெடுமாலே

பழுதறுகாவிரி நதிநடுவோரெழு
மதிளுடையோடுபல் சிகரிகுலாவுற
வுற்றிமையாதக னும்பருமாசற
முத்தியினைசமி குந்தவசிலரு
மருமறைநூல்விதி முழுதுணர்சீர்திகழ்
பனவர்களாகிய வருணர்களுல்வரு
மொய்த்ததறமாவன மிஞுசிநிசாசரர்
சித்தமுநாணிந டுங்குறுபேரிசை
படர்தரவான்வளர் தருவினமோடள
வியபொழில்சூழ்தர நிலவியெனோர்சிறு
பத்தர்கள்பாடல்க ளுங்கொடுவாழும
கத்துவசீடிபா ரகமவிடாதமரு பெருமாளே. (௱)

முற்றிற்று.

ஆ செய்யுள் ௯௱.௮.

தெய்வமேதுணை.

---

## திருவரங்கத்தொருவன் வகுப்பு.

தனன தநதத — தனதன.

பரிதியொண்சக் கரமுமவெனறிப பணிலமுநமக்காட டிருமால
பவளவநதச சிறையுறம்புட் பரியினண்புற றுலவுமேகா
பரவுதொண்டர்க் குதவுசிநதைப் பசியகுன்றிற் குலவுதே
பசுவினங்கட் குவகைபொங்கப பருவதங்கைக் கொளுநம்வலோ

னிருளுடம்புத் தகுவர்தங்கட் கெமனெனுனு,சொற் புகழுளா
னிபமனந்தட் டழியுமங்குற் றிகலிடங்கர்ச செறுபிரா
னிரணியன்கட் டுடல்பிளந்திட் டினியமைந்தற் கருள்செய்தோ
னெறுழியென்றிப் புவியிடம்புக் கிணையில்வண்டர்க கொழுமமா

னருவமும்பொற் புருவமுநதற் கநீயம்பெற றுளமுனோ
னகிலமுண்டிட் டுமிழும்விநதைக் கழகியன்சத துவம்விடா
னறம்விளங்கிப் பிறிதுமங்கற களவிலங்கத துறநலோ
னமரர்தங்கட் கிடையினின்றெய்ப பறுமருநதைப் படிரொர்தாய

தெருளுமன்பர்க் கினியனெண்கட் சிறுவனுந்தித் தலைசெய்கார்.
சிவன்வணங்கிப் பகமதென்சிற் கிறிகொங்கிப் பணிகொடான்

## பெரிய பெருமாள் வகுப்பு.

---

தனனதான நானதன—தனனதனதானா.

அளவறுசராசரமு முதவவலவேதியனை
    யலர்கமல நாபியின்மு    னருளியபிரானே
  வரவொடுநிலாவுமணி தருசடைமயேசனிர
    வதுதவிருமாறதயை    புரிமகிமையானே
  வசலனிமியாவுமெளி தாவடும்வலாரியின
    தாசுநிலையாகவமர்    பொரும்வலிமையானே
  வமரர்குலம்வாழநிசி சரர்பலருமாயவென
    வலைதருபயோததியின்    மலையைநடுவானே
  வபரிமிதமோகமொடு சிவன்முதலினோர்பலரு
    மடிதொழவொர்மோகினியி    னெனவுலவினானே
  வரியதிருமாதுமகல் புவிமகளுமார்வமுட
    னடிவருடவேநெடிது    துயில்புரிகுவானே
  வதிரதமகாரதரும் வெருளமலர்வாளிகள்கொ
    டமர்புரியுமாரனைநல்    கியவுவகையானே
  வகளசகளாநுபவ முடையமுழுயோகியர்க
    ளறிவிலறிவாநிலவு    பொதுநிலையுளானே ()

பளபளபளீரெனமி கொளிகலுழுமாழியொடு
    பணிலமுறுதோளின்மிசை    துளவுமணிவானே
  பதமலரைநாளுநினை தருமொருவன்வாழுதிர்
    பகலினிடைகாரிரவு    வரவுமருள்வானே
  பழுதறுதுரோபதிமி னணிகலைகொள்வான்முயல்சில்
    பதிதர்கிளையோடுகெட    விரதம்விடுவானே
  பசுநிரையெலாமுநிலை பெறவிடையராரவமொடு
    பரவமலையர்னகுடை    கரமிசைகொள்வானே
  பறிதலைகொள்சாரணர்கண் முதலியபொலார்களுயிர்
    பதறவெதிராசன்மன    மலரிலமர்வானே
  பழையமனுநீதிமுறை தவறியவிராசர்பலர்
    படுகளமெலாநிறைய    வளையொலிசெய்தானே

படிறறுமகாபலித னெதிர்பிருகுசேயொர்விழி
　பரவொளியிலாதுநொடி யிடைகெடல்செய்தானே
பதுமநிகராகுமிரு சரணமலரானெடிய
　படியுமகல்வானகமு மளவிடும்வலானே. ()

தளர்நடைகொள்பாலனுரு வொடுகுலவுநாளுமிளிர்
　தரளநகைமாதர்பலர் கலவிமுயல்வானே
தவறுதலுறுதுநிலை பெறுபிரமசாரிவிர
　தமுமெனதெனவொர்மக வுயிருதவினானே
தனதடியர்சேகரம தனைபவனநாளுரைசெய்
　தமிழினொடுபோய்வருமொர் புகழ்புனைகுவானே
தவளமலிகோடுபெறு களிறுதிரையோலமிடு
　தடமதனின்மூலமென வுடனிலவினானே
தனையுதவுதாதையொடு பகைசெய்ததிவாதையுறு
　தனையனுயுமாறுநர கரியில்வருவானே
சதுமுகவனூல்கள்கொடு கடலினிடைபோகுமொரு
　தகுவனுயிர்மாயவொரு கயலிலவிர்வானே
சபையினிடைநேரிலிகழ் தருகொடியபாவியுயிர்
　சாதகதிசேரவரு ளியகருணையானே
சகடுபகமூதலகை மருதுமுதலாயபகை
　தடியும்வகையோதின்மன மிகவுமகிழ்வானே. ()

விளமையுறுபாவலவர் பலபலநிலாவிகளி
　லெழுதிநெடுநாளிவிடு கவியுமணிவானே
விபுதுரகமாதியிவர் தருமாசாதியரை
　யெளியகொதுகாநினையு மவர்களுறவானே
வெனதுனதெனுவிகலி வெகுளுமதவாதரிவ
　ணிவளிதெனவோதுநிலை முழுதுமுடையானே
விரலைபிறகோர்நெடிய சிலையினொடுபோனகதை
　யினைமொழிகுவார்தமி ர் முழுதுமடுவானே
விடியனையவோசைதரு மசுரர்குலமீளியர்ந
　வெவரையும்விடாதுகொல வெனமுடுகுவானே
விதிகளுடனுடைவிடு மவனுமவெருவாகநுவ
　லிசைகொடுகுலாவுமர கதவடிவினானே
விகழுமதிகோரகுண முடையவெனதோர்கனவி
　லிமையவரெலாமறிய . வருமருமையானே
வெழில்வளவனுடதனி லொழுகுமுதுகாவிரியி
　னிடைநிலவுகோயில்வளர் பெரியபெருமானே. (௬௮௨)

# காவற்காரன் வகுப்பு.

தனனதன தனனதன—தானத்தானன.

மலர்கமலமிசைகுலவு பிரமனுவலியகடவுண்
 மறைமுடிவிலறுதினமும் வாசக்காரனும்
வடமொழிதென்மொழிவடுகு முதலியபல்கலைகள்கொடு
 வனைதருபல்புலவர்கவி மாலைக்காரனும்
வனசமுதவியதிருவு நறியதுளசியுமணியு
 மலிபணியுமருவுமகன் மார்பக்காரனும்
மறியுமலையொடுகுலவு பெரியகடல்குமுறியழ
 வடிகொள்கணைமழைபொழியும் வார்விற்காரனு
மதுவுமமுதமுமனைய மொழிகள்பகர்தருபொதுவ
 மகளிர்மனைதொறுமிலகு மாயக்காரனும்
வழிபடுமெயடியவரை யிகழுமவர்குடிமுழுது
 மடியும்வகைபுரியுமதி மானக்காரனு
மனிதர்வடிவலதுசில மிருகவடிவுமமரர்
 மகிழவுலகிடைகொடொளிர் மாயைக்காரனு
மடமையறுமெதிபதிதன் மனவெளியின்மருவியிகன்
 மலிசமணரெதிர்நனிசெய் வாதக்காரனு ()

மிலகுநவமணிமுடிகொ ளரசர்பலர்கெடவொர்சில
 ரிகபரமெய்திடவருளு நேயக்காரனு
மெமனையமுதலையதன் வசமறுகிமிகநினையு
 மிபவரசினெதிர்நிலவும் வாரக்காரனு
மிமையவரும்வயிறெரிய வொருவனிதைகலையுரியு
 மிழிகுணமனவரையடு கோபக்காரனு
மிருடியர்கண்மகிழநிசி சரர்வெருளமனைவியொடு
 மிளவலொடுமிடுதவசு வேடக்காரனு
மெரிகெழுவும்வனமதனி லுறுசிலைபெணுருவமுட
 னெழவொர்சிறுதுகளுதவு பாதக்காரனு
மிருபதுவல்வரையனைய புயனொருபதணிமுடியு
 மினமுமறவெனமுனிடு சேதுக்காரனு
மிகலவர்முன்வெருளுமவ னெனவுளறுநரனுணர
 வினிதுபகர்தருபரம ஞானக்காரனு
மிணையிறவவலிமைகொடு தணையுதவுமவடமைய
 னிடர்செயமுன்விடுகரிகொ லாண்மைக்காரனு ()

முலவரியமலங்கள முறிவுபடுதவமுயலு
 முணர்வினர்களொடுதிரியும் வேலைக்காரனு
முரககணமுழுதும்வழி படநிலவுமாசதென

வுபசிட்டதமுரைசெய்முது பாயற்காரனு
முசிதமறிகிலர்மனையி னுழைதருபுலமிஞர்களை
யொருசிறிதும்விழைதலறு நீதிக்காரனு
முலகமுழுமையும்வெருள மகபதிசொல்வழிமழைபெய்
தருமுமுகில்களைவெலுமு பாயக்காரனு
முரிமையொடுதினமுமியல் கொடுதுதிசெய்திடுபுலவ
ருறுகண்மறைவுறவெழுந லோகைக்காரனு
முகமுடிவில்வருபெரிய பிரளயமதனிலொர்வட
முறுதளிரின்மிசையமும்வி ஞேதக்காரனு
முயிர்முழுதுமவைபுரியும்வினைமுழுதுமிகவகலு
முளமலரிலெளிதுணரு மியோகக்காரனு
முமைகொழுநன்விதிமுறையில் வழிபடலுமழகியத
னுடலினிடமுறவருள்சி னேகக்காரனு ()

மலகில்பழவினைமுழுது நசியமிகுமுவகைவர
வருளிலடியவரைவிடு பாரவைக்காரனு
மபரிமிதமதுரமொழு கியகவிசொலொருபுலவ
னடியினதுபிறகுசெலு மார்வக்காரனு
மரவினினமுழுதும்வெருவுறுதொனிசெய்கலுழனுரு
வமையவெழுதியகொடிகொள் வீரக்காரனு
மதுவிதுபொய்நிசமெனவெ ணரிபகலைவழியிகலு
மசடரறிவரியவிளை யாடற்காரனு
மகளமொடுசகளமுமொர் பொருளினியல்பெனவுணரு
மதுலர்களைவிழையுமதி யாசைக்காரனு
மருணெறியிலிசையுமவ ரொடுமிகலுமவர்செய்தவ
மதனின்மகிழ்வனுமிலகு ரூரக்காரனு
மமைவனமதனில்வருமொர சிறுவன்மனவெளியிலவலி
தனுகிமிருகவிகவரு மோசக்காரனு
மடல்வளவனதுகுடையி லொழுகுநதியிடைமருவி
யளவில்புவனமுமருளொர் காவற்காரனே. (௬அ௩)

## பசுநிரைக்காவலன் வகுப்பு.

தனதனத் தனதனத்—தனதனத தானதன.

அருமறைத்திரளைமுற் றருமலர்ப்பிரமனுக்
கனையெனத்தகுபுகழ்ப் பொலிவுடைக்காரணனு
மகிலமதனையுமுட் கொடுவிடுத்துயிர்களுக்
கரியதுய்ப்புடனுறக கமுமளித்தாள்பவனு

மதிரொலித்தமிழ்மொழிச் சுவையொரெட்டுணையுமற்
றதியுவப்புறுமவர்க் கருளளிக்காதவனு
மகாமுற்படுபொறித் திரள்களத்தனையினுக்
காசெனத்தருமொரெட் டிடைகுதித்தாடுநனு ()

முருள்விழிக்கருநிறத் தலைகைபற்பலவொடுற்
றுளமுவப்பவனுநச் சியகழற்றுளினனு
முலகினைத்தனதெழிற் குடையுள்வைப்பவர்களுக்
குளம்வெருக்கொளவுறக் கிடுமடற்சேவகனு
முதிரமைக்கடலினுற் றதனிறத்தினையொளித்
தொளிரமற்றருவமைப் பொருமுனைச்சாயகனு
முறியினிற்றயிர்வெணெய்த திரானைத்தையுமெடுத்
தொருவயிற்றினிலடைத திடுமிடைபாலகனு

மிருபிறப்புறுகுலப புலவன்மெய்த்தவசதோத
திலகுபொற்கொடிகழித திடுமலர்க்காசையனு
மிருநிதிக்கிழவனைப பொருசெருக்கினர்முனுற்
றிடைவுறச்சுடுகனற் கலியறச்சாடுநனு
மிதயமதயிலருட் டகைமைபற்றவர்சபைக்
கிடைநினைத்தவளுடைக் கலைமிகப்பேணினனு
மிபவினத்தாசுதட் டழிவுமுற்றனுமழைத
திடுகணத்தினிலளித் திடவனத்தேகினனு

மொருதனிக்கடவுள்சக் கரமொடுற்றிடுநிசத
துறுதிபைப்பகர்குருக கனைபெடுத்தார்பவனு
முராகருக்கரசென்மெய்த் திருவுருததனைவிடுத்
துலகினுற்றிடுமுனிக் குவலைமிக்கீபவனு
மொலியுடைக்கழைவனத தொருசிறுக்கனையிழுத
துயர்திருப்புகழ்வகுப புறுதிருத்தோளினனு
மொளிசெய்பொற்புனனதிக் கிடையினுற்றவனுநட
புரியசத்துவகுணப பசுநிரைக்காவலனே. (௯௮௪)

## அருள் வகுப்பு.

தானதன —தனன.

ஆழாழிகள்சூழேழ்கலை யாமேதகு புவியு
மாளுமுகிலோவாதுல வாகாயமெய் துலகு
மாலாலமருவாயின ராள்சீர்திகழ் பிலமு
மாண்வேழமுளாளுதிய ராநாலிரு திசையு

மாவேசவிழாவேடுவ ராலேர்செய்பல் வரையு
மானுயர்களோடார்வமெய் தாவாழ்வுறு கடமு
மாபாசமகாபாதக ரானார்கனல் வனமு
மாசேதுமிலாதேவள ராரூர்பல நகரு

மீழாதியர்தாமேமகி ழீடார்தரு கழியு
மேம்மாவுறுதேர்மீதினி தேகாவரு கதிரு
மேயாதியனார்மூலமெ னாநூல்பகர் மதியு
மியாரானுமெணாவாறொளி யேவீசுப வுடுவு
மேடாயிரமார்பூமிசை யேவாழ்சது முகனு
மேடேதமிலாவான்மணி யேய்தோளெழி னலமு
மேகாதசமாரூபமொ டீறேசெயு மானு
மீமாதிபனேர்வாதுசெய் தேயாடிய பரையு

மூழாமதைநாடாதற மோவாதுசெய் பவரு
மோர்காலமுமாறாநிசை யோதார்வமெய் தினரு
மோடாதனவால்வேள்விசெய் தூறீர்மறை யவரு
மூடாதுபன்மானார்முலை யூர்தோளிறை யவரு
மூர்வேடுவர்போலாதியல் போர்வாணிபர் குழுவு
மூகாதிபாராவேர்முய லோகோததி யவரு
மூனார்தவில்பாணாவல ஞேடோதிழி குலரு
மோடாதியவால்வீடுதொ றாணேகவர் தவரும்

வாழாணைகளூடொடறு மாவாரண முகனு
மாயூரமொடாடானையொன் மாவாகன குசனும்
வானூர்தனியாள்வானணி மாநாறுணு மவனு
மாயாதமுதேயார்தரு மாணாரிமை யவரு
மாநாணிவிலோடேவரு மானார்படை மதனு
மாடாடுகொல்வோர்மேல்வெகுள் வாராமுனி வரரும்
வாள்வீரரொடேனோர்களு மாயாமிசை முழுதும்
வார்காவிரிநாராயண மாலோனருள் வளமே. (௬௮௫)

---

## திருவரங்க நாராயணன் வகுப்பு.

---

தந்ததன தந்ததன—தந்தன தானதன.

அம்புவியிரைந்தபுனல் வெம்புகனன்மிஞ்சும்வளி
யந்தரமெனும்பெயர்கொ ளைந்துபூதாதிபனு
மண்டமொடுபிண்டமுழு துந்தனிநிறைந்தவைய
ருந்தியுமுமிழ்ந்துமரு ளுந்தயாபூரணனு

மஞ்சொன்மடமங்கையர்கு லந்தொழவருந்திருமி
னம்பொன்மணிபைந்துளவ விர்ந்தசிர்மார்பினனு
மன்பர்பலருந்தொழமு ழங்குமறைதந்தவனை
யன்றுதவிடும்படிய லர்ந்தபூநாபியனு
மங்கதமுமென்புமத ளும்புனைதரும்பரம
னங்கைகொடிரந்ததலை மண்டையூணேவினனு
மங்குசமுடன்கயிறு கொண்டரியிவர்ந்துலவி
யன்றறம்வளர்ந்திடமு யன்றுளாள்சோதரனு
மஞ்சிலணியுங்குழன்ம டந்தையர்நெருங்கவரு
மங்கசனைமுன்றருபெ ரும்பிதாவானவனு
மங்கணுலகெங்கணும்வி ளங்குபல்பெருங்கலைய
றிந்தவர்களும்பரவு கின்றபாமாலையனும்

வம்புபடுகொங்கையுறு கொம்பைநிகரும்பொதுவ
மங்கையர்மனங்கவர்த ரும்பொலாமோகனும்
வன்புமலியுங்கணிவ ணன்சொலிடைவெம்புசினம்
வந்தொருவிதஞ்சொல்புல வன்பினேபோனவனு
மந்தரமெனும்பெரிய குன்றையொருவெண்கடலின்
மண்டமாரின்புறந டுஞ்சகாவானவனு
மந்திரமனந்தமுமு னந்தருமொரெண்பொறியின்
மஞ்சுறழநின்றுநட னஞ்செய்கோலாகலனு
மண்டலமும்விண்டலமு மன்றளவுசெஞ்சரண
வந்தனமொழிந்தவரை யென்றுமோவாதவனு
மஞ்சரிபுனைந்தபுய புங்கவர்குலந்தழைய
வண்சமர்தினந்தொழுமு யன்றதோணேவினனு
மந்திகளுடன்பலகு ரங்குகணெருங்கிடவ
னந்தனினடந்தலையி டஞ்செய்மாசேதினனும்
வண்டினமுரன்றடல தொங்கல்புனையுஞ்சனகி
வன்றுயர்தவிர்ந்துயவி லங்கைமீதேகினனு

நம்புமதியன்பரையி கழ்ந்திடுகுணுங்கருயிர்
நஞ்சநுகர்கெண்டையில முங்கவேசீறுநனு
நன்றணுவுமின்றியவர் புன்சபையிடங்கதறு
நங்கைவிரதம்பலித மொன்றவேநாடினனு
நன்குணர்தருந்தகவு றும்பெரியர்சிந்தையென
நண்டில்வளர்சந்திரனை நெஞ்சினுளீபவனு
நங்குமொழிவிண்டசில ரும்பதமுறும்படிமு
னந்தவில்பெருங்கருணை யொன்றலாளபனு
நன்செயின்வரம்பினில னந்துயில்வுறுங்குருகை
நம்பியுமொரொன்பதின்ம ருஞ்சொல்பேராண்மையனு

நன்றியறிகின்றிலர்நெ ருங்கியகளந்தனிலொர்
நந்தொலிதரும்பவள மென்றவாய்தோய்முகிலு
நந்தியெழுதுங்கொடிகொ ளுஞ்சிவனைநெஞ்சிலுனி
நண்பனிடுபைந்துணர்ப தங்கொண்மாதேசிகனு
நந்தன்மனையின்கண்வளர் மைந்தனெனவிண்டுதொழு
நந்தமரிளங்கவிக ளுங்கொள்பேராசையனும்

வெம்புகனகன்றனுதி ரம்பருகியண்டர்தல
மீண்டுபுகழ்கொண்டுமகிழ் கின்றமாவீரியனும்
விம்பமொடுகும்பமுநெ ருங்கமலர்சிந்தியபின்
வெண்புகையுடன்சுடரி டுங்கையாரேவலனும்
விந்தகிரிகுன்றவடர் கும்பமுனியும்பிறரும்
விண்டகலையின்றலைவி ளங்குஞானாகரனும்
வெந்தருமனஞ்சவட ருந்தகுவர்தங்களுயிர்
விண்பதிபுகும்படிபொ ருங்கதாபாணியனு
மிஞ்சுதிருடன்கபடன் வம்பனெனினுங்களிமி
குந்துரைசெய்கின்றவரு டன்குலாவாதரனு
மின்றிகழ்நெடுஞ்சடையு றுந்தவர்பயங்களையும்
விந்தைசெயுடம்புபல கொண்டதோர்மாதவனும்
விந்துவொளியென்றதுக டந்தவொலியுங்கெடவி
ரிந்தவெளியெங்கணுநி றைந்தசாதாரணனும்
விஞ்சையருடன்சொல்பதி னெண்கணமுமவந்துதொழும்
வென்றிகுலவுந்திருவ ரங்கநாராயணனே. (௯௮௯)

---

## கமலப்பிராட்டி வகுப்பு.

---

தனதத்த தனதத்த தனதத்த தாத்தன.

அலகற்றசமயத்தும் வெகுசத்திமையுற்றரு
ரலர்புட்பமிசைநித்தம் வளர்பொற்புநாச்சியா
ரகிலத்தின்மனிதர்க்கு முனிவர்க்குமமரர்க்கு
மசுரர்க்குமனைவர்க்கு முணவிட்டகாப்பினு
ளதிரத்தசலதிக்கண் முழுகிப்பனிமொக்கு
மலகைத்திரளுநித்த நவலுற்றமாட்சியா
ளருண்மிக்கதவர்கட்கு மதுரச்சொல்வலவர்க்கு
மரசர்க்குமவர்மெச்சும் வணிகர்க்குமேற்றதாய்

நிலநத்தியுழுதிட்ட பயிர்கட்குரியமக்க
ணினைவிற்குளும்விளக்க முறுமிக்கசீர்த்தியா
ணிலவுற்றசடிலத்தொ டுமைபக்கலமர்நட்ப
ணிகர்சித்தர்பலருக்கு மரணத்தைநீக்கினு

ணிகமப்பிரமனுக்கு மவனொத்தபுலவர்க்கு
நிறையுத்திதருசித்தி வழிபட்டவாற்றலா
ணிகழ்முத்தமிழளித்து மலயக்கிரியினுற்ற
நிசவித்தகன்விருப்ப மொடுசெப்புபாட்டினண்

மலமுப்பிணியறுக்க வலசுத்தநிலைதொட்ட
மவுனத்தலைவருக்கு மருள்வைகதுநோக்குவாண்
மறையிற்றுளசியிறபொ யிலர்சித்தமதிலத்தி
வதனத்தினில்வில்வததின் மருவுறறவேட்கையாண்
மருளிற்பாதவிக்கு மனதுட்கனவினுறறு
வலிதெற்குரைசெய்திட்ட மதுரிததவார்தையாள்
வகுளத்தொடையாலிட்டோர் புளியிற்புகுசமர்ததன்
வனைசொற்பனுவலிற்பல விசைசெபபுநீரப்பொன்மா

னுலகத்தனையுமொய்தத திருவததனையுமுறற
வுயிரததனையுநதது கருணைககண்வாய்ததுளா
ளுயர்வெற்பதனைநடடோர் பணிசுறறியுமதிதத
வுததிக்கிடையுதிதது மதனைபபெற்றிடு
ளுவணக்கொடியைமெசசு மவரைதமொழுதிரககு
முரிமைக்குரியாநதது மவைமுறறுமாக்குவா
ளுகளததிருநதிக்கு நடுவிற்றுயிலொருதத
னுரமுற்றெளிருமொபபில கமலைபபிராட்டியே. (கூஅ௦)

---

# பூமிதேவி வகுப்பு.

---

தானதன தானதன—தானதானதே.

ஆரணமுமாகமமு மாதியபடனுலினமு
மாசுபடாதுவளா தானமாகுவா
ளாசுரருமவானவரு மேசரியதாகுமணி
யாழிவகையானவெழு தானைபூணுவா
ளாரெவிதமானபிழை யாவனசெய்தாலுமவெகு
ளாதுகளிகூர்பொறுமை நீரிலீடிலா
ளாகுலமகோததியெ லாமவடியவாடலசெயு
மார்வமுடையாாவரவை நாளுநாடுவாள்

வாரணமுமாவுமக ரேருமிவாபோாவலிமை
மாரதரனேகர்முடி வீழலகாணுவாண்
மானமனுவேனுமில ராகியுமநீதிபுரி
வாரைவெனுமாசையுடை யாரையோவிடாள்

வாதமதமூடர்பல பேசழியவேணையவர்
மாறிலநுபூதிபெற வேவுபான்மையாள்
வாரிசமுனைபல பூவுமனநாணமுறும்
வாசமுடையாண்மழையி னுவநீர்கலாள்

காரணமதாயளவில் கோடிவிதமாயிலகு
காரியமுமீயுமதி காமமேவினாள்
காசுபணமேபொருளெ னுவிழைவுமூட மொரு
காலுமறியாதகுண சீலியானதாய்
காய்சினவலாரிபடை யாலசைவுதீர்மலைகள்
காமர்முலையாயருவி யாயபாலினாள்
காவிரிமுனைநதிய னேகமுமுடையாளருளில்
காதகர்களாகமதி பாரமாமெயாள்

பூரணசுகோதயம னோலயவிஞானகலர்
போதனையதாளுதவு தூளிதோய்குவாள்
பூவொடுநனீர்சிதற லாதியபல்சீர்குலவு
பூசைபுரிவார்கண்மிசை யாவணீடுவாள்
பூரியர்கள்கோலழியு மாறுமுயல்வாரையணி
பூடணமதாவிழையு நேயமேயுளாள்
போதாகுராமனிடம் வீடணன்முனாள்கொளரி
போகமொழியாதுமகிழ் பூமிதேவியே. (௯௮)

---

## கருடவாகன வகுப்பு.

---

தனனதன தானதன—தனதனதனா.

கடுவுமிழும்வாயரவ மணிதருசெமேனியொடு
கயிலைமலைநாதனென மிகவுலாவிடுமே
ககனநகர்வாழமரர் இடுகிடெனவேபொருது
கனவமுதமேயகுட மொடுமுன்மீள்வதுவே
கமலமலரோனுதவ வருமுதியகாசிபனோர்
கருணைமனையாம்வினதை புதல்வர்சேகரமே
கனலுமிழ்கணார்சரப முதலியனவானபல
ககமும்வழிபாடுசெய நிலவுபேரசே

புடுபதியுநாணமுறு தவளநிறமார்பிடரி
லொருகரியமேகநிகர் வடிவுதோய்வதுவே
புதநிரடுவேயிலகு மொருபெரியதீவினிடை
யுறைதகுவகோடிகளை நொடியிலார்வதுவே

யுபகிடதவேதியர்த மாபில்வருபாலகர்த
முயர்விவளவாகுமென வுணருநாவினதே
யுமைசொல்வசைபாலரனுள் விசனமொருவாறடைய
வுரியதிரிபாதமுனி வெருளவோவியதே

படுதுயரமீறியல மருமவரெலாமுவகை
பரவைநிகராவடைய வொலிசெய்வாயினதே
படியினெடுவானுமள வியசரணமானவிரு
பதுமமலர்வாசமரு வியகைமேருவதே
பருவாலனேகமொடி வுலகினிடைவாடெனது
பலகனவினூடுமில கியதயாநிதியே
பகடிவர்பொலாமறலி யினுமதிககோரமொடு
படர்விடமெலாநகிய முனியுமாண்மையதே

படுகொலைநிசாசரர்த மியமனையார்பலரு
மநுதினம்விடாதுபுகழ் கொடியில்வாழ்வதுவே
பரிகரியெனுமிகவு முறைசெய்முதுபாகவத
ரருமைமனமேயனைய பெருமைமீடுவதே
யாவகுலபூபதிசொ லினுமமைவுறுதபுக
ழதுகொடுசதாவுலக முழுதுமோடிடுமே
பணிமருவுகாவிரியி னடுவினுறங்காயிலதி
லறிதுயில்கொளாதியிவர் கருடவாகனமே. (கூஅக)

---

## அநுமனுறை தூதன் வகுப்பு.

---

தனன தான---தானனு.

தெளிவுளார்க ளறிவிலீடில் சிவனெனுநி லாவுதே
திசையெலாமு நொடியினூடு திரியும்வாயு வீனுசேய்
தினுமதாகு மெனமுனுள்க திரவன்மீதி லேகுகார்
தெருள்வியாக ரணவலார்கள் சிலர்பராவ நீடுகோ
சிகரிமோதும் வயிரவேல்கொள் செயவலாரி நாளுமே
திகழ்பொனூரி லமராய திரளுநாளு மோதுசீர்
செறிபன்மாதர் மயலுறாத திறமையோர்கள் பேணுதாய்
தினகராதி யவர்களோடு திறமதான வாழ்வினன்

வெளிவிடாது நிறைவதான விசுவரூப மாகுவான்
விதிகொளாத கொடியவாலி விசனமீற வோவினன்
வெருளுறாத விஜயராசன் விழையுமாறு கூடினன்
வெகுபல்கோடி வயாவர்கூறு மிடல்குலாவு தோளினன்

விலகுறும லுடையினுரு மிளிரவதான வாளினன்
வியனுருவொர் மலையிலேறி விரியுமவேலை தாவினன்
விறலினீடு தருவர்தானை மெலியவிய மோதினன்
விடிவுறுத விருளினோடு விடமானனை நூறினன்

வளிதனுது கலவியாசை மணவிபாலுண் வாயினன்
மணமருத தவளதாம வனிதைபோக மோகவான்
வகுளமாலை புனையுமாரன் வலிவெவீடு கேடுறன்
மறுவிலாத சனகியாமுன் மடிவுறுது நேர்செலவான்
மழையிலேறு மாசுபோர்வெல வயவன்வேளவி பாழ்செய்தான
மலைகொள்வாகொ ரிருபதாளன் மலையுநீதி பேசினன்
மயிர்கொறேவு கொடுபலவீரர் மறலியூரசெல போரசெய்தான
வழுவைபாயி லயாவினாரிளி மறுகமோது தீரவா

னளியவாவு கமலமாய வலரதேறு மோர்கையா
னவுடதாச லமுதலாகு மசலகோடி வீசின
னரிதனும மொழிகுவார்த மடியரேவும வேலையா
னதிகவீர மருவுபேடி யணிகொடேரின மேலுளா
னசரமோடு சரமுமீயு மாணிலவாழ நாடுவா
னளவிலாத வடிவனுகி யவிருமாய மீலையா
னழிவுறுத பரமஞான வறிவெனோடு கூறின
னனககாவி ரியினமாற னநாடனுண தூதனே. (௬௬)

---

## சக்கராயுத வகுப்பு

---

தததன தததன — ததகனுதனனு.

நசசரவுமதியுட னககமுமிகபபுனையு
நக்கனமுத லுததமாப டைகொராதரமே
நற்றவர்தமக்கெமனெ னததகுமரககாகண
சிததிடவொறுததிடுமி யறகைதோய்வதுவே
நசசியமறைதொகைவி திததவிதிகட்குமிகு
நட்டிகளவிளைப்பவாகெ டசெயரீமையாதே
நககெதிரிகறரிணமு ழுககவயரதகொணிசெய
நதகொடுதுணைக்கருவி யொதுவாழவதுவே ()

யிசசகமுமசசகமு முசசகமுமறறுமுள
வெசசகமுநிசசலுய ளிகுமேனமையுதே
யெடடியதுமவெட்கமிகு கைபபுறுமனததினிடை
யெடபுரையிரககமுமி றுட்டாநாடரிதே

யிக்குறம்சொல்விட்டமுனி கர்த்தமொழிசெப்புமுனி
யெப்படியுய்கிற்பலென — வச்சமீவதுவே
யெத்திசையினிற்கடவு ளர்க்குமாசர்க்குமுயி
ரிற்பெரிதெனத்திகழ்வி — ருப்பமாவதுவே ()

கச்சபமுமச்ச முநி கர்த்தவுருவத்துமொரு
கைத்தலமதிற்குலவு — ரட்புமேவியதே
கைசசிலைவிக்ருரிய னக்கினிவளாத்திடுக
ணதிவிணையற்றுயர்க — றப்புமாகியதே
கற்றவர்வியாகுமிர விக்கடவுளுற்றவிர்ப
கற்பொழிதிரொப்பறமி — ருட்டுமீருவதே
கததுமவசைபறபலா சாக்குமுனுரைததபத
கற்பொருவின்முததியில்வி — தெருமீள்வதுவே ()

யச்சமறுபத்தியின்மு ழுக்குறுமவாக்கறவு
மற்பர்கள்குலத்தடிய — றுக்குமாண்மையதே
யசசுதன்முதறகடவுள சததியமெனசசொலும
வாக்கினியமெய்ததுணைய — ருத்தமார்வதுவே
யற்புதமிகப்பொலிதி ருப்புகழ்வகுப்புரைசெ
யத்திநிகர்மெய்பபுலவர் — சிததநேர்வதுவே
யததநதிமததியார விற்றணிகிடக்குமரி
யக்கரமொரெட்டணைய — சக்கராயுதமே (கூகக)

---

## பாஞ்சசன்னிய வகுப்பு.

---

தநததன தநததன — தாநததன்னதனை.

அபபரமதனசுவொரு குன்றைநட லூநதிகழ
வநதாாருநதமுது — நாண்கொாவெண்மையதே
யருசலியுமவநதனமு மன்புமறிவுநகொளும
ருநதவாபெருநதகைமை — போனறவொண்மையதே
பண்டமுகடென்பனவொ ருங்குடைபடுநதினம
டைநதிடினுமங்கவணம — வாய்நதுமின்னுவதே
யண்டலாநெருங்கியக ளநதனினமுழங்கியவ
ரஞசிவசமின்றிவிழ — வோஙகுதன்மையதே ()

கும்பநிகர்கொங்கையுறு செநதிருமடநதையில
குங்களநிகர்நதவெழி — ரேயநதபுண்ணியமே
கொண்டன்முழுதுங்கடல்க ளுங்கிடுகிடென்றலைவு
கொண்டுதளரும்படிசெய் — மாண்புதன்னியதே

குஞ்சரமுரிந்தவத னொன்றணிபவன்செவிகொள்
குண்டலமிரைந்திணையு மீன்றவன்ணையதே
குங்குலமணங்கமழ்த லங்தொ றுமுழங்குபல
கும்பலுநினைந்துதொழ வான்றமன்னதுவே ()

யெம்பரிலுறுஞ்சதுர தங்கொள்வயபுங்கவரு
மெஞ்சியவர்சங்கையிகழ் பாங்குநண்ணியதே
யிந்திரன்மகன்றனது பங்கமொழியும்படியி
னைந்துவெகுமன்புதல்வ ரேங்கவுன்னியதே
யிண்டையணியுஞ்சிவன்வி ழைந்தபடியன்றமர
ரென்றவராகங்குலைய வேன்றுபன்னியதே
யெங்கடவுளுங்கடவு ளங்கவர்தொழுங்கடவு
ளென்றிகலும்வம்பரிகழ் தீங்குமுண்ணுவதே ()

பம்பரமெனுந்தனமு றும்பொதுவமங்கையர்கள்
பந்தமுறவந்துவளர் ஞான்றவண்வருமே
பைங்கிளியெனுங்கவுரி யன்பிணையுவந்துமுது
பண்டணைவதஞ்செய்தின மேய்ந்தநன்மையதே
பஞ்சவரிடும்பணிசெய் கின்றமுகிலென்று நுவல்
பண்பினர்தவம்புரைய நீண்டகண்ணியமே
பம்புபொனியன்றநதியின்றலை துயின்றவரி
பங்கயகரம்புனைபொர் பாஞ்சசன்னியமே. (௬௬௨)

## கதாயுத வகுப்பு.

---

தனன தன தான தன—தன தன தன.

நடலைமலிதீயகுண முடையகொடியோர்கள்வரை
நவில்பலபன்மாணிடரு மிகழ்கலாததுவே
நளினமலர்மீதுவளர் பிரமனொடும்வேதியனு
நனுகுபலமாதவரும் விழையுமேன்மையதே
நகமுகடுதோறுநட மிடுகுமரவேடனதி
நயவிடனிலேகுபொழு தினும்விடாததுவே
நரைவிடையினொடுமுமை தவசுபுரிசாலையிடை
நகுகபடவேடமொடு செலிலவாவியதே ()

கடகரியைநேர்மறலி புனைகதையிணுலடியர்
கவலையடையாதபடி வலையுமாண்மையதே
கனலுமிழ்கண்வாளவுணர் குலமுழுதுமாயமுது
கடவுளரெலாமகிழ நனிசெய்போரினதே

கடியமுதுகாடதனி னடுநிசியிலாடலபயில்
களியுறுபைசாசவின மடியமோதுவதே
கதறுபலகாளியுட னயமுநனிவாழுமுயல
கரியநிறவாயாகா மலாதொரூா தருமே ()

யிடாசெயிடிநாணுமவர மதுபெறுகிரீடியிவ
ரிரதமவிடுபோதுமுட னுறுசகாவதுவே
யிரவிதருசேய்தனிட மறமுழுது சீகவெனு
ரிரவலனிலேகுதகி பினுநிலாவியதே
யெழினமீனவிபோடுமக னொருமகிபனுகயவகி
ரிணையிலவிளையாடலபுரி தினமுமோவிலதே
யிளமகளைவாயமைமரிலை பெறவுகையமாருமவண
மிராணியனமுனேதிகமொழா பெரியதுாணனதே ()

யடலழகுதேசுமுத வியநலமெலாமருவி
யவிாதுளவமாலைபுனை புயமொடோதருமே
யலைதருபயோததிரி லோ நபெரியமாசுணமொ
டமுதமவருமாறுநா மலையைநோவதுவே
யறுவளவுமாபைகிரி வாநுவனுமாறனமொழி
யனையதுபொலவேவிளிபிலொா சிறுவனுவலதே
யருவிகருகாவிரிபி னடுவிலிமையாாபராவ
வமருநெடுமாலொா நனை யணிககாபுகமே (கூகூக)

---

## வாளாயுத வகுப்பு

---

தானன தானன — தானதனன

வேணிலனிழாமத வேளைமுறுளருநா
மேகருமாுக ணோாசிரினதே
வேலைகளாகிய சேர்கள்முடை
மேதினிமாறுத லேபோலவதுவே
விறுமயேசன தாாபுணாீநிற
வேணியிலவாழுபிறை நோகூனுளதே
வேதியனுதுகு மாசனுயவாளொரு
வேளையொாமாதவன மேலவீசியதே ()

காணிலுலாவுநி சாசரகோடிகள
காயகதிாநோபனி யாமாறடுமே
காசறுபாடலசொல வாாசளைபோகமவி
காதமுளாருபு சேடிவதுவே

காரணகாரிய மோருநலோர்கள்ச
காயமதாயவர்          போமாறுறுமே
காசினியோரயர் தீமைசெய்தேமகிழ்
காவலராருயி          ரேயார்தருமே ()

யானினமானத னூனுகர்வாரையெ
ளார்கள்செநீரினு          மாடூடுளதே
யாரணன்மான்மக னேயெனுமோர்மையி
லாதசிறுமறி          யாவீறுளதே
யாயிரகோடிக ளாம்வடிவாயடி
யார்கள்கைதோறுநி          லாவாண்மையதே
யாதியநாதியெ னுனிகல்வாதம
றுதபொலார்பல          பேரேசுவதே ()

நானிலமீதுசின் மானிடராவரு
நாளினும்வார்கர          மேல்வாழ்வதுவே
நானதுவேயென வாய்கொடுகூறுபொய்
ஞானிகடேவினை          தீராததுவே
நாசமிலாமுதல் வீடுறுமோர்பது
நாவலர்பாடல்சொன்          மாணூர்வதுவே
நாகர்பிரான்மிசை காவிரியூடமர்
நாரணனூர்கதிர்          வாளாயுதமே. (௬௬௪)

---

## கோதண்ட வகுப்பு

---

தானந்தனத்—தானந்தனா.

ஆனைந்தருக் காடொன்றுபொற் பாகண்டலர்க்          கோர்தஞ்சமே
யானந்தமூற் றோர்சிந்தையொப் பாவென்றியற்          கூனென்றுமே
யாழம்பரத் தேதங்குமொட் டார்புண்படக்          கோல்சிந்துமே
யானுண்பவர்ச் சாடுந்திறத் தார்வம்படைத்          தோர்நம்பலே ()

காளந்தனைப் போலுந்துடற் காலன்றனுற்          றூர்நஞ்சதே
காய்வெஞ்சினத் தீரைந்தலைக் காரன்றன்விற்          போர்வென்றதே
காதுந்தொழிற் பூவம்புடைக் காமன்சிலைக்          கோர்தந்தையே
காரண்டமற் கோள்வென்றசொற் காணுஞ்சிலைக்          கோர்குஞ்சதே ()

தாளொன்றுபொற் பூமங்களத் தாய்தன்குளச்          சீர்துன்றுமே
தார்தங்கணித் தோண்மொய்ம்பர்விற் சாலந்தொழற்          காம்வன்பதே
தாழ்செஞ்சடைப் பேரன்கொள்கற் சாபப்பழிக்          காநண்பதே
தாலந்தனைச் சூழுங்கடற் சாருங்கைதொட்          டிகின்றதே ()

தேளுஞ்சகிக் காவன் றுணைத் தீநெஞ்சருட் ஞூர்தந்ததே
தேடுந்தவத் தோர்தங்கண்முற் றீதொன்றுமுற் போமன்பதே
சீலங்கொள்பத் தாகுந்தொகைச் சீரன்பர்சொற் பாவிண்டதே
சீரங்கமுற் றுளுந்தனித் தேவன்கையிற் கோதண்டமே. (௯௯)

---

## திருநாம வகுப்பு.

---

தான தந்தன — தானனா.

வேதமும்பல வாகமங்களு மீறவிண்டன வாகுமே
மேனிலந்தனில் வாழுமண்டரும் வீழுகின்றவி சேடமே
வேள்விநம்புபொய் வாதருஞ்சில வேளையன்பொடு பேசலே
வேகவெம்பக டேறிவந்திடும் வீரனஞ்சிட வோவுமே
வீடணன்றனை நேருமன்பர்கள் வேணபண்புற வாளுமே
வேலையுண்டவ னோர்பெருந்தவர் வீறுசிந்தைய ளாவுமே
வேனிலங்கணை மாரனன்பர்வி ழாவினுஞ்சில கூடுமே
வேழவண்குரு கூரில்வந்தவி சாகன்முன்சிலர் பாடலே ()

காதளந்தக னார்வெலுங்கலி காலமும்பய னீயுமே
காணமன்றியொர் தேவுமின்றெனவி காதர்சிந்தைபு காதவே
கானடைந்தரு மாதவம்புரி காதலன்பர்கள் வேலியே
காணரும்பல வாயவெம்பல காரணஞ்சுடு தீபமே
காதியுண்டுடல் பேணும்வண்டர்கள் காதினும்புகு தாதவே
காழியின்கணோர் பாவலன்பல காலும்விண்டுய மூலமே
காசிலந்தண சீலரும்பல காவிநண்பரு மாள்பவே
காரிபந்தெரி யாதவம்பர்சொல் காதையும்புகு தீரவே ()

ஈதனன்றென வோதினுஞ்சின மேறுநெஞ்சினர் தூரமே
யாதருந்தினு நாறுபங்குமி டுதுன்றினர் நேயமே
யேகமென்றும னேகமென்றுமெ ணாதியம்பினு மேயுமே
ஈசனன்றுத னாதுபங்கம ரேழையின்புற வோதலே
யானையொன்றொரு போதுவிண்டுக வீடுவென்றதுள் வாழுமே
ஈனவெஞ்சின வாடகன்றன்மு னேமகன்சொன தேகமே
ஈரமின்றிய பாதகன்சபை யேயொர்பெண்கொள்ச காயமே
யானெனுஞ்சொல்வி ளாதபண்பின ரியாவருங்கொளும் வாரமே ()

யாதவன்குளிர் சோமனங்கிய னார்களும்புகழ் சோதியே
யாவியுய்ந்திட நாடுகின்றவ ரார்மருந்துகள் போல்பவே
யாகுலந்தவி ராதநெஞ்சமு ளார்நினைந்தறி யாதவே
யாரணஞ்சுவை பாகனிந்திர னுள்பதங்களு தீபவே

யாலிடந்துயில் கோலநெஞ்சினு ளூரினுஞ்சில ரோர்பவே
யாடல்வன்றிறன் மேயபஞ்சவ ராதியன்பர்வி டாதவே
யாசகன்றநெல் வேலியின்கணெ ராளனின்சொனி லாவுமே
யாறிரண்டிடை வாழரங்கர்த மாயிரந்திரு நாமமே (௬௬௬)

---

## அட்டாக்கர வகுப்பு.

---

தத்தத் தனதன—தத்தாத்தனனா.

அத்தத்தரிமையொ ழித்துத்துளசிய
ருச்சிப்பவர்கட மக்கேற்றமதே
யச்சப்பிணியது கெட்டுத்திரிகர
ணச்சுத்தமதுறு நட்போர்க்கினிதே
யற்பர்க்கிதமொழி செப்பித்தளர்துய
ரற்றுற்றவர்கவி கற்போர்க்குறவே
யத்திக்கருள்புரி வெற்றிப்புகழைய
டுத்துச்சொலுமவ ரைக்காப்பதுவே
யட்டைக்குழியில்வி ழுத்தக்கவர்கள
தட்டிப்பெரிதிகழ் சொற்கேட்பதுவே
யக்கத்தொடையொடு சுத்தப்பொடியணி
யத்தர்க்குவகைமி கச்சேர்ப்பதுவே
யச்சுப்பலபல்வி தத்திற்குலவவ
மைக்கத்தகுமய னுக்காக்கமதே
யப்புச்சொரிமலை கட்செற்றிடும்வயி
ரக்கைத்தலைவனு வப்பாக்குவதே ()

சித்தக்கணமொடு முத்தத்திரளும்வி
திச்சொற்படிபனு ருப்போட்டதுவே
செட்டுத்தொழின்முறை யைத்தொட்டறமிகழ்
சித்தச்சிதடர்நி னைக்காப்பொருளே
சிட்டர்க்குலகவ ழக்கற்றிடமிளிர்
செக்கர்ப்புரைதிரு வைக்காட்டிடுமே
தித்தித்திடும்விதி மெத்தப்பகர்தரு
செப்பச்சதுமறை கைக்கார்க்குயிரே
சிக்குப்படுபல்வி னைக்கட்டிடையுடல்
செத்துப்பிறவியெ டுக்கார்க்கரணே
சிற்றற்புதமதி யற்றிச்சையுமிலர்
சிட்சைப்படவிரு ளுட்போக்குவதே

சிக்கச்சிகியிற கைப்பற்றமணார்க
டிக்குத்தொறும்வெரு ளத்தாக்குவதே
செற்றுத்தினுமவ ருக்குச்சமனிகர்
செற்றத்தினரறை கொட்டாப்புளியே ()

பத்தத்தளவற முற்றிப்பணிபுரி
பத்தித்துறையினி டத்தாற்றலதே
பைக்கட்செவியுரு விட்டுற்றவனணி
பற்பத்தரும்வின வக்கூப்பிடதே
பச்சைப்புயலுறழ் பொற்புக்கருதினி
பத்துக்கடலொரு வச்சிரப்புணையே
பற்றப்படுமுயிர் சத்திக்கிலகடு
பக்குப்பவெனவு ளப்பார்க்கணையே
பற்றற்றவர்களி னத்திற்குலவிரு
பட்சத்தினிலுநி லப்பார்க்குளதே
பட்டுப்புடவையு டுத்துக்கருமப
லத்தைப்பெறமுயல் கிற்பார்க்கிலதே
பப்புக்கிரியையெ டுத்துப்பலபல்ப
சுக்கட்கதுசெயல் செப்பார்க்கிகலே
பட்டப்புகர்முக வெற்பிற்றிரிபவர்
பக்கத்துணையென நட்பார்க்கவமே ()

யெத்தத்துறினுநி னைக்கிற்றவிருமெ
னச்சத்தியர்பலர் முற்போற்றியதே
யிக்குச்சிலைமத னைப்பெற்றவளுமி
சைக்கத்தகுமரு மைப்பாக்கியமே
யெட்டுக்கரியின்ம ருப்புற்றிடுமா
னெய்க்கப்பொருமது மற்கூக்கமதே
யிட்டத்தொடுனனி செப்பத்துணிவுறி
லிச்சைப்படிமுடி யக்கூட்டுமதே
யெட்குட்செறிதயி லத்திற்பரவியி
ருக்கத்தகுநிலை யைக்காட்டிடுமே
யிக்கட்டுறும்வனி தைக்குக்கலைபல
விட்டிட்டவனலை யர்ச்சாப்பிடுமே
யெட்டிக்கனிநிகர் கைப்புக்குணமெய்தெ
னக்குட்சிலகன விற்றோற்றியதே
யெற்பொற்றிருநதி மத்தித்துயில்கொளி
றைக்குத்தனதெனு மட்டாக்கரமே. (௬௬௭)

# பாகவதர் வகுப்பு.

---

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனனதன தனனதன
தானதன தத்ததன தானதன தத்ததன
தானதன தத்ததன தானதன தத்ததன
தந்ததன தானதன தந்ததன தானதன
தந்ததன தானதன தந்ததன தானதன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தந்ததன தந்ததன தந்ததன தந்ததன
தத்தனத் தந்ததன தத்தனத் தந்ததன
தத்தனத் தந்ததன தத்தனத் தந்ததன
தனதனத் தத்ததன தனதனத் தத்ததன
தனதனத் தத்ததன தனதனத் தத்ததன
தந்தனத் தானதன தந்தனத் தானதன
தந்தனத் தானதன தந்தனத் தானதன
தத்தன தத்தன தத்தன தத்ததாந்தன
தத்தன தத்தன தத்தன தத்ததாந்தன
தந்தன தந்தன தந்தன தந்ததய்யன
தந்தன தந்தன தந்தன தந்ததய்யன
தன்ன தானன தத்தன தந்தன
தன்ன தானன தத்தன தந்தன
தானதன தாத்தன தானதன தாத்தன
தானதன தாத்தன தானதன தாத்தன.

அகரமுத லியபொறிகண் முழுமையினு மருவுபொருள்
வடிவமென நிகழ்தவள மருமகனை யுடையபர
னாரணமு ரைத்துநெடு மேதினிப டைக்கருணை
நான்முகவ னைத்தனது நாபியில ளித்தவரி
யந்தரமெ லாம்வழிப டும்பதும பாதமலர்
சிந்தனைசெய் வார்வினைக ளைந்தருள்கு ணாலமுகி
லத்தியர சிற்குவரு தத்துவில கப்புரியு
மெய்ச்செயலு ரைப்பவர்களுக்குமருள் பச்சைமலை
யைந்துபடை யுங்கொடுநெ ருங்கியபெ ருந்தகுவர்
கும்பன்முழு துந்துணிப டும்படிபொ ருங்கடவு
ளற்புதச் சிங்கவுரு வத்தொடுற் றன்றிரணி
யற்செகுத் தங்கழும கற்புரக் கும்பெரிய

னளவிலுற் பத்திதரு திருவருட் சத்தியினை
மருமம்வைத் துக்கடலி னிடைகிடக் கைக்குரிய
னம்புவிட் டாழ்கடலி னைந்தழச் சிதவரு
ணன்றனக் கீடதுகு லைந்திடப் போர்செய்தவ
னற்பணி ருப்பமில் பத்தர்கள் சித்தமேய்ந்தவர்
நச்சிய வெற்றிமு ழுக்கவ ளிக்குமாண்பின
னண்டர்க ளும்பெரி தஞ்சிந டுங்கவெய்தடு
மென்கணை யைந்துகொண் மைந்தனை யன்றுநல்கின
னன்ன தானம ளிப்பவர் சிந்தையி
லுண்மை யாகவசிக்குநெ டுந்தகை
யாறுவகை மூர்த்தியாய் வேத நவண மார்க்கமார்
மூவிருவர் பாற்குலா வேகன்முதல் வீட்டினு ()

னனுவிலனு வெனவுலக முழுமையினு நிறையுமவன்
மாணமறு நிலையமார் பெறவமுத முதவுகா
ஞுயிரமெ னத்திகழ்ப ஞுடவிப டைத்தபெரு
மாசுணம திற்றுயில்கொ ளாவலைவி டுக்கிலவ
னம்புயம தேயனைய கண்கள்செவி வாய்கைபத
முந்தியுடை யானெனவி ளம்பிலெளி கூர்தகைய
னக்கடவு ளிக்கடவுண் மெய்க்கடவுள் பொய்க்கடவு
ணித்தியன நித்தியனெ னச்சொல்சிறு வர்க்கரிய
னண்டமுக டுங்கடந்து கண்டெளிதில் வந்திடுபெ
ருங்கலுழ னென்றபரி யொன்றிவர்த ருங்களிய
னற்றவர்க் கும்புலவ ருக்குநற் றஞ்சமெனு
மெய்க்கொடைப் பண்பமைசி கப்புரக் கும்பிரிய
னாதிநயச் சொற்பகரும வனிதையர்க் குத்தலைவி
யெனுமுருப் பெற்றுமவ ணிலவுமுற் றற்றணிவ
னங்கயற் போலுமிரு கண்களிற ருளைவிடு
பைந்தொடிக் காடைமிக வுங்கொடுத் தாடமைய
னச்சமில் சித்திப டைத்துயர் சித்தர்கூண்டுது
தித்திடு பத்துரு வுற்றவ னைப்பினுந்தக
னண்டலர் கண்டுந டுங்குறும் வென்றிநல்கென
நம்பிய தொண்டர்கள் சிந்தையி லென்றுமவைகுந
னம்மை வாதனை யற்கமு யன்றுள
புண்ணி யோருணர் சற்குரு புங்கவ
ஞருமறி யாச்சுகா தீதநிலை மேற்கொளாழ்
வார்பதின்மர் பாக்களோ டேயிலகு கீர்த்தியா ()

னிகழுமவர் பலர்பரம பதமதனி லுறவுமவிடு
கருணைமலி வினையடியா பணிசெய்வதின் மெலிவிலவு

னியாகபதி விட்டபுய லேழுமிக வெட்கமுற
வானிரையு வக்கவொரு மால்வரைத ரித்தபுய
னிந்திரகு மாரனென வுஞ்சிலர்சொல் காகதகு
வன்றன்விழி போயபினு மொன்றுதவு காருணிய
னெட்டியினு மிக்குயர்க சப்புறும னக்கயவ
ருக்கெமனும் வெட்குகொடு மைத்தொழின டத்துமவ
னிந்தனமு டன்றயில முஞ்சொரிபெ ருங்கனலெ
னும்படியெ ழுஞ்சினம துஞ்சிலர்மு னஞ்செய்பவ
னெற்றுசொற் குண்டகரி டத்திரக் குஞ்சிறுமை
யற்றவர்க் கன்றியரு ளைக்கொடுக் கின்றிலவ
னிழிகுணப் புத்தர்களும் வழிபடத் தக்கபொரு
ளெனநினைத் துத்தொழுமெ யுணர்வினர்க் குத்துணைவ
னெண்குணத் தானெனவி ளங்குதற் காவஙனி
லங்கெழுத் தேறிநட னஞ்செயுற் சாகவர
னிப்பியி டத்திலு தித்திடு முத்தைநேர்ந்தவர்
பத்தியை யொப்பிய ளித்திடு சுத்தவாஞைசய
னிண்டைய ணிந்தவிர் செஞ்சடை துன்றுமொள்ளிய
னன்ரூரு தன்சரணந்தனி லொன்றவுள்ளின
னென்னை யாளநினைத்தென்மனந்தனி
லன்ன வாசக மத்தினம் விண்டவ
னீனமத மூர்க்கர்தா நாடரிய தாக்குலா
ஞானவிழி யாற்றுணு ளானவரை நோக்குவா ()

னிணையில்வள முறுமிதுலை நகரில்வளர் சனகன்மக
ளுரைசெயலு மொருகபட விரலைபிற குறுசாத
னெனவுரு வத்திறொடு பாதலம திற்குறுகி
யாடகவி ழித்தகுவ னுவிகவர் சத்தியின
னின்சொல்விலை வாணன்மகி ழும்மடிபி னேகிமுது
கஞ்சிநகர் வாழ்கணிவ ணன்றனக மீர்கருவி
யெத்திசையி லுற்றவுயிர் கட்குமுண விட்டருடி
தித்தொழின டத்தியத னிப்புகழு டைத்தலைவ
னெண்கினின மும்பலகு ரங்கொடுசெ றிந்துபணி
முன்செயநெ டுங்கடலி லங்கையைவெலுங்குரிசி
லெப்பிறப் பின்கணுமி கத்துதிக் கும்புனிதர்
சித்தமுற் றுங்கவர்வ னப்பன்மற் றண்டதர
னிளையவர்க் கொத்ததுணை யெனவனத் திற்றிரியு
மொருவனைச் செப்பியவ னடலரக் கர்க்கியம
னெஞ்சலற் றீகைமுய லுங்காத் தானெதிரொ
ரந்தணற் போலமுடி யுந்தினத் தேகியவ

ணெட்டுவி தப்படு சித்தியு முத்தியாம்பர
தத்துவ நிச்சய வைப்பும ளிக்குமாண்டகை
யென்குல மென்சட மென்பொரு ளென்றுசொல்லிய
வன்பரை யென்றுமி கழ்ந்திடு கின்றவல்லவை
ணெண்ணி லார்கதி பெற்றுய முன்றரு
பொன்னி மாநதி மத்திய ரங்கைய
னியாதிலதி வேட்கையா வாணெனவி ஞய்ச்சதா
நாடிமுய லூக்கர்காள் கேண்மினிச மாச்சொல்வேன்

மகாமுல வியதவள வுததியினை யனையபெரு
மகிமையொடு விரிவுமரு வியவிதய முனிவாரும்
வானகம திற்குலவு தாருநிழ லிற்பலபன்
மாதரொடு நித்தமநு ராகம்விளை விப்பவரு
மந்திரமெ லாமுணரும் விஞ்சையரும் வேணவுரு
வங்கொடுநி லாவுமதி தந்திரமெ யோகியரு
மற்கடமெ னத்தகுபி டிப்பொடுத வத்திடைநி
லைத்தளவில் சித்தியொடு முத்திபெறு சித்தர்களு
மண்டலமு டன்ககன முங்கிடுகி டென்றிடவ
ருந்தகுவ ருங்கெடவெ லுந்திறமை கொண்டவரும்
வட்டிகட் கொண்டுபொரு ளைப்பெருக் கும்பலபல்
செட்டிகட் குந்துயர்வி ளைக்குமுத் துங்கர்களு
மதுரமிக் குற்றதமிழ் விநயமுற் றிக்குலவு
புலவருக் குக்கனக மழைபெயத் தக்கவரும்
வஞ்சகத் தாலுலக முந்துயர்க் காடுபுரி
கின்றவர்க் கேமனில்வி ளங்குமும் பாதர்களு
மத்திவ ழக்கறி யத்தகு புத்திமான்களு
முத்தம ருக்குந லத்தைவி ளைக்கும்வேந்தரும்
வண்புளி யொன்றிடை யன்றுநு ழைந்தவையனை
நம்பிய வன்றரு பைந்தமிழ் விண்டமெய்யரு
மன்னு தாமம்வ னத்துள வங்கொடு
நண்ணு பூசைமு டித்திடு பண்பரு
மாறிலவர் சேர்க்கையா லீறில்பெரு வாழ்க்கையா
லார்வமுறு தீர்க்கரா வாருமுயிர் மாய்த்திடா ()

மகமதனின் முயல்புனித கருமருபெ யுணர்விலது
கொலைபுலைசெய் பவர்கண்மிசை நனிகறுவு குரவர்களு
மானமொரு சற்றுமில ராயிரவ லர்க்குமிசை
நாயெனவி ழுத்தகுபொ லார்களையொ றுப்பவரு
மந்தகுண மூடரைவ ணங்கியவர் போனவழி
பின்செலதி பாதகமு யன்றறிகி லாதவரு

மத்தெனவ லைக்கடலில் வெற்பைநடு மச்சுதனை
விட்டொருத னிப்பொருளி ருக்குமென வொப்பிலரு
மந்தரமெ னுந்தனம' டந்தையர்சு கம்பெரிதெ
னுஞ்சமய முங்கெடவெ லுந்திறமை கொண்டவரு
மட்டில்வெப் பம்பெறுது டுக்கரைச் சண்டனில்வ
தைத்துவக் கும்படியு ழைத்துமுற் றுஞ்சிலரு
மகிமையிச் சித்துமறை முடிவிலுற் றுக்குலவு
திருவெழுத் தெட்டினையு மிகவுரைத் திட்டவரு
மங்களச் சீர்மலியும் விண்டலத் தாள்கைவரி
னுஞ்சகத் தாரொடுமோர் வம்புரைக் காதவரு
மட்குத லற்றுயர் சற்குண முற்றுவேண்டிய
விச்சைமு ழுக்கமு டித்திடு சத்தியாங்கரு
மந்தண மென்பன நன்கறி கின்றதிவ்விய
சிந்தைய ரும்பல பண்டம்வ ழங்குதுய்யரும்
வண்ண ஞானவி ளக்கமு றும்பல
புண்ணி யோருமக த்துவ பொங்கரு
மாதுகர மேற்றதே போனகம தாக்கொள்வார்
தாமுமிவர் போற்சொன்மே லோர்பலரும் வாட்கொளோர் ()

பகலுமதி யமுமழலும் விழிகளென நிகழ்சிவனு
மவன்மருவு பரையுமலர் விதியுமவ னினிதுபுணர்
பாரதிமு தற்சிலமி ஞருமுகில் கட்கண
வீதியின டத்துமக வானுமவ னிச்சைமலி
பைந்தகைமி னோர்சசியு டன்றிகழ்பன் மாதர்களு
மங்கிபக வானுமவ னின்புறுசு வாலையுமி
பத்திரள்க ளச்சுறவ தட்டுமெரு மைப்பாகட
திற்கதைபி டித்துலவொ ருத்தனிரு திக்கடவுள்
பண்டொருச லந்தரன்வ ளர்ந்தமனை கொண்டவரு
ணன்கலையி வர்ந்துலக மெங்கணும லைந்தவளி
பத்திரச் செம்பொனள கைத்தலத் தின்றலைவ
னுத்தரத் தின்கிழபு ரத்திமைக் குஞ்சயில
பதியெனப் பட்டவரு மவரவர்க் குப்பிரிய
மனையெனத் துற்றமக ளிருமுரைத் திட்டபடி
பங்கமற் றேபணிபு ரிந்திலைக் காதவரு
மைங்கரத் தான்முருகன் மென்குழற் பூரணைசு
பக்குண புட்கலை யிச்சைய ணைத்தவான்புகழ்
பெற்றப தத்தினர் முற்றுமி லக்கணுந்தநி
பந்தனை கண்டவ னந்தன்ம ருந்துவல்வரை
கொண்டுமுன் வந்தவன் வென்றிம லிந்தபுள்ளிறை

பன்னி யாமரு மத்துறை செந்திரு
பின்னு கோதைம லர்த்தரு பெண்கொடி
பாகுரைமி ஞர்க்கெலா மோரிறைவ னுத்தனு
தார்வமக ணுக்குலாம் வேளெனவு ணட்டுளார் ()

பலரும்வட மதுரையினை யலதிணையில் குருகைநக
ரதனிலொரு புளியினிடை மதுரகவி யடிகளெதிர்
பாகநய மிக்ககவி யாயிரமு ரைத்தமுனி
யாசறுத மிழ்ப்பொய்கையொர் பூதன்மயி லைக்கிறைசொல்
பண்குலவு சேரனில மின்றனது தாதைபல
தொண்டர்பத நாறுதக ளென்றபெயர் சூடிமுதிர்
பத்தியிலொ ருத்தனுயிர் தட்டழிவு றப்பழைய
கச்சியுறை பச்சைமுகி லைப்பிறக ழைத்தகவி
பம்புகட லும்புவியு முண்டகம லந்தனைய
ருந்திடவி ரைந்துகவி விண்டபுல வன்கயவர்
பற்பலர்க் கந்தகனெ னக்கொலச் செங்கையயில்
கட்கம்வைத் துந்தவமு டித்தமுத் தன்சொலொரு
பதுமுதற் பத்தர்களு மமணரைச் செக்கிலிடு
முனிமுதற் றக்கவரு மியமகவிற் பத்திமலி
பண்புடைப் பாவலனு மின்சுவைப் பாரதம்வி
ளம்புமற் கோளரியு முண்கண்மைச் சானகிவி
பத்தடை யச்சிறை வைத்தவ னற்றுவிழ்ந்தக
தைத்தமிழ் செப்பினன் மற்றும்வ ழுத்திநேர்ந்தவர்
பஞ்சவர்முன்சொல நம்பும னந்தம்விஸ்லிய
ரிந்துதெ லுங்கன கொண்டும்வி யந்துசொல்லினர்
பன்னிடாதப டிக்கும னந்தனு
ஞன்னி வீடுப டைத்தவ ருஞ்சிக
பாலனிக ரேச்சிஞர் தாமுமென வாக்குளார்
கூறுமரு ளாட்சிதோய் பாகவதர் கூட்டமே. (௬௬அ)

---

## மகுட வகுப்பு.

---

தனன தந்த—தனதன.

மறையனந்த மிகமொழிந்து மலையநின்ற பெருமையே
மலர்மடந்தை நிலமடந்தை மணமிணங்க வளவதே
மறுவில்செங்க திருமுதிர்ந்த மதியுமொஞ்சு மொளியதே
மழைவருந்தொ றெழினடஞ்செய் மயிலுகுங்க ணிறகதே ()

கறையில்சிந்தை யுறுமெயன்பர் கழல்கமழ்ந்த   பொடியதே
கடல்வளைந்த புவியிருந்த கணபணஞ்செய்   நிழலதே
கவினுறும்பன் மலருமொஞ்சு கனமணங்கொ   டுளவதே
கடைசியண்ட முகடிகந்து கரைகடந்து   நிமிர்வதே ()

குறையிரந்த புலவர்தங்கள் கொதியடங்க   வசைவதே
குருகைநின்ற புளிநுழைந்த குழவிகண்டு   தெளிவதே
குடிலையென்ற விருள்கடந்து குலவுகின்ற   பொருளதே
குரவர்விண்ட மொழிமறந்த குருடர்கும்ப   லிகழ்வதே ()

சிறைமுறிந்த பறவையென்ற சிறுமதங்கொ   ளரியதே
தெருண்மலிந்த பெரியான்பர் செவியிடஞ்சொ   னிலையதே
சிவன்விரிஞ்ச னனையரின்று திகழகண்ட   மயமதே
செயமுகுந்த னதிவளைந்த திருவரங்கன்   மகுடமே. (௯௯௯)

---

## புய வகுப்பு.

---

தனதன தந்ததான—தானத்தனந்தந.

திருமகளுந்துழாயு மணியொடுபைம்பொனுன
திரள்பணியுங்குலாவு   சீர்மிக்கிசைந்தவே
சிவையுறுபங்கனேர்கை மிசைகொடிரந்துசோறு
திறுமுடைமண்டையோடு   போகக்களைந்தவே
சிகையெதிர்தொங்குநாலு முகமுறுகஞ்சனுது
தெருண்மறைகொண்டுபோன   தீயற்றடிந்தவே
சிகரிகள்குன்றமோதும் வயிரமணிந்தபீளி
செயமலிவொன்றிவானில்   வாழ்ப்புரிந்தவே
தெளியமுதுண்டுதேவர் குழுமியவென்றுபால்கொ
டிரைகடலொன்றைமாறி   மாறிக்கடைந்தவே
தினகரனென்றவாழி யிமகரனெஞ்சுகோடு
சிலைகதைவென்றிவாணி   லாவப்புனைந்தவே
திரைவளைகின்றபார்மின் வனமுலையென்குமாறு
தெரிதருகுன்றெலாமு   நாணத்திகழ்ந்தவே
செடிமலிபைம்பொன்மேனி பெறுமிடைமங்கைமார்க
டினமணையும்பல்போக   சாலத்துயர்ந்தவே

மருமலிகொன்றைமாலை யணிசடையின்கண்மோதும்
வலிமையுறுங்கிரீடி   தேர்விட்டுவந்தவே
வரையுநெகிழ்ந்துசோரு மிசைமுனியன்றோர்கானில்
வனசரமங்கையான   போதுற்றணைந்தவே

மகமுயல்கின்றகோன்மு னுடலிலொர்பங்கவாவு
மறையவனின்றநாளொர் கோறெட்டவிர்ந்தவே
மனதினுள்வஞ்சநாடி யிகன்முதிர்கஞ்சனேவ
வருமொர்குரண்டமாய வாயைப்பிளந்தவே
மருவுமிளஞ்சிறுசொ டுலவிடுமந்தநாளின்
மறைவுறுகன்றனை மேல்விட்டெறிந்தவே
மலிகனலென்றகோப முடனெதிர்வந்ததான
மதமலையொன்றுமாயு மாமற்புரிந்தவே
மறியணிசெங்கையான்வின் முறிபடவென்றுசீதை
மகிழ்வொடுதன்கைமாலை சூடக்குளிர்ந்தவே
மலர்நனிசிந்திநீடு புளியினுழைந்துவாழு
மதலையுடன்பல்வாணர் பாடற்புகுந்தவே ()

கருமுகில்கண்டுநாண மழையின்மெலிந்தவாய
கனபசுவின்பமார வோர்கற்சுமந்தவே
கனவில்விழுந்துமாய முயலொருதொண்டனுவி
களிபெறவென்றியாழி யான்முற்புரந்தவே
கவலைமிகுந்துமூல மெனமுன்மொழிந்துகூவு
களிறுபுரந்தமேன்மை தோயக்கிடந்தவே
கதிமுதலின்றெனும மொழிமினென்வம்பனுது
கனகுடரொன்றமாலை சூடிப்படர்ந்தவே
கழிமயல்கொண்டமாதர் விழிகளெனும்பல்கோடி
கயலினம்வந்துமோத மோதப்பொலிந்தவே
கரமிகைதுன்றும்வாணன் முதலியவம்பர்சேனை
கசரதமுன்சொலியாவு நீறச்சினந்தவே
கடிமலர்சிந்துதாரு நிழலில்வதிந்ததேவர்
கருதும்விருந்தாகு வாருட்சிறந்தவே
கவிமதுரங்களியாது மறிகிலருஞ்சில்வாது
கழறமெலிந்துளேனை யாளத்துணிந்தவே ()

யருளனுவின்றியேன முயலயமுங்கொளினை
ரமுதுணவுஞ்செய்வேலை யோவற்றலைந்தவே
யவகடநெஞ்சனை தசமுகவன்றன்மீதி
லமர்பொருமுன்புவேலை நீர்வற்றவென்றவே
யதிரதரஞ்சும்வீர மருவியதுங்கவாலி
யழியவொரம்புநாளி லேவத்தெரிந்தவே
யறுமனைநம்பிவாழு மிளவரசன்றன்மாதை
யரசொடுசெம்பொன்மோலி யோடிட்டநண்பவே
யகிலமளந்ததாளை நினைபவரன்பரேவ
லதுசெயவென்கிலார வாரித்தபண்பவே

யபரிமிதங்கொள்சார மருவியசந்தமாலை
யணிதருதொண்டராண்மை போலக்கிளர்ந்தவே
யாவரசன்பல்கால மொழியினுமிஞ்சுமீடு
மதிசயமுங்கொணாது பாகத்தமைந்தவே
யலைகடலம்புமேக மரகதமென்றுகாறு
மழகியரங்கநாத னுடற்புயங்களே. (௬)

---

பாதாரவிந்த வகுப்பு.

---

தானதன தந்ததன—தானனா தந்தனா.

ஆயிரமனந்தம்வெகு கோடியெனமிஞ்சுமத
மாவனசொலும்பொருளெ லாமாவிளங்குமே
யாசறுசெழுங்கமல நாண்மலர்விரிஞ்சனுவ
லாரணமுடிந்தமுடி வாயேதுலங்குமே
யாரவிர்தருஞ்சடைம யேசன்மகிழும்படியொ
ராறுதவிடும்பெருமை தேயாதுமிஞ்சுமே
யாரமுதருந்துமக வானுமிருபுங்கவரு
மாரமொடணிந்தமுடி யோவாதுரிஞ்சுமே
யாகுலமலிந்தசுர ரியாவருமழும்படிசெ
யார்வமருவும்பலரு நேர்மேன்மைதுன்றுமே
யாதியொடுமுந்தியவ நாதியுமுணர்ந்தபெரி
யாருணர்விடந்தினம்வி டாதேயிணங்குமே
யாவலனுவின்றுணையு மோர்பொருளினுங்கொள்கில
ராமவருள்வந்தினிது தாமேவிழுங்குமே
யாசுமுதலென்றகவி நாலுமொழியும்புலவ
ராசைமுழுதுந்தரும்வ லோர்பாணெருங்குமே ()

யாறுநெறியுந்தமதெ ளாநினைதரும்பிரண
வாதியெனுமெண்பொறிசொன் மாயோகர்சொந்தமே
யானகமுழங்கவிக லோர்படைநடுங்கவம
ராடும்வயமொன்றியம காதீரர்தஞ்சமே
யாலையில்வடிந்ததெளி சாறனையவின்சொறரு
மாறியமனம்பெறுசு யாதீனர்தங்கமே
யாகநிலையுந்திகழு லோகநிலையும்பழுதி
லாவிநிலையுந்தெரிகு வார்பேசுபொங்கமே
யாலிமதுரம்பொருவு பாடல்பகரும்பதின்ம
ராலறிபவெங்கிளிசை யாமூடர்பங்கமே
யானியில்குறிஞ்சிமுத லாகுநிலமைந்தினிலு
மாடுபவெனுந்தெளினர் மீதேயிரங்குமே

யாசினிதருஞ்சுளையை நேர்மொழிதெரிந்துபக
ராதசிலரன்பினையும் விழ்மோகமொன்றுமே
யாடியிலுயர்ந்ததொரு பூரமதில்வந்தவெம
தாயிமுனணிந்துதவு பூவாசமண்டுமே ()

வாயிலமுதந்தருமொர் கோசலையுடன்பகர்சின்
மாதர்மடியின்கண்வெகு போதேறுகின்றவே
மாசுபடுநஞ்சுதவு பேய்மகடன்மென்றனையில்
வார்மடியினுஞ்சிறிது போதேயுநண்பவே
வான்வரைநிவந்தபெரு நீர்மிசைமிதந்தவிலை
வாய்பிரளயந்தொறும்வி டாதேயுறைந்தவே
மாயைவலிமிஞ்சுசக டாசுரனெனுங்கொடியன்
மாய்வுறவதஞ்செய்புக ழோடேதிகழ்ந்தவே
வாரணமடிந்துவிழ மோதியதுகண்டுமெதிர்
மாமன்முடியுந்தலையும் வேறாகவென்றவே
மாமறலிமைந்தன்முடி சூடுதல்வி ழைந்துகொடு
மாசுணம்வரைந்தகொடி யோன்வாயில்சென்றவே
மாநிலமடந்தையொடு தாமரையிடங்குடிகொண்
மாமகளுமங்கைமல ராலேபிசைந்தவே
வானுததியின்றலைகு லாவுபணிமன்றனது
வாளுடலதன்கணொடு நாளாவியைந்தவே ()

வாவியினிடங்குடிகொள் காரவமொன்றினக
மாறிடநடஞ்செய்துப லோர்பேசல்கொண்டவே
மானுறமுழுமுண்கணுறு சீர்வினதைமைந்தனதி
மான்மியமுறும்படிச தாமீதிவர்ந்தவே
மால்வரைபிடுங்கியெறி கோரகுணசண்டபல
வாயுபுதல்வன்கைமல ராலேசுமந்தவே
மாதிரம்வணங்கவருகாதிமகன்முன்பொருகல்
வானுதன்மடந்தையுரு வாமாறுரைந்தவே
வாசவனுமம்புயனு மீசனுமிகழ்ந்தகொடு
வாயசமடைந்திடனு மோவாதபண்பவே
வாலியைவதஞ்செயடை யாளமெனவங்கொர்பணி
வானின்மிசைநின்றெழும ராநேர்மைகண்டவே
மாமகரகும்பபதி தீமையறவென்றவனு
மானுமவர்பின்சிலரு மேனுண்முகந்தவே
மானமழியும்படிசெய் வான்முயல்பெரும்பகைவன்
வாகுவுறழ்தம்பியையெ ளாதாளுமொய்ம்பவே. ()

தீயினைநிகர்ந்தநிறை மாதர்பலர்கெஞ்சவணி
சேலைகவரன்றொர்மர மீதேறும்வம்பவே

சேயிழைமடந்தையிடு மாலையைவிழைந்துவரு
தேர்வயவர்குன்றவெழு சேமேல்விரைந்தவே
சீலமலியுங்குறளின் மாவலிமுனின்றபினர்
சேணுலகையும்பெரிய பாரோடளந்தவே
தீமையுறுகஞ்சனது சோதரியெனும்பிழைகொ
டேவகிதனுந்தியினு மோர்கால்வளர்ந்தவே
தீரகுருடன்புதல்வ னேவவருகிங்கரர்கள்
சேரமடியும்படியொ ரேபோதளைந்தவே
தேவர்புகழ்கங்கைமக னுதியருமொஞ்சவருள்
சேரும்விதுரன்றன்மனை யூடேபுகுந்தவே
சேல்வரைதருங்கொடியு ளானெதிர்நிகழ்ந்தகிழி
தேவையில்விழும்படிசெய் தானாடியன்றவே
தேனுறழுமின்கவிதை பாடுமொருதொண்டனது
சேயவடிசென்றசுவ டோடேதொடர்ந்தவே ()

தீவிரதரங்கொடுசதாவழிபடும்புனிதர்
சேகரமெனுங்குருகை யாழ்வாரையுண்டவே
சீதமலர்சிந்தியொரு பேடிபணியும்பொழுது
சீறரவகங்கணனல் வீடாநிகழ்ந்தவே
சேரியில்வளர்ந்துமண லாலயம்வணங்குமொரு
சீரியனுணர்ந்தொர்பது பாவான்மொழிந்தவே
தேடிமிகநொந்துதுதி பாடுமவர்சிந்தையிடை
தீபமெனநின்றிருள டாதாளுமன்பவே
தேறிமகிழ்சிந்தையுறு நாதமுனிமுன்சொல்சிலர்
தேகமுமகண்டமய மாமாறடர்ந்தவே
சீயொழுகுபுன்றலையர் காணமதினைந்திடும்வி
சேடமுயனுங்குரவ னேர்வாரடைந்தவே
தேசிகனுமெங்கண்மண வாளமுனியும்பகையில்
சீருணர்பெருந்தகவு ளாரேவனைந்தவே
சீகரமெறிந்தகட லூடணையிடுங்கதைய
தேமிகமொழிந்தவர்கள் பாலேகிடந்தவே ()

பாயிருடுறந்தமணி நூபுரமணிந்துபல
பாகவதர்சிந்தைதொறு நாடோறலைந்தவே
பானல்விழிமங்கையர்கு ழாமலிவுறும்பொதுவர்
பாடியினிலன்றுர லோடேதவழ்ந்தவே
பார்மகள்சுகம்பெறமுன் வேள்வியில்வரும்பெணொரு
பாவிமுன்வெருண்டுமிக நாடடணைந்தவே
பாரவலிடங்கரொடு போர்நனிபுரிந்துமெலி
பாழிமதமுஞ்சாமுய் வானோடுமைந்தவே

பாதகமிருங்கனக ஞண்மையறநொந்தழுமோர்
பாலனுபவங்கிலகு தூணூடெழுந்தவே
பாறுகழுகும்புலியு நாயுநரியும்பருகு
பாவவுணவுண்பவரொ ஞமேமறைந்தவே
பாடலநறுந்துளசி கூதளமலங்கலரி
பாடலொடிடும்பலரும் வாழ்வான்வளைந்தவே
பாகரசமிஞ்சுமிசை வீணைபயில்கின்றசிலர்
பாலுநடனம்புரிம காலீலைதந்தவே ()

பாரதமொழிந்தருள்வி யாசனிகரும்பெரியர்
பான்மையறிகின்றிலவர் சோராதிகழ்ந்தவே
பாதிமதியம்புரையும் வாணுதன்மடந்தையர்சு
பாவமறியங்கசனு மேனுள்பணிந்தவே
பாரதிபுணர்ந்தவய னூல்விதிகடந்துமிகு
பாழ்படுவிதண்டமத ராவார்தணந்தவே
பானுவொடுறழ்ந்தபரா காலமுனிவன்றனது
பாமணமிகுங்குமுத வாய்தோயவந்தவே
பாலைவனநன்றெனும கோரகுணவண்டரொட
பாரகலகம்புரிய வீழ்வார்தெரிந்தவே
பாறையினிடஞ்செய்கிண றூறுதவுமென்றுநனி
பாடுபடுமென்கவிதை மாலாடமிழ்ந்தவே
பாதலமமர்ந்தபது நாறுமுகவங்கதச
பாபதிமொழிந்துமுடி யாமேன்மையுண்டவே
பாண்முனிவைகுந்தமுது காவிரியிடங்குடிகொள்
பாசொளியரங்கனிரு பாதாரவிந்தமே. (௬௧)

## திருவரங்கத்திருவாயிரம்

முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

## வண்ண விருத்தம்.

தனன தந்தத்—தனனதனன.

அயன்மதங்கட் கிடியேறருள்கூ ரடியார்தங்கட் கமுதாண்மையினு
லியல்விளம்பித் திரிவார்சமனு னெனுமகந்தைப் பிணிதீர்பெரியோ
ருயர்பதம்பட் டுதிர்தூளணியா லொளிர்சிரம்பெற் றவரேயுணரோர்
செயமுகுந்தற் கணிமாமணிநேர் திருவரங்கத் திருவாயிரமே.

தெய்வமேதுணை.

தேவிசகாயம்.

# திருமகளந்தாதி.

## காப்பு.

நேரிசைவெண்பா.

மருமமதிற் சந்ததமு மாயன்வைத்துக் காக்குந்
திருமகளுக் கந்தாதி செப்பக்—குருமரபிற்
பட்டார் குழாமிகழாப் பன்னிரண்டாழ் வார்பதமுங்
கட்டாய மானபெருங் காப்பு.

## நூல்.

கட்டளைக்கலித்துறைகள்.

திருமகளேதிருப் பாற்கடலூடன்று தேவர்தொழ
வருமகளேயுல கெல்லாமுமென்றென் றும் வாழவைக்கு
மொருமகளேநெடு மாலுரத்தேயுற் றூரம்பெரிது
தருமகளேதமியேன்தலைமீதுநின்றாளைவையே. (௧)

தாளையென்சென்னியின் மேனீவைத்தால்வெந் தாணிமுதற்
கோளைவன்றீவினைப் பேயோடுவென்று குலாவுவன்காண்
வாளையொப்பாம்விழி யாளெடுமாலைம யக்கியப்பால்
வேளைநல்கிப்ப வுலகோரும்வாழச்செய் மின்கொடியே. (௨)

மின்கொடியன்ன விடையாரனேகர் மிகவிகழும்
வன்கொடிதேனுந் தவிர்க்கின்றிலாயென்று வாழ்விப்பையோ
மென்கொடி றுண்ணத் திருமாலுக்கீந்து வியன்பொலிசீர்ப்
பொன்கொடிப்பூதலத் தோர்தம்மையாளும் பொறியணங்கே. (௩)

பொறியாவிற்றுயில் கூரும்பிரானருட் புந்திகவர்ந்
தெறிகதிர்த்தாமரைப் பூமீதுவாழுமொ ரேந்திழையே
மறியறுத்துண்கின்ற பொல்லார்க்குஞ்செம்பொன் வழங்கிடுநீ
யறிவினிற்குந்தமி யேற்கிரங்காமை யதிசயமே. (௪)

சயமகளிந்திரர் பல்லோர்வணங்குபொற் றாட்டிருவோர்
கயமுயக்காத்தவன் றன்னுயிர்போலுங் கமலையிந்த
வியனுலகூடெனைச் சோதிக்கின்றாளது விட்டொழித்தா
லயமும்மிழ்கிந்தையர் தம்பாற்கையேற்ப தழுமுற்றுமே. (௫)

முற்றப்பவளச் சிலைபோன்முகுந்தன்றன் மொய்ம்பில்வளர்
கொற்றத்திருமடந் தாயடியேன்கலிக் கோடையிடை
பற்றற்றமேலவர் தங்கோலத்தோடு பதைக்கைநன்றோ
சற்றற்புதக்கரு ணைக்கடலாட்டத் தயைசெய்தியே. (௬)

செய்யதண்டாமரைப் பூமேல்வசிக்குந் திருமடந்தாய்
வையகஞ்சேர்கைப் பட்டதனாலுண் மகிழ்கின்றையோ
மையணிவண்ணப் பெருமான்றனைணயிவ் வம்பொழித்தியா
முய்யநின்றண்ணருள் வாரிதியாட்டற் குளங்கொண்டிடே. (௭)

உளங்கொண்டபோரு ளெத்தனைதேவ ருறச்செயினுந
தளங்கொண்டதாமரை யாளருளின்றெனிற் சஞ்சலமே
களங்கொண்டநஞ்சன் முதலாயதெய்வக் கணங்களுமவ்
வளங்கொண்டலாத்தினம் புண்பட்டவாம்பல வாறுளவே. (௮)

பலவாறுலகுக் கிதஞ்செய்யநாடுமென் பான்மைநச்சி
யுலவாக்கருணை புரியாதிருக்கை யுசிதங்கொலோ
நிலவார்சடைப்பெரு மான்றங்கையாய்ப்பெரு நீலவண்ணன்
கலவாமகிழ்மனை யாயவன்மார்பிற் கவின்றபொன்னே. (௯)

பொன்னுமணியும் புவியாள்செங்கோலுமென் பூந்துகிலு
மின்னுமகுட முதலாயபூணும் வியனழகு
மன்னும்வல்வீரமும் வாகையுமாகிய வாழ்வனைதது
நன்னுதற்செந்திரு மங்கைதனாட்டங்க ணல்குபவே. (௧௰)

நல்குரவஞ்சி நளிர்கடல்சூழ்ந்த நானிலத்தோர்க்
கொல்குமென்னைக்கக ணத்தாரும்போற்றிசைத் துன்னசசெய்வாய்
பல்குருவாயர சாய்ப்புவிகாக்கும் பகவனுரு
கல்குலம்போருகப் பாவாய்நின்றண்ணருட் காக்கமுண்டே. (௧௧)

ஆக்கமென்றுள்ளன வெல்லாம்பொருந்து மரும்பொருளாய்ச்
சேக்கமலாதனத் தூற்றாய்விண்ணுடர் தினம்பணியுந
தாக்கணங்கேயென் றமிழ்மாலைகொண்டன்று சாற்றியசொற்
காக்கவுந்தாமதஞ் செய்கின்றையேயென்ன காரணமே. (௧௨)

காரணங்கோடுவெண் பானோரணங்குங் கருதியசெஞ்
சீரணங்கேயென் கலிநோய்முற்றிக்கணந் தீர்த்தருளோர்
வாரணங்காப்பத் தனிபோய்த்தவள வளைமுழக்கு
நாரணன்றொட்டநின் மங்கலங்கோடி நலம்பெறுமே. (௧௩)

நலந்தந்தநாரணன் பன்னியென்றியாரு நவிலமல
ரிலந்தந்தவாழ்வுடைப் பாவாயைந்தேவரு மேத்தெடுக்கும்
பொலந்தந்தமென்கழற் பூவையென்றோருமென் புன்கலிதீர்த்
தலந்தந்தவொன்னல ரெல்லாநடுங்க வருளுநல்கே. (௧௪)

அருளும்பொருளுநின் னுடலென்றோர்ந்து மகிலத்துள்ளே
யிருளுந்துபாழ்மிடிப் பேயால்வருந்தெற் கிரங்கலென்றோ
சுருளுங்கருங்குழற் றோகாய்விண்ணுடர் தொழுமுனிவர்
தெருளுந்திருநெடு மாலூரத்தேவளர் செந்திருவே. (கரு)

செந்திருவேநின் னருள்போற்றிநின் றுஞ் செகத்திலுள்ளார்
தந்திருவேட்டுத் தயங்குகின்றேனெனைத் தாங்கலென்றோ
சந்திரனோடு மமுதோடும்பாற்கட றன்னில்வந்த
விந்திரையென்னப் பலர்கூறுஞாய மிலங்குறவே. (கசு)

இலங்குந்திருவரு ளேதஞ்சமாமென் றியம்புமுண்மை
துலங்கும்படியெனைக் காத்தருள்வாய்பல் சுரக்கணமுங்
கலங்கும்படிபொருந் தானவராண்மை கழியவெல்லும
பலங்குன்றிடாநெடு மாலகன்மார்பிற் பழகணங்கே. (கஎ)

பழங்கணனேகத்திற் பட்டுழன்றியான்பல் பருப்பதத்திற்
கிழங்குண்டமாதவர் தாமுநத்தாப்பெருங் கீர்த்திநட்டேன்
வழங்குநதிறமை யுனக்கில்லையோவலை வாயில்வைதது
முழங்குநதிருநெடு மாற்குயிரேநிகர் மொய்குழலே. (கஅ)

மொய்குழற்பாவைய ரோடுவநதுன்மகன் மூரியம்பு
பெய்குதற்காற்றுகில் லேன்றனைப்பாழ்மிடிப் பேயுநதொட்டாற்
செய்குவதென்னை யறிகின்றிலேனருட் சீருள்வாய்
வைகுலவைம்படை யான்றனையாண்ட மலர்மகளே. (ககூ)

மலரிற்பிறநது நெடுமாலூரதநில் வசிக்குமின்னே
யலகற்றபேறு விழைவேற்கவ்வண்ண மருள்செய்திட்டா
லுலகிற்குநன்மையுண் டுன்றனக்கும்புக ழுண்டுகண்டாய்
பலமிக்கதானவ னல்லேனன்மானிடப் பாலகனே. (உ0)

பாலன்னமேனிக் கலைமகளார்வம படைததுமுனறன
சேலன்னகண்ணரு ளெய்தாமையான்மிகச் சீரழிநதேன
மாலன்னதெய்வமற் றில்லாமையோர்நதவன் மார்பில்வைகு
நூலன்னசிற்றிடைப் பாவாய்சற்றேயின்று நோக்குதியே. (உக)

நோக்கஞ்சிறிதுமென் மேல்வைத்திலாய்மிக நொநதனைத்துங்
காக்கவல்லாற்கருள் செய்தநின்கட்கடைக் காதலுற்றே
னூக்கமுமெய்யுணர் வுங்கொடுத்தாண்டிவ வுலகறிபே
ராக்கமுந்தந்தருள் வாய்செய்யதாமரை யாரணங்கே. (உஉ)

ஆரணங்கூப்பிடி லெட்டாதொளித்திட் டரும்புனத்தோர்
வாரணங்காத்திடச் சென்றூரத்தின் மருவுபெருஞ்
சீரணங்கேதமி யேன்றன்னைவெள்ளிச் சிலம்பில்வைகுங்
காரணங்காளிறை போல்வாழுமாறு கடாட்சித்திடே. (உ௩)

கடங்கொண்டநீரிரு குஞ்சரமாட்டக் கமலமல
ரிடங்கொண்டுவாழுமொ ரேந்திழையேசெல்வ மியாவுநின்பொற்
றடங்கொண்டசென்னியி னார்சொந்தமேயெனச் சாற்றுமுண்மைத்
திடங்கொண்டவென்னைக் கருதாதெங்கியார்க்கிதஞ் செய்குதியே. (௨௪)

செய்யபொன்மேனித் திருவேசெந்தாமரைச் சீர்மகளே
கையகத்துஞ்செழுந் தாமரையேந்துங் கனங்குழையே
வையமுற்றோர்குடைக் கீழ்வைத்துளாரை மறந்தனையே
ஐயமிங்கேற்பினு மெய்தாமலேங்கி யலைகுவரே. (௨௫)

அலைகடற்பள்ளிகொண் டோன்கைகளாலெடுத் தன்றணிந்த
விலையினின்மங்கலஞ் சான்றுவென்றன்னை வெறுத்துவிடேல்
புலையுடைப்புல்லியர் தம்பாலுமேற்றுப் புழுங்குறுமிந்
நிலையொழித்தேற்பவர் வேட்கைநல்கார்வ நிறைவருளே. (௨௬)

நிறைகின்றபூரண னாநெடுமாலக னெஞ்சகத்தி
லுறைகின்றநீயென்ற னுண்மையுளியாது முணர்கிலையோ
வறைகின்றபாடல்கட் கென்றோர்பரிசு மருள்கிலையே
மறைகின்றநுண்ணிடைச் செம்பொன்வெற்பாங்கஞ்ச மாமகளே. (௨௭)

மாமறைநீதி முழுதுந்தணந்திம் மகிதலத்திற்
காமவினைகைம தேமுயல்வாரிற் கடைப்பட்டெய்த்தே
னீமகிழ்ந்தென்னைத் தொடர்ந்தாளச்சற்று நினைத்தருள்செந்
தாமரைப்பூம்பொகுட் டின்றலைமேய தனியணங்கே. (௨௮)

தனியேயிரந்து திரிவார்தம்மீதுசெந் தாமரையாள்
பணிநீலக்கண்ணருட் பார்வைசற்றெய்திற் படைப்பெருக்குங்
குனிவார்சிலைமன்னர் கொண்டாடும்வீரமுங் கோதொழிந்த
முனிவோர்சொல்லாசியு மாதியசீர்வந்து மொய்த்திடுமே. (௨௯)

மொய்யார்செந்தாமரைப் பூமேற்குடிகொள்ளு முத்தநகைச்
செய்யாளையன்றிமற் றோர்தெய்வமின்றிச் செகத்தினிடை
நெய்யார்வெந்தீயிற் கொடிதாயபாழ்த்த நிரப்பொழித்து
மெய்யாயசெல்வப் பெருக்கூடுவைப்ப விடுப்பதற்கே. (௩௰)

பதங்களெல்லாமும் பிறப்போடிறப்பில் பரத்துமமு
மிதங்கண்மற்றியாவுநன் காராயில்வேறில்லை யெட்டெழுத்தா
னிதங்களிகூர்பெரு மானெஞ்சின்மேவி நிருதர்தம்மேற்
கதங்களுஞ்செய்யும் பெருந்தேவியார்திருக் கண்ணருளே. (௩௧)

கண்ணகன்ஞாலங் களிகூருமாறு கருதுமென
தெண்ணமொன்றேனு முடியாதொழியி லிளப்பமன்றே
விண்ணவர்கூட்டங் களிகூரப்பாற்றிரு வேலைகடைந்
துண்ணமுதீந்த பெருமான்றன்மார்பத் துறைபவட்கே. (௩௨)

புவனன்றன்மைந்தன் முதலாஞ்சில்வீரரும் பங்கயக்கண்
ணவனுஞ்சிவனுமொப் பாந்தேவர்தாமு மறைந்தசொற்க
ளிவனென்றுமெய்ப்படக் காண்கின்றிலேன்மல ரேய்ந்திருக்குந்
தவளங்குலாநகைச் செந்திருநோக்கந் தாராமையினே. (௩௩)

தரையிற்புதைத்த பொருள்கரியாகத் தயங்குநரு
மரையிற்றரிக்கத் துணியுமிலாதிங் கலைபவரும்
கரையற்றதுன்பக் கடலூடமிழ்ந்து கலங்குநருந்
திரையிற்பிறந்துயர் சீமாட்டிகண்ணருள் சேர்ந்திலரே. (௩௪)

சேரியஞ்செம்பிரும் பாதியிற்பொன்செயுஞ் சீரியரும்
பாரீர்ங்கடற்பல தீவுடனுண்டுயர் பான்மையருஞ்
சூரீர்ந்துபெற்ற செயத்தாலளவறத் துள்ளுநரும்
வாரீரக்கொங்கைத் திருமாதுகண்ணருள் வாய்ந்தவரே. (௩௫)

வாயசமோநரி யோபூனையோவென்னும் வஞ்சகர்க்கு
மேயபல்சீரு மொருக்காற்கொடுக்கு மிறைவிபிட
மாயவன்மார்புந் துளசியுமியானை வதனமுநற்
றூயவரில்லமும் வில்வமுந்தீபமுஞ் சொன்னமுமே. (௩௬)

சொன்னங்கொடுப்பதொன் றேதிருமாதருட் டோற்றமென்னுஞ்
சின்னமதிப்புல வீர்நன்மையாவுமச் செல்விபங்கே
கன்னலின்சொல்லவள் சேய்மனையாட்டி கனிந்தருள்வ
தின்னலெல்லாமவண் முன்பிறந்தாள்பங் கெனச்சொன்மினே. (௩௭)

எனக்குன்கடைக்கண் ணருள்வாரியின்றுளி யின்றருளி
லுனக்கும்புகழுண் டுலகிற்குநன்மையுண் டுன்கணவன்
றனக்குங்களிப்புண்டு சத்தியமேயென்சொற் றள்ளிவிடேல்
கனக்குந்துணைமுலை யோதிமம்போலுங் கமலமின்னே. (௩௮)

கமலாதனத்தனின் சேய்நெடுமானின் கணவனான்
சமமானசோதரன் மற்றோரெல்லாந்தொழத் தக்கதொண்ட
ரெமதீனவன்கலி தீர்த்தாள்வதிற்றடை யாதுளதோ
வமலேநன்றுமவை குன்றுததாமெய் யருட்செல்வியே. (௩௯)

மெய்யனல்லேன்றவ னல்லேன்சரத விரதனல்லேன்
பையரவிற்றுயில் கூர்பெருமானெழும் பான்மைசொன்ன
மையமில்சீர்ச்சட கோபனுமாங்குரைத் தான்கண்டிலே
னுய்யவென்றுண்டருள் வாய்பதுமாதனத் துத்தமியே. (௪௰)

உத்தமச்சற்குரு சேவையெய்தாதிங் குழலுமெனக்
கித்தனையாசை கொடுத்திட்டதார்சற் றியம்புகண்டாய்
மத்தகவேழம் புரந்தபிரானை மனத்திலுன்னிப்
பத்தமுற்றூர்களை யெந்நாளுங்காக்கும் பதுமமின்னே. (௪௧)

பதுமம்புனைந்த பதுமக்கையாற்பொற் பரிசருளின்
மதுவுண்டபேய்க்குரங் கன்னாரிகழ்ச்சியின் மாழ்குவனோ
விதுவொன்றுசென்னிப் பிரானாக்கயிலையின் மேவுமுண்மை
யதுகண்டுளார்க்கெளி யாய்செம்பொன்மேனி யணங்கரசே. (௪௨)

அணங்கரசிந்திரை யம்பிகைக்கின்ப மருளிறைவி
கணங்களெல்லாந்தொழுங் காலுடையாளைக் கண்டுகொண்டா
லிணங்கலர்சேனைக் கெமனாகுவேனடுத் தேத்தியன்பால்
வணங்கவல்லார்க்கன்னை யாவேனிதேயென்றன் வண்குணமே. (௪௩)

குணநீடுபாண்டவர்க் காத்தானைப்போலும்பல் கோடிசித்தர்
மணமார்துழாயணிப் பைங்கொண்டலூடென்றும் வாழவைத்தாய்
நிணம்வேட்டுக்கன் றுங்கொல் கின்றார்ப்பகைக்குமென் னெஞ்சழிந்தோர்
பிணமாயித்தேகம் விழச்செய்திடேன்மலர்ப் பெய்வளையே. (௪௪)

பெய்யுங்கனமுகி லோரேழுமொல்கப் பிறங்கலெடுத்
துய்யும்படிபல்ப சுக்காத்தநாதனின் றூன்விழைந்து
கொய்யும்புலையர்க் கரசாளுமார்வங் கொடுத்ததென்னோ
நெய்யுந்துசெங்கம லப்பொகுட்டேவளர் நேரிழையே. (௪௫)

நேராரனேக ரிரத்தக்கடலிடை நீந்துபெரும்
போராடுமார்வத்த ரியாவரென்றாற்பசும் பொற்புமலி
நாராயணன்பத மேதஞ்சமாமென நாடுமன்பாற்
சீரார்செம்பொற்றிரு மாதருணோக்குறுஞ் சிற்சிலரே. (௪௬)

சிற்பரதத்துவ ஞானமும்பார்மகள் சீர்பெறற்காப்
பற்பலமன்னர் குடிகேடுசெய்கின்ற பண்புமெண்ணில்
கற்பொருகொங்கைக் கலவியும்வேட்டுழல் காதலுள்ளீ
ரற்புதநாரணன் மார்பிலுற்றாளை யடுத்துய்ம்மினே. (௪௭)

அடுத்திறைஞ்சும்புல வோர்பெற்றுவாழ்வுற வம்புயப்பூ
நடுத்திகழ்செய்யவ ணல்காததொன்றில்லை நாகமிசை
படுத்தியங்குந்திரு மாலுந்தியாய பதுமமுன்னாள்
கொடுத்திடவந்தவன் கைசெய்ததாமண்ட கோடியுள்ளே. (௪௮)

உள்ளக்கமலத்தில் வந்துவந்தாடு முனதருளிவ்
வெள்ளக்கமலப் புவியோர்முற்சற்று விளங்கலென்றோ
கள்ளக்கமலனைப் பெற்றானெந்நாளுங் கலந்துவகை
கொள்ளக்கமல மலர்மேற்குலாவிய கோல்வளையே. (௪௯)

கோலவுருவுஞ் சமைந்தகல்பார்துயர் கொய்தநெடு
மாலடியாரடி மைத்திறமேமிக வெளவுமென்னைச்
சாலமனந்தள ரக்கண்டுளாயென்று தாங்கிக்கொள்வா
யாலமுநீலமும் போலவிருண்கண் ணணித்திருவே. (௫௰)

அணித்தாகுநின்னரு ளென்றுவப்பாகு மறிவடையப்
பணித்தாய்சில்கால்பயன் பாலித்துமாற்றினை பாவமன்றோ
வெணித்தாழ்வுறுநல மென்றருள்வாயென் றெம்பெருமான்
மணித்தாமமார்பைவிட் டோவாதுவாழு மடவன்னமே. (௫௧)

அன்னமொப்பாய மருமகளார்வ மடைந்தவர்க்குக்
கின்னஞ்செய்வாயெனப் பல்லோருலகிற் கிளத்திடும்பொய்ச்
சொன்னம்பிலேனவ ளாயதுநீயென் றுணிவடைந்தே
னின்னமுஞ்சோதனை செய்யேல்கமலத் திருந்தவளே. (௫௨)

இருந்தையொப்பாமுரு வாய்ந்தவெஞ்சாரண னீடழித்த
வருந்தவன்சொல்வழிச் சென்றறியேன் றுதிக் காசைகொண்டாய்
கருந்தனமேனுந் தருகின்றிலாய்தண் கருணையின்றோ
மருந்ததனோடுவெண் பாற்கடலூடன்று வந்தபொன்னே. (௫௩)

வந்தனஞ்செய்பவர் குற்றேவலுஞ்செய்யு மாயனது
பைந்தகைமார்பிற் குடியேறிவாழும் பதுமமகள்
சொந்தமெல்வாயுரை தந்தாளினேகலித் துன்பமறு
மந்தரத்தோர்நிலத் தோர்பிலத்தோரென் னனைவர்க்குமே. (௫௪)

அனைவரும்போற்று நெடுமாலுநீயு மடற்கருடன்
றனையெழில்வாகன மாக்கொண்டெனுள்வருஞ் சத்தியத்தைப்
பினையுள்ளபேரறி யத்தக்கவாறருள் பெய்வதென்றோ
மனையெனத்தாமரைப் பூவையெல்லாங்கொள்ளு மாணிக்கமே. (௫௫)

மாணிக்கமேனி யுடனுன்னைநாடி மலர்சொரிந்து
பேணிக்கைகூப்பும் பயனிந்தவாறிங்கு பெற்றிருந்து
மாணிக்கனகமு ளார்தங்களாண்மைகண் டஞ்சிமுக
நாணிக்கவிழ்தா லாமோபொன்போலு நளினமின்னே. (௫௬)

நளினந்தொறும்வளர் நங்காய்நின்கொண்கனென் னற்றமிழ்க்காப்
புளினம்பொலியல்லிக் கேணியிற்றந்த புதியகைச்சீட்
டொளிர்கின்றசத்திய மாகாவிட்டாலந்த வூறுனக்கே
களிறுண்டவெள்ளிற் கனிபோன்றுள்ளேனிலை கண்டருளே. (௫௭)

கண்டங்கரியன் முழுதுங்கரியன் கடகரிய
னண்டங்கடந்தவ னாதியதேவ ரனைவருநின்
றொண்டன்பினாலுய்ந்து ளாரேயென்றோருமென் றுன்பொழித்தா
ளொண்டங்கமேனித் திருவேயெச்சிரு முடையவளே. (௫௮)

உடைமணிச்சேயுரு வாத்திருமாலிவ் வுலகில்வந்தாற்
பெடைமயிற்சாயல் வடிவாகித்தானும் பிறக்கவொல்காள்
படைமலர்த்திண்கரத் தங்கசவேளைப் பயந்தபண்பாற்
கடையுகத்தினரு பொன்னாதசீர்கொள் கனகமின்னே. (௫௯)

கனகம்பொருளல வென்பாரைவன்சினக் காலன்வெளவு
மனகமதேயென் றுளார்சித்தராய்விண்ணி லாடல்செய்வார்
தனதனைத்தோழமைக் கொண்டானென்பாம்பணிச் சம்புவுமென்
மனதறிமாமல ராளருளில்லவர் மாந்தரன்றே. (௯௰)

மாந்தரிற்சிற்சில ரைத்திருமாலென் றும் வண்புலவர்
தீந்தமிழ்ப்பாடல்க ளாற்செப்புமா றுஞ் செயத்தக்கநீ
பாந்தளிற்றீய மிடியாலெற் றுன்பப் படுத்தனன்றோ
வேந்தலர்ப்பீடத்து ளாயண்டகோடிமுற் றீன்றவளே. (௯௧)

ஈன்றாளிகழவுஞ் செய்கின்றபாழ்மிடி யிற்கயங்கு
நான்றானிற்போற்றத் துணிந்தேன்கொலோவுன்ற னல்லருளுட்
டோன்றாதுநின்றெனைத் தூண்டியதோவுண்மை சொற்றருள்வாய்
போன்றாரிலாத்திரு மாலுரத்தேவளர் பூங்கிள்ளையே. (௯௨)

பூங்கணைமாரனைப் பெற்றாய்சகல புவனத்தினு
மோங்கருட்கார்முகி னெஞ்சங்கவர்ந்திட் டுயர்ச்சியுற்றாய்
வேங்கனற்போலுமென் பாழ்மிடிதீர்க்கும் விறலில்லையோ
மாங்கலியத்திரு நூல்சாட்சியாச்சொன் மலர்த்தையலே. (௯௩)

மலராதனத்திருந் தாணெடுமாற்கருள் வாழ்க்கைநல்கிப்
பலகோடியண்டமுங் காப்பாளவளைப் பழிச்சுகின்றேன்
சிலர்வாயிற்சென்றிர வாதளித்தாலத் திருத்திகொண்டு
புலவேர்களைந்து பிறவா தவீட்டிற் புகுவனன்றே. (௯௪)

வனத்தொடுமாநக ருஞ்சமமாமன வாதனைபோ
யினத்தொடுவாழும் பெருங்களிப்பெய்து மிகலழியுங்
கனத்தொடுநேரு நெடியோனையாண்டு கமலமுற் றுந்
தனத்தொடுவாழ்மயில் போன்றொளிர்வாளருள் சார்ந்திடினே. (௯௫)

சாரணர்புத்தர் முதலோரும்போற்றத் தரணியுண்ட
நாரணன்மார்பத் திருக்கின்றபாவை நளினக்கையே
காரணநன்மைக்குந் தீமைக்குமென்னக் கழறவல்லார்
பூரணஞானமுற் றோர்மற்றையோர்சிறு புந்தியரே. (௯௬)

புந்திக்கலக்க மலிந்துன்னைநாடிப் புலம்புகின்றேன்
சிந்திக்கவல்லனல் லேனென்னையின்னமுஞ் சீரழியே
னிந்திக்கத்தக்கவ ரும்புகழார்வ நிறைவருள்வாய்
வந்திக்கவல்ல குறுமாமுனிபின் வருந்திருவே. (௯௭)

வருந்திடநீடுங் கலிமுற்றுந்தீரநின் மைந்தன்சொல்லாற்
றிருந்தியநான்மறைத் தேவரெல்லார்க்குஞ் செயமுரைத்தேன்
பொருந்தியபேறுதந் தாரிலராலுனைப் போற்றலுற்றேன்
மருந்தினைச்சொற்றிரு வேநீயுமங்ஙனம் வஞ்சியலே. (௯௮)

வஞ்சிமன்கன்னட தேயாதிபன்சின் மடாதிபரைக்
கெஞ்சியுமென்றனக் கெய்தாதசெம்பொன்பல் கிழவர்பான்
மிஞ்சிடச்செய்யுங் கொடுமையெல்லாமென்று விட்டொழிப்பாய்
நஞ்சினுந்தேவ ரமுதினுஞ்சீர்த்தகண் ணாரணியே. (௬௯)

நாரணிநாரணன் பன்னியென்றோர்வரு நாவலர்தம்
போரணிதானும் பெரிதோங்கும்பாரிற் பிறங்கெய்த்துளே
னீரணிசென்னியன் கைம்மண்டையோட்டுண்டி நீக்கியருட்
சீரணிவெள்ளிவெற் பிற்குடியேறச்செய் செய்யவளே. (௭௰)

செய்யதண்டாமரைப் பூவுடையாளருள் செய்யப்பெறா
வையருமிந்திரன் றானும்பிரமனு மைந்துபடைக்
கையனுமீசனு மாதியர்தாம்பட்ட கட்டமெல்லாம்
பொய்யறக்காட்டும் பராசரன்சேய்சொற் புராணங்களே. (௭௧)

புராதனநான்மறைக் கெட்டாதுவாழ்பரி பூரணனை
நிராதரனென் றுரைப் பாரெண்ணிலார்சற்று நெஞ்சஞ்சிடா
திராநிகர்கூந்தற் றிருமாதுசம்பந்த மெய்தியதாற்
சராசரமீன்றுள னென்றுரைப்பே னெச்சொற் சத்தியமே. (௭௨)

சத்தியனந்தமுந் தானாகிநின்ற சலசவல்லி
சித்தியுமுத்தியும் வேண்டியபேர்க்கருள் செய்யுந்தெய்வம்
பத்தியின்மிக்குயர் பாண்டவர்தூதனைப் பாடுமன்பர்
நத்தியவாறுசெய் யாதிருந்தாற்கெடு நான்மறையே. (௭௩)

நான்மறையீற்றினிற் பாம்பின்றலையி னடித்தருளுங்
கான்மலர்க்கார்முகி லன்னானைநாடிக் கசிபவர்க்கு
மான்மழுச்செங்கைச் சிவனாதியர்மெச்சு மாண்பருளுந்
தேன்மலர்ப்பீடப் பிராட்டியவேபல செல்வமுமே. (௭௪)

செல்வச்செருக்கர் மனைவாயிறோறுந் திரிந்தலுத்துச்
சொல்வக்கணைப்பொய்ப் புலவோர்களான்மிகத் துன்புற்றுளே
னெல்வட்டமென்னத் தினஞ்சேவைநல்கி யினிதருள்வாய்
வில்வத்தருநிழ லின்றலைமேய வியன்றிருவே. (௭௫)

வியப்பாருமுத்தமிழ்ப் பாவெகுவாக விளம்புமென்னை
நயப்பாரிலாமையி னானுகின்றேன் றுங்க நான்மருப்புக்
கயப்பான்மையோரு நடுங்குறுமாறு கனகநல்காய்
செயப்பாவையேதிரு மாலென் றுமோவருஞ் சீரணங்கே. (௭௬)

சீரணஞ்செய்யு மிடிநோயிற்பட்டுத் தியங்குகின்றீ
ராரணஞ்சொல்லும் பலகோடிதெய்வமு மாதரித்துக்
காரணகாரிய மோராதுவீணிற் கலங்கன்மினோ
நாரணன்றேவியை நெஞ்சகப்பூவிடை நாடுமினே. (௭௭)

நாடுநகரு மதிக்கின்றபேறு நளினமலர்த்
தோடுஞ்சுரும்புந் துணையாகவாழுஞ் சுரிகுழலைப்
பாடுமவரும் பணிகின்றவரும் பழுதில்செம்பொற்
கோடுறழ்நெஞ்சகத் தாலெண்ணுவாருங் கொளத்தக்கதே. (௭௮)

தக்கம்வியாகர ணம்பாதம்புரை சாத்திரந்தேர்
மிக்கவர்தம்மையு மெண்ணுக்குறாத விரோதியருங்
கைக்களிறொன்றளித் தான்மனையாட்டிதன் கண்ணருளாற்
செக்களவம்பொனுற் றார்தமைப்போற்றுவர் தெண்டனிட்டே. (௭௯)

இட்டுண்டுவாழ்கைமிக் கேற்றமென்றேமறை யாவுஞ்சொல்லு
மட்டுண்டுதம்முயிர் மட்டளிப்பார்க்கும்பொ னாதரமாற்
கட்டுண்டுரலொ டுழன்றான்மன்னும்படி கண்டருளி
மட்டுண்டதாமரை மேல்வசிப்பாளை வழுத்தனன்றே. (௮௰)

வழுவற்றசெந்தமிழ்ப் பாடலனேகம் வழங்குமவர்
குழுவிற்கும்வேட்கைபொன் மேலன்றிவேறில்லை கோக்கலுழ
னெழுதுற்றகேதனத் தெம்பெருமான்மனை யீகையதாற்
றொழுதிட்டவளைப் பலவாறுநாளுந துதிக்கைநன்றே. (௮௧)

துதிக்கைக்கரியிரண் டாட்டுநன்னீர்நசைத் தோகையன்னாள்
விதிக்கைப்பிரமனை யீன்றான்றனெஞ்சத்தின் மேவுமின்னாண்
மதிக்கைக்கடலமு தத்தோடுதித்த வனிதையென்னுட்
கெதிக்கைத்துயரொழித தாளினல்லான்முத்தி கீழ்ப்படுமே. (௮௨)

கீழோரைக்கெஞ்சி யலையாதவாறு கிருபைசெய்திட்
டாழோதவாரியிற் பொல்லாரைவெல்லு மடலுநல்கா
யேழோடொரக்கர முள்ளானுரத்தி லிருந்துகொண்டே
வீழோர்மையாள ரிலந்தோறுஞ்சென்றும் விளங்கன்னையே. (௮௩)

அன்னையென்றெவ்வுல குந்தருவான்சொ லமுதழியாப்
பொன்னையொப்பாநதிரு மேனிப்பிராட்டி புகழ்ப்பெருக்கா
தன்னைமெய்யன்பருக் கீவாளென்பாற்சொல் சாதமொன்றுண்
டென்னையதென்செய்யு மோவறியேனென் னினத்தினமே. (௮௪)

இனமாயமாதவர்க் கும்புலவோர்க்கு மிரப்பவர்க்குந
தனமாதியபொரு ளெல்லாங்கொடுக்குந தகைவிழைந்தேன்
கனமானமேனியம மான்மனையாட்டி கடைக்கண்களென்
மனமாமலர்த்தொட்ட வாறெனைதீண்டிலவ் வாழ்வெய்துமே (௮௫)

வாழ்வுவரினு மனைதோறிரந்துண்டு மாழ்குபெருந்
தாழ்வுவரினுந் தமியேன்மறக்குந் தகுதியவோ
வாழ்வுறுஞ்சிந்தைப் புலவோர்பல்லோர்தொழு மாளரியும்
வீழ்வுறுஞ்செம்பொற் றிருமாதுதாட்டுணை மென்மலரே. • (௮௬)

மென்மதம்வன்மத மாமிருகூறும் விரும்புவது
தன்மமெல்லாஞ்செயத் தக்கதுவேதந் தனிற்பிரியுங்
கன்மமுன்னாகுமுக் காண்டருநாளுங் கருதுவது
பொன்மலர்ப்பாவை யருளால்விளையும் பொருட்குவையே. (௮௭)

பொருளல்லவரையும் போற்றிடச்செய்யுமம் பொன்னெனவே
தெருளுமுன்னூற்றலை செப்பிடக்கேட்டுஞ் செருக்கதனா
லிருளுநெஞ்சத்தின ரேத்தெடுக்கார்புவி யேழுமுண்டோன்
மருளுறத்தாக்கும் விழியாடனது மலிபுகழே. (௮௮)

மலியுங்கருணை திருமாதுநீக்கலும் வானவர்சீ
ரொலிதங்குபாற்கடற் புக்கதுநல்கலு முற்றதுங்கேட்
டலியன்றியாணன்றிப் பெண்ணன்றியன்னவை யாய்நிகழ்மா
னலிவின்றியகடு மார்பினையேமிக நண்ணுதுமே. (௮௯)

நண்ணலர்சேனை நலங்குலைப்பார்செங்கை ஞாங்கரினு
முண்ணலுடுத்தல்பல் லோர்க்கிடுவார்தம துள்ளத்தினும்
வெண்ணகைப்பாவையர் மங்கலமிபாலினும் வேதத்தினும்
பண்ணவர்போற்றுந் திருமாதுகண்ணருட் பார்வையுண்டே. (௯௰)

உண்டற்குவேண்டு மவையுமெய்தாதிங் குழல்பவரைத்
தொண்டர்க்கொர்தூதனா மாநெடுமால்புணர் தொன்மனைவி
கண்டற்புதக்கருணைக்கடொட்டிடிற் கண்ணிமையா
வண்டர்க்குமேலவ ராய்த்திகழ்வாரென்சொ லன்றிதுவே. (௯௧)

அன்றைக்கென்சொற்பனத் தேவந்துகூறிய வற்புதச்சொல்
லொன்றைக்கருதி மிகமகிழ்ந்தேன்பய னுண்கிலனீ
யென்றைக்கினியருள் வாய்சிறிதேனுமின் றீயினன்றுங்
கொன்றைச்சடைத்தம்பி ரான்றங்கையாநிகழ் கோமளமே. (௯௨)

கோமளச்செந்திரு மங்கைநல்லாள்சினைக் கொண்டல்வெட்குஞ்
சாமளமேனிப் பிரான்மனையீண்டென் றனதுநிலைக்
காமளவிற்றயை செய்கின்றிலாளயர்ந் தேனையகோ
தாமளவாத்தவத் தீருயற்காமொர்சொற் சாற்றுமினே. (௯௩)

சாற்றணியாலயந் தோறுநிலாவற்குந் தாரணியின்
மேற்றவத்தோர்குழுக் கூடிக்குலாவற்கும் வேறெவைக்கு
மாற்றனல்குங்கடைக் கண்ணாள்செந்தாமரை யாளெனவே
தேற்றவல்லாரை யிகழ்வார்பலருஞ் சிதடர்களே. (௯௪)

சிதடியாரிற் சிலர்க்குங்கருணை செயுங்கமலை
புதனிகர்பாவலர் பல்லோர்வருந்துறப் புண்செய்கின்றா
ளிதமருள்வாளென நானம்பியேயினி தேத்துகின்றேன்
மதலையர்தம்மிடை கூட்டிக்கொண்டானன்று மாநிலமே. (௯௫)

மாநிலமங்கை தனக்கினியாட்கு மலர்மகட்கு
வேனில்விழாமதற் பெற்றாட்குத்தண்பொலி வெண்கடலிற்
பானிலவோடு முதித்தாட்குப்பாடல் பகருமவ
ரானியில்பேறடை வாரென் றுதேற லரிதரிதே. (சுசு)

அரிமாமுகங்களொ ராயிரத்தோடுற் றரிகனக
னெரிநாணுஞ்செங்குடர் மாலையிட்டாட விடும்பொழுது
முரியானென்றோர்ந்தணைத் தின்புறும்பாவையென் றோர்கலிப்பேய்
பெரிதாமென்றஞ்சுங்கொ லோபுலவீர்கண்டு பேசுமினே. (சுஎ)

பேசுஞ்சதுமறைத் தெய்வமெலாமென் பெருங்கலித்தீ
வீசுஞ்சுவாலைகண் டஞ்சியொதுங்கி வெதும்பினநீ
யேசும்பழிப்படைந் தாலடியேனிவ ணெங்ஙனுய்வேன்
மாசுண்டநெஞ்ச ருணராதசீர்த்திரு மாதரசே. (சுஅ)

அரசநிழலைத் தொழும்புலைப்புத்த ரருவருக்கும்
விரசமதத்தரும் வாழவைத்தாயெற்கை விட்டுவிடேல்
சிரசதின்மெய்யடி யார்பதத்தூண்மிகச் சேர்த்துளன்காண்
சரசகுணத்திரு மாலருளாய தனிப்பொன்மினே. (சுகூ)

தனிப்புறுயோக முயன்றுதரித்துத் தலைமலர்பெய்
தினிப்புறுதோத்திர முஞ்செய்யவல்லவர்க் கெத்திசையுந்
தொனிப்புறுசீர்த்திறல் கிக்கலியாதிய துன்பொழித்துச்
செனிப்புறுகன்மமுந் தீர்ப்பாள்கமலத் திருமகளே. (எ0)

திருமகளந்தாதி

முற்றிற்று.

---

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நேரிசை வெண்பா.

செப்பு மருமைத் திருமகளந் தாதிமுற்றுந்
தப்புவரா மற்றுதிக்கத் தக்கவர்க்கு—முப்புவனத்
துள்ளவரும் போற்றுமுயர்வண்டா மேபார்காணு
மெள்ளரிய வீடுமெய்து மே.

தெய்வமே துணை.

வாழிவிருத்தம்.

பார்வாழிவான்வாழி பழுதில்சதுமறைவாழி பதின்மர்செஞ்சொற்
சீர்வாழிதிருவரங்கத் தலம்வாழியரவணையிற் றிருமால்வாழி
பேர்வாழியெட்டெழுத்தும் வாழியவற்றொன்றேனும் பிடித்தோர்வாழி
நார்வாழிதவம்வாழி நன்மையெல்லாமிகவாழி நாளுந்தானே.

குருபாதமேகதி.

உ

குருவே துணை.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௮ | ௩௫ | றெருள் | றருள் |
| ௧௨ | ௧௨ | மாா | மார் |
| டை. | ௧௩ | காா | கரா |
| ௧௬ | ௮ | தானு | தானெ |
| ௨௬ | ௧௩ | தனை | தனை |
| ௩௧ | ௩௪ | திட்டோ | திண்டோ |
| ௩௯ | ௧௬ | கப | கப் |
| ௩௭ | ௨௧ | துழாய | துழாய் |
| ௪௰ | ௩௨ | கோலோ | கொலோ |
| டை. | ௩௪ | னுகதி | னுக்கதி |
| ௪௫ | ௪ | ராத | ராத |
| ௪௨ | ௯ | டும்வ் | டும்வ |
| ௫௰ | ௨௧ | கள்ளவ | கள்வ |
| ௫௧ | ௩ | மயா | மயர் |
| ௫௨ | ௧௫ | தொழியீ | தொழியி |
| டை | டை | யாவொ | யாவோ |
| ௫௪ | ௧௪ | மர்து | மாது |
| ௫௫ | ௧௯ | யரு | பரு |
| டை. | ௧௮ | விடினு | விடினு |
| ,, | ௨௫ | கடைகு | கடைக்கு |
| ௫௭ | ௩௮ | வணை | வுணை |
| ௯௩ | ௧௯ | விண்ண் | விண்ண |
| ௭௬ | ௨௩ | வாடிடு | வாடு |
| ௮௯ | ௧௫ | கரு | தரு |
| ௱ | ௩௩ | பரா | பாா |
| ௱௧ | ௨௫ | கப் | கய் |
| ௱௧௨ | ௧௫ | றெண்ணி | றெண்ணி |
| டை. | ௩௯ | காா | காரா |
| ௱௪௬ | ௧௪ | செய்வோ | செய்குவோ |
| ௱௫௰ | ௪௰ | மெரு | பெரு |
| ௱௯௧ | ௨௫ | மிகழ்தா | மிகழ்ந்தா |
| ௱௯௮ | ௫ | துழை | நுழை |
| ௱௬௨ | ௧௫ | ரிய | ரிய |
| ௨௱௨ | ௧௭ | தழைத்த | தழைந்த |
| ௨௱௪ | ௬ | ருறும் | ரும் |
| டை. | ௰ | விடி | விடி |
| ௨௱௫ | ௩௧ | விடு | வீடு |
| ௨௱௭ | ௬ | தானெ | தனெ |
| ௨௧௩ | ௧௫ | கனும் | கனெனும் |
| டை. | ௨௬ | கினு | கினெனு |
| ,, | ௩௭ | பனு | பவனு |
| ௨௨௧ | ௧௧ | விளை | விளை |
| ௨௨௮ | ௨௩ | ரூறெ | றறெ |
| டை. | ௨௮ | மடி | படி |
| ௨௩௯ | ௩௬ | முஞ்ச | குஞ்ச |
| ௨௩௮ | ௨௯ | மிது | மீது |

Forms 1 to 9 printed at
K. R. Press, Thambu Chetty St. Madras

The remaining forms, preface etc., printed by
P. R. Rama Iyar & Co., 21, Anderson St. Madras.